

கண்டெடுத்த
வைரமழ
விஜி விக்னேஷ்
கண்டெடுத்த
வைரமழ
விஜி விக்னேஷ்

# கண்டெடுத்த வைரமடி!

## 1

அவன் முன்பாக தலைகுனிந்தபடி நின்றிருந்த பெண்ணைப் பார்க்க, சற்று வேடிக்கையாகத்தான் இருந்தது!

அதீதமில்லையென்றாலும் நல்ல அழகிதான்!

இப்போதெல்லாம் பெண்கள் எந்தத் துணிச்சலில், வீட்டை விட்டுக் கிளம்பி விடுகிறார்கள் என்றே தெரியவில்லை!

அதுவும் இவள் ஒருபடி மேலே சென்று, திருமண மண்டபத்திலிருந்து ஓடிவந்த மணப்பெண்ணாம்!

இவளை எந்தளவிற்கு நம்புவது என்று யோசனை யோடு அவளைப் பார்த்தான்.

சற்று உயரமான பெண் என்பதால் கொஞ்சம் ஒல்லி யாகத்தான் தெரிந்தாள்.

முகம் களைத்துத் தெரிகிறதே, இன்னும் சற்று நேரம் நின்றால் கீழே விழுந்து விடுவாளோ?

''இந்த சோபாவில் உட்கார்'' என்று கூறிவிட்டு, உள்ளே சென்று திரும்பி வந்தவனின் கையில், ஒரு கண் ணாடித் தம்ளர் நிறைய 'பூஸ்ட்' கலந்த வெதுவெதுப்பான பால் இருந்தது.

''முதலில் இதைக்குடி'' என்று கொடுத்தான்.

நான்கைந்து வேளையாக எதுவும் சாப்பிடாதிருந்த வளுக்கு, பால் முழுவதையும் குடித்த பிறகே சற்று தெம்பு வந்தது.

எதிரே அமர்ந்திருந்தவனைப் பார்த்து, ''ரொம்ப நன்றி சார்'' என்றாள் மெல்லிய குரலில்.

''வெல்கம்'' என்றவன், ''நான் முதலில் என்னைப் பற்றி சிலதை சொல்லி விடுகிறேன். நான் கொஞ்சம் ஒரு மாதிரிப் பட்டவன் பெண்ணே. பெண்கள் விஷயத்தில் ஒழுக்கத்தைக் கடைபிடிக்கிறவன் கிடையாது. உனக்கு ஆட்சேபணை இல்லையென்றால் நீ இந்த வீட்டில் தாராளமாகத் தங்கலாம்'' என்றான் அவன்.

மௌனமாகவே இருந்தாள் அவள்.

''இல்லையென்றாலும் சொல்லிவிடு. நீ எங்கே போக விரும்புகிறாயோ, அங்கே செல்ல எல்லா ஏற்பாடுகளும் செய்து தருகிறேன்'' என்றான்.

கேள்வியோடு அவனைப் பார்த்தாள். கண்ணுக்குத் தெரியாத எப்போது விரட்டும் என்று தெரியாத குள்ள



நரியைவிட, கண்ணெதிரே நிற்கிற புலி மேல் என்றே தோன்றியது.

''நான் இங்கேயே தங்குகிறேன்'' என்றாள். முடி வெடுத்து விட்ட குரலில்!

சிறு வியப்போடு அவளை அளவெடுத்தவன், ''இந்த வீட்டில் நான் தனியா..கத்தான் இருக்கிறேன் என்பது உனக்கு பயத்தைக் கொடுக்கவில்லையா? நான் உன் னிடம் தப்...பாக நடந்து கொண்டால் என்ன செய்வாய்?'' என்று புருவம் தூக்கினான் அவன்.

''தப்பு செய்பவர்கள் சொல்லிவிட்டுச் செய்வதாக கேள்வியில்லை. அப்படியே நீங்கள் கைமீற முற்பட்டால், நான் என்ன செய்வேன் என்பதையும் அப்போது தெரிந்து கொள்வீர்கள்'' என்று மிடுக்காகவே கூறினாள் அவள்.

இரு கைகளையும் குறுக்கே கட்டிக் கொண்டு, தலையை நிமிர்த்தியபடி ஒரு ராணியின் தோரணையுடன் கூறினாள் அவள்.

அவள் நின்ற தோரணையை உள்ளூர ரசித்தவன், ''இப்போதே உன் கையைப் பிடித்து இழுத்து, ஒரு சாம்பிள் பார்த்து விடட்டுமா?'' என்றான் கண்கள் சிரிக்க!

''முயற்சி செய்து பாருங்கள்'' என்று தைரியமுடனே கூறிய போதும், அவள் கண்களில் சிறு பயம் எட்டிப் பார்த்தது!

அதைக் கண்டு மெல்ல நகைத்தவன், ''உள்ளே யிருக்கும் பயத்தை மறைத்து எதற்கு இந்த மிடுக்கு பெண்ணே'' என்று விட்டு, ''திக்கற்று உதவி கேட்ட பெண்ணை, கையைப் பிடித்து இழுக்குமளவிற்கு நான் கேவலமான பிறவியல்ல பயப்படாதே. ஆனால்

ஒழுக்கமானவனும் அல்ல என்பதை மறந்து விடாதே'' என்றான் இதழோர வளைவுடன்.

''நிச்சயமாக நீங்கள் நல்லவர்தான். நமக்கெதற்கு ஊர் வம்பு என்று நழுவிக் கொள்ளாமல், தக்க சமயத்தில் எனக்கு உதவினீர்களே!

''அதுவுமில்லாமல் நான் ஒழுக்கமற்றவன் என்று எத்தனை பேர் தைரியமாக வெளியே சொல்வார்கள்? செய்ததை மறைக்க முயல்வதுதானே இயல்பு. அப்படியிருக்க, நீங்கள் உண்மையிலே நல்லவர். ஜென்ட்டில் மேன் தான்'' என்று நற்சான்று வழங்கினாள் அவள்.

மாடிப்படிகளில் ஏறியவன் திரும்பி நின்று, ''நா...ன் ஜென்ட்டில் மேனா? இதை ஒழுக்கமுள்ள ஒரு பெண், என் வீட்டில் நின்று என்னிடமே சொல்வதை நினைக்கும் போது உடம்பெல்லாம் புல்லரித்து இன்னும் இரண்டடி வளர்ந்து விட்டதைப் போல மனம் துள்ளுகிறது'' என்று கூறி அடக்கமாட்டாது சிரித்தான் அவன்.

பிருந்தாவனக் கண்ணனின் வெண்ணைச் சிரிப்பு!

இவன் ஏன் ஒழுக்கத்தோடு வாழ முற்படக்கூடாது என்று, உள்ளூரத் தோன்றியதை மறைத்துக் கொண்டு, ''ஒரு அரையடி முக்கால், அடியெல்லாம் போதாதா? ஒரேயடியாக இரண்டடி வளர்ச்சிதான் வேண்டுமாக்கும். பிறகு வீட்டிற்குள் வரும்போது இடிக்காது?'' என்று கிண்டலாகக் கேட்டுவிட்டு, சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள் அவள்.

''பரவாயில்லையே கேலி, கிண்டலும் கூட வரும் போலிருக்கிறது'' என்று சிலாகித்து விட்டு, மாடியறைக்குச் சென்று ஓரிரு நிமிடத்தில் திரும்பி வந்தான்.



''இப்போது நான் வெளியே சென்றுவிட்டு வருகிறேன். நீ கதவை உட்புறமாகப் பூட்டிக்கொள். பிரிட்ஜில் பழங்கள் இருக்கிறது. பசித்தால் சாப்பிடு. அரை மணி நேரத்திற்குள் வந்து விடுவேன்'' என்று விட்டு, வெளியே நின்றிருந்த சொகுசு காரில் ஏறிச் சென்றான் அவன்.

விரைவாகவே திரும்பி வந்தவனின் கைகளில் சில பைகள் இருந்தது.

ஒன்றில் உணவுப் பொட்டலங்கள். மற்றதில் அவளுக்குத் தேவையான துணி வகைகள் எல்லா...மே!

''ஃப்ரீ சைஸ் சுடிதார்தான் வாங்கியிருக்கிறேன் என்றவன், நீ சுடிதார் அணிவாய்தானே?'' என்று அவசரமாகக் கேட்டான்.

''ம்'' என்று தலையாட்டினாள் அவள்.

''ஓ.கே. நீ டிரஸ் சேஞ்ச் பண்ணிக் கொண்டு வந்தாயென்றால் சாப்பிடலாம்'' என்றவன். அவள் அசையாமல் நிற்கவும் 'என்ன?' என்பது போல நிமிர்ந்து பார்த்தான்.

''வந்து, நான் எங்கே போய் டிரஸ் சேஞ்ச் பண்ணுவது?'' என்றாள் தயக்கமுடன்.

''ம்ம்.. இதே இடத்தில் சேஞ்ச் பண்ணினாலும் எனக்...கு நோ அப்ஜெக்சன் மேடம்'' என்று கண் சிமிட்டிச் சிரித்தான் அவன்.

எரித்து விடுபவளைப் போல முறைத்தாள் அவள்.

''அம்மா...டியோவ்! பயம்..மாயிருக்கிறதே'' என்று கைகளை வைத்து கண்களை மறைத்துக் கொண்டான் அவன்.

''ச்சு! இது விளையாட நேரமல்ல சார்'' என்று எரிச்சலை மறைத்தபடி கூறினாள்.

Uploaded by Naghu

"ஓ.கே. ஓ.கே." என்று இரு கைகளையும் மேல்நோக்கி விரித்துக் காட்டியவன், இப்போதைக்கு என் அறையினுள், வலது பக்கம் வெறுமனே பூட்டிக் கிடக்கிற அறையில் சென்று மாற்றிக் கொள். அதற்குள் உனக்கு 'கெஸ்ட் ரூம்' ஒன்றைத் தயார்படுத்தி வைக்கிறேன்'' என்று அவளை அறைக்குள் அனுப்பி விட்டு, 'மாஸ்டர் கீ' செட்டை எடுத்துக் கொண்டு கீழேயிறங்கினான் அவன்.

அறைக்குள் சென்று தாழிட்டுவிட்டு, கையிலிருந்த பைகளைப் பிரித்தாள் அவள்.

கடல் நீலம், அடர் பச்சை, அடர் சிவப்பு, எலுமிச்சை மஞ்சள், ரோஜா வண்ணங்களில் ஐந்து செட் சுடிதார்கள்!

துணிகள் உயர் ரகம் என்பது, அதன் வழவழப்பிலேயே தெரிந்தது. அந்த நேரத்திலும் இவ்வளவு உயர் ரகத்திலே வாங்கியிருக்க வேண்டாமென்றே தோன்றியது அவளுக்கு!

இருநூற்று ஐம்பதுக்கே நல்ல சுடிதார்கள் கிடைக்கும்போது, இவ்வளவு விலையுள்ள துணிகளை ஏன் வாங்க வேண்டும் என்ற யோசனையுடன், மற்ற பைகளைப் பிரித்தவளின் முகம் சட்டென்று சிவந்து போனது!

உள்ளேயிருந்தவைகள் உள்ளாடை வகைகள். அத்தனையும் அவளுக்குப் பொருத்தமாக வழக்கமாக அவள் வாங்கும் அளவுகளிலேயே இருந்தது!

நான் ஒழுக்கமானவன் அல்ல பெண்ணே என்றானே!

அந்த மாதிரி ஒழுக்கமில்லாத பெண்களின் பழக்கத்தினால் தான், இவ்வளவு சரியான அளவுகளிலே உடை

Uploaded by Naghu



வாங்கியிருப்பானோ? நிச்சயம் அப்படியேதானிருக்கும் என்று அடித்துச் சொல்லியது அவள் மனது.

சட்டென்று தன் தலையிலேயே குட்டிக் கொண்டாள் அவள். மெல்லத்தான்!

தானம் பெற்ற மாட்டிற்கு எத்தனை வயதிருக்கும் என்று, பல்லைப் பிடித்துப் பார்ப்பதைப் போலல்லவா இந்த மனது எண்ணமிடுகிறது!

அய்யோ பாவமே! மாற்றுடை கூட இன்றி நிற்கிறாளே என்றெண்ணி வாங்கிக் கொடுத்தவனைப் போய், நன்றி கெட்டத் தனமாக நினைப்பது நியாயமாகுமோ?

அவன் ஒழுக்கமற்றவனாகவே இருந்த போதிலும்கூட!

கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டாள் என்பதற்காக, அவளைத் தேடி வந்த ஏழெட்டு தடிமாடுகளிடம் காட்டிக் கொடுக்காமல் காப்பாற்றினானே!

சினிமாவில் காட்டுவது போல பதினைந்து, இருபதடி எகிறி உதைத்து, அத்தனைப் பேரையும் ஒருவனாகவே அடித்துத் துவைத்து, ஓடஓட விரட்டவில்லைதான்!

இருந்த போதும், பால்கனியில் நின்றுகொண்டு அதுவும், ஷூ அணிந்திருந்த இடது காலை, ஒரு அடி உயரம் மேலே தூக்கி, எதிரேயிருந்த கிரில் கம்பி டிசைனில் வைத்து, பான்ட் பெல்ட்டில் இரு கரங்களின் ஓரிரு விரல்களை மட்டும் கொக்கி மாதிரி மாட்டிக் கொண்டு,

"உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று, அலட்சியமாக கேட்ட அவனுடைய கம்பீரம் தன்னைப் போலவே, வந்தவர்களையும் சற்றுத் தடுமாற வைத்திருக்குமோ? அப்படித்தானிருக்க வேண்டும்!

இவனைச் சமாளிப்பது கடினமென்று நினைத்து, சில வினாடிகள் தங்களுக்குள்ளாகவே பேசியவர்கள் சிறு தயக்கமுடனே, ''திருமண மண்டபத்திலிருந்து மணப் பெண் ஓடிப்போய் விட்டாள். இந்தப் பக்கமாகத்தான் வந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். ஒரு வேளை உங்கள் வீட்டிற்குள் புகுந்து கொண்டாளோ?'' என்றவனின் பேச்சை பாதியிலேயே நிறுத்தியது, அவ னுடைய அலட்சியச் சிரிப்பு!

''என் வீட்டிலிருக்கும் இரண்டு நாய்களையும் மீறி, ஒரு பெண் இங்கே ஒளிந்திருக்க முடியும் என்கிறீர்களா?!''

''எங்கே என் நாய்களைப் பார்த்துவிட்டுச் சொல் லுங்கள் பார்க்கலாம்? பீம்! ஜின்! கம் அப்'' என்றவனின் குரலைக் கேட்டு, தோட்டத்திலிருந்து பால்கனிக்குச் செல்லும் படிகளை, நிமிட நேரத்தில் தாவி ஏறி வந்து, அவனுக்கு மேலும் கம்பீரத்தைக் கூட்டுவது போல, இருபுறமும் நின்றன அந்த நன்றி மறவாத பிராணிகள்!

அவனருகே நின்ற நாய்கள் வெளிப்பக்கத்து கேட்டைப் பார்த்துக் குரைக்கவும், மதில் சுவற்றை ஒட்டி செடி மறைவிலே அமர்ந்திருந்த, கிட்டத்தட்ட பதுங்கியிருந்த அவளுக்கு நாக்கு மேலே ஒட்டிக் கொண்டு, பயத்திலே உடல் நடுங்கியது!

நாய்களின் கழுத்து 'பெல்ட்'டைப் பிடித்து அருகே யிழுத்து அவன் ஏதோ கூற, வாலைக் குழைத்துக் கொண்டு அமைதியானது அவைகள்.

அதன் பிறகு வெளியே நின்றவர்கள் எதுவும் கேட் காமல் கிளம்பி விட்டார்கள்.

அல்லது அவனுடைய அலட்சியச் சிரிப்பு வேகமாகக் கிளம்பும்படி விரட்டியடித்திருக்கலாம்!



எப்படியோ அவளை அந்தக் கொடிய கும்பலிட மிருந்து காத்து, அடைக்கலம் கொடுத்திருப்பவனிடம் நன்றியோடு நடந்து கொள்வதுதான் முறை.

கடல் நீல சுடிதாரை அணிந்து கொண்டு, மற்ற துணிகளோடு முன்பு கட்டியிருந்த சேலையையும் மடித்து தனியே ஒரு பையில் போட்டு எடுத்துக் கொண்டு, கண்களால் அவனைத் தேடியபடி படிகளில் இறங்கி வந்தாள் அவள்.

படிகளின் வலது பக்கமிருந்த இரண்டாவது அறையி லிருந்து, மெல்ல விசிலடித்தபடி வெளியே வந்த அவன், என்ன நினைத்தானோ? அடக்க மாட்டாத குறும்புன்னகை தோன்றியது அவனுக்கு.

''என்ன, ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''கையில் பையுடன், திருவிழாவில் காணாமல் போன பிள்ளை மாதிரி, மலங்க மலங்க விழித்துக் கொண்டு நிற்பதைப் பார்த்தால் சிரிப்பு வராதா?'' என்று கேட்டான் அவன்.

நின்றபடியே குனிந்து தன்னைப் பார்த்தவளுக்கும், மெல்ல புன்னகை தோன்றியது!

''அழகான புன்னகை உனக்கு'' என்று பாராட்டினான்.

'ந... நன்றி' என்றவளின் கன்னங்களில் செம்பூக்கள் பூத்தன!

''வா சாப்பிடலாம்'' என்றழைத்து பொட்டலங்களைப் பிரித்து, அவள் பக்கமிருந்த பிளேட்டில் சப்பாத்தி குரு மாவைப் பரிமாறிவிட்டு, தனக்கும் எடுத்துக் கொண் டான்.

''இங்கே உணவுகள் சற்று சுமாராகத்தான் இருக்கும். சமாளித்துக் கொள்ளப் பழகிக் கொள்'' என்றான் அவன்.

''பரவாயில்லை. அவ்வளவாக மோசமில்லை. எவ்வளவோ பேர் பட்டினியாகவே படுக்கும் தேசத்தில் இது அமுதம்தான். வந்து, வெளியே செக்யூரிட்டிக்கு உணவு?'' என்றாள் தயக்கமுடன்.

''ரொம்...ப அக்கறையோடு விசாரிக்கிறாய்? ஏன், உன்னைக் காட்டிக் கொடுக்காது நின்றதற்காகவா? நியாயமாகப் பார்த்தால் நீ உள்ளே வர வசதியாக, கேட்டைப் பூட்டாமல் வெறுமனே சாத்திவிட்டு, நாய்களை உலாவ அவிழ்த்துவிடச் சென்றதற்காக, அவரை வீட்டிற்கு அனுப்பியிருக்க வேண்டும்'' என்றான் அவன்.

''நான், என்னைப் போல் ஒருவர் வரக்கூடும் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார்'' என்றாள் சிறுகுரலில்.

''எதிர்பார்க்காவிட்டாலும், எச்சரிக்கையோடு இருந்திருக்க வேண்டும். பிறகு அவரெதற்கு செக்யூரிட்டியென்று?'' என்றான்.

இதுவே வேறு சமயமாயிருந்தால் உன் செயல் தான் சரியென்று, அவளும் 'கட் அண்ட் ரைட்'டாக பேசியிருப்பாள் தான்.

ஆனால், இப்போது அவளால் அல்லவா அந்தச் செக்யூரிட்டி திட்டு வாங்கியிருப்பார் போலிருக்கிறது என்ற சங்கடத்துடன் எதிரேயிருந்தவனைப் பார்த்தாள் அவள்.

''வருத்தப்படாதே. அவரை வேலையிலிருந்து தூக்கிவிட மாட்டேன். உள்ளே வரும்போதே அவருடைய உணவைக் கொடுத்து விட்டேன்'' என்றான் அவன்.



'தேங்க்ஸ்' என்றாள் நிம்மதியான மூச்சுடன்.

சிறு முறுவலோடு அவள் நன்றியை ஏற்றுக் கொண்டவன், ''இங்கே தனியாக போரடித்துக் கிடந்ததற்கு, ஒரு வகையில், உன் வருகை சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது'' என்றுவிட்டு, இன்னுமொரு சப்பாத்தியை எடுத்துக் கொண்டு உண்டான்.

'ஏன் தனியே போரடிக்க வேண்டும். உன் குடும்ப நபர்கள் எங்கே?' என்று கேள்விகள் தோன்றினாலும், எதையும் கேட்கவில்லை அவள்.

உணவு முடிந்த பிறகு, அவளுக்காக தயார் செய்த அறைக்கு அழைத்துச் சென்றான்.

டிரஸ்ஸிங் டேபிள், கட்டில் மெத்தை, அட்டாச்சுடு பாத்ரூம் வசதியுடன் இருந்த அறை. அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

''எனக்காக துணிகள், உணவு, தங்கும் இடம் என்று எவ்வளவோ செய்திருக்கிறீர்கள். ரொம்...ப தேங்க்ஸ்'' என்றாள் நன்றியோடு.

'ம்' என்று தலையசைத்து நன்றியை ஏற்றுக் கொண்டவன், ''உனக்கு வாங்கி வந்த உடைகள் சரியாக இருக்கிறதா? சைஸ் தெரியாததால் உன் ஹைட், வெயிட்டிலிருந்த ஒரு பெண்ணைக் காட்டித்தான் வாங்கினேன்'' என்று கூறினான்.

''சரியாக இருக்கிறது'' என்றவளுக்கு, மீண்டும் தன் தலையிலேயே குட்டிக்கொள்ள வேண்டும் போலிருந்தது.

சரியான அளவில் எப்படி வாங்கினான் என்று, நொடியில் அவனைப் பற்றி தப்புத் தப்பாக என்னவெல்லாம் நினைத்து விட்டேன். சை!

''என்ன, முகச்சிவப்பைப் பார்த்தால் ஏதோ விஷய மிருக்கும் போலிருக்கிறதே?'' என்றான் மாறாத முறுவ லுடன்.

மனதில் நினைத்த லட்சணத்தை எப்படி வெளியே கூற முடியும். அதுவும் அவனிடமே?!

''எ. எதுவுமில்லை' என்று உறுதியோடு தலை யசைத்து மறுத்து விட்டாள் அவள்.

''ம். ஓ.கே. நம்புகிறேன். இப்போது நிம்மதியாகத் தூங்கு'' என்றுவிட்டு, தன் அறையை நோக்கிச் சென்றான் அவன்.

மெது மெதுவென்றிருந்த இலவம் பஞ்சு மெத்தையில் படுத்து, கனமில்லாத போர்வையினால் போர்த்திக் கொண்டவளுக்கு பொட்டுத் தூக்கம் வரவில்லை!

சில மணி நேரங்களில், அவள் வாழ்க்கையில் என்ன வெல்லாம் நடந்து விட்டது!

சித்தியைத் தேடி வந்து பெண் கேட்ட 50 வயது மாப்பிள்ளையை மணக்க மறுத்து, அடி உதை வாங்கியும் பயனில்லாமல் அழுதவளுக்கு, மண்டபத்திற்கு சாமான் இறக்கி விட்டுக் கிளம்பிய டெம்போ வண்டிதான் உதவியது.

யார் கண்களிலும் படாமல் ஏறி வருவதற்குள் தான், என்ன பாடு பட்டுப் போனாள்!

அறைக்குள் வைத்துப் பூட்டி விட்டோமே, எங்கே போய் விடப் போகிறாள் என்ற மிதப்பில், மதிய நேர உறக்கத்தில் கண் மூடியிருந்தார்களாம் சித்தி.



அவர்களுக்குத் தெரியாமல் சித்தியின் பிள்ளை, தம்பி - ராஜா சாவியை எடுத்து வந்து திறந்து விட்டு, ''எப்படியாவது ஓடிப்போய் விடுக்கா'' என்றபோதுகூட, அவளுக்கு முழுதாக தப்பிப்போம் என்ற நம்பிக்கை யில்லைதான்.

எப்படியோ கடவுளின் பார்வை ஒரு துரும்பளவிற்கே என்றாலும், அவள் பக்கம் திரும்பியிருக்கிறது. கிடைத் திருக்கும் வழியை விட்டு விடாமல், புத்திசாலித் தனமாகப் பற்றிக் கொண்டு தப்பிக்க வேண்டும் என்பது தவிர வேறு எதுவுமே தோன்றவில்லை அவளுக்கு!

மண்டபத்தின் நிறைய இடங்களில் மாப்பிள்ளை தங்கராஜனின் ஆட்கள் குறுக்கே, நெடுக்கே நடந்து கொண்டேயிருந்ததால், அவர்களின் கண்களில் படாமல் வெளியேறுவது, அவ்...வளவு சுலபமாயில்லை தான்.

அவனுடைய பெயரைப் பார் பெயரை, தங்...க ராஜனாம். காட்டெருமை என்று வைத்திருக்க வேண்டும். பொருத்தமாக இருந்திருக்கும் என்று முகம் கடுத்தது அவளுக்கு!

மண்டபத்தை விட்டுத் தப்பிக்காமல் இருந்திருந்தால், தூக்கு மாட்டிக் கொண்டுதான் தொங்கியிருக்க வேண்டும். அந்தக் காட்டெருமையோடு திருமணம் நடப்பதைவிட சாவு மேல் தான்.

ஆனால், இதில் எதுவும் நடந்து விடாமல் காத்து, முன் பின் தெரியாத இடத்தில் பாதுகாப்பாகத் தங்க வைத்த கடவுளுக்கு நன்றி கூறிவிட்டு, மெல்ல கண்களை மூடினாள் அவள்.

## 2

காலை நேர விடியல், அன்று வரை அறிந்திராத இதத்தைக் கொடுக்க, இதழில் மலர்ந்த முறுவலுடன் செல்லச் சோம்பல் முறித்தாள் அவள்.

இவ்...வளவு இனிமையான காலை வேளையை, இதுவரை அவள் கனவில்கூட கண்டதில்லையே!

விடியற்காலை ஐந்து மணிக்கு எழுந்தால், முதலில் குளித்து விட்டு, சாமிக்கு ஒரு கும்பிடும் போட்டுவிடுவது தான் வழக்கம்!

அதன் பிறகு வாசலைப் பெருக்கி, பசுஞ்சாண கரைசல் நீர் தெளிப்பாள்.

வெள்ளை நிறக் கோலமாவைக் கொண்டு சின்னதாக ஒரு கோலம்.

அடுத்த சில நிமிடங்களில் பின் கட்டில், பரபர வென்று பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவும் அவள் கைகள்.

அப்புறம், சித்தியின் குளியலுக்காக விறகு அடுப்பைப் பற்ற வைத்து வென்னீர் போடும் போதே, "ஏன்...டி, இன்னுமா காபி தயாரிக்கல?" நீட்டி முழங்கும் சித்தி நாகவல்லியின் குரல்.

அவசர அவசரமாக காபி தயாரித்து, வேகமாகச் சென்று கொடுத்ததும் சப்புக் கொட்டியபடி குடித்துக் கொண்டே,



அன்று காலை டிபனுக்கு என்னென்ன செய்வது என்று அறிவிப்பாள் சித்தியம்மா.

தலை குனிந்து கேட்டுக் கொண்டு நிற்பாள் சின்னவள்.

பெண் தனக்குப் பணிந்து மரியாதையுடன் நின்றிருக் கிறாள் என்று நாகவல்லி இறுமாப்புடன் நினைத்திருப் பாள்.

ஆனால் உண்மைக் காரணம் அதுவல்ல!

பல் தேய்க்காமல் காபியைக் குடிக்கும் சித்தியைப் பார்க்கும்போது, உள்ளூரத் தோன்றும் அருவருப்பான உணர்வில், முகம் சுளித்து விட்டாள் என்றால் அவ்... வளவுதான், வேறு வினையே வேண்டாமே!

அன்று முழுவதும் கண்ணில் படும்போதெல்லாம் கிடைக்கும் மண்டகப்படியை யார் தாங்குவது?

முதலில் முகமாற்றத்தை மறைக்கத் தெரியாமல், ஓரிரு முறை பட்டதே இந்த ஜென்மம் முழுவதற்கும் போதுமே!

எனவே, நல்...ல பெண்ணாக தலை குனிந்து கொள் வதையே வழக்கமாக்கிக் கொண்டாள்.

காபியை கடைசி சொட்டு வரை மிச்சம் வைக்காமல் குடித்து விட்டு, "மசமசவென்று வாயைப் பார்த்துக் கொண்டு நிற்காமல், வேலையைப் பார். போ" என்று விரட்டுவாள் சித்தி.

"தினமும் செய்வதைப் போல, சாதம் வடித்து, ஒரு சாம்பார் பொரியல், ரசம் செய்" என்ற மெனுவை, பல் தேய்க்காத தன் வாயைத் திறந்து சொல்வதற்குள், அவ்...வளவு தோரணை காட்டுவது சித்தியின் வழக் கம்தான்.

மனதிற்குள் திட்டித் தீர்த்தபடி எல்லா வேலைகளையும் செய்து முடித்துவிட்டு, வேலைக்கு ஓட வேண்டும்.

பஸ்ஸில் இடிப்பதற்கென்றே வரும் தடிமாடுகளைச் சகித்துக் கொண்டு, பெரும்பாலானவர்களைப் போன்று மனதில் அர்ச்சனை செய்து கொண்டு செல்வாள்.

மாதம் மூன்றாயிரம் சம்பளத்திற்காக, அலுவலகத்தில் வேலை நெம்பி எடுக்கும்!

டைப் அடித்து அடித்து விரல்கள் நோகும் போது, 'சை! என்ன வாழ்க்கை இது?' என்று, பலமுறை நினைத்திருக்கிறாள் அவள்.

ஆனால் இன்று அவளுக்குச் செய்வதற்கென்று எந்த வேலையும் காத்திருக்கவில்லை!

காலை வேளையில் சித்தியின் வசையுமில்லை!

பிறகு அவளின் மலர்ந்த முறுவலுக்கு என்ன தடையிருக்க முடியும்?

ஜன்னலைத் திறந்து விட்டதும், சிலுசிலுவென்ற மென் தென்றல் காற்று உள்ளே நுழைந்து, புத்துணர்வைக் கொடுத்தது!

எதிரே கண்ணுக்கெட்டிய தூரம் வரை பசுமை மட்டுமே. மேடும், பள்ளமுமான தேயிலை மலைகள், பச்சைக் கம்பளம் போல விரிந்திருந்தது.

இது எந்த இடமாக இருக்கும்? கேட்க வேண்டும் என்று மனதில் குறித்துக் கொண்டு, மலை முகடுகளைப் பார்க்கலானாள்.

பொடிப் பொடி வைரங்களாக மின்னிய பனித்துளிகள். பசேல் என்றிருந்த தேயிலைகளின் மேல், வைர கிரீடமாக ஜொலித்தபடி வீற்றிருந்தது!



அக்காட்சியைக் கண்கள் குளிர ரசித்தவளின் மனது, வானில் 'ஜிவ்'வென்று வட்டமடித்துப் பறக்கும் பறவையைப் போல் இலேசானது.

அறையோடு ஒட்டியிருந்த பாத்ரூமில் குளித்து ரெடியாகி, பச்சை வண்ண சுடிதாரை அணிந்து கொண்டு வெளியே வந்தாள்.

அவ்...வளவு பெரிய ஹாலில் தனித்து நின்றபோது, கொஞ்சம் பயம் படரத்தான் செய்தது.

ஜில்லென்றிருந்த தரையில் லேசாக காலூன்றி நடந்தாள்.

டைனிங் டேபிளை அடுத்திருந்த சமையலறையிலிருந்து பாத்திரங்கள் உருட்டும் சத்தம் கேட்டது. யாராக இருக்கும் என்று எட்டிப் பார்த்தபோது, 'பிளாஸ்க்கில்' டீயை ஊற்றிக் கொண்டிருந்தான் அவன்.

'குட்மார்னிங்' என்று கூறி புன்னகைத்து, அவளிடம் ஒரு கப் 'டீ'யை ஊற்றிக் கொடுத்தான்.

பெற்றோரை இழந்த பிறகு, கிடைத்த கொடிய வாழ்க்கையை வாழ, தன்னைத் தயார் படுத்திக் கொண்டிருந்தாள் அவள்.

அந்த நீண்ட பாலைவன வாழ்விற்குப் பிறகு, அவளுக்காக டீ ஊற்றிக் கொடுத்திருக்கும் ஒருவன்!

இறுகிய தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டு, டீயை அருந்தினாள்.

''என்ன கசக்கிறதா?'' என்றான் அவள் முகச் சுளிப்பைக் கண்டு.

''டிகாஷன் கொஞ்சம் அதிகம். ஆனால் சுவை ரொம்பவும் வித்யாசமாயிருக்கிறது'' என்றாள்.

''பால் பவுடரில் போட்ட டீ. இதை விட நன்றாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமில்லை'' என்றுவிட்டு, பிளாஸ்க்குடன் வெளியே சென்றான்.

செக்யூரிட்டிக்காக இருக்கும் என்றெண்ணியபடி கப்பைக் கழுவி வைத்தாள்.

பார்வையை நாலா பக்கமும் செலுத்தியபோது, நான் எழுபது சதம் தான் சுத்தமாயிருக்கிறேன் என்பது போல, ஆங்காங்கே சிலந்தி ஒட்டடைகள் இருந்தன.

உட்பக்கம் சென்று பார்த்தபோது, ஸ்டோர் ரூமை அடுத்திருந்த வராண்டா பக்கம், ஒட்டடைக் குச்சியும், துடைப்பமும் கிடந்தது.

அதை எடுத்து வந்து ஒட்டடைகளை ஒட்டி எடுத்து விட்டு, பரபரவென்று பெருக்கித் தள்ளி கிச்சனை சுத்தமாக்கினாள்.

''ஹே...ய். நீ ஏன் இதையெல்லாம் செய்கிறாய்? விடு. விடு. இரண்டொரு நாட்களில் ஆட்களைப் போட்டு விடலாம். அதற்குள் இந்த வீடு பாழாகி விடாது'' என்றான் சாதாரணமாக.

''பரவாயில்லை சார். எனக்கு இது பழக்கமான வேலை தான்.

''குப்பையும், ஒட்டடையுமாக இருக்கும் இடத்தில் லட்சுமிதேவி நுழைய மாட்டாள் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் ஆட்கள் போடும் வரையாவது நான் செய்கிறேன்.''

''ஓ.கே. ஆனால் குப்பையிருக்கும் இடத்தில் லட்சுமி தேவி குடியிருக்க மாட்டாள் என்பது, இன்றைய வியாபார உலகில் சாத்தியமில்லை பெண்ணே.



''ஏனென்றால், குப்பையை விற்றே பணம் சம்பாதித்து, வாழ்க்கையை நடத்துவோர் அதிகமாகிக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா?'' என்றான் முறுவலோடு.

''நானும் மறுக்கவில்லை சார். அப்போதும் குப்பை அவர்களின் கையை விட்டுப் போன பிறகு தானே, பணம் - லட்சுமி கைக்கு வருகிறது'' என்று இயம்பினாள் அப் பாவை.

''பியூட்டி புல். சுவாரஸ்யமாகத்தான் பேசுகிறாய். என்ன படித்திருக்கிறாய்? முதலில் உன் பெயரைச் சொல், அழைக்க வசதியாயிருக்கும். நேற்றையச் சூழ்நிலையில் கேட்க மறந்து விட்டேன்'' என்றவன், ''நான் பவனேந்திரன்'' என்று தெரிவித்தான்.

''துளசி ராணி. ப்ளஸ் டூ வரை படித்திருக்கிறேன்'' என்றாள்.

''துளசி என்றால் புனிதம், தூய்மை. இதற்கெல்லாம் அம்மணி நீங்கள்தான் ராணியாக்கும்?'' என்றான்.

''பவனன் என்றால் உலகம், கடவுளாமே. அப்போது நீங்கள் என்ன இந்த உலகமும், கடவுளுமா?'' என்று திருப்பினாள் அவள்.

''குட். நேரிடையாகவே தாக்குகிறாயே! உன் பக்கம் சப்போர்ட் என்று ஒருவரும் இல்லையென்பது நினைவிருக்கிறதா? இது மாதிரி என்னை மட்டம் தட்டினாய் என்றால், உன்னை வீட்டை விட்டு வெளியே அனுப்பி விடுவேனோ என்ற பயமில்லையா உனக்கு?'' என்று வினவினான் பவனேந்திரன்.

''எதையும் நேரடியாக தீர்த்துக் கொள்வதுதான் முறை. பெண்ணை வீட்டை விட்டு அனுப்பி விடுவேன் என்று சொல்லி முதுகில் குத்த, நீங்கள் கோழையல்ல என்பது என் கணிப்பு. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று அவனிடமே கேட்டாள்.

பட்டென்று தலைக்கு மேலே கும்பிடு போட்டு, ''அம்மா தாயே! நீ வக்கீலுக்குப் படித்திருந்தாயென்றால், பெயரோடு, பணத்தையும் அள்ளியெடுத்திருக்கலாம்'' என்று கிண்டலாக சிலாகித்து, தன் தோல்வியை மறைமுகமாக ஒப்புக் கொண்டான்.

''தென். என்னை சார் என்று அழைக்காதே. ஆபீஸிலிருக்கும் பீல் வருகிறது. பவன், பவனன், இந்தர் என்று இதில் எதையாவது தேர்வு செய்து கொள் துளசி'' என்றான்.

''சரி'' என்றாள்.

''சரி மட்டும் தானா?''

''சரி பவன்'' என்றாள் சிறு முகச்சிவப்புடன்.

''உனக்கு போரடித்தால் டீ.வி. பார். மேகஸின்ஸ் கூட இருக்கும். கொஞ்சம் பனி குறைந்த பிறகு வெளியே நடக்க சுகமாயிருக்கும். விருப்பமிருந்தால் நீயும் உடன் வரலாம்'' என்று விட்டு, டேபிள் மேல் இருந்த 'லேப் டாப்'பைத் திறந்து, அதில் மூழ்கினான் அவன்.

அவன் வேலையில் இடையூறு பண்ணாத வகையில், மெல்லிய சத்தத்துடன் நியூஸ். சேனலை வைத்தாள் துளசி.

ஆனால் மனம் அதில் பதியவில்லை!



இந்நேரம் சித்தி தன்னை மிகக் கேவலமான வார்த்தைகளால் அர்ச்சித்துக் கொண்டிருக்கக் கூடும்.

அந்த தங்கராஜனும் மிகுந்த கோபத்துடன் இருப்பான். அதை சித்தியிடம் நிச்சயம் காட்டுவான். பாவம் சித்தி!

தனியே நின்று அவன் கோபத்தை எதிர்கொள்ள வேண்டும். எப்படிச் சமாளிக்கிறார்களோ என்று வருந்தியது நன்றிகொண்ட மனது!

அதே சமயம் இதில் அவள் வருத்தம் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லைதான்!

தான் மறுக்க மறுக்க பணத்தாசையினால் தன்னை அந்த தங்கராஜனுக்குத் திருமணம் செய்ய முடிவெடுத்தார்களே!

அவர்கள் மகளுக்கு அப்படியொரு மூன்றாம் தரமான மணவாளனைத் தேர்வு செய்ய நினைப்பார்களா?

கேட்க நாதியற்றவள் என்பதால்தானே இவ்வளவு இளக்காரம் என்றெண்ணியது மனது.

ஏதோ, அவள் எந்த ஜென்மத்தில் செய்த புண்ணியமோ? இன்று உயிரோடிருப்பது!

இல்லையென்றால் பேனில் தொங்கியிருப்பாள் என்று நினைத்துவிட்டு, முதல் தடவையாக தலையை உலுக்கினாள் துளசி.

உயிர் எண்ண அவ்...வளவு துச்சமா? தகுதியற்ற ஒருவனுக்காகவோ, ஏன் எந்...த ஒரு விஷயத்திற்காகவுமே கூட, உயிரை விட நினைப்பது முட்டாள் தனம் தானே?

ஓடி ஒளிந்துகொள்ள நினைக்கும் கையாலாகாத கோழைத்தனம்! எஸ்கேபிஸம்!

இந்த எண்ணம் தோன்றிய பிறகு அவள் முகத்தில் தெளிவு தென்பட்டது.

முதலில் தன்னுடைய செலவிற்காவது ஒரு வேலையைத் தேட வேண்டும்.

ஆனால், கொஞ்சம் நாளாவது மறைந்து வாழ வேண்டிய சூழ்நிலையில், எங்கே போய் வேலை தேடுவது?

அதைவிட இங்கிருந்தே செய்யக்கூடிய வேலைகள் ஏதாவது இருந்தால், கொடுக்குமாறு பவுனனிடமே கேட்கலாமா? என்று யோசித்தாள் துளசி.

ஓரிரு முறை அவள் முகத்தைப் பார்த்தவன் தன் வேலைகளை முடித்துவிட்டு, லேப் டாப்பை மூடி வைத்தான்.

ஆதவன் தன் ஒளிக்கதிர்களைச் சற்றே அம்மலை முகட்டின் மீது செலுத்தியிருந்த, பனி விழும் காலை நேரம்!

கண்களில் பட்ட ஓரிருவரும்கூட ஸ்வெட்டரும், மங்கி கேப்புமாகச் செல்ல, சட்டென்று கூட வந்தவனைப் பார்த்தாள் துளசி.

கறுப்பு வண்ண ஜீன்ஸ் பான்ட், பாதாம் தோல் வண்ண பிரௌனில், உடலைச் சற்று இறுக்கிப் பிடித்திருந்த காலரில்லாத முழுக்கை டீ ஷர்ட்.

உள்ளங்கை அகலத்தில் பெல்ட் மாதிரி பட்டையாயிருந்த 'ஸ்கார்ப்'பை, இரு காதுகளையும் மறைத்தபடி போட்டிருந்தான் பவனன்.

அவன் சொல்லுக்கிணங்க போர்த்திக் கொண்டு வந்திருந்த, குட்டி ரஜாய் ஷாலை நன்றாக இழுத்து



விட்டுக் கொண்டு, ''உங்களுக்குக் குளிரவில்லையா?'' என்று கேட்டாள்.

''அவ்வளவாக இல்லை. காதில் பனி விழுவதைத் தடுத்து விட்டாலே குளிர் குறைந்து விடும். வட மாநிலங்களின் பனியோடு ஒப்பிட்டால், இது குறைவுதான்'' என்றான்.

''இது எந்த இடம் பவன்?'' என்று கேட்டாள்.

''நடுமலை. வால்பாறையைச் சுற்றியிருக்கும் மலைகளில் ஒன்று என விபரம் தெரிவித்தவன், இந்த இடம் கண்களுக்குக் குளிர்ச்சியாக, மனதிற்கு இதமாகத்தான் இருக்கிறது. கொடுத்திருக்கும் விலைக்குத் தகும் தான்'' என்றான் மெல்ல தனக்குள்ளே பேசுபவனைப் போல.

''நீங்கள் இந்த ஊரில்லையா பவன்?''

''இல்லை. சென்னை வாசி. ஆமாம் நீ எந்த ஊர்?'' என்று கேட்டுவிட்டு, பாதையோரம் கேட்பாரற்றுப் பூத்திருந்த, லைட் ஆரஞ்சு வண்ண 'டேலியோ ஒயின்' பூவைப் பறித்து அவளிடம் கொடுத்தான்.

'தேங்க்ஸ்' என்று முறுவலோடு கூறி, மலரின் பல அடுக்கு இதழ்களை ஒரு முறை வருடி விட்டு, என் சொந்த ஊர் சித்தர் கோவில் சேலம் மாவட்டம் பக்கமிருக்கிறது'' என்று கூறிவிட்டு செடியிலேயே மீதமிருந்த மொட்டுக்களை ரசனையுடன் நோக்கினாள்.

சில வினாடிகள் அவளைக் கூர்ந்தவன், ''நீ என்னதான் ஆசையுடன் வருடிக் கொடுப்பது போல் பார்த்தாலும் கூட, அந்த மொட்டுக்கள் இதழ் விரிக்க, குறைந்த பட்சம்

இரண்டு நாட்களாவது ஆகும் அம்மணி'' என்றான் கிண்டலான குரலில்.

மெல்ல முகம் சிவந்த போதும், ''அடடா! ஒரு ஐந்து நிமிடம் ஆசையோடு பார்த்தால், எனக்காகவாவது மலர்ந்து விடும் என்றல்லவா நினைத்தேன். ஐய்யகோ. இப்போது நான் என் செய்வேன்?'' என்றாள் போலியான வருத்தமுடன்.

''அச்சோ! இவ்...வளவு வருத்தப்படாதேம்மா. வேண்டுமானால் ஐந்து நிமிடம் நின்று முயற்சி செய்து பார்க்கலாம்'' என்று தாங்குவது போல வாரினான் பவனேந்திரன்.

முழு மனதும் சந்தோஷமாக இருக்கும்போது தோன்றும் புன்முறுவலைப் போல, வர்ணிக்க இயலாத வசீகரமாயிருந்தது அவன் முகம்!

தன் முகத்தில் செம்பூக்கள் அதிகமாக, திகைப்போடு அவனைப் பார்த்தாள் துளசி ராணி.

''அங்கே செடியில் மலர வேண்டிய டேலியோ, உன் கன்னங்களில் மலர்ந்து விட்டது போலிருக்கிறதே?'' என்றான் ரசனையோடு!

கடினப்பட்டு முறுவலை மறைத்துக் கொண்டு, முறைப்பதைப் போல பாவனை செய்தாள் துளசி.

''இந்த 'போஸ்' சுத்தமாகப் பொருந்தவில்லை.''

''ஹய்யோ! சற்று நேரம் பேசாமலிருங்களேன்.''

''ஓ.கே. இனி கேலி செய்யவில்லை. உன்னைப் பற்றி ஏதாவது சொல்லேன். ஏன் திருமண மண்டபத்திலிருந்து ஓடி வந்தாய்? மாப்பிள்ளையைப் பிடிக்கவில்லையா?'' என்று விசாரித்தான்.



அவளிடம் மௌனம் நிலவியது!

''உன் அமைதியைப் பார்த்தால் பலத்த காரணமிருக்கும் போலிருக்கிறதே? உனக்குப் பிடிக்காத திருமணத்திற்கு உன் பெற்றோர் எப்படிச் சம்மதித்தார்கள்? நிறைய பெற்றோர் இப்படித்தான், பிள்ளைகளின் மனதில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்வதேயில்லை. அவர்கள் இஷ்டத்திற்கு நாம் தலையாட்ட வேண்டும் என்று நினைக்கிறார்கள்'' என்று கசப்பான குரலில் கூறினான் பவனேந்திரன்.

''என் விஷயம் அப்படியல்ல. என் சிறு வயதிலேயே பெற்றோர் மறைந்து விட்டார்கள். சித்தப்பா குடும்பத்தின் நிழலில் வாழ வேண்டிய கட்டாயம் எனக்கு'' என்றாள் மெல்லிய குரலில்.

''ஓ! ரியலி சாரிம்மா! ஆறிய காயத்தைக் கீறி விட்டேன் போலிருக்கிறது. சாரி'' என்றான் அவள் வலியை உணர்ந்தவனாக.

நீண்...ட ஆண்டுகளுக்குப் பிறகு, அவளிடம் அக்கறையும், பரிவும் காட்டும் ஒரு மனிதன்!

தொண்டையடைத்து கண்கள் கலங்கியது அவளுக்கு!

''ஷ்ஷ்... துளசி! எதற்காக கண் கலங்குகிறாய்? வேண்டாததையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். என் நிழலின் கீழ் இருக்கும் வரை, நீ எதற்காகவும் வருத்தப்படவே கூடாது. புரிஞ்சுதா?'' என்று மெல்லிய கண்டிப்புடன் கூறி, ஆதரவளிக்கும் தோழனைப் போல், அவள் தலைமுடியை வருடி விட்டான் பவனேந்திரன்.

நான் ஒழுக்கமற்றவன் என்று வெளிப்படையாகவே கூறிய ஒருவனிடம், இவ்...வளவு இதமாகப் பேசும் மென்மையை அவள் எதிர்பார்க்கவேயில்லை!

''என்...ன அம்மணிக்கு இவ்வளவு திகைப்பு! இவனுக்கு இது மாதிரியெல்லாம் கூட பேசத் தெரியுமா என்றா? அல்லது, துளசி ஒருவேளை என்னோடு பழகிய மற்ற பெண்களைப் போன்று, நீயும் என்னிடம் மயங்... கிப்போய் பார்க்கிறாயா? ம்!

''ஆஹா! அப்படியிருந்தால் என் அதிர்ஷ்டம் அதிர்ஷ்டம். நேற்றிரவிலிருந்து எனக்கு ரொம்பக் குழப்பம். என்னடா நாம் பார்ப்பதற்கு நன்றாக இல்லையா? இந்தப் பெண் நம்மை சட்டையே பண்ண மாட்டேன் என்கிறாளே என்று ஒரே வருத்...தமாக இருந்தது.

''ஹப்...பா! என் நெஞ்சக் கலக்கம் இப்போதுதான் சற்று குறைந்திருக்கிறது'' என்று கூறி பெருமூச்சு விட்டு, கண் சிமிட்டி அவளை வம்பிற்கிழுத்தான் பவனேந்திரன்.

''எவ்வளவு தலைக்கனம் உங்களுக்கு. பார்க்கிற அத்தனைப் பெண்களும் மயங்கிப்போய் 'தொப்'பென்று விழுந்து விடுவார்களாக்கும். இதுவே எங்கள் ஊர் பக்கமாகப் பேசியிருந்தால், பழுக்கக் காய்த்த கம்பியா லேயே சூடிழுத்திருப்பார்கள். ஜாக்கிரதை'' என்று மிரட்டி னாள் துளசி.

''ஹூ..ம்! நீ இப்படி அடிக்கடி காளி அவதாரம் எடுத்தாயென்றால், பாவம் சின்னப் பையன் நான் பயந்து விட மாட்டேனா? ஓடிப்போய் என் அம்மா மடியில் படுத்துக் கொள்ள, அவர்கள் கூட அருகில் இல்லாத



நேரமிது. பாவம் பார்த்தாவது விட்டு விடக் கூடாதம்மா?'' என்றாள் பயந்தவளைப் போல!

''அந்த பயமிருந்தால் சரி! போனால் போகிறதென்று விட்டு விடுகிறேன்'' என்று தோரணையுடன் கூறி விட்டு, கலகலவென்று வெள்ளி மணிகளாகச் சிரித்தாள் துளசி.

'மனதை மயக்கும் இனிய புன்னகை' என்று ரசித் தவன், தானும் அதில் கலந்து கொண்டான்.

# 3

வீட்டிலிருந்து அரைக் கிலோ மீட்டர் தூரத்திற் குள்ளேயே அங்கொன்றும், இங்கொன்றுமாக குடியிருப்பு வீடுகள் தென்பட்டன.

மேலும் ஐந்து நிமிடம் நடந்தபோது சற்றே மேடா யிருந்த பகுதியில் தென்பட்டன நாற்பது, ஐம்பது வீடுகளைக் கொண்ட குடியிருப்புப் பகுதி.

காலை வேளையில் சுறுசுறுப்புடன், தங்களின் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள் அப்பகுதி மக்கள்.

ஒரு சிலர் விறகு மூட்டி, அதைச் சுற்றி அமர்ந்து குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள்.

அப்போது, சாலையோரமாக நடந்து கொண்டிருந்த இருவரையும் கடந்து சென்ற இளைஞன் ஒருவன், ''ஏ

ரகு! கந்து வட்டிக்காரன் வந்து கொண்டிருக்கிறான். நீ எங்கேயிருக்கிறாய்?'' என்று குரல் எழுப்பியவாறு ஓடி னான்.

இரண்டு நிமிடத்தில் ஒரு ஜீப்பும் அவர்களைக் கடந்து சென்றது.

ஒரு சிறிய ஓட்டு வீட்டின் முன்பாக ஜீப் நிற்க, வெண்ணிற உடையணிந்த நான்கு ஆண்கள் கீழேயிறங் கினார்கள்.

''ஏலே ரகு. வெளிய வா'' என்று குரல் கொடுத்தான். ஜீப்பிலிருந்து இறங்கிய ஒருவன்.

''ஐயா!'' என்று குரல் அடைக்கக் கூறியபடி, வீட்டிலிருந்து வெளியே வந்தான் நடுத்தர வயது இளைஞன்.

''என்னா..லே, ஆளுங்கள பாத்தா ஓடி ஒளிஞ்சுக் கறயாம். என்னா சங்கதி? வட்டிக்கு வாங்கினதை திருப்பித்தர உத்தேசமில்லையா? எம்பணம் உடனே வந்தாகணும்.

''இல்லாட்டி ஊட்ல இருக்கற சாமான் சட்டை யெல்லாம் அள்ளிப் போடுங்கடானு சொல்லிப்புடுவேன். வாங்கின பணத்தைக் கொடுக்க உனக்கு கசக்குதா?'' என்று திட்டினான் பணம் கொடுத்தவன்.

''ஐயா. கொஞ்சம் அவகாசம் கொடுங்க. எப்படியாவது திருப்பிடறேன்'' என்று கெஞ்சினான் அந்த ரகு.

''சும்மா சும்மா உனக்கு வாய்தா குடுக்க நான் மடைய னாலே. வட்டி போனாலும் போய்த் தொலையட்டும். அசல் பதினைந்தாயிரமும் கொடுத்துட்டு மறுவேலை பாரு'' என்று கெடுபிடி காட்டினான் வட்டிக்காரன்.



''மாசத்துல பாதி நாளைக்கு தாங்க வேலை இருக்குது. வருமானம் குறைந்து போனதாலதாங்க, சொன்ன நேரத்துல திருப்ப முடியலை. ஒரு நல்ல வேலைய சீக்கிரமா தேடிக்கிட்டு, கரெக்டா பணத்தைக் குடுத் துடறேங்க'' என்று தயங்கித் தயங்கிக் கூறினான் அவன்.

''ஆமா.. நீ எப்ப வருவேனு உனக்காக தட்டுல வேலைய வெச்சுட்டு, நிறைய பேர் காத்துக்கிட்டு இருக் கறாங்க. அதெல்லாம் சரிப்படாதுப்பா. உங்ககிட்ட பசுமாடு ஒன்று இருக்காமில்ல, அத புடிச்சிட்டுப் போறேன்.

''அது ஒரு பத்துக்குத்தேறும். மீதிப் பணத்தை சீக்கிரம் திருப்பப் பாரு'' என்று கூறிவிட்டு, ''ஏலே நம்ம பயலுங்க யாராவது ஒருத்தன் மாட்டைப் புடிச்சுக்கிட்டு வாங்கடா'' என்று கூறிவிட்டு, சட்டையின் கையை மடித்துவிட்டுக் கொண்டு, ஜீப்பிற்குத் திரும்பினான் வட்டிக்காரன்.

''ஐயா. வேண்டாமுங்க. விட்டுடச் சொல்லுங்க சாமி'' என்று அந்த ரகுவுடன் சேர்ந்து, ஒரு வயதான பெண்மணி. அவன் அம்மாவாக இருக்க வேண்டும், அவளும் பரிதாபமாகக் கேட்டாள்.

நடப்பதையெல்லாம் சற்றே தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள் துளசியும், பவனேந்திரனும்.

எதிரே நடந்த காட்சி துளசியை தொண்டையடைக்க வைக்க, எந்தவித உணர்ச்சிகளையும் வெளிக்காட்டாமல், கருங்கல் தூண் மாதிரி நின்று பார்த்துக் கொண்டிருந்தான் பவனன்.

சட்டெனத் திரும்பி, அருகேயிருந்தவனை ஒருவித தயக்கமுடன் பார்த்தாள் அவள்.

ஒற்றைப் புருவம் தூக்கி, தலையை மேலும் கீழுமாக ஒருமுறை அசைத்து, "என்ன?" என்பதுபோல் பார்த்தான் அவன்.

"வந்து, அந்தக் கடன்பட்டிருக்கும் குடும்பத்திற்கு, உங்களால் எந்த வகையிலாவது உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டாள்.

"நினை...த்தேன்! அம்மணியின் உள்ளம் இன்னும் உருகாதிருக்கிறதே, என்ன அதிசயம் என்று? மறு நிமிடமே கேட்டு விட்டாய்?'

"முன்பின் தெரியாதவர்களுக்காக எல்லாம் வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை துளசி. அவரவர் பிரச்சனைகளுக்கு அவரவரே தான் தீர்வு காண முயற்சிக்க வேண்டும்" என்று கைகளைக் குறுக்கே கட்டிக் கொண்டு, தத்துவம் பேசினான் பவனேந்திரன்.

எதிரேயிருந்தவனை ஒரு மாதிரி வெறித்துப் பார்த்தாள் துளசி.

சிறிதும், பரிதாபப்படாமல், அப்படியென்ன கருங்கல் மனது உனக்கு? என்ற தொனியிலிருந்தது அப்பார்வை!

"அப்பப்பா! என்ன கா..ரம்? இவ்வளவு அழகான முகத்திலிருக்கும் நயன விழிகளைக் கொண்டு, தண்மதி - முழு நிலவைப் போல குளுகுளுவென்று பார்க்க வேண்டும் துளசி.

"அதுதான் ரசிக்கும்! பொருத்தமில்லாத வெறித்த பார்வை, அழகை மட்டுப்படுத்திக் காட்டும் என்பது உனக்குத் தெரியாதா?" என்றான் நகை குரலில்.

"தெரியாது. தெரிய வேண்டிய அவசியமும் இல்லை" என சுள்ளென்று பேசத் துடித்த நாவைக் கட்டுப்படுத்திக் கொண்டு,



"பேச்சை மாற்றாதீர்கள் பவனன். உங்களால் அவர்களுக்கு உதவ முடியுமா, முடியாதா என்று மட்டும் சொல்லுங்கள் போதும்" என்று படபடவென்று பொரிந்தாள்.

"சத்தம் பட்டாசு மாதிரியல்ல வெடிக்கிறது. ஆனால் கோபத்தையும் கூட கட்டுப்பாட்டுக்குள் வைத்துப் பேசும்போது சோபிக்கிறாய்.

"அதே சமயம் உதவ முடியுமா, முடியாதா? என்று, அந்த வட்டிக்காரனைப் போல கறாராக, இதுவரை என்னிடம் யாரும் கேட்டதில்லை" என்றான் சிறு வியப்பைக் காட்டி.

"முதல் தடவையாக கேட்பது, நானாக இருக்கக் கூடாது என்று கட்டாயமில்லையே?" என்றாள் பிடிவாதமான குரலில்.

ஹ்ஃப்! என வேகமாக மூச்சை இழுத்து விட்டவன், "உனக்கு ஏன் இவ்வளவு பிடிவாதமோ? சரி. அவர்களுக்கு நான் எந்த வகையில் உதவ வேண்டுமென்று எதிர்பார்க்கிறாய்? அதையும் நீயே சொல்லிவிடு" என்று கூறி, சற்றுத் தொலைவில் சலசலத்துக் கொண்டிருந்த கும்பலை, ஒரு முறை பார்த்துவிட்டுத் திரும்பினான் பவனன்.

"அந்த மனிதருக்கு மாதம் முழுவதும் இருப்பது போல் ஏதாவது ஒரு வேலை கொடுங்களேன். நீங்களும் வேலைக்கு ஆள் போடுவதாகத் தானே சொன்னீர்கள்?

"அப்புறம், அந்த வட்டிக்காரனுக்குப் பாதியளவு பணம் கொடுத்து விட்டு, மீதியை சம்பளத்திலிருந்து மாதம் ஆயிரமாகக் கொடுக்கட்டும் என்று சொல்லிப் பாருங்களேன்.

''இது உங்களால் முடியும், முடியும் தானே?'' என்று ஆர்வமுடன் கேட்டாள்.

''யார், என்னவென்றே தெரியாத ஆளை, வேலைக்கு வைப்பதில் எனக்கு எப்போதும் உடன்பாடில்லை துளசி. விசாரிக்கிறேன். எனக்கு திருப்தியாக இருந்தால், நிச்சய மாக உதவுகிறேன்'' என்று கூறி விட்டு, எதிரேயிருந்த கும்பலை நோக்கிச் சென்றான் பவனன்.

பத்து நிமிடத்திற்குள்ளாகவே திரும்பி வந்தவன், ''எனக்கு ஓ.கே. துளசி. ஐந்தாயிரம் கொடுத்து விட்டு, நாளைக்கு வந்து பார்க்கச் சொல்லியிருக்கிறேன். டிரைவிங் தெரியுமாம். நல்ல மனிதராகத் தான் தெரிகிறது. பார்க்கலாம்'' என்று தகவல் தெரிவித்தான்.

''ரொம்ப தேங்க்ஸ் பவன்.''

சிறு தலையசைப்புடன் நன்றியை ஏற்றவன், ''இந்த டிரைவரின் நடவடிக்கைகள் நல்ல மாதிரியாக இருக்கும் பட்சத்தில், இவரைக் கொண்டே மேலும் மூன்று, நான்கு பேரை வேலைக்குச் சேர்க்கலாம் என்றிருக்கிறேன்'' எனத் தெரிவித்தான்.

''நல்ல யோசனைதான். ஆட்களும் அலைச்சலின்றிக் கிடைப்பார்கள்'' என்றாள்.

பேசியபடியே திரும்பி வந்து, காலை உணவிற்காக இருந்ததைக் கொண்டு 'பிரட் டோஸ்ட்' செய்து உண்டார்கள்.

''பெரும்பாலானவர்களின் காலை உணவு பிரட், சாஸ் என்று எப்படித்தான் மாறிப்போனதோ? என்னால் இரண்டு நாட்களுக்கு மேல் இதை வைத்து ஓட்ட முடியவில்லையே!



''இன்னும் இரண்டு நாட்கள் இதே நிலை தொடர்ந்தால், நாக்கு மரத்துப்போய்விடும் போலிருக்கிறது. துளசி, உனக்கு ஓரளவிற்காவது சமைக்கத் தெரியும்தானே? மூன்று மாதங்கள் சமைப்பதற்கு என்னென்ன மளிகைப் பொருட்கள் தேவையென்று ஒரு லிஸ்ட் எழுதி வை.

''சமைப்பதற்குத் தேவையான பாத்திரங்கள் கூட, என்னென்ன தேவையென்பதையும் தனியாக எழுது'' என்று பேப்பர், பேனாவைக் கொடுத்து, அவளிடம் வேலையை ஒப்படைத்துவிட்டு, செல்ஃபோனை கையிலெடுத்துக் கொண்டு, வெளிப்பக்கமிருந்த மூங்கில் சேர் ஊஞ்சலில் அமர்ந்தான் பவனேந்திரன்.

சுமார் பதினொரு மணியளவில் டீ தயாரித்துக் கொடுத்தாள் துளசி.

இரண்டு மிடரு அருந்தியவன், ஒரு கணம் கண்களை மூடித் திறந்து ''ம். பரவாயில்லை. ஏதோ சகிக்கிற மாதிரி இருக்கிறது'' என்று 'கமென்ட்' கொடுத்தான்.

அவள் முறைத்தாள்!

''சரி. சரி. முறைப்பதை பிறகு வைத்துக் கொள்ளலாம். இப்போது இன்னுமொரு அரை கப் ஊற்றிக் கொடு துளசி'' என்று சிரியாமல் சொன்னான்.

ஒரு கணம் நெற்றியைச் சுருக்கியவள், விஷயம் புரிந்து பளிச்சென்று புன்னகைத்தாள்.

''உண்மையில் இவ்..வளவு சுவையான டீயை நான் எதிர்பார்க்கவில்லை'' என்றான் இளம் புன்னகையுடன். தொடர்ந்து, ''நானும் இதே பவுடரைக் கொண்டு தானே தயாரித்தேன். எனக்கு இந்த சுவை கிடைக்கவில்லையே.

அந்..த லட்சணத்தில் தயாரித்திருக்கிறேன் போலிருக் கிறது'' என்று டீயை அருந்தி முடித்தான்.

பிறகு, இருவருமாகச் சேர்ந்து எழுதிய 'லிஸ்ட்'டைச் சரி பார்த்தார்கள்.

எதையும் விட்டு விடாமல் எழுதியிருப்பதைப் பார்த்து 'குட் கேர்ள்' என்று மெச்சினான் பவனன்.

''வந்து'' என்று எதையோ கேட்க நினைத்துத் தயங் கினாள் அவள்.

''எங்கே வரவேண்டும். சொன்னால் வருகிறேன்'' என்றான் குறும்புடன்.

உறுத்து விழித்தாள் அவள்!

''ஹப்...பா! ஆ. ஊனா அவதாரம் எடுத்து விடு கிறாயே? ஓ.கே. என்ன சொல்ல வந்தாயென்று சொல்.''

''எனக்கு ஏதாவதொரு வேலை கொடுக்க முடியுமா? டைப் ரைட்டிங் கற்றிருக்கிறேன். கம்ப்யூட்டரில் ஆபீஸ் ஒர்க் தெரியும். நடுத்தரமான கம்பெனி ஒன்றின் அக்கௌண்ட் பிரிவில், மூன்றாண்டுகள் வேலை செய்த அனுபவமிருக்கிறது'' என்று தன் தகுதிகளைத் தெரிவித் தாள்.

''ம். நான் இங்கிருந்து கிளம்பும்போது என்னுடன் சென்னைக்கு வந்துவிடுகிறாயா துளசி. அங்கே நம் ஆபீஸிலேயே வேலை செய்யலாம். என்ன சொல் கிறாய்?'' என்று கேட்டான் பவனன்.

''எனக்கு இந்த இடம் ரொம்பவே பிடித்திருக்கிறது. இங்கிருந்தே செய்கிற மாதிரி எந்த வேலையும் இல் லையா பவன்'' என்றாள் ஏமாற்றத்தை வெளிக்காட் டாமல்.



ஓரிரு நிமிடங்கள் நிதானித்து, ''இந்த வீட்டையும், இதில் வேலை செய்யப் போகிறவர்களையும் நிர்வகிக்க ஒருவர் தேவை தான். உனக்குப் பிடித்திருந்தால் அந்த வேலையை நீயே செய்யலாம் துளசி'' என்று கூறினான்.

வீட்டு நிர்வாக வேலையை கவனித்துக் கொள்வது, அவளுக்கு ரொம்பவே பிடித்திருந்தது.

''இதையே செய்கிறேன் பவன்'' என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

ஒரு கணம் அவள் முகத்தை ஆழ நோக்கியவன், ''ஒரு நிமிடம்'' என்றுவிட்டு தன்னறைக்குச் சென்றான்.

திரும்பி வந்தவனின் கையில் 'இங்க் புளூ' நிறத்தில், ஒரு வெல்வெட் பெட்டியிருந்தது.

பெட்டியை அவளிடம் கொடுத்தான்.

''என்ன இது?''

''திறந்து பார்த்தால் தெரிந்துவிட்டுப் போகிறது'' என்றான் இயல்பாக.

சிறு ஆவலோடு திறந்தவளின் விழிகள் அழகாக மலர்ந்தன.

அவள் விழிகளின் மலர்ச்சிக்குக் காரணம், பெட்டியி னுள்ளே பளபளவென்று 'செர்ரிப் பழம்' நிறத்திலே மின்னிக் கொண்டிருந்த, 'ரூபி' கற்கள் பதித்திருந்த நகை செட் தான்!

நகைகள் பற்றி அதிக பரிட்சயமில்லாத துளசிக்கும், அவைகள் மாணிக்கக் கற்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரிந்தது!

டீ.வி. பேப்பர் விம்பரங்களிலும், தங்க நகைக் கடைகள் நடத்தும் கண்காட்சியிலும், இது போன்ற நகைகளை எத்தனை தடவைகள் பார்த்திருக்கிறாள்!

அவரை விதை அளவிலான மாங்காய் டிசைன் மாலை. ஒவ்வொரு மாங்காயின் நடுவிலும், பளிச்சென்று கண் சிமிட்டும் 'ரூபி' பதிக்கப்பட்டிருந்தது அபாரம்!

நடுத்தர அளவில் முறுக்குச் செயின். அதில் ஓவல் வடிவ டாலரில், பெரிய நெல்லிக்கனி அளவில் ஒரு கல்.

ஒற்றை மாங்காய் காதணி, மோதிரம், சற்றே பட்டை யான நான்கு வளையல்கள்!

ஆபரணங்களை மென்மையாக வருடி விட்டு, ''மிகவும் அழகாக இருக்கிறது'' என்று கூறி அவனிடம் கொடுத்தாள்.

பெட்டியை வாங்காமல் கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு, ''இதை உனக்காகத்தான் எடுத்து வந்தேன் துளசி'' என்று விட்டு, இடது கன்னத்தில் நாக்கை முட்டி, வாய் திறவாது புன்னகைத்தான் பவனேந்திரன்!

அதிர்ச்சியோடு அவனைப் பார்த்தவள், அப்புன்ன கையைத் தொடர்ந்து பார்க்கும் சக்தியற்றவளாக தலை குனிந்தபடி, ''மன்னித்து விடுங்கள் பவன். எனக்கு இதெல்லாம் வேண்டாம்'' என்று, மிக உறுதியான குரலில் மறுத்தாள்.

''ஏன் உடைகளை வாங்கிக் கொண்டவளுக்கு, இவைகளை வாங்கிக் கொள்ள என்ன கஷ்டம்?''

''உடை வாங்க செலவழித்த தொகையை, என் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்றாள் விழி உயர்த்தி.



''உனக்குச் சம்பளம் தரப்போவதாக, இதுவரை சொன்ன தாக எனக்கு ஞாபகமில்லையே? இவ்வளவு அழகான மலையில், வசதியான வீட்டில் தங்க வைத்து சாப்பாடு போட்டு, சம்பளம் வேறு கொடுக்க வேண்டும் என்று நீ எதிர்பார்த்தால், நான் போண்...டியாகிவிட மாட்டேனா துளசி ராணி?'' என்று கேலி இழையோடக் கேட்டான் அவன்.

உண்மையாகத்தான் சொல்கிறானோ என்று ஒரு கணம் குழம்பியது அவள் உள்ளம்!

உண்மையாக இருந்தால், மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருட்களையெல்லாம் எப்படி வாங்க முடியும்?

அவள் குழப்பத்தைக் கூட்டுபவனாக, ''எல்லா... வற்றிற்குமே விலையுண்டு துளசி. உன் உடை, உணவிற்காக நீ பணமாக கொடுக்கவில்லையென் றாலும், வேலை செய்து கழிப்பதும் விலை மாதிரி தானே?

''அதே மாதிரி இந்த 'ரூபி' செட்டிற்குக் கூட பண மாகத்தான் விலை கொடுக்க வேண்டும் என்றில்லை. வேறு வழியிலும் கூட...'' என்று கண் சிமிட்டலோடு ராகம் இழுத்தான் பவனேந்திரன்!

''என்னது!'' என்று அக்னியாகப் பார்த்தாள் அவள்!

## 4

அக்னி மாதிரி ஒரு பார்வையைச் செலுத்தியவள், மிகவும் சிரமப்பட்டு தன்னைக் கட்டுப்படுத்திக்

கொண்டு, "எனக்காக ஒன்று செய்ய முடியுமா?" என்று கேட்டாள்.

"செய்யக்காத்திருக்கிறேன் கண்ணே! ஆகாய நிலவைக் கொண்டு வந்து உன் காலடியில் கட்டி வைக்கட்டுமா? நட்சத்திரங்களைப் பறித்து மாலை யாக்கிச் சூடி விடட்டுமா? என்ன செய்ய வேண்டும் என்று சொல் அமுதே!" என்றான் உற்சாகமுடன்.

"அச்சச்சோ! அந்த மாதிரி சாகசமெல்லாம் செய்து கஷ்டப்பட வேண்டாம். ஒரே ஒரு ஜோடி புது செருப்பு மட்டும் வாங்கிக் கொடுங்கள். அதை என்னிடம் கொடுத்துவிட்டு, அதன் பிறகு இது மாதிரி பேசிப் பாருங்கள். துளசி எப்படி மாறுவாள் என்று தெரிந்து கொள்வீர்கள்" என்று சற்றும் பயமில்லாதவளாகக் கூறினாள்.

முகபாவனையில் எதையும் காட்டாமல், "எவ்...வளவு திமிர் உனக்கு? என் பணத்தில் நான் வாங்கி வரும் செருப்பைக் கொண்டு என்னையே அடிப்பாயாக்கும்!

"நான் இரண்டு கையிலும் 'லாலி பாப்'பைப் பிடித்து சப்பிக் கொண்டு நிற்பேன் என நினைத்தாய் போலும்?" என்றான் உதட்டோர துடிப்புடன்.

"பின்னே! என்னை மட்டும் என்னவென்று நினைத் தாய்?" என்று, சுறுசுறுவென தோன்றிய கோபத்தையும் மீறி, கலீரென்று சிரித்து விட்டாள் அவள்!

அவளின் மனக்கண்முன், பவனன் தன் இரு வலிய கரங்களையும், ஒன்றன் மீது ஒன்றாக இறுக இணைத்துப் பிடித்து சிறு பிள்ளையைப் போல், லாலி பாப்பைச் சப்பிச் சப்பி சுவைப்பது போன்ற கற்பனைக் காட்சி தோன்ற, பொங்கிச் சிரித்தாள் அவள்.



"பார்த்துப் பார்த்து, வயிற்று வலி வந்து விடப் போகிறது" என்றான் கிண்டலாக.

கற்பனையின் உச்சமாக, பவனன் தரையில் அமர்ந்து கோபமாக கால்களை உதைத்துக் கொண்டு, 'எனக்கு இன்னும் நிறைய லாலி பாப் வேணும்' என்று அடம் பிடிப்பது போல் தோன்றவும், அக்காட்சி அவளுக்கு அடக்க மாட்டாத சிரிப்பைக் கொடுத்தது!

வயிற்றைப் பிடித்துக் கொண்டு அருகேயிருந்த சோபாவின் கையில், தலையை சாய்த்துக் கொண்டாள் துளசி.

"அப்படி என்னத்தை நினைத்து இப்படிச் சிரிக் கிறாயோ தெரியவில்லை. முதலில் இந்த தண்ணீரைக் குடி" என்று, தம்ளரை அவள் கையில் திணித்தான்.

குடிக்கும்போதே புரையேறியது அவளுக்கு.

அவள் உச்சந்தலையில் மெல்லத் தட்டிக் கொடுத் தவன், தம்ளரை வாங்கி டீபாய் மேல் வைத்துவிட்டு, "ம். இப்போதாவது எதற்காக இந்த பொங்கி வரும் சிரிப்பென்று சொல்கிறாயா?" என்றான், சிறு ஆர்வமும் தென்பட்டவனாக!

"அவசியம் சொல்ல வேண்டுமா? ஒரு சில ஜோக், விஷயங்கள் ஒருவரைப் போல் மற்றவருக்கு ரசிக்கா தென்று கேள்விப்பட்டிருக்கிறேனே?" என்றாள் தயக்க முடன்.

"சொல்லித்தான் பாரேன். ரசிக்குமா இல்லையா என்று பார்த்து விடலாம்" என்றான் விடாமல்.

இந்த மாதிரி பிடிவாதத்திற்குக் கொஞ்சமாவது பட்டுத் தான் ஆக வேண்டும் என்று நினைத்து, தனக்குத்

தோன்றிய கற்பனையைக் கூறிவிட்டு, ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள்.

''மைகாட்! இது மாதிரி கூடவா ஒருத்திக்குத் தோன்றும். விட்டால் என்னை ஜோக்கராக்கி விடுவாய் போலிருக் கிறதே. உன்னை...'' என்று அவளிடம் கோபப்படுவது போல பாவனை செய்ய முயன்றவனுக்கு, தன்னையும் மீறி புன்னகை தோன்றி விட்டது!

சோபித்திருந்த அவள் முகத்தைப் பார்த்து, ''உன் னிடம் கொஞ்சம் எச்சரிக்கையுடன் தான் இருக்க வேண் டும் போலிருக்கிறது. என்ன மாதிரியான கற்பனையடா தேவுடா!'' என்றான் மாறாத முகத்துடன்.

அவனுடைய வசீகர இளநகை, வழமை போல திகைக்க வைக்க முகம் தாழ்த்திக் கொண்டாள் அவள்.

''சரி துளசி. எல்லாவற்றையும் இல்லையென்றாலும், அட்லீஸ்ட் இரண்டு வளையல், செயின், இயர் ரிங் இதை யாவது எடுத்துக் கொள்.

''இந்த வீட்டிலிருக்கும் வரையாவது, இதை நீ அணிந்து கொண்டுதான் ஆக வேண்டும்'' என்று பிடிவாதமாகக் கூறினான் பவனேந்திரன்.

சிறு தயக்கமுடன் தான் அணிந்து கொண்டாள் அவள்.

''குட் கேர்ள்'' என்று மெச்சிவிட்டு, மற்ற நகைகள் அடங்கிய அந்த வெல்வெட் பெட்டியை எடுத்துக் கொண்டு, தன் அறையை நோக்கிச் சென்றான் அவன்.

அன்று மதியவேளை சுமார் ஒரு மணியளவில், ''சார் உங்களைப் பார்க்க ரகு என்று ஒருத்தர் வந்திருக்கிறார்'' என்று செக்யூரிட்டி இண்டர்காமில் தெரிவித்தான்.



''உள்ளே அனுப்புங்கள்'' என்றான் பவனேந்திரன்.

அடுத்த இரண்டாவது நிமிடம், ''வணக்கம் சார்'' என்று கூறி எதிரே வந்து நின்றான் ரகு.

சிறு தலையசைவுடன் வணக்கத்தை ஏற்றுக் கொண்டு, ''இங்கேயும் உங்களுக்கு டிரைவிங் வேலைதான். அவ் வப்போது வெளி வேலைகளும் சிலது செய்ய வேண்டி யிருக்கும். பழைய இடத்தில் சம்பளம் மூன்றாயிரம். தினப்படி இருபது ரூபாய் என்றுதானே சொன்னீர்கள்.

''இங்கே சம்பளத்தில் ஐநூறும், தினப்படியில் பத்தும் சேர்த்துத் தருகிறேன். எனக்கு வேலையில் நேர்மை யிருக்க வேண்டும்'' என்றான் முதலாளியாக.

''நன்றி சார். நீங்கள் செய்திருக்கும் உதவியை மறக்க மாட்டேன். நேர்மையாக நடந்து கொள்வேன்'' என்றான் வந்தவன்.

துளசியை அழைத்து, ''இவர்கள்தான் இந்த வீட்டை நிர்வகிக்கிறவர்கள் ரகு. உங்களுக்கு ஏதாவது தேவை யென்றால் இவர்களிடம் சொல்லுங்கள்.

''இப்போது நீங்கள் கோவைக்குச் சென்று, கண்ணன் டிபார்ட்மெண்ட் ஸ்டோரில், மளிகைச் சாமான்கள் முதற்கொண்டு நிறைய பொருட்கள் வாங்கிக் கொண்டு வரவேண்டும்.

''எங்கே, என்ன வாங்கினாலும் மறக்காமல் 'பில்' கொண்டு வரவேண்டும்'' என்று கூறிவிட்டு, வீட்டினுள் சென்றான் பவனேந்திரன்.

துளசியை உள்ளே அழைத்தவன், ''இதில் ஐம்பதா யிரம் பணம் இருக்கிறது. தேவையானதை வாங்கப் பயன் படுத்திக்கொள்'' என்று கொடுத்தான் பவனேந்திரன்.

முதன் முதலாக அவளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்பு! இதனைச் செவ்வனே செய்வது அவள் கடமையும் கூட!

தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றவள், இன்றைய செலவுக்குப் போதும் என்று நினைத்த தொகையை மட்டும் கையிலெடுத்துக் கொண்டு, மீதியை எதிரேயிருந்த நான்கு அடுக்குகள் கொண்ட அலமாரியில் வைத்தாள்.

அதன் வேலைப்பாடமைந்த அழகிய மரக் கதவுகளைப் பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

டிரைவரை அழைத்து, ''இந்த லிஸ்ட்டிலிருக்கும் சாமான்களை வாங்கி வாருங்கள்'' என்று பதினைந்தாயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டு, ''உங்களிடம் செல்போன் இருந்தால், நம்பரைச் சொல்லுங்கள்'' என்று கேட்டு குறித்துக் கொண்டாள்.

பிறகு, பவனனிடமிருந்து கார் சாவியை வாங்கி டிரை வரிடம் கொடுத்துவிட்டு, தன் வேலைகளைப் பார்க்கச் சென்றாள்.

அவன் தன் 'லேப் டாப்'புடன் வேலையில் ஆழ்ந் திருக்க, ஆள் நடமாட்டமில்லாத வீடு பேரமைதியாக இருந்தது.

காலையில் கண் விழிக்கும் நேரம் முதல், இரவு பதி னொன்றுக்கு படுக்கையில் தலை சாய்த்து கண் மூடும் வரை, ஓயாது வேலை பார்த்துப் பழகிப் போன துளசிக்கு, இங்கே சோம்பியிருப்பது பெரும் பாடாயிருந்தது!

திரும்பத் திரும்ப எவ்வளவு நேரம்தான் அந்த டீ.வி. யையே பார்ப்பது!



எந்த சேனலைப் போட்டாலும் சீரியல்கள். பெரும் பாலும் அழுமூஞ்சி சீரியல்கள். அல்லது நல்லவர்களைப் பாடாய்படுத்தி அதில் திருப்தியடையும் கெட்டவர்கள்!

கதாநாயகிகளைவிட, வில்லிகளின் நகையும், உடை யும் அபாரமாக காட்டப்படுவதுதான் இன்றைய சின்னத் திரையின் 'ஹைலைட் ஸ்பெஷல்.'

சோம்பலை விரட்டும் முயற்சியாக, என்ன செய்யலாம் என்றெண்ணியவாறு சோபாவில் அமர்ந்திருந்தவள், சிறு யோசனையுடன் சமையலறைக்குள் நுழைந்தாள்.

சமையலறையின் உட்பக்கமாக ஸ்டோர் ரூம் இருந்தது.

அதை அடித்துப் பெருக்கிவிட்டு, ஈரத் துணியினால் அலமாரித் தட்டுகளையும், தரையையும் அழுந்தத் துடைத்தவள், ஈரம் காயட்டும் என்று அங்கிருந்த பெரிய ஜன்னல்களின் கதவுகளைத் திறந்து விட்டாள்.

சமையலறையின் அலமாரிகள் எல்லாமே, நல்ல தேக்கு மரத்தினால் செய்து ரெடிமேடாக இணைக்கப் பட்ட தினுசுகள்.

ஒவ்வொரு அலமாரியும் பூ வேலை செய்த கதவினால் மூடப்பட்டு, திறப்பதற்கு பித்தளைக் குமிழியைக் கொண்டிருந்தது!

பணம் கொட்டிக் கிடந்தால் எப்படி வேண்டுமானாலும் செலவு செய்யலாம் போலிருக்கிறது!

சமையல் செய்தபடியே பின் பக்க தோட்டத்தையும் பார்த்துக் கொள்ள ஏதுவாக, 'கிரானைட்ஸ்' கல் மேடை ஒன்றும் போடப்பட்டிருந்தது!

அந்த வீட்டைக் கட்டியவர்களின் அழகிய ரசனையை உள்ளூரப் பாராட்டியவளுக்கு, வீட்டை நூறு சதவீதம் தூய்மையாக்கிப் பார்ப்பது மிகவும் பிடித்திருந்தது.

தான் வளர்ந்த வீட்டில், சித்தியின் ஏவல்களுக்குப் பணிந்து வேலைகள் செய்தவளுக்கு, இங்கே தன் விருப்பம் போல் எதையும் செய்வதற்குக் கிடைத்திருக்கும் சுதந்திரம், அளவிட்டுக் கூற முடியாத இனிய மன நிறைவைக் கொடுத்தது!

பளிச்சென்று மின்னிய சமையலறையை, ஒரு முறை திருப்தியான முறுவலுடன் நோக்கினாள் துளசி.

அதன் பிறகு, பின் பக்கமிருந்த தோட்டத்திற்குச் செல்வதற்காக, சமையலறையை ஒட்டியிருந்த கதவைத் திறந்தாள்.

நெடுநாட்களாக திறக்கப்படாத கதவு போலும்! சிறு தகராறின் பின்னரே திறந்தது.

கதவின் தாழ்களுக்கு இரண்டு சொட்டு எண்ணெய் விட வேண்டுமென்று, மனதில் குறிப்பெடுத்துக் கொண்டு மேலே சென்றாள் அவள்.

சுமார் மூன்று ஏக்கர் நிலத்தைச் சுற்றி, ஏழடி உயரத்திலே மதில் சுவர் எழுப்பி, அதன் மேல் உடைந்த கண்ணாடிகள் பதிக்கப்பட்டு, அது போதாதென்பது போல் மதில் மேலும் இரண்டடி கம்பிவேலி போடப் பட்டிருந்த பாதுகாப்பான தோட்டம்!

இவ்வளவு பாதுகாப்பு அவசியம்தான். வீட்டில் பதிக் கப்பட்டிருக்கும் கதவு, ஜன்னல்கள் எல்லாமே வைரம் பாய்ந்த தேக்கு மரத்தினால் செய்யப்பட்டிருந்தது. பாதி



விலைக்கு விற்றாலும் திருடிக் கொண்டு போகிறவர் களுக்கு, சில லட்சங்கள் கிடைக்குமே!

மதிலை ஒட்டி வரிசையாக வைக்கப்பட்டிருந்த மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, வாழை மரங்கள் பலன் தரும் அளவிற்கு வளர்ந்திருந்தது.

இருந்த போதும், முறையான தண்ணீர் கிடைக்காத தால், பூக்களும், சிறு பிஞ்சுகளும் உதிர்ந்து, இலைகள் வாடிக் கிடந்தது.

தோட்டம் ஆரம்பிக்குமிடத்தின் வலது பக்கமாக, ஆளுயர பெரிய தொட்டியும், அதிலிருந்து பெரிய பைப் மூலம் வெளிவரும் நீர் மரங்களைச் சென்றடைய வாய்க்காலும் போடப்பட்டிருந்தது.

பக்கத்திலேயே ஃபோர்வெல் மோட்டாருக்காக கட்டப் பட்டிருந்த சிறு கட்டிடம்.

அங்கிருந்து பெரிய பைப் ஒன்று, வீட்டு மொட்டை மாடியின் டேங்க்கைச் சென்றடைந்தது.

சுற்றியிருந்த இடம் முழுக்கவும் வேண்டாத களைகள், உரம், யூரியா போட்டதைப் போல ஏகத்திற்கும் செழித்து வளர்ந்திருந்தது.

டிராக்டர் வரவழைத்து ஆழ உழுது, ஒரு வாரம் காய விட்டால் களையெல்லாம் அழிந்து விடும்.

பிறகு சுலபமாக சுத்தம் செய்து கொள்ளலாம் என்று நினைத்தவள், மோட்டார் ரூமிற்குள் சென்று பச்சை பட்டனை அழுத்தினாள்.

தொட்டிக்கு வரும் இரும்புப் பைப்பிலிருந்து 'திபு திபு'வென்று வேகமாக நீர் கொட்டி, வாய்க்கால் வழியே மரங்களுக்குப் பாய்ந்து சென்றது!

அருவி மாதிரிப் பொங்கி விழுந்த நீரை, ஆசைதீர அள்ளி அள்ளி தன் முகத்தில் அடித்து, அனுபவித்துச் சிரித்தாள் துளசி.

பிறகு வாய்க்காலில் ஓடிய நீரில் சற்று நேரம் மெல்ல நடந்தாள்.

அது ஒரு இனிய அனுபவம் அவளுக்கு!

பாய்ந்தோடி வரும் நீர் உள்ளங்கால்களில் பட்டு, ஒரு மாதிரி குறுகுறுப்பை உண்டாக்கியது!

எல்லா மரங்களைச் சுற்றியும் வட்டமாக நீர் தேங்கி நின்ற பிறகு மோட்டாரை நிறுத்தியவள், இடது பக்கமாக உடைந்திருந்த பந்தலில் வாடிக் கிடந்த ஜாதி மல்லிக்கும், அதனருகே இருந்த குண்டு மல்லிச் செடிக்கும், இரண்டு வாளி நீர் மொண்டு சென்று ஊற்றினாள்.

சுள்ளென்று சுட்டெரித்த வெயிலில் வியர்த்தது அவளுக்கு.

அவளைவிட இரண்டடி உயரமாயிருந்த வேப்ப மரத்தடியின் கீழ், முன்புறம் சிறிது சாய்வாக இடுப்பள விற்குக் கட்டப்பட்டு, அதன் மேல் போடப்பட்டிருந்த, நீளமான துணி துவைக்கும் கல்லின் மீது அமர்ந்தாள் துளசி.

தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள ஆழ மூச்சிழுத்து விட்டவாறு, மென்முறுவல் ஒன்றை வெளிப்படுத் தினாள் அவள்!

மனது முழுக்க மகிழ்ச்சியின் வசமிருக்கும் போது தோன்றிய முறுவல்!

இரவு நேர ஏகாந்த வானில் தோன்றும் நட்சத்திரங் களைப் போன்று அவளை ஜொலிக்க வைத்தது!



இந்த நிலையிலிருந்த துளசியைத்தான், தன் அறையின் ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டு, நேரம் போவது தெரியாமல் நின்றான் பவனேந்திரன்!

மதிய உணவிற்குப் பிறகு, சற்று நேரம் கழித்து ஒரு குட்டித் தூக்கம் போடுவது பவனேந்திரனின் வழக்கம்.

இந்த நேர குட்டித் தூக்கத்திற்குப் பிறகு மூளை 'ரீ சார்ஜ்' செய்யப்பட்டதைப் போல் சுறுசுறுப்பாவதுடன், ஞாபக சக்தியின் அளவும் அதிகமாகிறது என்ற மருத்துவக் கட்டுரையைப் படித்தவன், அதிலிருந்த உண்மையை அனுபவித்து உணர்ந்து, தன்னால் இயன்ற வரை இப்பழக்கத்தைக் கடைபிடித்து வந்தான்.

இன்றும் அப்படி ஓய்வெடுக்க வந்தவன், வெயிலை மறைக்க கம்பு நிறத்திலிருந்த ஜன்னல் திரைச்சீலையை இழுத்துவிட முயன்றபோதுதான் துளசியைப் பார்த்தான்!

பார்த்தவனின் விழிகள் இமைக்க மறந்து நிலைத்தன!

ஒப்பனையென்று எதுவுமில்லாத எளிய தோற்றத் திலே, ஒரு பெண் இவ்...வளவு அழகாக இருக்க முடியுமா?!

அப்போதுதான் புதிதாகப் பார்ப்பவனைப் போல, ஜன்னல் கம்பி மீது லேசாக இடது தோளை சாய்த்து நின்று பார்க்கலானான் பவனன்!

இளைப்பாறியது போதுமென்று நினைத்ததாலோ என்னவோ, காலில் ஒட்டிக் கொண்டிருந்த தூசி, மண்ணைக் கழுவிக் கொண்டு வீட்டை நோக்கி வந்தாள் துளசி.

தன் அறைக்குள் சென்றவள், வியர்வை கசகசப்பு போக, தலைக்கு 'ஷாம்பு' போட்டுக் குளித்தாள்.

பிறகு பொழுது போவதற்காக டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தபோது, பக்கத்திலிருந்த ஒற்றை சோபாவில் அமர்ந்தான் அவன்.

கையிலிருந்த 'புரூட் சாலட்' கிண்ணத்தில் ஒன்றை அவளிடம் கொடுத்தவன், ''வரிந்து கட்டிக் கொண்டு வேலையில் இறங்கி விட்டாய் போலிருக்கிறது. கனமான வேலையெல்லாம் செய்ய வேண்டாமென்றால் கேட்க மாட்டாயா துளசி?'' என்று மெல்லவே என்றாலும் கடிந்துவிட்டு, ஒரு ஸ்பூன் சாலட்டை எடுத்துச் சுவைத்தான்.

''இந்த வேலையெல்லாம் ஒரு கஷ்டமேயில்லை பவன்'' என்றவளுக்கு, காலியாயிருந்த வயிற்றினுள் 'ஜில்'லென்ற பழத் துண்டுகள் இறங்கவும், களைப்பு விலக ஆரம்பித்தது.

சாலட் காலியான வேகத்தைப் பார்த்து, பிரிட்ஜிலிருந்து இன்னுமொரு கப் எடுத்து வந்து அவள் முன்னே வைத்தான்!

'தேங்க்ஸ்' என்று கூறிவிட்டு, அதில் பாதியை மட்டும் எடுத்து உண்டவள், மீதியை பிரிட்ஜிலேயே வைத்து மூடிவிட்டு, காலியான கிண்ணங்களைக் கழுவி வைத்துவிட்டுத் திரும்பி வந்தாள்.

''நாளைய மறுநாள் நான் சென்னைக்குப் போக வேண்டியிருக்கிறது துளசி. திரும்பி வர எத்தனை நாட்கள் ஆகுமென்று தெரியவில்லை. வெளியே நடக்கும்போது ரொம்ப தூரம் போக வேண்டாம். எப்போதுமே கவனமாயிரு'' என்று அறிவுறுத்தினான் பவனன்.

'ம்' என்று தலையாட்டியவளுக்கு 'பவனனுக்குத் திடீரென்று என்ன வேலை வந்திருக்கும்? சென்னையில் என்ன தொழில் செய்கிறான்? அதில் ஏதும் அவசரமான வேலை வந்திருக்குமோ? அல்லது குடும்பத்தாரைப் பார்க்க வேண்டும் என்று கிளம்புகிறானா?' என்று கேள்விகள் அம்புகளாகத் தொடர்ந்தன.



'இவன் குடும்பத்தில் யார், யார் இருக்கக்கூடும்? பெற்றோர், உடன் பிறந்தோர், மனைவி' என்றெண்ணியவளின் இதயம், சட்டென்று துடிப்பை நிறுத்த முயலுகின்றதோ?!

இல்லையென்றால் அவளுக்கு ஏன் இப்படி 'குப்'பென்று வியர்க்க வேண்டும்?!

# 5

இவன் திருமணம் ஆனவனா? இல்லையா என்று எப்படித் தெரிந்து கொள்வது?!

நேரடியாகக் கேட்டால் தப்பாகத் தோன்றாதா? அப்படித் தெரிந்து கொண்டு என்ன செய்யப் போகிறாய் என்றெழுந்த கேள்விகளை ஒதுக்கிவிட்டு, தெரிந்து கொள்வது மிகமிக அவசியம் என்றே தோன்றியது அவளுக்கு!

குரலை முயன்று வரவழைத்துக் கொண்டு, ''வந்து அங்கே சென்னையில் உங்கள் பெற்றோர், மனைவி, குழந்தைகள் எல்லாம் நலமாயிருக்கிறார்களாமா? அவர்களைப்

பார்க்கத்தான் கிளம்புகிறீர்களா?'' என்று சாதாரணம் போல காட்டிக் கேட்டாள் துளசி.

எதிரேயிருந்தவளை ஆழநோக்கியபடி, ''என் அம்மா, தங்கை சுகம்தான். மற்றபடி மனைவி, குழந்தைகள்... என்று இழுத்தவன், ''அவர்கள் 'என்' மனைவி, குழந் தைகள் இல்லையா? அதனால் எப்போதும் சுகமாகத்தான் இருப்பார்கள். இருக்கும்படி பார்த்துக் கொள்வது என் கடமையாகிறதே'' என்றான் ஒரு இளம் புன்னகையுடன்.

அவன் சொல்வதைக் கேட்டு ஏனோ நெஞ்சு கனத்து, தொண்டையடைக்க வெறுமனே தலையாட்டியவளுக்கு, ஏதோ முரண்பாடாகத் தோன்றியது. என்ன அது?!

''நான் ஒழுக்கமற்றவன் பெண்ணே'' என்று முதல் சந்திப்பிலேயே கூறியவன், கடமை, மண்ணாங்கட்டி யென்று பெரிய யோக்கியன் மாதிரி பேசுவது பொருந்தாது உறுத்துகிறதோ?!

கண்ட கழுதைகளுடன் கண்டபடி ஊர் சுற்றுகிறவன், எப்படி சரியான கணவனாகவும், தகப்பனாகவும் நடந்து கொள்ள முடியும்?

ஒருவேளை, 'இவன் என் மூன்றாவது மனைவியின் இரண்டாவது பிள்ளையென்று' அறிமுகப்படுத்துகிற சில ஜென்மங்களில் ஒருவனாயிருப்பானோ என்று, அவன் முகத்தில் கரிபூசி, கதை கட்ட முயன்றது அலை பாய்ந்த அவள் உள்ளம்!

''செகண்ட் இன்னிங்ஸ்ஸை ஆரம்பித்து விட்டாய் போலிருக்கிறது?'' என்று கேட்டான் அவன்.



தன்னிலேயே மனதை அலைய விட்டுக் கொண் டிருந்தவள் திடுக்கிட்டவளாக, ''என்ன கேட்டீர்கள்?'' என்றாள்.

''ம். இரண்டாவது முறையாக உலகத்தைச் சுற்றிவர, உன் மனதிற்கு அனுமதியளித்து விட்டாய் போலிருக் கிறது என்றேன்.''

தன் முகச்சிவப்பைத் தடுக்க அவள் பெரிதும் பாடுபடத்தான் வேண்டியிருந்தது!

''உன் முகத்தைப் பார்த்தால் இரண்டு இன்னிங்ஸ்ஸின் முழுக் கதாநாயகனும், நானாகத்தான் இருப்பேனோ என்றொரு சந்தேகம் எனக்கு?'' என்று கேட்டு, அவள் நாடித்துடிப்பை அதிகப்படுத்தினான் பவனேந்திரன்.

கண்களின் வழியே மனதைப் படிக்கும் கலையேதும் இவன் கற்றிருப்பானோ? இப்போது என்னவென்று பதிலளிப்பது?

சமயம் பார்த்து இந்த முகம் வேறு சிவந்து காட்டிக் கொடுக்க வேண்டுமா?!

இப்போது 'எதுவுமில்லை' என்று மறுத்தால், எங் கப்பன் குதிருக்குள் இல்லையென்ற கதை போலத்தான்!

கேள்வியோடு அவள் முகத்தையே பார்த்தான் பவனன்.

''என்னைப் பற்றி அப்படி என்னம்மா நினைத்தாய்?'' என்றது அப்பார்வையின் பொருள்!

''உங்கள் மனைவி பார்க்க எப்படியிருப்பார்கள்? எத் தனை குழந்தைகள்?'' என்று சாதாரணம் போல் காட்டிக் கேட்க முயன்றாள்.

வெறும் முயற்சி மட்டும்தான். அதற்கே அவள் எவ்... வளவு பாடுபட வேண்டியிருந்தது என்பது, அவளுக்குத் தானே தெரியும்!

''என் மனைவி 'என் கண்களுக்கு எப்போதும்' பேரழகியாகத்தான் தெரிவாள். பிள்ளைகள் பற்றி அவளுடன் நான் இன்னும் கலந்து பேசவில்லை'' என்று தெரிவித்து, ஒரு உல்லாசப் புன்னகையை வெளிப்படுத்தினான் பவனேந்திரன்.

படுபாதகா! பேரழகியான ஒரு பெண் மனைவியாகக் கிடைத்த பிறகுமா, ஒழுக்கமின்றித் திரிகிறாய் என்று, அவனை நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி கேட்க வேண்டும் போல், ஆத்திரம் வந்தது அவளுக்கு.

''மனதிற்குள்ளே என்னை நார், நாராகக் கிழித்துத் தொங்க விட்டுக் கொண்டிருக்கிறாய் போல் தெரிகிறது. எனக்கு பயமாக இருக்கிறதே'' என்று கூறி, இரண்டு கரங்களையும் பிணைத்து, தன் பரந்த மார்போடு பதித்துக் கொண்டு, பயந்தவன் மாதிரி பாவனை செய்தான் அவன்!

''ரொம்பவும் நடிக்க வேண்டாம் பவனன். ஒழுக்கமற்றவர்களை, மனைவிக்குத் துரோகம் செய்கிறவர்களை அடித்துத் தோல் உரிப்பதோடு மட்டும் விடக்கூடாது. காயத்திலே உப்பைப் போட்டுத் தேய்த்துவிட வேண்டும். எரியும்போதுதான் கொஞ்சமாவது அடங்குவார்கள்'' என்றாள் மட்டுப்படாத கோபத்துடன்.

மூக்கு நுனிவரை சிவந்திருந்த அவள் முகத்தைப் பார்த்து, தன்னுள்ளே வியந்தவன் கண்களை இறுக மூடித்திறந்து விட்டு, ''என் மனைவிக்கு நான் துரோகம் பண்ண மாட்டேன் துளசி. நீ சொன்ன கசையடி, உப்புக்குப் பயந்தல்ல. நானாகவே தான் சொல்கிறேன்'' என்றான் மர்மக் குரலில்.

இது எப்படி சாத்தியமாகும்? நம்பாது நோக்கினாள் அவள்!



தன் வாயால் தானே நான் ஒழுக்கமற்றவன் என்று கூறினான்.

பிறகெப்படி துரோகம் பண்ணமாட்டேன் என்கிறான். இந்த நாள் வரை தன் இஷ்டப்படி வாழ்பவனால் எப்படி இதைச் சொல்ல முடியும்?

எல்லாம் புளுகு!

ஆனால் பவனன் பொய் கூடவா சொல்வான்? என்று நினைத்தவளுக்குத் தன் தலையிலேயே குட்ட வேண்டும் போல் தோன்றியது.

ஒழுக்கமில்லாதவனுக்குப் பொய் புளுகு ஒரு பெரிய விஷயமா என்ன? என்று நினைத்த போதும் ஏதோ நெருடியது!

பிறகெப்படி இவ்...வளவு உறுதியாக துரோகம் பண்ண மாட்டேன் என்று சொல்கிறான் என்பதை எண்ணிக் குழம்பியவளுக்குச் சட்டென்று பொறி தட்டியது.

'பண்ண மாட்டேன்' என்பது எதிர்காலச் சொல் அல்லவா?

'அப்படியென்றால் இவனுக்கு...' என்று கண்களை அகல விரித்து அவனைப் பார்த்தாள்.

இடது கன்னத்தில் நாக்கை முட்டி, வாய் திறவாமல் குறும் புன்னகை ஒன்றை வெளிப்படுத்தினான் அவன்.

''உங்களுக்கு, உங்களுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. அப்படித்தானே?'' என்று, உள்ளே படபடத்ததை மறைத்துக் கொண்டு கேட்டாள்.

''ஹப்...பா! ஏதோ இருக்கிற இரண்டு ஸ்பூன் மூளையும், இப்போதுதான் கொஞ்...சம் வேலை செய்ய

ஆரம்பித்திருக்கிறது போலும்?'' என்றான் கிண்டலாக.

அவனுடைய கிண்டலினாலோ அன்றி, மூச்சையடைத்திருந்த கேள்விக்கு பதில் கிடைத்ததாலோ? எதுவென்று அறுதியிட்டுக் கூற அவளால் இயலவில்லை!

இருந்த போதும் பவனன் பேசிய விஷயத்தின் மூலம், அவள் உள்ளத்தினுள் சட்டென்று தென்றல் புகுந்து குளிரச் செய்தது என்பதுதான் விஷயம்!

''இந்தக் கேள்வியை முதலிலேயே நேரிடையாக கேட்பதற்கு உனக்கென்ன கஷ்டம் துளசி?'' என்று கேட்டு, குளிர்ந்திருந்தவளைத் திணறடித்தான் பவனன்.

''கஷ்டமா! எனக்கென்ன கஷ்டம்? அப்படியெல்லாம் எதுவுமில்லையே'' என்று, அலட்சியமாகவே தலையைச் சிலுப்பினாள் அவள்.

'நன்றாகவே சமாளிக்கிறாள்' என்று உள்ளூரச் சிரித்தான் பவனேந்திரன்.

பிறகு, ''சரி துளசி இதை இத்துடன் விட்டு விடலாம் என்ன. இங்கே உனக்கு எலக்ட்ரானிக் பொருட்கள் எதுவெல்லாம் தேவைப்படும்?'' என்று வினவினான்.

நல்லவேளை, நம் தடுமாற்றத்தை இவன் கண்டு பிடிக்கவில்லை என்று, மனதைச் சமாதானப்படுத்தி நிம்மதியானவள், அவனோடு இணைந்து தேவையான பொருட்களைச் சொன்னாள்.

''மிக்ஸி, கிரைண்டர் மட்டும் போதும்'' என்றவளை இடைமறித்து, ''துணி துவைத்து எனக்குப் பழக்கமில்லையம்மா, வாஷிங் மெஷினையும் சேர்த்துக் கொள். அத்துடன் உனக்கு செல்போன், கம்ப்யூட்டரும் வாங்க வேண்டும்'' என்று கூறினான்.



''இதையெல்லாம் வாங்கிவர நாளைக்கும் டிரைவரை அனுப்ப வேண்டுமா?''

''டிரைவர் அவசியமில்லை துளசி. கடையிலிருந்தே டோர் டெலிவரி பண்ண ஏற்பாடு செய்து விடலாம்'' என்று விவரமளித்தான்.

பணமிருப்பவன், இருக்கும் இடத்திலிருந்தே வேண்டியதை வரவழைத்துக் கொள்ளலாம் போலிருக்கிறது.

இல்லாதவர்கள் தான் அலைந்து திரிந்து வாங்க வேண்டியிருக்கிறது.

ஆனால் அலைந்து வாங்குவது கூட மகிழ்ச்சிதான்.

ஆசைப்பட்ட பொருளை வாங்கப் போகிறோம் என்று நினைக்கும் போதே, உள்ளத்தினுள் உற்சாகம் பொங்கி வழியும்!

ஐந்து ரூபாய்க்கு வாங்குகிற ஹேர் பேண்டோ, ஐம்பது ரூபாய் கைப்பையோ, அன்றி ஐந்தாயிரம் ரூபாய் நகையோ எது வாங்கினாலும் மட்டற்ற மகிழ்ச்சிதான்!

ஆனால் இவனிடம் ஒரு மாற்றமும் காணவில்லையே! பத்தோடு பதினொன்றாக ஒரு பொருள் தேவைப்படுகிறது. அதை வாங்கப் போகிறேன் என்பதற்கு மேல் எதுவுமேயில்லை!

பணத்தின் ஆதிக்கம் அதிகமாகும்போது, நிறைய சின்னச் சின்ன சந்தோஷங்கள் மாறித்தான் போகிறதோ?

வருடத்திற்கு ஒரு புதுத்துணி மட்டுமே வாங்கிய போது இருந்த உற்சாகம், பத்து வாங்கும்போது மட்டுப் பட்டு விடுகிறது!

இவனுடைய மனநிலையும் அப்படித்தான் ஆகிவிட் டதோ என்னவோ?

''கடவுளே! எனக்கு எவ்...வளவு பணம் கிடைத்தாலும், என் மனது இன்று போலவே என்றும் இருக்க வேண் டும்'' என்று நினைத்தவளுக்கு, தன்னையும் மீறிய புன்னகை ஒன்று உதயமானது.

'ஆமாம். அவளுக்குக் கொடுக்கவென்றே, கோணிப்பை நிறைய அள்ளிப் போட்டு கட்டி வைத்துக் கொண்டு, எப்போது அவளிடம் போடலாம் என்று, தருணம் பார்த்து கடவுள் காத்திருக்கிறாராக்கும்!'

'இந்த வெட்கம் கெட்ட மனதின் நினைப்பைப் பார்' என்று அவளையே கேலி செய்தது மனது!

மனதை வேறு திசையில் மாற்றும் முயற்சியாக, ''நீங்கள் என்ன பிசினஸ் செய்கிறீர்கள்? உங்கள் கம்பெனி பெயரென்ன பவனன்?'' என்று வினவினாள்.

''இறால் வளர்ப்பு. வளர்த்த இறால்களைப் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். சென்னை, தூத்துக்குடி, கொச்சின் மூன்று இடங்களில் பண்ணை யும், பதப்படுத்தும் தொழிற்சாலையும் இருக்கிறது.

''வேதவதி பிரான்ஸ் எக்ஸ்போர்ட்ஸ்' என் கம்பெனி யின் பெயர்'' என்று பெருமிதமாகத் தெரிவித்தான்.

வேதவதி என்பது யார் பெயராக இருக்கும் என்றவளின் யோசனையில் குறுக்கிட்டு, ''நீ இறால் சாப்பிட்டிருக் கிறாயா துளசி?'' என்று கேட்டான்.



இல்லையென்று தலையாட்டினாள் அவள்.

''மீனைவிட மென்மையாக இருக்கும். கொழுப்பில் லாதது என்பதால் விற்பனை அதிகம். சென்னையி லிருந்து திரும்பி வரும்போது எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்றவன்,

''கம்ப்யூட்டரில் நீ செய்ய வேண்டிய வேலையைப் பற்றி சில விவரங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. என் னுடன் வா'' என்று கூறிவிட்டு முன்னே நடந்தான்.

ஆங்கில ஒய் எழுத்து மாடலில், ஹாலிலிருந்து நீண்டு, அகன்று சென்ற மாடிப்படியின் வலது பக்க அறை யினுள் சென்றான் பவனேந்திரன்.

அவனைப் பின் தொடர்ந்து சென்றவளுக்கு ஒரு குஷன் சேரை இழுத்துப் போட்டு ''உட்கார்'' என்றவன், பளபளவென்று மின்னிய பெரிய கண்ணாடி டேபிளின் மறுபக்கமிருந்த வசதியான சேரில் அமர்ந்தான்.

டேபிள் மேல், ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி வைக்கப் பட்டிருந்த பைல்களை, அவள் பக்கமாக நகர்த்தியவன், ''இவையனைத்திலும் வரவு செலவு கணக்குகளின் விபரம் இருக்கிறது துளசி.

''மூன்று இடங்களின் அலுவலகத்தில் இருந்தும், தினமும் இந்த மாதிரி 'பேக்ஸ்' வரும். அதை இடம் வாரியாகப் பிரித்து 'பைல்' பண்ணிவிட்டு, கம்ப்யூட் டரில் பதிவு செய்து சி.டி.யில் 'பேக் அப்' எடுத்து வைக்க வேண்டும்.

''ஸ்டோர் பண்ணும்போதே நேற்றைய 'க்ளோஸிங் பேலன்ஸ்'சும் இன்றைய 'ஓப்பனிங் பேலன்ஸ்'சும் ஒரே மாதிரி தொடர்கிறதா என்று மறக்காமல் பார்த்துக் கொள்.

''இது தவிர எத்தனைப் பேருக்கு சப்ளை பண்ணு கிறோம். அவர்களின் முகவரி, வாங்கியிருக்கும் இன் வாய்ஸ் பில் நம்பர், கொடுத்திருக்கும் செக், கேஷ் விபரம். இன்று வரை ஒவ்வொருவரும் தர வேண்டிய 'பேலன்ஸ்' தொகை என்று எல்லா தகவலும் கொண்ட 'சாஃப்ட்வேர்' இந்த கம்ப்யூட்டரில் இருக்கிறது.

''இதை வைத்து தேவையான விவரங்களைப் பார்த்துக் கொள்ளலாம். எப்படிப் பார்ப்பதென்று நாளைக்குக் கற்றுத் தருகிறேன்'' என்று கூறினான்.

புதிதாக ஒரு வேலையைச் செய்யப் போகிறோம் என்ற நினைவே, அவள் மூளைக்கு உற்சாகமளித்தது!

இருவரும் மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்த போதே, வாங்கிய பொருட்களுடன் டிரைவர் வந்து சேர, மாலை நேர இருளும் படர ஆரம்பித்தது.

எல்லாப் பொருட்களையும் எடுத்துச் சென்று சமைய லறை ஸ்டோர் ரூமில் வைத்துவிட்டு, ''காய்கறியெல்லாம் மலை மேல் வாங்கினால் விலை கூடுதல் என்று, அங்கேயே ஒவ்வொரு கிலோ வாங்கிக் கொண்டு வந்து விட்டேன்மா'' என்று கூறி, பில்லையும் மீதிப் பணத் தையும் கொடுத்தான் டிரைவர் ரகு.

''நல்ல விஷயம்தானே'' என்று வரவேற்பதாய் முறு வலித்தவள், ''உங்கள் தினப்படியுடன் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள் ரகு'' என்று ஐம்பது ரூபாயாகக் கொடுத் தாள்.

''வேறு வேலையேதும் செய்ய வேண்டியது இருக் காம்மா?''



''இல்லை ரகு. நீங்கள் கிளம்புங்கள். வீட்டில் வேலை செய்யத் தெரிந்த பெண் யாராவது இருந்தால் சொல் லுங்கள். தோட்ட வேலைக்கும் ஆண் ஆள் ஒருவர் தேவை.

''பிறகு, வீட்டின் பின்பக்கமிருக்கும் இடத்தை உழ வேண்டும். அதற்கும் ஏற்பாடு செய்து விடுங்கள் ரகு'' என்று பணித்தாள்.

''சரிங்கம்மா'' என்று கிளம்பிச் சென்றான் அவன்.

காய் வகைகளையெல்லாம் நன்றாகக் கழுவி, நீர் வடிந்த பிறகு பிரிட்ஜில் வைத்து மூடினாள்.

சுத்தப்படுத்தி பாக்கெட் செய்யப்பட்டிருந்த மளிகைப் பொருட்களை எடுத்து, அலமாரித் தட்டுகளில் வரிசை யாக அடுக்கி வைத்தாள்.

அழகாக நிறைந்திருந்த அலமாரியை மூடிவிட்டு, இரவு சமையலை ஆரம்பித்தாள்.

பளபளவென்று சாதம் வடித்து, வெண்டைக்காய் சாம்பார், ரசம், அப்பளம் செய்து டைனிங் டேபிளில் வைத்துவிட்டு, பாத்திரத்தில் எடுத்து வைத்ததை செக்யூரிட்டியை அழைத்துக் கொடுத்தாள்.

''அம்மாடியோ! எவ்...வளவு காரசாரம். மரத்துப்போன நாக்கிற்கு உயிர் வந்ததைப் போல் இருக்கிறது துளசி. ரொம்ப டேஸ்ட்டாயிருக்கு'' என்று மனதாரப் பாராட்டி விட்டு... உண்டான் பவனேந்திரன்.

அவன் பாராட்டுதலில் மகிழ்ந்து, ஜிவ்வென்று வானில் வட்டமிட்டுப் பறந்தது அவள் உள்ளம்!

"இவ்வளவு சுவையாக உணவளித்த கைகளுக்குப் பாராட்டுக்கள் துளசி" என்று கூறி, தன் வலிய கரத்தை முன்னே நீட்டினான்.

குலுக்குவதற்காக நீண்ட அவனுடைய கரத்தில், வெண்டைப் பிஞ்சு விரல்களைக் கொண்ட அவளின் மெல்லிய கை, சிறு படபடப்புடன் இணைந்தது!

குலுக்கிய அவள் கையைத் திருப்பிப் பார்த்தவனின் முகத்திலிருந்து, எதையும் கண்டு கொள்ள இயலவில்லை அவளால்!

பூவிதழ், வெல்வெட், பஞ்சு, புறா இறகு என்று வர்ணிப்பார்களே! நினைவு தெரிந்த நாளில் இருந்து, அது மாதிரி அவள் கைகள் என்றுமே இருந்ததில்லை தான்!

மாறாக, விடிகாலையில் எழுவதில் வெடித்து விடும் கால் பாதங்கள்!

கிணற்றில் நீர் இறைத்துப் பாத்திரம் தேய்ப்பதில் உண்டான, உள்ளங்கை ஓர பிசிர் வெடிப்புகள். காய்ப்புகள். தேய்ந்து மறைந்து போகும் நிலையிலிருந்த கை ரேகைகள். இவைகள் தான் அவள் கைகளின் லட்சணம்!

இதையெல்லாம் பார்த்து பவனன் என்ன நினைக்கக் கூடும்?

செல்வச் செழிப்போடிருக்கும் இவன், நிச்சயம் தேர்ந்தெடுத்த அழகுப் பதுமைகளுடன் தான் பழகிக் கொண்டிருப்பான். அந்தப் பெண்களின் மென் கைகளுடன், தன் பிசிர் தட்டிய கையை ஒப்பிட்டுப் பார்க்கிறானோ?



ஏனோ அக்காட்சி பிடிக்காதவளாக லேசாக முகம் சுளித்து, தன் கையை அவன் பிடியிலிருந்து உருவிக் கொள்ள முயன்றாள் துளசி.

அவன் பிடி விடாப்பிடியாக இறுகியதோடு மட்டுமின்றி, "உழைப்பில் மென்தன்மை மறைந்து, கடினமாகி விட்ட கைகள்" என்றான்.

கடினமாகிவிட்ட கைகள்!

உண்மைதான் என்றாலும் இந்த வார்த்தைகளை அவன் கூறிக் கேட்கவும், ஏனென்று தெரியாமல் அவளுக்குச் சட்டென்று கோபம் வந்தது!

"நீங்கள் பழகிய மென்மையான கைகளுடன், என் கையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாம் பவனன். எனக்குப் பிடிக்காது" என்று லேசாக கண்கள் சுருங்கக் கூறினாள்.

கண நேரம் நெற்றியைச் சுருக்கியவன், 'ஓ' என்று வியப்பைக் காட்டி, "அந்த மென்மையான கைகளுக்கு சாப்பிடத் தெரியுமே தவிர, உன்னைப் போல அறுசுவை அமுது படைக்கத் தெரியாதே துளசி" என்று தோள் குலுக்கினான் பவனேந்திரன்.

அத்தோடு நில்லாது, தன் பிடியிலிருந்த கையை மெல்ல வருடிக் கொடுத்து, "இந்தக் கைக்கு முத்தமிட வேண்டும் போல் என் உள்ளம் துடிக்கிறது துளசி. ஆனால் மறுநொடியே உன்னிடமிருந்து இடி மாதிரி அடி கிடைக்குமென்பதால் தயங்கி நிற்கிறேன்.

"காய்ப்பேறியிருக்கும் முரட்டுக் கையினால் அடி வாங்கினால், கன்னம் கன்றிப் போய்விடுமே? இதுவரை நான் யாரிடமும் அடி வாங்கியது வேறில்லை" என்றான் போலி பயத்துடன்.

''அந்த பயமிருக்கட்டும்'' என்று அவளும் போலி யாகவே மிரட்டி விட்டு, பிடிவாதமாக கையை விடு வித்துக் கொண்டாள்.

அவள் விடுவித்த கை முழுவதும் இதமாக சூடேறி யிருந்தது!

மெல்ல முறுவலித்துவிட்டு, ஒரு 'குட் நைட்'டுடன் தன் அறையை நோக்கிச் சென்றான் அவன்.

தன் அறையின் கட்டிலில் அமர்ந்தவளுக்கு உறக்கமே வரவில்லை!

முத்தமிட வேண்டும் போலிருக்கிறது என்றானே? உண்மையாகத்தான் சொன்னானா? அன்றி...

பவனன் முத்தமிட்டால் எப்படியிருக்கும் என்று நினைத்தவளுக்கு, அக்குளிரிலும் சட்டென வியர்த்து விட்டது!

'தன் நெஞ்சுக்கு எவ்...வளவு தைரியமிருக்க வேண்டும்? விட்டால் 'தீக்குள் விரலை வைத்தால் நந்த லாலா' என்று கவிதை பாடி விடும் போலிருக்கிறதே!

'இரண்டு நாட்களுக்கு முன்பு வரை, யாரென்றே தெரியாத ஒரு ஆடவன். அவனைப் பற்றி ஒரு நொடிப் பொழுதே என்றாலும், இப்படி நினைப்பது எவ்வளவு பெரிய தப்பு. தன் புத்தி பிசகி விட்டதென்று தான் அர்த்தம்.

'என் முட்டாள் மனமே! பவனேந்திரன் என்னதான் நல்லவனாகவும், வசீகரமாகவும் இருந்தாலும் கூட, ஒழுக்கத்தை உயர்வாக மதிப்பவன் கிடையாது.

'ஒரு மலரில் திருப்தியடைந்து சந்தோஷப்படாமல், பல மலரிடம் பறந்து செல்லும் வண்டினமென்பதை



மறந்து விடாதே' என, தனக்குத்தானே எச்சரிக்கை செய்து கொண்டாள் துளசி.

என்னதான் எச்சரிக்கை செய்தாலும், ஏதோ ஒரு விதத்தில் தான் பாதிக்கப்பட்டிருப்பதை, நன்றாகவே உணர்ந்து கொள்ள முடிந்தது அவளால்!

அதற்கு நான்தான் சாட்சி என்பது போல, இந்த மலைப் பிரதேசத்திலும் அவன் பற்றியிருந்த கையின் கதகதப்பு, இன்னும் கூட குறையாதிருக்கிறதே!

முழு முட்டாள்த் தனம் என்று தெரிந்த போதும், கதகதப்பு குயைாதிருந்த கையைக் கன்னத்தோடு அழுந்த ஒட்டிக் கொண்ட பிறகே, நித்திரா தேவி அவளிடம் வந்தாள்.

## 6

முன்தினம் போல பொழுது அழகாகவே விடிந்தது!

ஆனால் அந்த அழகை முழுமையாக ரசிக்க முடியாமல், ஏனென்று தெரியாத சிறு வருத்தம் அவள் மனதை நமநமவென்று அரித்தெடுத்தது. ஏன்?

இன்று பவனன் சென்னைக்குக் கிளம்பிப் போவதாகச் சொன்னதாலோ?!

அப்படித்தான் இருக்க வேண்டும். இவ்...வளவு சலிப்படைய வேறு காரணங்கள் ஏதும் இல்லையே!

சலிப்பை விரட்ட, பிடிவாதமாக எழுந்து குளித்து ரெடியாகி சமையலறைக்குச் சென்றாள்.

டீ தயாரித்து முடித்தபோது, பவனன் சோபாவில் அமர்ந்து டீ.வி. நியூஸ் பார்ப்பது தெரிந்தது.

அவள் கொடுத்த டீ கப்பைப் பெற்றுக் கொண்டு ''தேங்க்ஸ் அண்ட் குட்மார்னிங் துளசி'' என்று புன்னகைத் தான் பவனன்.

அவனுடன் சேர்ந்தே டீயைப் பருகியவள், பிறகு சமையல் வேலையில் இறங்கினாள்.

''நான் ஏதாவது உதவி செய்யட்டுமா துளசி. இந்த கேரட், பீன்ஸை வெட்டித் தரட்டுமா?'' என்று பின் னோடே வந்து கேட்டான். ''செய்யுங்களேன். ஆனால் கவனம்'' என்று விட்டு, படபடவென்று வெங்காயத்தை வெட்டினாள்.

சிறு புன்னகையுடன், அவளுக்கு இணையான வேகத்துடனே காய்களை வெட்டியவனைப் பார்த்து, விழிகளை விரித்தாள் துளசி ராணி.

''வெட்டுகிற வேகத்தைப் பார்த்தால், சென்னையில் தினமும் நீங்கள்தான் சமைப்பீர்கள் போலிருக்கிறதே?'' என்றாள் கிண்டலாக.

''கனகாம்மாவுக்கு எப்போதாவது தலைவலி, காய்ச்சல் எனும் போது வீட்டில் என் நளபாகம் தான்'' என்று சிரித்தான் அவன்.

''ஒன்றிரண்டு நாள் சமையலிலேயேவா, இவ்வளவு வேகமாக வெட்டக் கற்றுக் கொண்டீர்கள்'' என்றாள் நம்பாத குரலில்.



''எம்.பி.ஏ. படிக்கவென்று லண்டனுக்குச் சென்ற போது, ஐந்து பேர் சேர்ந்து ஒரே வீட்டில் தங்கியிருந்தோம். எல்லா வேலைகளையும், எல்லோரும் பகிர்ந்து செய் வோம். அப்போது கற்றுக் கொண்டது தான் இந்த வெட்டுவதும், வதக்குவதும்'' என்று விபரம் கூறினான்.

''லண்டனில் நடக்கும் வீதி விழாக்கள் ரொம்பவும் பிரசித்தமாமே? டீ.வி.யில் பார்த்திருக்கிறேன். சாலையின் இரு பக்கமும் மக்கள் கூட்டம் நிறைந்திருக்குமாமே. நீங்களும் அப்படியெல்லாம் வேடிக்கை பார்த்திருக்கிறீர் களா பவனன்?'' என்று சுவாரஸ்யமாக்க் கேட்டாள்.

''ஆரம்பத்தில் எதைப் பார்த்தாலும் 'ஆஹா, ஓஹோ' என்று பிரமிப்பாகத்தான் இருக்கும். ஆனால் பத்தே நாட்களில் சர்வ சாதாரணமாகி, போரடிக்கவே கூட ஆரம்பித்து விடும் துளசி.

''அது மாதிரி சமயங்களில் ஒரு 'பாப் கார்ன்' பாக் கெட்டை வாங்கி கையில் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்து விடுவோம். பேச்சும், வேடிக்கையுமாக பொழுது பறந்து விடும்'' என்றான் பவனேந்திரன்.

லண்டனின் பழங்காலத்து கல் கட்டிடங்கள், மணிக் கூண்டு அதிசயம், பெரிய பெரிய சர்ச்சும் அதில் கிடைக்கும் பேரமைதியும் அவன் சொல்லிக் கேட்க, தெவிட்டவில்லை அவளுக்கு!

''சர்ச்சுக்குள்ளே சென்ற பிறகு, யாரும் அனாவசியமாக ஒரு வார்த்தைகூட பேசுவதில்லை. அதிலும் அடுத்த வரை 'டிஸ்டர்ப்' பண்ணுகிற மாதிரி நடந்து கொள்வ தில்லை'' என்று தெரிவித்தான்.

''அதே சமயம் கேளிக்கை, வினோத விளையாட்டு, உணவு வகைகளுக்காக யோசிக்காமல் செலவு செய்

வார்கள். அங்கெல்லாம் ஒரு சின்ன ரெஸ்டாரெண்ட் வைத்திருப்பவர்கள் கூட பணத்தை அள்ளி விடுவார்கள். அவ்வளவு சேல்ஸ் ஆகும்.

''படித்து முடித்த பிறகு, குடும்பத் தொழிலுடன் சேர்த்து இறால் வளர்ப்பும் செய்ய வேண்டும் என்று அங்குதான் முடிவு செய்தேன். ஆனால் இங்கு வந்த பிறகு, முழு நேரத் தொழிலுமே இறால் தான் என்றாகி விட்டது'' என்று சொல்லிக் கொண்டே வந்தவன், சமயத்தில் ஏதோ நினைவு வரவும் பேச்சை நிறுத்தினான்.

மாற்றத்தை கவனிக்காதவள் போல, ''அங்கே சென்று ஒழுங்காக படித்தீர்களோ, இல்லையோ? உருப்படியாக காய் வெட்டக் கற்றுக் கொண்டு வந்திருக்கிறீர்கள்'' என்று வாரினாள் அவள்.

''ஹே...ய்! ஒழுங்காக படிக்காமல்தான், வருடத்திற்கு வருடம் தொழிலை விரிவு படுத்த முடியுமாக்கும்'' என கேலி செய்தவன், ''அந்நாட்டு மக்கள் பெரிதாக சேமிப்பிற்கோ, முதலீட்டிற்கோ முக்கியத்துவம் தருவது கிடையாது என்பது என் கருத்து துளசி.

''நன்றாகவே சம்பாதிப்பார்கள், உற்சாகமாகச் செல வழிப்பார்கள். வேண்டியதையெல்லாம் தயக்கமின்றி வாங்கிச் சாப்பிடுவார்கள். பெரும்பாலானவர்கள் வீட்டில் சமைப்பதே அரிது!

''சின்ன ரெஸ்டாரெண்டிலிருந்து பெரிய நட்சத்திர ஒட்டல் வரை 'இறால்' வகை உணவிற்கு நல்...ல வரவேற்பிருக்கிறது.

''சுவையாக ஒரு உணவு வகை கிடைக்குமென்றால், அதற்காக செலவழிக்க அவர்கள் தயங்குவதேயில்லை துளசி!



''எட்டு பெரிய நகரங்களில், இது பற்றி 'சர்வே' எடுத்து திருப்தியான பிறகே, இந்த பிசினஸில் இறங்கினேன்.

''இப்போது வளமான ஆறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். விளக்கங்கள் போதுமா அம்மணி?'' என்று முறுவலோடு கேட்டு, ஒரு கேரட்டை எடுத்துக் கடித்தான் பவனேந்திரன்.

அவன் கூறக்கூற கேட்டவளுக்கு பிரமிப்பு கூடிக் கொண்டே போனது!

மிஞ்சி மிஞ்சி முப்பது வயதிருக்குமா? அதற்குள் எவ்...வளவு சாதித்திருக்கிறான்!

ஆனால், அது குறித்து சிறிதும் அலட்டாமல் கேலியும், கிண்டலுமாக எவ்வளவு இயல்பாகப் பழகுகிறான்!

பார்வையைத் தாழ்த்திக் கொண்டு, வாணலியில் எண்ணெய் விட்டு கடுகைப் போட்டவள். ''உங்கள் கனகாம்மா ஸ்பெஷலாக என்ன சமைப்பார்கள்?'' என்று கேட்டு விட்டு, வெடித்த கடுகுடன் வெட்டிய வெங் காயம், மிளகாயைப் போட்டாள்.

''சிக்கன், இறால் கிரேவி அசத்தலாகச் செய்வார்கள். உனக்கு அசைவம் சமைக்கத் தெரியும் தானே?'' என்றான்.

''நன்றாகவே தெரியும். பதின்மூன்று வயதிலிருந்து சித்தி வீட்டில் என் சமையல் தானே'' என்று விட்டு பொன்னிறமாக மாறியிருந்த வெங்காயத்துடன், தக்காளி, கேரட், பீன்ஸைக் கொட்டிக் கிளறினாள்.

ஆம்லெட்டிற்காக முட்டையை உடைத்து பாத் திரத்தில் ஊற்றி, ஒரே மாதிரியாகச் சுற்றி அடித்தபோது, அவனுடைய செல்போன் அழைத்தது.

கையிலிருந்த பாத்திரத்தை உட்புறமாக நகர்த்தி வைத்து விட்டு, ஹெட்போனை எடுத்து காதில் மாட்டிக்கொண்டு, ''ஹலோ சார். யா. வெரிகுட்மார்னிங். எனித்திங் இம்பார்ட்டன்ஸ்?'' என்று கேட்டபடியே நடந்து சென்று, ஹால் சோபாவில் அமர்ந்தான்.

சற்று நேரம் 'ஓ.கே. ம்' என்று கூறி எதிர் முனையிலிருந்தவரைப் பேசவிட்டான்.

பிறகு, ''பார்ட்டி நல்ல இடம் தான் சார். நானும் மறுக்கவில்லை. ஆனால் இருபது பர்சன்ட் ஆஃபர் கொடுத்தால், அது நமக்கு இலாபத்தில் நஷ்டமாயிற்றே. அதற்கென்ன சொல்கிறீர்கள்?

''பத்து கிலோவிற்கு, ஒரு கிலோ மட்டும்தான் ஆஃபர் தர முடியும். பார்ட்டி எவ்வளவு பெரிய ஆளாக வேண்டுமானாலும் இருக்கட்டுமே சார்.

''பத்துக்கு, இரண்டு கொடுத்தால் நம்ம லாபத்தில் தான் குறையும். பணம் என்ன மரத்திலா சார் காய்க்கிறது? இன்றைக்கெல்லாம் நஷ்டமாகாமல் தொழிலை நடத்துவது எவ்வளவு கஷ்டமென்று உங்களுக்குத் தெரியாததா?

''எதைச் செய்ய நினைத்தாலும் பணம் வேண்டும். அது இல்லாமல் ஒரு வேலையும் நடக்காது. கேட்பவர்களுக்கெல்லாம் அள்ளி விட்டால் கம்பெனி தாங்குமா சார்.

''வாரம் குறைந்தது ஆயிரம் கிலோ வாங்குவார்களா சொல்லுங்கள்? சார். மூர்த்தி சார் லிசன், லிசன் மாதம் மூன்றாயிரம் கிலோ வாங்குவார்கள் என்கிறீர்கள். ஆறு மாதம், ஒரு வருடத்தில் ஐந்தாயிரம் கிலோவா சார் வாங்கிவிடப் போகிறார்கள். எனக்கு நீங்கள் கேரண்டி தர முடியுமா? எல்லோரும் ஆரம்பத்தில் இதே டயலாக்கைத் தானே சொல்கிறார்கள். போகப் போக அதிக 'ஆர்டர்' போடுகிறோம் என்பதை நம்பி, எப்படி சார் 'டபுள் ஆஃபர்' கொடுப்பது?



''நீங்கள் வேறு ஏன் சார்? உங்களிடம் கேட்கும் போதே முடியாதென்று கூறுவது தானே? ஒரு பார்ட்டிகூட மிஸ்ஸாகாமல் பிசினஸ் பண்ண முடியுமா?

''ஏன் சார். காலை வேளையில் என்னிடம் திட்டு வாங்கினால் தான் உங்களுக்குத் திருப்தியாகுமா? என்று கூறிச் சிரித்தவன், ''நமக்கு ஒத்துவரவில்லையென்றால் ஒதுக்கி விட்டுப் போங்களேன்.

''உங்களைப் பேசி திருப்திப்படுத்தவே முடியாதே ஓ.கே. சார். டிரான்ஸ்போர்ட் சார்ஜை அவர்களே ஏற்றுக் கொண்டு, பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வாங்கியிருக்கும் தொகைக்கு செக் கொடுத்து விட வேண்டும் என்று சொல்லுங்கள்.

''இதற்கு அவர்கள் ஒத்துக் கொண்டால் இருபது பர்சன்ட் ஆஃபர் தரலாம். இதற்கு மேல் எந்த சலுகையும் கிடையாது என்பதையும் தெளிவாகச் சொல்லி விடுங்கள்.

''நாளைக்கு நேரில் பார்க்கலாம். தேங்க்யூ. தேங்க்யூ சார். ஹேவ் ஏ நைஸ் டே'' என்று சிரித்துக் கொண்டே ஃபோன் தொடர்பை கட் பண்ணினான். பவனேந்திரன்.

சமையல் வேலைகளை முடித்து ஹாட் பாக்ஸில் எடுத்து வைத்து விட்டு, இருவரும் 'வாக்கிங்' போனார்கள்.

முன்தினம் நடந்த சாலையிலேயே இருவரும் நடந்தார்கள்.

''இன்றைக்குக் குளிர் அதிகம் போலிருக்கிறது. இன்னும் கூட பனி மூட்டம் விலகாதிருக்கிறதே. எதற்கு பிளாஸ்டிக் பையில் தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறாய்?'' என்று அவளிடம் விசாரித்தான் அவன்.

''இதற்குத்தான்'' என்று கூறி, நேற்று பூப்பறித்த சாலையோர 'டேலியோ ஒயின்' செடிக்கு நீரை ஊற்றினாள் துளசி.

''நல்ல ஐடியாதான். ஆனால், ஆடு, மாடுகள் செடியைத் தின்று விடாதா?'' என்று கேட்டான்.

''அதற்கு யார் விடப் போகிறார்களாம். வேரோடு பிடுங்கி யெடுத்துக் கொண்டு போய் வீட்டில் நட்டு விட மாட்டேன்'' என முறுவலுடன் இயம்பியவள், அவனுடன் மேலும் சற்று தூரம் நடந்தாள்.

சாலையோரம் சின்னதும், பெரியதுமாகக் கிடந்த பாறைகளில், ஆளுக்கொரு பக்கம் அமர்ந்தார்கள்.

எவ்...வளவு ஏகாந்தமான காலை வேளை!

வர்ணிக்க வார்த்தைகள் இல்லாத அளவிற்கு, அழகு கொட்டிக் கிடக்கும் இந்த இடத்தைக் காண, இரண்டு கண்கள் போதாதென்று தோன்றியது அவளுக்கு!

இந்த அழகு கொஞ்சும் இடத்தில் வசிக்கும் பாக்கியம் கிடைக்க, தான் எந்த ஜென்மத்தில் என்ன புண்ணியம் செய்தேனோ? என்று நினைத்தவள், அருகேயிருந்த பாறை மீது அமர்ந்தவனைப் பார்த்தாள்.

ஏதோ யோசனையுடன் வலது கையிலிருந்த செல் போனை, இடது உள்ளங்கையில் லேசாக தட்டிக் கொண்டிருந்தான் பவனேந்திரன்.



இந்த மனிதனால் அல்லவா, அவளுக்கு இந்த வாழ்க்கை!

உட்கார்ந்திருக்கும் போதே இவ்...வளவு நீளமான கால்களா! தேக்கு மரங்கள் போன்று வலிய நீண்ட கரங்கள்!

இவன் சராசரி உயரத்தைவிட அதிகம்தான்!

பளபளவென கறுத்தடர்ந்த சிகை, அகன்ற நெற்றி, அடர்ந்த கம்பீரமான புருவங்கள், கூர்மையான விழிகள், எடுப்பான நாசி, அழுத்தமான உதடுகள்!

புன்னகைக்கும் போதுதான் இந்த முகம் எவ்வளவு வசீகரமாக, இளமையாக மாறுகிறது!

முடிந்தவரை மனதை மகிழ்ச்சியோடு வைத்துக் கொண்டு அடிக்கடி புன்னகைக்கவும் செய்தால், பலரும் இவனைப் போல் இளமையாகத்தான் தெரிவார்களோ?!

தொழிலை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் கம்பீரமான ஆண்மகன்!

ஒரு ஆடவனை வைத்த கண் விலகாமல் பார்ப்பது, நாகரீகமல்ல மனதே என்று தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்டு, வலுக்கட்டாயமாக பார்வையை வேறு பக்கம் திருப்ப முயன்றாள் துளசி.

''அளவெடுத்து முடித்தாயிற்று போலிருக்கிறதே. பார்டர் மார்க்காவது போட்டாயா, இல்லையா?'' என்றான் கிண்டலாக.

'நன்றாக மாட்டினாயா மவளே!' என்று தடுமாறி காட்டிக் கொடுக்க முயன்ற முகத்தை மாற்றியவள்,

''ஆஹா! இவர் பெரிய மன்மதன். அப்படியே அள வெடுத்து வேண்டிய மட்டும், இந்தா பிடியுங்கள் என்று

மார்க்கை அள்ளிக் கொட்டி, உங்களைக் குளிர்விப்பது தானே என் தலையாய கவலை.

''என்னவோ அந்த துருப்பிடித்துக் கிடக்கிற மூளையை வைத்து, ஏதோ யோசிக்கிற மாதிரித் தெரிகிறதே என்று வியந்து போய் பார்த்தால், ரொம்பத்தான் அலட்டிக் கொள்கிறீர்கள் போலிருக்கிறதே?'' என்று அலட்சியமாகக் கூறிச் சமாளித்து, முகவாயைத் தோளில் இடித்து வெட்டுவது போல பாவனை செய்தாள் அவள்.

''துருப்பிடித்த மூளையா?! டேய் பவன், உனக்கு இந்த அவமானமெல்லாம் தேவையாடா?'' என்று தன்னைத் தானே கேட்டவனுக்கு, சிரிப்பில் தோள்கள் லேசாகக் குலுங்கின.

''உண்மையிலேயே உனக்கு தைரியம்தான் துளசி. அடிக்கடி என் தலையிலேயே கை வைத்து விடுகிறாயே?!'' என்று தடையற்றுச் சிரித்தவன், ''இங்கே வரும்போது எப்படித்தான் நாட்கள் நகருமோ தெரியவில்லையே என்று சில முறை நினைத்தேன். ஆனால் நீ கூட இருக்கும்போது நேரம் போவதே தெரிவதில்லை. ரியலி. நான் இவ்வளவு ஜாலியாக இருந்து ரொம்...ப நாட்களாகிறது'' என்று கைகளை முன்னே நீட்டி முறுக்கி சோம்பல் முறித்தான்.

மெல்ல முறுவலித்தவளின் முகத்தில் இளஞ்சூடு பரவியது!

''இங்கே தனியாக தங்கப் போவதில் உனக்கு பயமில்லையே. இருந்தால் சொல்லிவிடு, என்னோடே அழைத்துச் சென்று விடுகிறேன்'' என்று கேட்டான்.

''எந்...த பயமுமில்லை'' என்று தலையசைத்தாள் துளசி.



''உனக்குத் துணையாக பீம், ஜின் இரண்டையும் விட்டு விட்டுப் போகிறேன். அப்போதுதான் எனக்கும் கொஞ்சம் நிம்மதியாக இருக்கும். அவைகள் இரண்டும் பத்து பேருக்குச் சமம்'' என்று கூறினான்.

''அய்யோ! அந்த ரெண்டு நாய்களையும் என்னா...ல் எப்படிச் சமாளிக்க முடியும்? நேற்றிரவு நீங்கள் அவைகளுக்கு சாப்பாடு போடப் போனபோது, அங்கே நானும் வந்தேன். என்னைப் பார்த்தே குரைத்தனவே. அவைகள் எப்படி எனக்குத் துணையாக இருக்கும்?'' என்று கேட்டாள் அவள்.

''நேற்...றிரவா?! என்று நெற்றியைச் சுருக்கியவன், ''ம் இருக்கும். இருக்கும். என் எஜமானனின் தோளில் கிளி மாதிரி தொற்றிக் கொள்ளாமல், பத்தடி தூரத்திலேயே நிற்கிறாயே துளசி ராணி. உனக்கு மூளையிருக்கா என்று கோபத்திலே குரைத்திருக்கும். அவைகளை நான் சமாதானப்படுத்தி விடுகிறேன். நீ கவலைப்படாதே கண்ணே'' என்று கூறி கண் சிமிட்டினான் பவனன்.

ஓ..ஹோ! என்று அழகாக முறுவலித்து, ''உங்களுடன் சுற்றிய கிளிகள் எல்லாம், உங்...கள் மீது மையல் கொண்டு சுற்றியவர்கள் என்றல்லவா இதுவரை நினைத்திருந்தேன்.

''அடடா! இப்போதுதானே தெரிகிறது, அவர்கள் எல்லாம் பீம், ஜின்னின் கோபத்திற்கும், கோரப் பற்களுக்கும் பயந்துதான் உங்களுடன் சுற்றியிருக்கிறார்கள் என்ற ரகசியம்.

''ஹய்...யோ பாவம் அந்தப் பெண்கள்!'' என்று அதீதமாக இரக்கப்பட்டாள் துளசி.

முகம் சற்றே மேல் நோக்கிச் செல்ல கடகடவென்று சிரித்து. "இதைவிடக் கேவலமாக, இனி வரும் காலங்களில் கூட என்னை யாரும் மட்டம் தட்டவே முடியாது.

"என் நாய்களுக்குப் பயந்தா? மைகாட்!" என்று பொங்கிப் பொங்கிச் சிரித்தான் பவனேந்திரன்.

அவளுக்கு எவ்வளவோ உதவி செய்திருப்பவன். இவனிடம் இப்படி பதிலுக்கு பதில் திருப்புவது சரியா?

என்னவோ தெரியவில்லை இவனுடன் பேசும்போது, நாவடக்கம் என்பது சிறிதும் வரமாட்டேன் என்கிறது. இது அவளின் இயல்பு மாதிரி பேசிவிடுகிறாளே!

நடுவில் பட்ட வேதனைகளினால், ஞாபகப்படுத்தக் கூட நேரமின்றிப் போன சிறு வயதில், பெற்றோருக்கு ஒரே செல்ல மகளாக வாழ்ந்தபோது இப்படித்தான் படபடவென்று பேசிக் கொண்டு இருந்திருப்பேனா?

எப்போதோ ஒரு முறை, "பெண் பிள்ளைக்கு சலசல வென்று அப்படி என்னடி பேச்சு" என்று அம்மா கண்டிக்க, 'உம்'மென்று முகத்தை வைத்துக் கொண்டு அவள் கட்டில் ஏறி படுத்துக் கொண்டாள்.

மாலையில் வீடு திரும்பிய அப்பா, "என் பட்டுக் குட்டிக்கு என்னடா கோபம். அப்பா உனக்குப் பிடித்த கை முறுக்கு வாங்கி வந்திருக்கிறேன் பார்" என்று கூறி, அவளை தலைக்கு மேலே தூக்கிப் போட்டு விளை யாட்டுக் காட்டி சமாதானப்படுத்துவார்.

"பார்த்துங்க கை தவறி விடப்போகிறது" என்று வேக மாக வந்து, அவளை இறக்கி விட்டு சாப்பிட வைக்கும் அம்மா.



நிழல் படம் போல மனதினுள் காட்சி ஓடியது அவ ளுக்கு.

அந்தச் சிறு வயது சலசலப்புதான் இப்போது தொடர ஆரம்பித்திருக்கிறதோ?!

யோசனையைக் கட்டுப்படுத்தவென்று அவனைப் பார்த்தாள்.

பார்ப்பவர்களின் கண்களை அகல விரிய வைக்கும் வசீகரமான புன்னகை!

ரசனையுடைய அனைவரையுமே கவரக்கூடிய, தகுதி பெற்ற புன்னகை!

தினமும் தன்னைக் கண்ணாடியில் பார்ப்பவன்தானே. இவ்வளவு மோசமாக கேலி செய்து மட்டம் தட்டியதை நினைத்து, கொஞ்சமும் கோபப்படாமல் எவ்வளவு இயல்பாக ஏற்றுச் சிரிக்கிறான்!

இந்தப் புன்னகையில், தாராளமாகப் பழகும் வழக்க முடைய பெண்கள் மயங்குவதில், பெரிதாக என்ன வியப்பிருக்கிறது?

ஒழுக்கத்திலே பிழை என்பதற்காகவும் கூட, அவன் புன்னகையைப் பார்க்காது தவிர்க்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவேயில்லை!

இவன் இயல்பிலேயே நற்குணமுடையவனாகத்தான் இருக்க வேண்டும்.

"கிளம்பலாமா துளசி" என்று கேட்டபடி, பாறையி லிருந்து எழுந்து நின்று முடியைக் கோதினான் அவன்.

திரும்பி வந்தபோது, நீர் ஊற்றியதால் சுலபமாக பிடுங்க முடிந்த 'டேலியோ. ஒயின்' செடியின் வேர்

அறுபடாமல் எடுத்தாள். வேர் கிழங்கோடு சேர்த்து மேலும் கொஞ்சம் மண்ணை அள்ளி, பிளாஸ்டிக் பையிலே போட்டுக் கொண்டு, வீடு நோக்கி நடந்தாள்.

செடியைப் புல் தரையின் மண் மேட்டில், குழி தோண்டி வைத்து நீர் ஊற்றியவள், பவனேந்திரன் அழைக்கவும் வீட்டிற்குள் சென்றாள்.

"நாய்களுக்குச் சாப்பிட ஏதாவது எடுத்துக் கொண்டு வா துளசி" என்று அவன் சொல்ல, பால் பவுடரைக் கலந்து கொண்டு, ஒரு பாக்ஸ் 'பெடிகிரி'யுடன் வந்தாள்.

இரு நாய்களின் கழுத்து 'பெல்ட்' பட்டைகளைப் பிடித்துக் கொண்டு, முழங்காலிட்டு அமர்ந்து அவை களுடன் பேசிக் கொண்டிருந்தான் பவனன்.

வாலை ஆட்டிக் கொண்டு, அவனுடைய தோள்களை ஒட்டி உரசி நின்றன அச்செல்லப் பிராணிகள்!

"என் பக்கத்தில் வந்து நில் துளசி" என்றான்.

உள்ளூர உதறியதைக் காட்டிக் கொள்ளாமல், பின்ன லடித்த கால்களை வலுக்கட்டாயமாக நடக்க வைத்து, அவனருகே சென்றாள் அவள்.

சட்டென்று வாலாட்டுவதை நிறுத்திவிட்டு, விறைப் புடன் அவளை நிமிர்ந்து பார்த்தன நாய்கள்.

வலது கையிலிருந்த நாயை இடப்பக்கமாக நகர்த்தி, இரண்டையும் இடது கையிலே பிடித்தவன், "என் அருகே பக்கத்தில் வந்து உட்கார் துளசி" என்றுவிட்டு, அவைகளின் கழுத்துப் பகுதியில் மெல்ல நீவி விட லானான்.

நாய்களின் பற்கள் பட்டால் பயங்கர விஷமாயிற்றே!



இரண்டு இஞ்சிற்கு வளர்ந்திருந்த நான்கு பற களையும், அருகில், அவ்வளவு அருகில் கண்டதில், அக்குளிர் பிரதேசத்திலும் பொடிப் பொடியாக வியர்த்தது அவளுக்கு!

என்னவோ பற்பசைக்கு டீ.வி. விளம்பரங்களில் வருகிற மாடல்கள் மாதிரி, இவைகள் வேறு வாயைத் திறந்து காட்டி இப்...படி பயமுறுத்த வேண்டுமா!

இருக்கும் படபடப்பு போதாதென்று, பவனனின் தோள்களை ஒட்டியபடி நெருக்கமாக அமர்ந்திருப்பது வேறு, பெரும் அவஸ்தையாக இருந்தது அவளுக்கு!

"உணவை நீயே தட்டில் கொட்டி வை" என்றான்.

அவ்வாறே செய்தாள்.

வாலை ஆட்டிக் கொண்டு, நாக்கை நாலா பக்கமும் சுழற்றிச் சுழற்றி சாப்பிட்டன அவைகள்.

ஒரு தடவை கொட்டியதைச் சாப்பிட்டுவிட்டு, நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்தன.

பார்க்கும் போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகப் போடலானாள் துளசி.

எல்லாவற்றையும் போட்டு விட்டு தீர்ந்து போன பாக்ஸை குப்பை கொட்டுமிடத்தில் போட்டு விட்டு, கைகளைக் கழுவுவதற்காக பத்தெட்டு தூரத்திலிருந்த பைப்பிற்குச் சென்றாள் அவள்.

கைகளைக் கழுவிவிட்டுத் திரும்பியபோது, முதலில் சாப்பிட்டு முடித்த பீம், வாலை ஆட்டியபடி அவள் பின்னே சென்று கொண்டிருந்தது.

கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு, வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றான் பவனன்.

கொஞ்சம், நஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த மீதியையும் விடாது சாப்பிட்டு தட்டைச் சுத்தப்படுத்திவிட்டு, அருகே நின்றிருந்த எஜமானனை ஒரு முறை பார்த்த ஜின், தானும் வேகமாக ஓடிச் சென்று அவள் முன்னே நின்றது!

''யூ டன் ஏ குட் ஜாப் துளசி. சபாஷ்'' என்று பாராட்டி மெல்ல விசிலடித்தான் அவன்.

சற்று நேரம் ஒன்றையொன்று துரத்தி, செல்லமாக கடித்துப் புரண்டு விளையாடிய நாய்கள், அவள் வீட்டை நோக்கிச் செல்லவும், பாய்ச்சலுடன் ஓடிச் சென்று அவள் வழியை மறைத்து நின்றன!

சட்டென வழிமறிக்கவும் மிரண்டு போனாள் துளசி.

''பயப்படாமல் நிதானமாக நடந்து போ துளசி'' என்று விட்டு தானும் கைகளைக் கழுவச் சென்றான்.

## 7

இருவருமாக காலை உணவைச் சாப்பிட்டு முடித்தார்கள்.

சற்று நேரத்திலேயே டிரைவர் ரகு, தன் கூடவே ஒரு ஆணையும், பெண்ணையும் அழைத்து வந்தான்.

''இவர்கள் இருவரும் கணவன் மனைவிம்மா. எங்க வீட்டுக்குப் பக்கத்திலேதான் குடியிருக்காங்க. மூன்று



குழந்தைகள் இருக்குது. வாங்கற காசுக்கு குறைவில்லாம வேலை செய்வாங்க. எந்த வம்பு, தும்பும் வராதும்மா'' என நற்சான்று வழங்கினான் டிரைவர்.

''இந்தப் பக்கம் ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பளம்?'' என்று விசாரித்தாள் துளசி.

''முழு நேரமும் செய்தால் ஆண்களுக்கு நூறு, பெண்களுக்கு என்பது பாதி நேரம் என்பதால் அதிலே பாதிம்மா'' என்றார்கள்.

உள்ளே சென்று பவனனிடம் சொல்லி அழைத்துக் கொண்டு வந்தாள்.

''இதற்கு முன்னால் எங்கே வேலை செய்தீர்கள்? எல்லா வேலைகளும் தெரியுமா? இங்கே சரியாக வேலை செய்வீர்களா?'' என்ற கேள்விகளுக்கு, அவர்களின் பதில் திருப்தியைத் தர, ''சரி. இன்றிலிருந்தே வேலையை ஆரம்பித்து விடுங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றான் முதலாளி.

''சம்பளத்தை தினமுமோ இல்லை, வாரம் ஒரு முறையாகவோ வாங்கிக் கொள்ளுங்கள். இப்போது நீங்கள் முன் பக்கத் தோட்டத்தை சரி பண்ணுங்கள்'' என்று கூறி ஆண்களை அனுப்பி வைத்தாள்.

''நீங்கள் என்னுடன் வாங்கம்மா'' என்று, தன்னை விட பத்து வயதேனும் கூடுதலாயிருந்த அந்த நடுத்தர வயதுப் பெண்மணியை, வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள் துளசி.

''ஒவ்வொரு இடத்தையும் சுத்தப்படுத்தி துடைத்து விடுங்கள்'' என்று பணித்துவிட்டு, தேவையான உபகரணங்களையும் எடுத்துக் கொடுத்தாள்.

நடப்பதையெல்லாம் முறுவலுடன் பார்த்துக் கொண் டிருந்த பவனன், கம்ப்யூட்டரில் அவள் செய்யவிருக்கும் வேலைகளை பொறுமையாகவே சொல்லிக் கொடுத் தான்.

முன்பே அலுவலகத்தில் வேலை செய்தவள் என்ப தால், அவன் சொல்லிக் கொடுத்ததை இரண்டாவது தடவையே சரிவரச் செய்தாள் துளசி.

''அலுவலக அறையிலிருப்பவைகள் எல்லாம் முக்கிய மான பேப்பர்கள் துளசி. வேலை முடிந்து வெளியே செல்லும்போது பூட்டிவிடு'' என்று கவனப்படுத்தி விட்டு, தன் அறைக்குச் சென்று விட்டான் பவனேந் திரன்.

வேலை செய்த வேகத்தில் நேரம் போனதே தெரி யாமல், இரண்டு மணி நேரத்திற்கு மேலாக ஓடி விட் டிருந்தது!

கை விரல்களை மடக்கி சொடக்குப் போட்டவள், அறையைப் பூட்டிவிட்டு, வீட்டின் பின் பக்கத்துக் கம்பியில் உலர்த்தியிருந்த துணிகளை எடுத்து வந்து மடித்து வைத்தாள்.

வீட்டின் முன்பாக ஏதோ ஹாரன் சத்தம் கேட்கவும் வெளியே வந்தாள்.

நேற்று ஆர்டர் சொன்ன எலக்ட்ரானிக் பொருட்கள் அனைத்தும் அந்த வண்டியிலிருந்தது!

வெளியே வந்து பார்த்துவிட்டு கீழேயிறங்கி வந்த பவனன், ''எந்தெந்தப் பொருட்களை எங்கெங்கே வைப்ப தென்று, அவர்களிடம் சொல் துளசி'' என்றான்.



அவ்வாறே செய்தாள் அவள்.

மதிய உணவிற்குப் பிறகு, ''மாலை நான்கு மணிக்கு ஏர்போர்ட்டிற்குக் கிளம்ப வேண்டும் துளசி. டிரைவரிடம் சொல்லி அதுவரை ரெஸ்ட் எடுத்துக் கொள்ளச் சொல்'' என்று கூறினான்.

''ம்'' என்றவளின் நெஞ்சோரம் பாரம் ஏறியது!

செல்போனில் புது சிம் கார்டைப் போட்டவன், தேவை யான எண்களை அதில் பதிவு செய்துவிட்டு அவளிடம் கொடுத்தான்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தவன், பிறகு தன் வழக்கமான மதிய நேர ஓய்விற்காகச் சென்று விட்டான்.

வீட்டிற்குள் இருப்பது ஏனோ வெறுமையை ஏற் படுத்த, வெளியே வந்து மதில் சுவரின் ஓரமாக இருந்த 'புன்னை' மரத்தின் கீழே, பாதி காய்ந்த நிலையி லிருந்த புல் தரையில் அமர்ந்து, இலக்கற்று நோக்கினாள் துளசி.

சோம்பிக்கிடந்த நாய்கள் இரண்டும், ஓடி வந்து அவள் முன்னால் படுத்துக் கொண்டன!

இனி இவைகள் தான், தனக்குப் பொழுதுபோக்கும் துணையுமோ?

பவனன் கிளம்பப் போகிறான் என்பதால் மட்டுமே, இந்த மலைச் சிகரம் அழகற்றுப் போய் விட்டது போல் தோன்றக்கூடுமா?

அவளுக்கு அப்படித்தான் தோன்றியது!

ஆனால், இந்த வெறுமையை வளர விடுவதும் நல்லதல்ல என்று, தனக்குத்தானே சொல்லிக் கொண்டு திடமுற முயன்றாள்.

பவனன் தன் ஓய்வு நாட்களைக் கழிக்கவென்று வாங்கிய, இந்த இடத்திலேயே இருக்க வேண்டுமென்று நினைப்பது நியாயமில்லையே!

மனதை நோகடிக்காமல் சுவாரஸ்யமாகப் பேசுபவன் தான். பொழுதும் இறக்கை கட்டிக் கொண்டு தான் சென்றது!

இதற்காக அவன் இங்கேயேவா இருக்க முடியும்? ஏதோ போக்கிடமற்றப் பெண் என்பதால் ஆதரவளித்து, கௌரவமாக ஒரு வேலையையும் கொடுத்திருக்கிறான்!

இதற்கே அவள் காலம் முழுவதும் நன்றிக்கடன் பட்டிருக்கிறாள். இதுவே எப்போது, யாருக்குச் செய்த புண்ணியத்தின் பலனோ?!

இதற்கு மேலும் எதையாவது, அது எதுவாக இருப் பினும் எதிர்பார்ப்பது அதீத பேராசைதான்.

துளசி என்றைக்குமே பேராசைக்காரியில்லை!

அதுவும் அதீதப் பேராசை கிடையவே கிடையாதே!

இருப்பதையும், கிடைப்பதையும் கொண்டு முடிந்த வரை திருப்தியாக, சந்தோஷமாக வாழ்ந்து தான் அவ ளுக்குப் பழக்கம்.

அந்த இயல்பான குணங்கள் அவளை விட்டு எந் நாளும் மாறாது!

பவனன் கிளம்புவதை இயல்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்த பிறகே, முகம் தெளிவுற்றது அவளுக்கு.

யாருக்காகவும் காத்திருக்காமல் நேரம் விரைந்தோட, கிளம்புவதற்காகத் தயாராகி கீழே வந்தான் பவனேந்திரன்.



கறுப்பு நிற 'கார்கோ' பான்ட், அடர் சிவப்பில் காலரில் லாத முழுக்கை டீ ஷர்ட்.

டீ ஷர்ட்டின் இடது மார்பின் பக்கம், ஒன்றை யொன்றைத் தொட்டது போல, வெண்ணிறத்தில் மூன்று நட்சத்திரங்கள் பளிச்சிட்டன!

இரு கரங்களின் கட்டை விரலையும், பான்ட் பாக் கெட்டில் கொக்கி மாதிரி மாட்டிக் கொண்டு வந்தவன், ''கிளம்புகிறேன் துளசி'' என்று கூறி தலையசைத்து விட்டு வெளியே சென்றான்.

வழி மறித்து விளையாடிய நாய்களைப் பார்த்து, "இவை களுக்கு வாரத்தில் ஒரு முறை மீனும், ஆட்டு எலும்பும் வாங்கிப் போடுவது வழக்கம் துளசி. மறந்து விடாதே'' என்றான்.

தொடர்ந்து, கண்களில் தோன்றிய குறும்புடன், ''பீம், ஜின் இரண்டும் என்னுடன் இல்லையென்ற செய்தி வெளியே தெரியும்போது, என்னுடன் பழகும் சுந்தரி குட்டிகள் எல்லோரும் எப்படி மாறுவார்களோ தெரிய வில்லை?

"அவர்கள் மாறாதிருக்க வேறு ஏதாவது வழியைத்தான் கண்டு பிடிக்க வேண்டும். உனக்கு ஏதாவது யோசனை தோன்றுகிறதா துளசி?'' என்று தீவிரமான குரலிலே கேட்டான்.

''ம். என்னுடைய 'ரெண்டு ஸ்பூன்' மூளைக்குள்ளே, அதி முக்கியமான 'இந்த' விஷயம் பற்றியெல்லாம் யோசிக்கும் திறனிருக்குமா பவனன்?'' என்று அப்பாவி யாகக் கூறியவளுக்கு, முறைப்பையும் மீறி புன்னகை தோன்றியது.

"அச்சோ! இந்த விஷயத்தில் உன்னிடம் ஐடியா கேட்டு 'ஓர்க் அவுட்' பண்ணலாம் என்று, மலைபோல் நம்பி யிருந்தேனே துளசி. நீயானால் இப்...படி ஏமாற்றி விட் டாயே!

"என்ன செய்வது? உன் மீதும் குறைபட முடியாது தான். இருக்கும் மூளையை வைத்துத்தானே நீயும் யோசிக்க முடியும். பார்க்கும் வரை பார்த்து விட்டு, ஒரு ஏ.கே. 47-ஐ வாங்கி தோளில் மாட்டிக் கொள்ளலாம் என்றிருக்கிறேன்" என்று முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு கூறினான் பவனன்.

"என்...னது! ஏ.கே. 47-ஆ?" என்றவளுக்கு அடக்க மாட்டாது சிரிப்பு பீறிட்டது!

"நல்...ல முன்னேற்றம்" என்று கிண்டலடித்த போதும் கூட, அவளின் சிரிப்பு குறையவேயில்லை!

"ஹப்...பா சிரித்து விட்டாயா! கிளம்பும் போது உன் முகம் வாட்டமாயிருப்பது போலிருக்கிறதே என்று, மனதிற்குள் ஒரு மாதிரியாயிருந்தது. இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறது" என்று தானும் சிரிப்பில் கலந்து கொண்டான் பவனேந்திரன்.

விழி விலகாமல் அவனைப் பார்த்தவள், "உங்களின் நாய்கள் அருகில் இல்லையே என்பதற்காக இல்லாமல், உங்களுக்காகவே நீங்கள் ஒழுக்கமுள்ள நல்லவராக வாழலாமே பவன்" என்றாள், அதுவே தன் ஆசை என்பது போன்ற குரலில்.

"எனக்காகவே நல்லவனாகவா?" என்று ஆழ்ந்த குரலில் மெல்ல முணுமுணுத்து, ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தவன், "முயற்சி செய்கிறேன்



ராணிம்மா. பை" என்று கூறிவிட்டு காரை நோக்கி நடந்தான்.

இமைக்க மறந்தவளாக நின்றாள் துளசிராணி.

நான்கெட்டு தூரமே சென்று சட்டெனத் திரும்பி வந்தவன், அவள் தலையை மென்மையாக வருடிவிட்டு, விடை பெறுவது போல அவளின் கையைப் பற்றி மெல்ல அழுத்தினான்.

கரடு முரடாக, காப்பேறியிருந்த கைகள். இதை வைத்து முன்பு ஒரு முறை பேசியது, இருவருக்குமே நினைவு வந்தது.

அந்த நினைவில் உண்டான மகிழ்ச்சியுடனே கிளம்பிச் சென்றான் பவனேந்திரன்.

அவனுடைய, ராணிம்மாவிலேயே தடுமாறியிருந்த வளுக்கு, மயிலிறகை விட மென்மையான வருடலில், மனது நெக்குருகிப் போய் கண்கள் பனித்தன!

துக்கம் தொண்டையை அழுத்தமாக அடைத்து இறுக வைக்க, மூச்சு விட முடியாதபடி திண்டாடுவதென்பது இதுதானோ?!

அவளுடைய வேதனையில் பங்கெடுத்துக் கொள்வது போல, சற்று நேரத்திலேயே மேகம் சூழ்ந்து, வானம் இருள சடசடவென்று மழை பொழியலானது!

அந்த வீடு மேடான பகுதியில் கட்டப்பட்டிருந்ததால், சுற்றியுமிருக்கும் தேயிலைத் தோட்டங்களையும், குடி யிருப்புப் பகுதியையும் நன்றாகவே காண முடியும்.

மழை நீர் வரும் வழிகளில் மண் அரித்து, சிறு ஓடை போலாகியிருந்த இடத்திலிருந்து, சலசலவென்று சத்த மிட்டபடி நீர் வழிந்தோடியது.

அந்த ரம்மியமான சூழல் மனதிற்கு இதமளிக்க, மேசையருகேயிருந்த நாற்காலியை இழுத்து ஜன்னலருகே போட்டுக் கொண்டு பார்க்கலானாள் துளசி ராணி.

பசேலென்றிருந்த இலைகள் தூய்மையாக கழுவப்பட, சாலையின் பள்ளமான இடத்தை நோக்கிப் பாய்ந்தது மழைநீர்.

இடைவெளி விட்டுப் பெய்த மழை, சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக நீடித்தது.

''நாங்கள் கிளம்புகிறோம்மா'' என்றபடி வந்து நின்றார்கள், அன்று புதிதாக வேலைக்கு வந்திருந்த காசி, லெட்சுமி இருவரும்.

மணி ஆறை நெருங்கியிருந்தது. ''நேரமாகி விட்டதே கிளம்புங்கள்'' என்றவள், ''பணம் வேண்டுமா?'' என்று கேட்டாள்.

''தினமும் நூறு மட்டும் கொடுங்கம்மா. மீதியை வாரா வாரம் வாங்கிக்கிறோம்'' என்று கூறினாள் லட்சுமி.

அவர்கள் கேட்டவாறே கொடுத்து அனுப்பிவிட்டு, செக்யூரிட்டியை அழைத்து சாப்பாட்டுக் கேரியலைக் கொடுத்தாள் துளசி.

''நாங்கள் இங்கேயிருக்கிறோம்'' என்று இரு முறை மெல்லவே குரைத்துக் காட்டின நாய்கள்.

அவைகளுக்கும் தட்டு நிறைய உணவளித்து, கழுத்து பெல்ட்டில் இணைத்துக் கட்டியிருந்த சங்கிலியைக் கழற்றி விட்டாள்.

பிறகு வீட்டிற்குள் சென்று, வாயிலின் பெரிய கதவை இழுத்து மூடி தாழிட்டுவிட்டு, சற்று நேரம் டீ.வி. பார்த்தாள்.



அவ்வளவு பெரிய வீட்டில் தனியாக இருப்பதை நினைத்தால், உள்ளூர சற்று பயமாகத்தான் இருந்தது.

டீ.வி. ஒன்றுதான் துணை என்பதுபோல, சத்தத்தைக் கொஞ்சம் கூட்டி வைத்துக் கொண்டு பார்த்தாள்.

அன்றிரவு சுமார் ஒன்பது மணியளவிலே ஃபோன் செய்து, தான் சென்னையைச் சென்றடைந்து விட்டதாகக் கூறி, சற்று நேரம் பேசிய பிறகே ஃபோனை வைத்தான் பவனேந்திரன்.

உள்ளூர மிகவும் இதமாக உணர்ந்தாள் துளசி!

தான் தனியாக இருப்பேன் என்பதை மனதில் கொண்டு, மனது தைரியமடையும் பொருட்டே, பவனன் அழைத்திருக்கிறான் என்பதை உணர்ந்து நிம்மதியடைந்தாள் அவள்.

ஆனால், அந்த நிம்மதியெல்லாம் நள்ளிரவு வேளையில், 'கெக் கெக் கெக் கெக்' என்று ஆந்தை அலறும் வரை தான் நீடித்தது.

திடுக்கிட்டு விழித்தவளுக்கு, நெஞ்சோடு சேர்ந்து கை, கால்களும் படபடத்தது!

## 8

ஆந்தை அலறினால் அபசகுணமென்று, அவள் ஊரிலே வயதானவர்கள் அதிலும் முத்தம்மா பாட்டி

சொல்லக்கேட்டது, இப்போது பார்த்துத்தானா ஞாபகம் வரவேண்டும்!

விழிப்பு வந்தவளுக்கு சிறு வயதிலிருந்து தன் வாழ்வில் நடந்ததெல்லாம், படம் மாதிரி நினைவு வந்தது!

ஊரிலே முத்தம்மா பாட்டி கதை சொல்ல ஆரம் பித்தாலே, கேட்பவர்களுக்கு உதறலெடுத்து விடும்.

''குட்டிங்களா சொல்லறத நல்...லா கேட்டுக்கணும்'' என்று கண்டிப்புடன் தான் ஆரம்பிப்பாள் பாட்டி.

''எந்த வூட்டுல துக்கம் நேருமோ, கஷ்டம் வருமோ அந்த வூட்டு மேலயோ, இல்ல பக்கத்துல இருக்க ஒத்த மரம், லைட்டு கம்பம் மேலயோ ஆந்தை உக்காந்து 'கெக் கெக் கேனு' கத்துனா, அந்தப் பக்கம் கண்டிப்பா ஒரு ஆளு உயிருக்கு ஆபத்து வரும். செத்தே போயிடுவாங்க.

''நானே அது மாதிரி எத்தினி பார்த்திருப்பேன். ஆந்த கத்தும்போது வெளியே வந்து நின்னு 'வீச்சருவாள எடுத்து அது மூக்க அறுங்கடானு' சத்தமா சொல்லணும். அப்பதான், நம்மளத்தான் திட்டறாங்கன்னு தெரிஞ்சிக் கிட்டு, அவமானப்பட்டு ஓடிப்போயிடும்.

''அத்த விட்டுப்புட்டு செருப்பால, விளக்குமாத்தால அடிப்பேன் ஓடிப்போ என்று சொல்லவே கூடாது.

''அப்படிச் சொல்லித் திட்டுனா, அது சந்தோசமா கத்திக் கிட்டே போயி, அதோட கூட்டணி ஆந்தகிட்ட எல்லாம் 'அந்த வூட்டுல செத்துப் போயிட்டாங்க, நான் இழவுக்குப் போனேன். எனக்கு கை குடுத்தாங்க. எனக்கு கை குடுத்தாங்கன்னு சொல்லிச் சொல்லி சிரிக்குமாம்'' என்று தேவையான இடத்திலே குரலை ஏற்றி, இறக்கி,



இடையிடையே வினோத சத்தங்களுடன் கதை கூறும் போது, 'த்ரில் சினிமா' பார்த்த மாதிரி நினைப்பார்கள் பிள்ளைகள்.

கற்பனையில் தோன்றும் காட்சி பயங்கரமாயிருந்தால், இரு கைகளையும் வைத்து முகத்தை, முக்கியமாக கண்களை மூடிக் கொள்வார்கள் சில பிள்ளைகள்!

கிராமத்தில் வளரும் பத்து, பன்னிரெண்டு வய துடைய பிள்ளைகளுக்கு சந்தேகம் தோன்றாததோடு, நம்பாதிருக்கவும் முடியாதே!

உதறல் எடுத்தாலும் கூட, தைரியத்திற்காக ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டாவது, கதையைக் கேட்டு முடிக்காமல் அவ்விடத்தை விட்டு ஒருவரும் அகன்று செல்ல மாட்டார்களே!

முத்தம்மா பாட்டிக்கு பெரிதாக விஷக் காய்ச்சல் வந்து இறந்தபோது, ''நான் அப்பவே நினைச்சேன். வீட்டுப் பக்கம் ஆந்த கத்திக்கிட்டே கெடக்கு, கிழவிதான் இழுத் துட்டு இன்னைக்கோ, நாளைக்கோனு கெடக்கு, போய்ச் சேர்ந்திடும்னு அப்படியே நடந்துடுச்சி'' என்று கும்பலாக கூடி நின்று பேசிக் கொண்டார்கள் ஊர்ப் பெண்கள்.

தன் காதில் விழுந்ததை, ஒரு முறை அம்மாவிடம் கூறி விளக்கம் கேட்டாள் துளசி.

அம்மாவின் விளக்கம் முற்றிலும் வேறாக இருந்தது!

''இது மாதிரி கதையெல்லாம் ஒருவருக்கு ஒருவர் சொல்லி, அப்படியே தொடர்ந்து வருவது தானம்மா.

''அம்மாவின் தாத்தா ஆந்தையைப் பார்த்தால் கையெடுத்துக் கும்பிடுவார். ஆந்தை லட்சுமி சாமியோட வாகனமாம். சாமி எங்கேயாவது போகவேண்டும் என்று

நினைத்தால், ஆந்தை தான் கூட்டிக் கொண்டு போகு மாம்!

"சாமி ஆந்தையைக் கூப்பிட்டு, 'ஊருக்குள்ளே சென்று யாரோட வீடு சுத்தமா பெருக்கி, விளக்கேற்றி, கோலம் போட்டிருக்கிறதென்று பார்த்துவிட்டு அங்கிருந்து என்னைக் கூப்பிடு, நான் அந்த வீட்டிற்கு வருகிறேன்" என்று சொல்லுமாம்.

"ஆந்தை சத்தம் போடும்போது நாம் விரட்டினால், 'என் வாகனத்தை விரட்டுவதோடு, திட்டவும் செய்கிறீர்களா? நான் உங்கள் வீட்டிற்குள் வரமாட்டேன்' என்று சாமி கோபித்துக் கொண்டு திரும்பிப் போய்விடுமாம்.

"லட்சுமி வரவில்லையென்றால் எந்த வீடு நன்றாக இருக்கும்? அதனால் விரட்டக்கூடாதும்மா" என்று, அன்பே வடிவான அம்மா கூறியது, பசுமரத்தாணி மாதிரி மனதில் பதிந்திருந்தது அவளுக்கு!

கிட்டத்தட்ட பதின்மூன்று வயதில் பேருந்து விபத் தில் பெற்றோர் இருவரையும் இழந்து, ஒற்றைப் பெண் ணாய் தனித்து நின்றாள் துளசி.

ஊர்க்காரர்களின் பேச்சுக்குப் பயந்தும், போனால் போகிறது நாம் சாப்பிடுவதில் ஒரு பிடி கொடுத்து விடலாம் என்று நினைத்தோ, 'வா' என்று கூட்டிச் சென்ற சித்தியின் வீட்டில் வளர வேண்டிய சூழ்நிலை அவ ளுக்கு!

ஏற்கனவே கணவனை இழந்து ஆணும், பெண்ணுமாக இரு பிள்ளைகளை வைத்துக் கொண்டு, ஜீவனத்திற்கே போதாமல் வாழ்ந்த நாகவல்லிக்கு, துளசியின் பொறுப்பை ஏற்க சற்றும் மனமில்லைதான்.



துளசியின் வீட்டிலிருந்த பாத்திரம் தட்டு முட்டுச் சாமான்களோடு, அவள் அம்மா அணிந்திருந்த இரட்டை வடம் சங்கிலியும் இதர சில்லரை நகைகளும், துளசியை பொறுப்பேற்று நல்லபடியாக வளர்ப்பவர்களிடமே ஒப்படைக்கப்படும் என்று, ஊரிலிருந்த பெரிய தலைகள் சேர்ந்து முடிவு செய்தார்கள்.

விஷயம் கேட்டதும் சட்டென்று விழித்துக் கொண் டாள் நாகவல்லி.

'கிட்டத்தட்ட பத்து பவுன் தேறும். சாமான் சட்டு களையும் விற்று பணமாக்கி விடலாம்!

'பெரிதாக அந்தப் பிள்ளைக்கு என்ன செய்து விடப் போகிறோம். நம் பிள்ளைகளுக்குப் போடுவதில் அவ ளுக்கும் இரண்டு பிடி சோறு. படிக்கத்தான் அரசாங்கமே புத்தகம் தந்து விடுகிறதே.

'ஒரு நான்கைந்து வருடம் கழித்து, எதுவுமே கேட்காத யாராவது ஒரு கூலிக்காரப் பயலுக்கு கட்டி வைத்து விட்டால் போயிற்று.

'அவளுக்கு சுளையாகப் பத்து பவுன் இலாபம் கிடைக் குமே!

'தான் பெற்ற மகளுக்கு பத்து பவுனையும் போட்டு, வசதியான நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்கலாமே!'

இத்திட்டத்தை மனதில் வைத்தே, 'என் வீட்டுப் பெண்ணை நானே வளர்க்கிறேன்' என்று பொறுப்பேற்று அழைத்து வந்தாள். வேறு நெருங்கிய உறவென்று தாய் வழியிலும் யாரும் இல்லாததால், 'பிள்ளைகளோடு பிள்ளையாக வளரட்டும்' என்று மற்றவர்களும் சரி யென்று, நாகவல்லியுடனே அனுப்பி வைத்தார்கள்.

சித்தி இட்ட வேலைகளைச் செய்வதற்கு ஆரம்பத்தில் கஷ்டமாயிருந்த போதும், பழகப்பழக தானே செய்ய லானாள் துளசி.

படிப்பில் கெட்டிக்காரியான துளசியை, எந்த அள விற்கு சித்தி மகன் - ராஜாவிற்குப் பிடிக்குமோ, அதைவிட அதிகமான அளவிற்குப் பிடிக்காமல் போனது மகள் மீனா – மீனாட்சிக்கு.

படிப்பில் மந்தமான மீனாவை ஆசிரியர்கள் எல் லோரும் 'உன் அக்காவைப் பார்த்துப் படி. அவளைப் பார்த்துக் கற்றுக் கொள்' என்று சொல்லும் போதெல்லாம், மீனாவிற்கு உள்ளூரக் கோபம் பொத்துக் கொண்டு வரும்!

'அவளைப் பார்த்து நான் என்னத்தைப் படிப்பது? கற்றுக் கொள்வது? பாத்திரம் தேய்ப்பதையும், மாவாட்டு வதையுமா?' என்று முகத்தில் அடித்த மாதிரி கேட்க வேண்டும் போல் ஆத்திரம் வரும்!

'என் வீட்டில் தஞ்சமடைந்து வாழும் இவளால் நான் திட்டு வாங்குவதா?' என்று பெற்றவளிடம் போட்டுக் கொடுத்து விடுவாள் மீனாட்சி.

பத்தாவதில் ஃபெயிலான மீனாவிற்கு, அதற்கு மேல் பள்ளிக் கூடம் பக்கம் எட்டிப் பார்க்கக்கூடப் பிடிக்க வில்லை.

அந்த இழுவினிப் பிடித்த வாத்திகளிடம் திட்டு வாங்குவது இத்தோடு நின்றதில், அவளுக்கு ஏக சந்தோஷம்தான்.

அதிலும் அந்த கணக்கு வாத்திச்சிக் கிழத்தினால், அவள் எத்தனை முறை அழுதேயிருக்கிறாள் என்பது அவளுக்கு மட்டும் தானே தெரியும்!



ஒரு அழகான பெண்ணுக்கு கணக்கு வரவில்லை யென்பதென்ன அவ்வளவு பெரிய தப்பா?

வரவில்லையென்றால் சனியன் தொலைகிறதென்று விட்டு விட வேண்டியதுதானே? அவள் அப்படித்தானே விட்டாள்!

அதை விட்டு விட்டு, 'உன் மட்டித் தலைக்குள் ஒன்றும் ஏறாதே. களி மண்' என்று எல்லோர் முன்பாகவும் திட்டுவதா?

அப்படியெல்லாம் திட்டும்போதுதானே தெரிகிறது, மாணவர்கள் ஏன் தனியாக மாட்டும் வாத்திகளை அடித்துத் துவைக்கிறார்கள் என்பது!

வீட்டிற்கு வந்து கண்டபடி திட்டும் தங்கையிடம், 'பாடம் சொல்லித் தருபவர்களை அசிங்கமாகத் திட்டாதே மீனா. ரொம்பவும் தப்பு' என்று கூறிவிட்டு, அதற்காக தங்கையிடம் வாங்கிய வசவுகளை நினைத்து, இப் போதும் முகம் சுளித்தது அவளுக்கு!

''உனக்கு இவ்...வளவு கெட்ட புத்தியென்று இதுவரை எனக்குத் தெரியாது போனதே?!'' என்று மை தீட்டிய தன் விழிகளை அகல விரித்து, கண்களை உருட்டி பயமுறுத் தியபடி சினமுடன் கத்தினாள் மீனா.

மகள் கத்தியதில் என்னவோ ஏதோவென்று உள்ளே வந்தாள் நாகவல்லி.

தன் முதுகுப்புறமிருந்த சித்தியைப் பாராமல், ''எனக்குக் கெட்ட புத்தியா? கண்டபடி உளறாதே மீனா'' என்று கடிந்தாள் துளசி.

''ஏ..ண்டி! எங்கள் வீட்டிலிருந்து தண்டச்சோறு தின்று கொண்டே, என்னைத் திட்டும் வாத்திகளுக்கு ஆதர

வாகப் பேசுகிறாயே? உனக்குக் கெட்ட புத்தியில்லாமல் வேறு என்னவாம்?'' என்று சாடினாள் மீனா.

''நான் ஒன்றும் தண்டச்சோறு சாப்பிடவில்லை மீனா. எல்லா வேலைகளையும் நான்தானே செய்கிறேன். என்றைக்காவது நீ சாப்பிட்ட தட்டைக் கழுவியிருக்கிறாயா? போடும் துணிகளைத் தான் துவைத்திருக்கிறாயா? பேசத் தெரியும் என்பதற்காக, என்ன வேண்டுமென்றாலும் பேசலாம் என்று நினைக்காதே'' என்று தன்னை விட இரண்டு வயது சிறியவளைக் கண்டித்தாள் துளசி.

''பேசினால் என்னடி செய்துவிடுவாய்?'' என்று முதுகுப்புறமிருந்து, அகங்காரமாய் கேட்டது, நாகவல்லியின் குரல்.

திடுக்கிட்டுத் திரும்பும் முன்பாக, துளசியின் முதுகில் சித்தியின் உலக்கைக் கையினால், இடி மாதிரி பளீரென்று ஒரு அறை விழுந்தது!

'அம்மா ஆ!' என்று வலி தாங்க முடியாது கத்தியவளுக்கு, மூச்சடைத்து கண்கள் கலங்கி விட்டது!

''மூச். சத்தம் வெளியே வரக்கூடாது. எப்ப சாக்கு கிடைக்கும் எல்லா வேலைகளையும் நான்தான் செய்கிறேன் என்று சொல்லிக் காட்டலாமென்று காத்திருந்தாயாடி? விட்டா ரொம்பத்தான் பேசுவாய் போலிருக்கிறதே!

''மூணு வேளையும் மூக்கு முட்ட சோறு போட்டு, துணி மணி எடுத்துக் குடுத்து, படிக்க வேறு வைக்கிறேன் பாரு. எனக்கு இதெல்லாம் தேவைதான். நல்லதிற்கு காலமில்லையடி.



''பெருசா வேலை பண்ணறாளாமே வேலை. பின்னே இந்த வேலையெல்லாம் நீ பண்ணாம, போய்ச் சேர்ந்த உன் அப்பனும், ஆத்தாவுமா வந்து பண்ணுவாங்க?'' என்று வாய் மூடாது திட்டித் தீர்த்தாள் நாகவல்லி.

தன் மீது தவறில்லை என்றபோதும் கூட, ''மன்னித்து விடுங்கள் சித்தி. இனி இப்படிப் பேச மாட்டேன்'' என்று கூறிய பிறகே, போய்த் தொலை என்பது போல விட்டாள் நாகவல்லி.

தெய்வமாகி விட்ட பெற்றோரை, அசிங்கமான வசையிலிருந்து காப்பதற்காகவே மன்னிப்புக் கேட்டாள் துளசி.

அன்றைக்குப் பிறகு. துளசி துணிந்து ஒரு வார்த்தை பேசினாளில்லை!

சகிக்க முடியாத வேளைகளில், மனதிற்குள்ளேயே கன்னா பின்னாவென்று திட்டி, தன் மனதை சமாதானப்படுத்திக் கொள்வாளே தவிர, ஒரு முறை கூட அவர்களை எதிர்த்துப் பேசியதேயில்லை!

''இந்தப் பிசாசுக்கு உன்னைத் திட்டலைனா தூக்கமே வராதே'' என்று தன் உடன் பிறந்த மீனாவைத் திட்டிவிட்டு. ''அவள் கிடக்கிறாள் விடுக்கா'' என்று துளசியை சமாதானப்படுத்துவான் எட்டாம் வகுப்பிலிருந்த ராஜா!

இந்த வீட்டில், தன்னிடம் அன்பு காட்டவும் ஒரு ஜீவன் இருக்கிறதே என்று அகமகிழ்ந்து போவாள் துளசி.

தான் ஆதரவற்றவள் என்பதற்காக மட்டுமே பந்தாடப்படுவதில்லை என்பதை, ஓரிரு சம்பவத்தின் பிறகே தெரிந்துகொள்ள நேர்ந்தது அவளுக்கு!

ஒரு நாள் முகம் பார்க்கும் கண்ணாடி முன்பாக நின்றிருந்த மீனாவின் கையில் துளசியின் 'பாஸ்போர்ட் சைஸ்' போட்டோ.

கையிலிருந்த போட்டோவையும் கண்ணாடியில் தெரிந்த தன் முகத்தையும் மாற்றி மாற்றிப் பார்த்த மீனா, ''உன்னை விட நான்தான் நல்ல நிறம் துளசி. அதில் நீ என்னை மிஞ்சவே முடியாது. என்ன, உன் மூக்கு கொஞ்சம் கூராயிருக்கிறது. எனக்கு சின்னதாயிருக்கிறது. ஆனால் அது ஒன்றும் பெரிய விஷயமல்ல தெரிந்து கொள். கலர் தான் முக்கியம்'' என்று தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்தாள் மீனா.

தன் அழகைப் பற்றி, தனக்குத்தானே ஒரு பருவப் பெண் பேசுவது, இன்றைக்கு ஒன்றும் பிரமாதமான விஷயமில்லை தான்.

பலரும் மனதிற்குள்ளே நினைப்பதை இவள் வாய் விட்டுக் கூறுகிறாள். அவ்வளவுதான் விஷயம் என்றாலும் கூட, அக்கம் பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா, திடீரென்று வந்தால் என்ன நினைப்பார்கள் என்ற அறிவிருக்க வேண்டாம்.

அல்லது யார் வந்தாலும் எனக்கொன்றுமில்லை என்ற அகம்பாவமா?

இந்தப் பெண்ணை, சித்தி இன்னும் சற்று கண்டிப் போடு வளர்த்தால் பரவாயில்லை என்றே தோன்றியது அவளுக்கு!

ஆனால் பூனைக்கு யார் மணியைக் கட்டுவது!

துணிந்து சொல்லப் போய், 'என் செல்ல மகளை கண்டிக்கச் சொல்ல, உனக்கு எவ்வளவு தைரியமடி'' என்று தன் உலக்கைக் கையை வீசினால் என்ன செய்வது?



தன்னையும் அறியாமல் அவள் கை முதுகைத் தொட்டுப் பார்க்க அந்த இடியைத் தாங்கும் வலு தனக் கில்லையென்பதை உணர்ந்து, வந்த சுவடு தெரியாமல் திரும்பிச் சென்றாள் துளசி.

தாயும், மகளும் சேர்ந்து கொண்டு அவ்வப்போது துளசியை மட்டம் தட்டுவது வழக்கம்தான்.

அது, அவர்கள் இருவருக்கும் ஒரு இனிய பொழுது போக்கும் கூட!

ஒரு நாள் இரவு சுமார் எட்டு மணியளவில் ஆந்தை அலறவும், வெளியே வந்த துளசி கைகளைக் கூப்பி வணங்கி நின்றாள்.

''அய்யோ அம்மா! சீக்கிரமா இங்க வந்து பாரேன். அந்தக் கோட்டானை, இந்தக் கோட்டான் கும்பிட்டுக் கொண்டிருக்கிறது'' என்று கூறி கைகொட்டிச் சிரித்தாள் மீனா.

மூச்சிரைக்க வேகமாக வெளியே வந்து, ''ஏண்டி, அந்தக் கோட்டானை எதற்கடி கும்பிடுகிறாய்? சீக்கிரம் சாகவா? இல்லை நாங்க யாராவது போய்ச் சேரட்டும் என்று கும்பிடுகிறாயா? சனியனே, சனியனே. இனி ஒரு தரம் இப்படிச் செய்தாயென்றால் கையை ஒடித்து விடுவேன் ஜாக்கிரதை'' என்று கத்திவிட்டு, அவள் உச்சந்தலையில் 'நங்'கென்று ஒரு கொட்டு வைத்தாள் நாகவல்லி.

கொட்டு வாங்கிய இடத்தில், குழியேதும் விழுந்து விட்டதோ என்று பயந்தே போனாள் துளசி!

ஒரு வாரம் ஒத்தடம் கொடுத்த பிறகும், வலி மெல் லத்தான் குறைய ஆரம்பித்தது அவளுக்கு!

உச்சந்தலையிலே விழுந்த கொட்டு, உள்ளங்காலின் நரம்பை துடிக்கச் செய்தது. அவ்...வளவு வலுவான கொட்டு அது!

பிறகு, பள்ளி இறுதியாண்டில் நல்ல மதிப்பெண்கள் வாங்கியிருந்த போதும், 'இனி உன்னைப் படிக்க வைத்து, தெண்டம் அழ என்றால் ஆகாது. என் மகளே பத்தோடு நின்று விட்டாள். உனக்கென்னடி இன்னமும் படிப்பு' என்று கூறி முகவாயைத் தோளில் இடித்துக் கொண்டு நாகவல்லி நகர, அத்தோடு துளசியின் படிப்பு ஆசை நின்று போனது!

நல்ல மாணவி என்பதால், துளசியின் பள்ளி ஆசிரியர் ஒருவரே தனக்குத் தெரிந்த இடத்தில், இரண்டாயிரம் ரூபாய் சம்பளத்திற்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்தார்.

சுளையாக இரண்டாயிரம் வரும் என்பதால், வேலைக்கு ஒத்துக் கொண்டாள் நாகவல்லி.

பஸ்ஸிற்கு முன்னூறும், சொந்த செலவிற்கு நூறும் தவிர, சம்பளத்திலிருந்து சல்லிக்காசு தர மாட்டாள் நாகவல்லி.

பணம் போனால் போகிறது. வெறும் பஸ்ஸிற்கு மட்டுமே கொடுத்தாலும் கூட, அவள் வேலைக்குப் போவதை விடுவதாகயில்லை!

வேலைக்குப் போக ஆரம்பித்த பிறகு, அவள் மனம் எவ்...வளவு திடம் பெற்றிருக்கிறதென்பது அவளுக்குத் தானே தெரியும்!



# 9

மாதம் முழுவதும் வேலை செய்ததற்கான சம்பளத்தை, கையில் வாங்கி எண்ணிப் பார்க்கும் போது உண்டாகும் மனதிடம், பரவசம் பற்றி வேலை செய்பவர்களுக்குத்தான் தெரியும்!

முதல் மாதச் சம்பளத்தை சித்தி கையில் கொடுத்து அவள் காலில் பணிந்து வணங்கினாள் துளசி ராணி!

வாழ்விலேயே முதல் தடவையாக, 'நல்லாயிரும்மா' என்று வாழ்த்திவிட்டு, அந்த இருபது நோட்டுக்களையும் மாற்றி மாற்றி, நான்கு முறை எண்ணிப் பார்த்து திருப்தியடைந்தாள் நாகவல்லி.

பிறகு, முருகன் சாமி படத்தின் முன்னேயிருந்த டப்பாவில் பணத்தைப் போட்டு மூடி வைத்து விட்டு, "போய் கை, கால் கழுவிக் கொண்டு வாம்மா, சாப்பிட காரா சேவும், டீயும் எடுத்து வைக்கிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள் சித்தி.

உலகம் ஏதும் தலைகீழாகச் சுற்றத் தொடங்கி விட்டதா என்ன?!

சித்தி தன்னிடம் இவ்வளவு அக்கறையுடன் பேசுவது நிஜம் தானா? தன்னையே வலிக்கக் கிள்ளிப் பார்த்தாள் நிஜமே தான்!

மறுநாள் வேலைக்குக் கிளம்பியவளிடம், ''இந்தா துளசி பஸ்சுக்கு தெனமும் குடுத்துக்கிட்டிருக்க முடியாது. முன்னூறைப் பிடி. உன் செலவுக்கு முதல் மாசங்கிறதால இருநூறு தருகிறேன். அடுத்த மாசத்திலேர்ந்து நூறு மட்டும்தான்'' என்று கூறி சித்தி பணம் கொடுத்தாள்.

உதட்டைப் பிதுக்கிவிட்டு அப்பால் சென்றாள் மீனா.

சில மாதங்களுக்குப் பிறகு, ''டைப் ரைட்டிங், கம்ப் யூட்டர் கற்றுக் கொண்டு வந்தால், ஆபீஸில் சம்பளம் ஐநூறு அதிகமாகத் தருவதாகச் சொல்கிறார்கள் சித்தி.

''கற்றுக்கொள்ள ஆகும் செலவை, நான்கு தவணையாக கட்டினால் கூடப் போதும் சித்தி. விசாரித்தபோது சொன் னார்கள்'' என்று நயமாகப் பேசி சம்மதம் வாங்கினாள் துளசி.

துளசியின் நேர்த்தியான வேலைக்கு, அலுவலகத்தில் நல்ல மரியாதை கிடைத்தது.

தான் உண்டு தன் வேலையுண்டு என்றிருப்பவள், ''இந்த வேலையைக் கொஞ்சம் செய்து தருகிறாயாம்மா?'' என்று கேட்டால், மறுக்காது செய்தாள்.

சுமார் நாற்பது பேர் வேலை செய்த அலுவலகத்தில், பெரும்பாலானோரின் நன்மதிப்பைப் பெற்றதால், துளசி அலுவலக பி.எஃப். பணத்திற்கு சிபாரிசு செய்யப்பட இந்தியன் வங்கியில் அவள் பெயரில் கணக்கு ஆரம் பித்து, மாதம் 250 ரூபாய் போடப்பட்டது.

மூன்றாண்டு காலம் நல்லபடியாகச் செல்ல, கெட்ட நேரம் போல அப்போது தான் தங்கராஜனின் கண்களில் பட்டுத் தொலைத்தாள் துளசி.



அதன் பிறகு, சித்தி தன் பயங்கரமான இன்னொரு முகத்தைக் காட்டத் தொடங்கினாள்.

இரத்தச் சிவப்பு நிற 'ஸ்கார்ப்பியோ' காரில் வந்து, பூ, பழத்துடன் ஐந்து பவுன் சங்கிலியையும் தட்டில் வைத்து, மகள் வயதிலிருக்கக் கூடிய பெண்ணைக் கட்டிக் கொடுங் கள் என்று, வெட்கமின்றிக் கேட்டான் அந்தக் காட் டெருமை.

சொந்த பந்தம், ஊரார் என்ன சொல்வார்களோ என்று முதலில் தயங்கிய நாகவல்லி, 'உங்கள் வீட்டோடு ஒட்டியிருக்கிற இடத்தை வாங்கி, அதிலே ஒரு பெரிய மளிகைக் கடை வைத்துக் கொடுக்கிறேன். எப்படியும் இரண்டிலிருந்து நான்கு லட்சம் பெறுமானம் ஆகும்'' என்று தங்கராஜன் கூறவும், நாகவல்லிக்கு மயக்கம் போடாத குறைதான்.

அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டுவ தென்றால் இதுதானா?!

அப்படியே உச்சி குளிர்ந்து போனது நாகவல்லிக்கு!

துளசியிடம் ஒரு வார்த்தை கூடக் கேளாமல், சம்மதம் என்ற நாகவல்லி இட்ட ஒரே நிபந்தனை, திருமணத்திற்கு முன்பாகவே கடை வைத்துக் கொடுத்து விட வேண்டும் என்பது மட்டும்தான்.

இவர்கள் பாட்டிற்கு திருமணத்தை முடித்துக் கொண்டு கம்பி நீட்டி விட்டால்?

''நான் சொன்னால் சொன்னதுதாம்மா. வார்த்தை மாறு வது எனக்குப் பிடிக்காது. அப்படி மாறினால் இருபது வருடமாக 'பைனான்ஸ் கம்பெனி' நடத்த முடியுமா?''

என்ற தங்கராஜன், சொன்னது போலவே தன் ஆட்களை அனுப்பி, கடை வேலையையும் செய்தான்.

துளசி தன் விருப்பமின்மையை, நேரிடையாகவே நாகவல்லியிடம் தெரிவித்தபோதும் பயனில்லை.

''இத பாரு துளசி. ஏதோ இந்தக் குடும்பத்துக்கு உன் மூலமாக இப்பதான் விடிவு காலம் வந்திருக்கிறது. எந்த வகையிலாவது அது தடைபட்டது, நான் மனுசியாகவே இருக்க மாட்டேன் தெரிந்து கொள்'' என்று மிரட்டிவிட்டு, என்னென்ன மளிகைச் சாமான்கள் எந்தெந்த அளவிலே வாங்குவதென்ற 'லிஸ்ட்டை' எழுத, தன் செல்ல மகளை அழைத்தாள் சித்தியம்மா.

அவ்வப்போது, வேலை நடப்பதைப் பார்க்க வந்தேன் என்ற பெயரில், வீட்டிற்கு வந்த தங்கராஜனைப் பார்க்க நேரும்போது, மிகவும் அருவருப்பாக இருந்தது துளசிக்கு.

வேலை அதிகம் என்று கூறி தாமதமாக வீட்டிற்கு வந்து, அவனைப் பார்ப்பதைத் தவிர்க்க முயன்றாள் அவள்.

''அந்தப் பிசாத்து வேலைக்கு இன்னமும் எதற்கு கண்ணு போகிறாய்? அதை விட்டுத் தொலைத்து விட்டு, அக்கடானு வீட்டிலே ரெஸ்ட் எடுத்து உடம்பைத் தேற்றும்மா. நெடு நெடுனு இருக்கிறவளுக்கு கிள்ளி எடுக்க சதையிருக்கா பாரு'' என்று கூறி விடை பெற்ற வன், யாரும் பார்க்கிறார்களா என்பதைக்கூட கண்டு கொள்ளாமல், போகிற போக்கில் அவளைப் பார்த்து கண்ணடித்து விட்டுச் சென்றான்.

அப்போதே பூமி வெடித்து உள்ளே புதைந்து விடலாம் போல, அருவருப்பில் முகம் கன்றிச் சிவந்து போனது அவளுக்கு!



அவமானத்தோடு திரும்பினால், ஏளனமாக உதட்டை வளைத்தபடி கதவு மறைவிலே நின்றிருந்தாள் மீனா.

சை! என்ன பெண் இவள். தரங்கெட்டத் தனமாக ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டு. இந்த ஆள் அக்கா விற்குப் பொருத்தமா அம்மா என்று வாய் வார்த்தைக் காவது தாயிடம் கூறினாளா?

தாயைப் போல் தானே பிள்ளை. துளசியின் வாழ்வு நாசமாகப் போனால் மீனாவைவிட வேறு யாரால் அதிக மாக சந்தோஷப்பட முடியும்!

தம்பி ராஜாதான் பெற்றவள் முதுகில் கட்டிய டின்னை யும் பொருட்படுத்தாமல், ''அக்கா பாவம்மா. அந்த ஆளைப் பார்த்தால் எனக்கே பிடிக்கவில்லை. இந்தக் கல்யாணம் வேண்டாம்மா'' என்று அவளுக்காக கெஞ்சிக் கூடப் பார்த்தான்.

''என்னாடா இதுவரை வாங்கியது பத்தவில்லை? மேற்கொண்டு ஏதாவது பேசினாயென்றால் சூடிழுத்து விடுவேன். ஓடிப்போய் விடு'' என்று கர்ஜித்தாள் பெற்ற வள்.

''சாரிக்கா. என்னால் உனக்கு உதவ முடியவில்லை'' என்று பார்வையாலேயே மன்னிப்பு வேண்டி, கலங்கிய கண்களுடன் வெளியே சென்றான் ராஜா.

தனித்திருந்த சித்தியிடம், ''விருப்பம் இல்லாமல் எப்படிச் சித்தி வாழ முடியும்? வேண்டாம் சித்தி. தயவு செய்து அவர்களை இனி வீட்டிற்கு வரவேண்டாமென்று சொல்லி விடுங்கள்'' என்று கெஞ்சினாள் துளசி.

''அப்போது நீ வீட்டை விட்டு வெளியே போய் விடு கிறாயா? நாதியற்று தெருவில்தான் நிற்பாய். பரவா

யில்லையா? என்று இரக்கமில்லாமல் கேட்டாள் நாகவல்லி.

"சித்தீ!" என அதிர்ந்து போனாள் அவள்.

"பின்னே, நீ உன்னிஷ்டத்திற்கு நடந்தால் இங்கேயிருக்க முடியுமென்று நினைத்தாயா? வாயை மூடிக் கொண்டு நல்ல பெண்ணாக இரு. முடியவில்லையென்றால் வீட்டை விட்டுக் கிளம்பிவிடு" என்று கறாராகக் கூறினாள் நாகவல்லி.

'வீட்டை விட்டு எங்கே போவது? அவளுக்கு யாரைத் தெரியும்? யாரை நம்ப முடியும்? உதவுகிறேன் பேர்வழி என்று அழைத்துச் சென்று, எவ்வளவு கொடுமைக் கெல்லாம் ஆளாக்குகிறார்கள். கடத்திக் கொண்டு போய் நாடு விட்டு நாட்டில் விற்று விடக் கூடச் செய்கிறார்களே?' என்று தோன்றிய தொடர் கேள்வியில் திகைத்துப் போனாள் துளசி.

இந்தக் காலத்தில் வயதுப் பெண்ணின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள யார் முன் வருவார்கள்? இவளுக்கு உதவினால் நமக்கென்னென்ன பிரச்சனைகள் வரக் கூடுமோ, வேண்டாம் என்று நினைப்பதுதானே இயல்பாகி விட்டது!

"நாளைக்கு உனக்கு ஒன்று என்றால், ஒருத்தரும் வரமாட்டார்கள் தெரிந்து கொள்ளடி. வசதியான இவரை உதறிவிட்டுப் போனால், நாளைக்கு இவர்களால் உனக்கோ, இந்தக் குடும்பத்திற்கோ பிரச்சனை வராதென்று என்ன கேரண்டி?" என்று கேட்டு, மேற்கொண்டு யோசிக்க முடியாதபடி பயமுறுத்தினாள் சித்தி.

வலியது வெல்லும் என்பார்கள்!



இன்றைக்கு வலிமையானது பணம்தான் என்றாகி விட்டது.

அது அந்தக் கிழட்டுத் தங்கராஜனிடம் நிறையவே இருக்கும் போலிருக்கிறதே. சித்தி சொன்னது போல, அவன் தடாலடியிலும் இறங்கக் கூடியவனாகத்தான் தெரிகிறது.

அவன் கை காட்டிய வேலைகளையெல்லாம், ஓடி ஓடிச் செய்யத்தான் எப்போதும் ஏழெட்டு தடிமாடுகளைக் கூடவே வைத்திருக்கிறானே. பாவி!

'வீடு 'போ' என்கிறதாம், காடு 'வா' என்கிறதாம்!

'இந்த வயதில் இவனுக்கு வந்திருக்கிற ஆசையைப் பார்.

'மானங்கெட்ட ஜென்மம்!' என்று மனதார திட்டித் தீர்த்தாள் துளசி.

மகளின் முகமாற்றத்தை ஊகித்து, "புரிந்து கொண்டாய் போலிருக்கிறதே, பரவாயில்லை. அதுதான் எல்லோருக்கும் நல்லது" என்று கூறிவிட்டு, 'மாப்பிள்ளை' வாங்கி வந்திருந்த உயர்ரக ஆப்பிளில், மூன்று வெட்டி தட்டில் போட்டுக் கொண்டு வந்து, முக்காலி மீது வைத்தாள் நாகவல்லி.

வெறுப்போடு முகத்தைத் திருப்பிக் கொண்டாள் துளசி.

ஒரு துண்டு ஆப்பிளை எடுத்துச் சுவைத்தபடி, "எனக்கென்னவோ நீ ரொம்பத்தான் அலட்டிக் கொள்வது போல் தெரிகிறது துளசி" என்றபடி அருகேயிருந்த ஸ்டூலில் அமர்ந்தாள் மீனா.

என்ன சொல்ல வருகிறாள் இவள்?

''நீ கனவிலும் நினைத்துப் பார்க்காத, வசதியான வாழ்க்கை உன்னைத் தேடி வந்திருக்கிறது. கார், வீடு வாசல், பணம் என்று எல்...லாம் வைத்திருக்கும் மாப் பிள்ளை.

''வயதாகி விட்டதென்று அவரே சொன்னால் தான் தெரியும். அந்தளவிற்கு உடம்பையும் கச்சிதமாகவே வைத்திருக்கிறார்.

''இப்போதெல்லாம் இளைஞர்களுக்கே முடி நரைத்து விடுவதால் 'டை' அடிப்பதும் ஒரு பெரிய விஷயமே யில்லை. ஏற்கனவே திருமணம் ஆன போதும், மனைவி உயிரோடில்லாதபோது சொத்து முழுவதும் உனக்குத் தானே.

''திருமணம் ஆனவர் என்றால் இருந்துவிட்டுப் போகட்டுமே துளசி. இன்றைக்கெல்லாம் ஒன்றுமில்லாத பயலுங்களே ரெண்டு கல்யாணம் செய்வது சாதாரண மாகி விட்டது.

''பணம், பணம் என்று உலகம் ஓடிக் கொண்டிருக்க, உன்னைத் தேடி வந்திருப்பதை நீ ஏன் வேண்டாமென்று விரட்ட நினைக்கிறாய்?

''நீ சரியான மக்கு துளசி. எனக்கு மட்டும் இப்படியொரு அதிர்ஷ்டம் அடித்திருந்தால், இரு கையையும் நீட்டி, ஆலம் சுற்றி வரவேற்றிருப்பேன் தெரியுமா?

''அவருக்கு என்னவோ உன்னைத்தான் பிடித்திருக் கிறதாம். அப்படி என்னை விட நீ என்ன உயர்வாகத் தெரிகிறாயோ தெரியவில்லை. அதுவும் நீ என்னைவிட கம்மியான கலர் வேறு'' என்று தன் மனதிலிருப்பதை



மறையாது கூறி, உதட்டைப் பிதுக்கிக் காட்டி துளசியோடு சேர்த்து, பெற்ற தாயையுமே அதிர வைத்தாள், நாகவல்லி யின் செல்லப் புத்திரி மீனாட்சி!

மீனாட்சிக்குத் தன் மனதிலிருப்பதையெல்லாம் ஒருமுறையாவது கொட்டித் தீர்க்கவில்லை என்றால், தலையே வெடித்து விடும் போலிருந்தது!

இந்த தரித்திரம் பிடித்த துளசிக்குப் போய் இப்படி யொரு வாழ்வா? அதுவும் வீடு தேடியே வருவதா?!

பளபளக்கும் கார், நகை, வரும்போதெல்லாம் வாங்கி வரும் விதவிதமான பழங்கள் தான் என்ன!

கண்ணு, மூக்கு என்று அவன் கொஞ்சிப் பேச முயலுவதும், தலை நிமிர்ந்து பார்க்க மாட்டாளா என்று ஏக்கமுடன் நிற்பதும், இதையெல்லாம் அவ்வப்போது காண நேர்ந்தபோது, அடிவயிறு பற்றி எரிவதைப் போல் காந்தியது மீனாட்சிக்கு!

இருக்கட்டும். இருக்கட்டும். இவளை வைத்து எவ்... வளவு கறக்க முடியுமோ, அவ்வளவு கறந்து விட வேண்டும் என்று ஏற்கனவே முடிவு செய்திருந்தாள் மீனாட்சி.

அதற்கு முதல் படியாக, தங்கராஜன் வரும் போதெல் லாம் 'வாங்க மாமா' என்று வாய் நிறைய அழைத்து, வீட்டிலிருக்கும் மோரையோ, தண்ணீரையோ கொடுத்து புன்னகையுடன் உபசரிப்பதை வழக்கமாக்கிக் கொண் டாள்.

''உனக்கு எதற்கும்மா சிரமம். இனி இதையெல்லாம் உன் அக்காவையே செய்யச் சொல்ல வேண்டியது தானே?'' என்று உரிமையோடு கடிந்து கொண்ட

தங்கராஜன், மறுமுறை வந்தபோது மீனாவிற்கு அழகான மூன்று கல் மோதிரம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான்.

''ரொம்..ப தேங்க்ஸ் மாமா'' என்று சந்தோஷமாக வாங்கிக் கொண்டு, குதித்தோடிச் சென்றாள் மீனாட்சி.

தன் மகளின் பேச்சைக் கேட்டதிலிருந்து, வயிற்றைக் கலக்கியது நாகவல்லிக்கு!

கழுதை! பெற்றவள் எதிரேயிருக்கிறாள் என்பதைக் கூட மதிக்காமல், என்ன பேச்சுப் பேசுகிறாள்.

முதல் குழந்தையென்று செல்லம் கொடுத்து வளர்த்தது தப்பாகி விடும் போலிருக்கிறதே!

துளசியின் மனதை மாற்ற, சமாதானப்படுத்துவது போலப் பேசுகிறாள் என்று, மகள் 'பாயிண்ட்டோடு' பேசும் அழகைப் பார்த்து ரசித்துக் கொண்டு நின்றால், கடைசியில் பெற்றவளின் வயிற்றிலேயே நெருப்பை அள்ளிக் கொட்டி விட்டு, தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்வாள் போலிருக்கிறதே.

ஒரு பேச்சுக்காகக்கூட வயதான ஒருவனுக்கு, அவன் வசதியானவனாகவே இருந்தாலும், தன் செல்ல மகளை கட்டிக் கொடுக்க நாகவல்லி தயாரில்லை தான்!

இருக்கட்டும். முதலில் திருமணம் நல்லபடியாக நடக்கட்டும். பிறகு ஒரு நாளைக்குத் தன் மகளுக்கு வேப்பிலை அடித்தால் தான், இனி ஒரு முறை இது மாதிரிப் பேச மாட்டாள் என்று நினைத்தாள் நாகவல்லி.

வேலை செய்த அலுவலகத்திற்குச் சென்று சிறிதும் விருப்பமின்றியே, 'சொந்தக் காரணத்திற்காக வேலையை



விட்டு நிற்கப் போவதாக' துளசி சொன்னபோது, நிறையப் பேருக்கு உண்மையாகவே வருத்தமாகத்தான் இருந்தது!

இந்தக் காலத்தில் வாங்கும் சம்பளத்திற்கு நேர்மையாகவும், முகம் சுளிக்காமலும் வேலை செய்பவர் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

''சரிம்மா. உனக்கு நல்லதொரு வாழ்க்கை அமைய வாழ்த்துக்கள்'' என்று கூறி, ''உன் கணக்கில் சேர்ந்திருக்கும் பி.எஃப் பணம் ஒன்பது ஆயிரத்தின் பாஸ் புக்கையும் ஏ.டி.எம். கார்டு, ரகசிய நம்பரையும் இரண்டு நாட்களில் தந்து விடுகிறோம். அதுவரை அலுவலகத்திற்கு வாம்மா'' என்றார் தலைமைக் கணக்கர்.

''முடித்துக் கொடுக்க வேண்டிய வேலை கொஞ்சம் இருக்கிறது. அதனால் இன்னும் இரண்டு நாளைக்கு வேலைக்குப் போக வேண்டும்'' என்று சொல்லி விட்டு, நரகமாக மாறியிருந்த வீட்டிலிருந்து, இரண்டு நாட்கள் கிடைக்கும் விடுதலைக்காகவே அலுவலகம் சென்றாள் துளசி.

அலுவலகத்தில் சொன்னது போலவே, இரண்டாவது நாள் எல்லாவற்றையுமே கொடுத்து விட்டார்கள்.

பாஸ் புக்கைப் பிரித்தபோது, அதில் மேலும் பத்தாயிரம் ரூபாய் போடப்பட்டிருந்தது!

''இது உன் வேலையைப் பாராட்டி, மேலிடம் கொடுத்த செட்டில்மெண்ட் துளசி'' என்றார்கள்.

நன்றி கூறி விடைபெற்றுக் கொண்டு கிளம்பி வந்தவளுக்கு, தன் பர்ஸிலிருந்த பாஸ் புக்கைப் பற்றி வீட்டில் சொல்ல வேண்டுமென்று ஏனோ தோன்றவேயில்லை!

சித்திதான் இப்போது புதுப் பணக்காரியாகி விட்டாளே. இந்தப் பிசாத்து பணம் பெரிதாகத் தோன்றுமா என்ன?

தான் முதுகு ஒடிய வேலை செய்து சம்பாதித்ததில்தான் எதுவும் மிஞ்சவில்லை. இதுவாவது. இருக்கட்டும் என்று நினைத்தது அவள் மனது.

அந்தப் பணம் பெரிதாக அவளைக் காப்பாற்றி விடப் போவதில்லை என்றாலும் கூட், அதைப் பற்றிச் சொல்ல வில்லை!

கடை வேலைகள் மடமடவென்று முடிந்து. உடனே திருமண நாளும் முடிவு செய்யப்பட்டு, நாளைக்குத் திருமணம் என்ற நிலையும் வந்தது.

தங்கராஜன் அருகில் வந்தாலே, குமட்டிக் கொண்டு வந்தது துளசிக்கு.

ஏதாவது சாக்கு சொல்லி நழுவிக் கொண்டேயிருந்த வளை, நிச்சயதார்த்தம் என்ற பெயரில் மாலை போட்டு உட்கார வைத்து ஒரு கூத்து நடந்தது.

தனியே நின்று, தன் விதியை நொந்து கொண்டிருந் தவளின் மனநிலையை அறியாமல், அவள் கையைப் பிடித்துக் கொண்டு, ''என் கண்ணிலேயே படாமல் உள்ளே, உள்ளேயே ஒடுகிறாயே கண்ணு. வெட்கமா?'' என்று கொஞ்சலாகக் கேட்டு, அவள் கன்னத்தைத் தொட கையை உயர்த்தினான், அன்றையக் கதாநாயகனாக மாறியிருந்த தங்கராஜன்.

மெல்லத்தான் என்றாலும், ''சீ. விடு!'' என்று அவன் கையைத் தட்டி விட்டு, விடுவிடுவென்று அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள் துளசி.



வயதாக ஆரம்பித்ததாலோ அன்றி மதுவுண்ட மந்தி போலாகியிருந்ததாலோ, துளசி 'சீ! என்று கூறியது மட்டுமே காதில் விழ, அதையும் வெட்கப்பட்டுக் கூறிய தாக நினைத்து, சிரித்துக் கொண்டே திரும்பிச் சென்றான் மாப்பிள்ளைத் தங்...கம்!

ஆனால் வெற்றிலைத் தட்டை எடுக்க வந்து, மாப் பிள்ளை போகட்டும் என்று வேறு பக்கம் சற்று மறை வாகச் சென்று நின்று கொண்டிருந்த நாகவல்லி, துளசியின் முகத்தைப் பார்க்கத் தவறவில்லை.

'வெண்ணெய் திரண்டு வரும்போது, பாவி மகள் தாழியை உடைத்து விடுவாள் போலிருக்கிறதே' என்று நினைத்துத் தான், மண்டபத்திற்குச் சென்ற பிறகும் கூட துளசியை அறைக்குள் அனுப்பி விட்டு, வெளியே பூட்டிக் கொண்டு சென்றாள் நாகவல்லி.

தங்கராஜனின் சொந்த ஊர் அவினாசிக்கு பக்கத்தில் இருக்கும் ஒரு கிராமம்.

அந்த கிராமத்து அம்மன் கோவிலில் கல்யாணம் கட்டிக் கொண்டால், வாழ்க்கை சிறப்பாக அமையுமென்று ஜோசியத்தில் கூற, அவ்வாறே செய்ய எல்லா ஏற்பாடு களும் செய்திருந்தான்.

முன் தினமே மண்டபத்திற்குச் சென்று விடுவது, விடியற்காலையில் திருமணத்தை முடித்துக் கொண்டு வந்து, மண்டபத்தில் விருந்து கொடுக்க எல்லா வேலை களும் 'ஜரூராக' நடந்து கொண்டிருந்தது.

மணிக்கணக்காக காரில் பயணம் செய்து வந்திருந்த தால் நாகவல்லிக்கு உடம்பெல்லாம் ஒரே வலி.

அடித்துப்போட்ட மாதிரி தூங்கி எழுந்தால் தான், தன்னால் நடக்கவே முடியும் என்ற நிலை அவளுக்கு.

எனவே தன் வழக்கமான புத்திசாலித்தனத்திற்குச் சான்றாக, அப்போதும் துளசியை அறைக்குள் விட்டு பூட்டிய பிறகே தூங்கச் சென்றாள் நாகவல்லி.

தங்கராஜனை அருகில் நிற்க வைத்து, பேசக்கூட முடியாதென்பதை உறுதியாக உணர்ந்த துளசிக்கு, இவனோடு திருமணம் நடப்பதை விட சாவு மேல் என்றே தோன்றியது.

வாந்தி வரும் அளவிற்குத் தாங்க முடியாத நிலையை அடைந்தாள் துளசி. தப்பித்தே ஆக வேண்டும். மற்றதை பிறகு பார்த்துக் கொள்ளலாம். இந்த தைரியம் முன்பே வந்திருந்தால்கூட பரவாயில்லை தான்.

போகட்டும். காலம் கடக்கும் முன், இப்போதாவது வந்ததே!

மூழ்குகிறவனின் கடைசி முயற்சி இது. மன தைரி யத்தை விட்டு விடாதே என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்!

காரில் வரும்போதே அவளின் குழம்பிய முகத்தைப் பார்த்து விட்டு, பின் சீட்டில் தனியே உட்கார்ந்த அக்காவின் கையைப் பற்றிக் கொண்டு அருகே அமர்ந்து கொண்டான் தம்பி ராஜா.

மற்றவர்களின் கவனம் தங்களிடம் இல்லையென் பதை உறுதி செய்து கொண்டு, "இவர்களிடமிருந்து தப்பித்து விடுகிறாயாக்கா. என்னால் முடிந்த உதவி செய்கிறேன்" என்று காதோடு ரகசியம் பேசினான் தம்பி!



கண்கள் பளபளக்க அவனைப் பார்த்தாள் துளசி!

மண்டபத்திற்கு வந்த பிறகே, சித்திக்குத் தன் மீது சந்தேகம் வந்து விட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டாள்.

இல்லையென்றால் உப்பு, புளி மூட்டை மாதிரி, உள்ளே வைத்துப் பூட்ட வேண்டிய அவசியமில்லையே?

கடவுளே! எப்படியாவது என்னை இங்கிருந்து வெளியேற்றி விடுங்கள். எங்கேயாவது கண் காணாத இடத்துக்குப் போய் விடுகிறேன் என்று கண்ணீருடன் வேண்டியவள், வெளுத்துப்போன சாதாரண சேலை யணிந்து, நகைகளையெல்லாம் கழற்றி விட்டு, தன் 'பாஸ்புக்' அடங்கிய சிறிய கைப்பையை எடுத்து இடுப்பில் மறைத்து சொருகிக் கொண்டு தப்புவதற்கான நேரம் பார்த்து காத்திருந்தாள் துளசி.

ஆபத்பாந்தவன் போல வந்து தப்பிக்க வைத்தான் அருமைத் தம்பி!

தப்பிக்கும் வழியில் நின்றிருந்த ஓரிருவரையும், சாமர்த்தியமாக போக்குக் காட்டி வேறு பக்கம் அனுப்பி விட்டு, அக்கா டெம்போவில் ஏறி தன்னை மறைத்துக் கொண்டு விட்டாள் என்பதைப் பார்த்து சந்தோஷமும், லேசான கண்ணீருமாக கையசைத்து விட்டுப் போனது இன்னமும் கண்ணுக்குள்ளேயே நின்றது அவளுக்கு!

நடந்ததையெல்லாம் நினைத்து விடிய விடிய கண் விழித்திருந்தவள், விடியற்காலையில் தான் கண் மூடி னாள்.

# 10

மறுநாள் காலையில் செல்போன் அழைப்பினாலேயே கண் விழித்தாள் துளசி.

எடுத்துப் பார்த்தால் பவனன் தான்.

"எத்தனை தடவை அழைப்பது? உடனே எடுக்காமல் அப்படி என்ன வேலை செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கடுகடுத்தான் அவன்.

அவளிடம் இந்த கடுகடுப்பு வியப்பை உண்டாக்கியது!

"தூங்கிக் கொண்டிருந்தேன் பவன்" என்றாள் மெல்ல.

சில வினாடிகள் அவனிடமிருந்து பதிலின்றிப் போக, 'பவனன்' என்றழைத்தாள்.

"வயதுப் பெண்ணைத் தனியே விட்டுவிட்டு வந்திருக்கிறோமே என்று, எனக்கு சரியாகத் தூக்கமேயில்லை. நீயானால் விடிந்து இவ்வளவு நேரமாகியும், இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறாய். என்ன அநியாயமடா சாமி?!

"பிள்ளைகளைத் தனியாக வெளியே அனுப்புவதென்றால், வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பது போல் இருக்கிறது என்று சில பெற்றோர்கள், ஏன் என் அம்மாவே கூட சொல்லக் கேட்டிருக்கிறேன்.



"காதில் கேட்டபோது கிண்டலடித்தேன். ஆனால் இரவு முழுக்க அனுபவிக்கும் போது தானே உண்மை என்னவென்று தெரிகிறது" என்று தன் இயல்பிற்கு மாறான சிறு சலிப்புடன் பேசினான் அவன்.

அவள் எப்படியிருக்கிறாளோ என்றல்லவா தவித்திருக்கிறான்!

"என்னவோ நீயாவது நிம்மதியாகத் தூங்கினாயே. சந்தோஷம்" என்றான் திருப்தியாக.

நிம்மதியாகத் தூங்கினாளாமா? விடிய விடிய அவள் சிவராத்திரி கொண்டாடியது அவனுக்கெப்படித் தெரியும் பாவம்!

நானும் தான் இரவு முழுவதும் தூங்கவில்லை என்று சொல்லி மேலும் அவனைக் கலக்கப்படுத்தாமல், உற்சாகமுடனே பேசிவிட்டு குளிக்கச் சென்றாள் துளசி.

அதன் பிறகு, முன் தினம் போலவே எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருந்தபோது, காசி, லட்சுமி வேலைக்கு வந்து விட்டார்கள்.

அவர்கள் இருவரும் அவரவரின் வேலைகளைத் தொடர, தன் வேலைகளை முடித்துவிட்டு, அலுவலக அறைக்குள் சென்றாள் துளசி.

தன் வேலையில் ஆழ்ந்திருந்தவளை, "துளசியம்மா" என்று அழைத்தான் டிரைவர் ரகு.

வெளியே வந்தவளிடம் கார் சாவியைக் கொடுத்துவிட்டு, "நிலத்தை உழுவதற்காக டிராக்டர் வந்திருக்கும்மா. ஒருமுறை ஓட்டினால் போதுமா, இரண்டு முறை ஓட்டுவதா?" என்று கேட்டான்.

''குறுக்கே, நெடுக்கே இரண்டு முறையாகவே உழச் சொல்லுங்கள் ரகு. ஆழமாக உழுதால் தான் மண்ணி லிருக்கும் வெப்பமெல்லாம் வெளியே வரும்'' என்றாள்.

டிராக்டரின் கலப்பை, மண்ணைக் கிளறி விட ஆரம் பித்தவுடன். வெப்பத்தோடு சேர்ந்து வெளியே வந்த மண் வாசனை, அள்ளித் தின்று விடலாம் போல ஆசையைக் கிளப்பி விட்டது!

ஆழமாக மூச்சிழுத்து மண் வாசனையை அனுபவித் தாள் துளசி!

நேற்று பெய்த மழையின் போது, இதே மண்ணி லிருந்து இதைவிட அதிகமாக மண் வாசனை வந்தது.

அவ்வளவு வேதனையிலும் கூட வாசனையை உணர்ந்தாளே!

அனுபவித்தவர்களுக்கு மட்டுமே அருமை தெரியும்!

களையேறிக் கிடந்த இடத்தை உழுதபோது, கேரட் கலர் செம்மண் துருவிப் போட்டது போல, பூ மாதிரி 'பொல பொல'வென்று பெயர்ந்து மேலே வந்தது!

''நல்ல வளமான மண் தான் என்றபோதும், இயற்கை உரமான எருவிட்டால், விளைச்சல் கூடுதலாக வரும்மா'' என்றான் தோட்ட வேலை செய்யும் காசி.

''சரி. அப்படியே செய்யுங்கள்'' என்றுவிட்டு உள்ளே வந்தாள்.

''இந்த கார்ப்பெட்டையெல்லாம் சோப்புத்தூள் போட்டு ஊற வைத்து, மோட்டாரைப் போட்டு விட்டு அலசி விடுங்கள் லட்சுமி.



''தரையில் அதிக அழுக்கில்லை. இந்த பாட்டிலில் இருக்கும் திரவத்தில் ஒரு மூடி தரையில் கொட்டி, மாப்பை வைத்து லேசாகத் தேயுங்கள். கொஞ்சம் நஞ்சமிருக்கும் அழுக்குப் போவதோடு, வாசனையாகவும் இருக்கும்'' என்று கொடுத்தாள்.

பிறகு, லட்சுமிக்கு உதவியாக, ஈரத்துணியைக் கொண்டு வந்து மேசை, நாற்காலி, கதவு, ஜன்னல்களைத் துடைத்தாள் அவள்.

தொடர்ந்து ஒரு வாரம் எல்லோருக்குமே 'நிற்க நேரமின்றி' என்பார்களே, அதுபோல வேலை இருந்து கொண்டே இருந்தது.

ஒரு வார தூய்மைக்குப் பிறகு, வீடு பளிச்சென்று மின்னியது!

கீழே மூன்று, மேலே நான்கு என்று மொத்தம் ஏழு பெரிய படுக்கை அறைகளைக் கொண்ட வீட்டை, தூசு துப்பின்றி தூய்மையாகப் பராமரிக்கவே, ஒரு ஆளுக்கு கிட்டத்தட்ட முழு நாளுமே செலவானது!

பயன்படுத்தாத அறைகளின் கதவு, ஜன்னலைச் சாத்திப் பூட்டி வைத்தார்கள்.

வீட்டின் பின்பக்க நிலத்திற்கு எருவிட்டு மீண்டு மொருமுறை உழுததில், மண்ணும் எருவும் நன்றாகக் கலந்தது.

பல வகையான காய்கறி விதைகளை வாங்கி, பாத்தி கட்டி வைத்திருந்த இடத்தில் நாற்று விட்டார்கள்.

நான்கு நாட்களிலேயே ஒவ்வொரு விதையும், மண்ணிலிருந்து முட்டி மோதிக் கொண்டு முளைத்து வந்தது.

நாற்றங்கால் பாத்திகள் மீது 'சுள்'ளென்ற வெயில் பட்டு, செடிகள் வாடிவிடாதபடி கீற்றுத் தடுக்கை மேலே போட்டு, நல்ல விதமாகப் பராமரித்தான் காசி.

இரவு நேரம். சாப்பாடு சாப்பிட்டு முடித்த பிறகு ஒன்றிரண்டு வழக்கமான வேலைகளையும் முடித்து விட்டு, தன் அறைக்கு வந்த துளசி குளித்து முடித்து விட்டு வெளிக்கதவைத் தாழிட்ட பிறகே, அந்த 'ஆயின்மெண்ட்' டியூப்பைக் கையிலெடுத்தாள்.

டியூப்பைத் திறந்து கொஞ்சம் மருந்தை எடுத்து, பாதங்களில் இருந்த வெடிப்புகளுக்குத் தடவியபோது, இதழ்களில் மென் புன்னகை ஒன்று தோன்றியது துளசிக்கு.

பிறகு கைகளுக்கு, வேறு மருந்தை எடுத்துத் திறந் தாள்.

'கரடு முரடாகி காய்ப்பேறிய கைகள், விரைவில் மென்மையாகி விடும்' என்று பவனன் போனில் சொன் னது ஞாபகம் வந்தது!

பவனேந்திரன் இங்கிருந்து கிளம்பிய இரண்டாவது நாளே, 'கொரியர்' மூலமாக இந்த மருந்துகளை, கிரீமை அனுப்பி வைத்தான்.

கவரைப் பிரித்துப் பார்த்தவளுக்கு முதலில் எதுவுமே புரியவில்லை!

அவனுக்கு போன் செய்தபோது, ''உன் கை, கால்களில் இருக்கும் வெடிப்பு மறைவதற்காக அனுப்பியிருக் கிறேன். தினமும் மறக்காமல் தடவவேண்டும் ராணிம்மா'' என்று கூறினான்.



பூவிதழ்களை அள்ளி மேலே கொட்டியதைப் போல மனம் குளிர்ந்து, மகிழ்ச்சியில் கண்கள் பனித்தது அவளுக்கு!

அன்று கிளம்பியபோது, தன் கையைப் பிடித்து அழுத்தி விட்டுப் போனானே?

அழுத்தமான பிடியாக இருக்கிறதென்று கூட நினைத்தாளே!

அதன் ரகசியம் என்னவென்று இப்போது விளங் கியதைப் போலிருந்தது அவளுக்கு!

அவனுடைய சொல்லுக்கிணங்க தினமும் மறக்காது தடவிய மருந்தினால், வெடிப்புகள் மறையத் தொடங்கி யிருந்தன!

வீட்டின் முன்புறமிருந்த தோட்டத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக சீர்படுத்தியதில், வீட்டின் அழகு மேலும் கூடித் தெரிந்தது.

கார் ஓடுவதற்காக போட்டிருந்த அகலமான செம்மண் பாதையோரம், பெயர்ந்து கிடந்த செங்கல்களைச் சரியாக நட்டு வைத்தார்கள்.

அழகான பெரிய இலை குரோட்டன் செடிகளில், பழுத்திருந்த இலைகளை எடுத்து சுத்தப்படுத்தி விட்டு, நீர் பாய்ச்சி தழைக்கச் செய்தான் காசி.

காசியின் வேலையிலிருந்த நேர்த்தி, செடிகள் அடிபட்டு விடாமல் களையெடுக்கும் பாங்கைப் பார்த்து, உள்ளூர மெச்சினாள் துளசி.

களையெடுக்கும்போது மேலோட்டமாக இல்லாமல், அருகம்புல் கட்டையின் அடியிலிருக்கும் கிழங்குவரை

தோண்டி எடுத்த பிறகே, அடுத்த செடிக்கு களை யெடுக்கச் சென்றான் அவன்!

காசியின் கை வண்ணத்தில், ஒவ்வொரு செடியும் புத்துணர்வு பெற்று செழித்து வளரலானது!

நந்தியா வட்டம்! அடர் பச்சை நிற இலைகளுக்கு நடுவிலே, வெண்ணிற ரோஜாவைப் போல பூத்திருந்து.

புதிதாக வளர்ந்து கொண்டிருந்த புல் தரை மேட்டின் மேல், ஒய்யாரமாக நின்றிருந்த 'இட்லி பூ' செடியில், கொத்துக் கொத்தாகப் பூத்திருந்தது சிவப்பு நிறப் பூக்கள்!

இது மட்டுமின்றி, வர்ணிக்க இயலாத அழகைப் பெற்றிருந்த வண்ண வண்ணப் பூக்களையுடைய சிறிய செடிகளும், மண் தொட்டிகளில் இடம் பெற்றிருந்தன.

ஒரே இடத்தில் கும்பலாகக் கிடந்த தொட்டிச் செடி களை எடுத்து, அளவான இடைவெளி விட்டு செம்மண் பாதையோரம் வைத்தார்கள்.

செய்யும் வேலை மனதிற்குப் பிடித்ததாக இருந்தாலே, அந்த வேலையை முழுமையாக செய்யப்பட்ட பிறகு பார்த்தால், அதிலே ஒரு விதமான அழகு மிளிரும் என்பது உண்மைதான்!

எழில் கோலமாக மாறியிருக்கும் வாழ்க்கையை ரசித்து அனுபவிக்கலானாள் துளசி!

என்னவென்றே தெரியாமல் மெல்லிய நூல் மாதிரி ஏதோ ஒரு வலி மட்டும், அவ்வப்போது மனதினுள் தோன்றி மறைந்தது அவளுக்கு!

அந்த வலியை உணரும் போதெல்லாம், 'உன் மகிழ்ச்சி இன்னும் முழுமையடையவில்லை துளசி' என்பதை உணர்ந்தாள் அவள்.



அந்த ஒரு வலியை மட்டும் என்னவென்று கண்டு பிடித்து நிறைவேற்றி விட்டால், அவள் முழு மகிழ்ச்சி யின் சொந்தக்காரியாகவே ஆகிவிடலாம்!

வீட்டிலிருந்து பத்து நிமிட நடையிலேயே, 'மலை யம்மன்' என்று ஒரு சிறு கோவில் இருந்தது.

வாரத்தில் இரண்டு முறையாவது, மலையம்மன் கோவிலுக்குச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டாள் துளசி.

கோவில் என்றால் பெரிதாகக் கட்டிடம் கட்டி, கலசம் வைத்து, மந்திரம் ஓதி தினமும் முறையாக பூஜை செய்வதல்ல.

நடுத்தர உயர வேப்பமரத்தின் கீழே மரத்தைச் சுற்றி மூன்றடி உயரத்திலே, சதுரமாக திண்ணை போல் கட்டி, நடுவினிலே மரத்தின் கீழ் ஒரு கருங்கல்லை நட்டு வைத்து, திருமஞ்சளும், சிவப்பும் கொட்டி, பூக்கள் தூவி, கற்பூரம் ஏற்றி வணங்கி வந்தார்கள் அப்பகுதியில் வாழ்ந்த மக்கள்.

அதிக நடமாட்டமில்லாத இடத்திலே, எந்தவித சத்தமும் இன்றி மிகவும் அமைதியாக இருந்தது மலை யம்மன் கோவில்.

அங்கே கிடைக்கும் மன அமைதியை அனுபவித்தபடி, நேரம் போவது தெரியாமல் உட்கார்ந்து கொண்டு இருந் திருக்கிறாள் துளசி.

மலைகளைச் சுற்றி ஆங்காங்கே குடியிருப்பு பகுதியில் வசிக்கும் மக்கள் பலரும், மலையம்மனின் பக்தர்களாக இருந்தார்கள்.

அவர்களின் வருமானம் சுற்றியிருந்த தேயிலை எஸ்டேட்டின் வேலையை நம்பியே இருந்தது.

காலையில் சுமார் ஒன்பது மணிக்கு மேல் எஸ்டேட் வேலைக்குச் செல்லுபவர்கள், மாலை ஆறு மணி அளவில் வீடு திரும்பி விடுவதை வழக்கமாகக் கொண் டார்கள்.

அவ்வப்போது காட்டுப் பகுதியிலிருந்து வழி தவ றியோ, உணவு போதாத நிலையிலோ, குடி தண்ணீர் தேடியோ யானைகள் சிலது கூட்டம் சேர்த்துக் கொண்டு, மக்கள் வசிக்கும் பகுதிக்கே கூட வந்து விடுமாம்!

சிறுத்தைப் புலி, முள்ளம் பன்றி கூட ஒரு முறை எஸ்டேட்டில் பதுங்கியிருப்பதைப் பார்த்துவிட்டு, வனத் துறையினர்களை வரவழைத்து காட்டிற்குள் விரட்டி விட்டார்களாம்!

அதனால் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும், இருள் பரவும் முன்பாக வீட்டிற்குக் கிளம்பி விடுவார் களாம்.

வேலை செய்யும்போது ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதை வைத்துத் தெரிந்து கொண்டாள் துளசி.

கனமில்லாத மூங்கில் கூடையை முதுகிலே சுமந்து கொண்டு, இரு கைகளினாலும் கொழுந்துத் தேயிலை களை சுறுசுறுப்பாக பறித்து கூடையிலே போடும் லாவகத்தை, சில நிமிடமாவது நின்று பார்க்காமல் போக முடியாது. அத்தகைய எழில் மிகுந்த காட்சி அது!

எஸ்டேட்டில் வசிக்கும் மக்களுக்குப் பெரிதாக எந்த வசதியும் இருப்பதாகத் துளசிக்குத் தோன்றியதே இல்லை.



சிறிய பெட்டிக் கடைகள் தான், அங்கொன்றும் இங் கொன்றுமாக இருந்தது.

நாள் ஒன்றுக்கு ஓரிரு முறை மட்டுமே வரும் பஸ்ஸில் கூட்டம் பிதுங்கி வழியும். அவளே பார்த்திருக்கிறாளே!

அதுவும், வால்பாறையில் வாரம் ஒரு முறை கூடும் சந்தை நாளின் போது, அங்கே சென்று தேவையான பொருட்களையெல்லாம் வாங்கி மூட்டை கட்டிக் கொண்டு, இடமின்றிப் போனால் பஸ்ஸின் மேல் டாப்பி லேயே கூட உட்கார்ந்து கொண்டு வருவார்கள்.

''ஒரு காய்ச்சல் தலைவலி என்றால் கூட, பிள்ளை களைத் தூக்கிக் கொண்டு வால்பாறைக்குத்தான் ஓட ணும்மா'' என்று லட்சுமி கூட கூறியிருந்தாள்.

இங்கே எவ்வளவு அழகும், அமைதியும் கொட்டிக் கிடக்கிறதோ, அந்தளவிற்கு வசதி, வாய்ப்புகள் குறை வென்பதையும் கண்டாள் துளசி!

எஸ்டேட் மானேஜர், சூப்பர்வைசர்களுக்கு அனைத்து வசதிகளும் கொண்ட வீடு, முதலாளிகளால் கட்டித் தரப்பட்டிருந்தது.

பாக்டரியிலும், தோட்டத்திலும் வேலை செய்யும் தொழிலாளர்கள் சிலர், எஸ்டேட்டிற்குச் சொந்தமான 'லைன்' வீடுகளில் குடியிருந்தார்கள்.

கிட்டத்தட்ட ஒரு மாதத்தில் தங்களுக்கு அருகாமை யில் வசித்தவர்களைப் பற்றி, தேவையான விவரங்களைத் தெரிந்து கொண்டாள் துளசி.

அன்று ஞாயிறு!

வீட்டில் வேலை பார்ப்பவர்களுக்கு விடுமுறை நாள்!

வேலை செய்பவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் பொழுதைக் கழிக்கவும், சொந்த வேலைகள் ஏதாவது இருந்தால் அதைச் செய்யவும் விடுமுறை எடுத்துக் கொண்டார்கள்.

வீட்டில் தனியேயிருப்பது போரடித்தபோதும் கூட, அவர்களின் விடுமுறைக்குத் தடையேதும் கூறவில்லை துளசி.

அவளும் ஒரு அலுவலகத்தில் வேலை செய்தவள் தானே. வாரம் முழுவதும் ஓயாது மிஷின் மாதிரி வேலை செய்து விட்டு, ஒரு நாளாவது ஓய்வில்லையென்றால் மூளை சோர்வடைவதோடு, 'அடச்சீ! என்னடா வாழ்க்கை யிது?' என்ற சலிப்பும் கட்டாயம் தோன்றிவிடும்!

வளர்ந்து வரும் நாடுகளில் வேலை செய்பவர்கள், வார விடுமுறை நாட்களை குடும்பத்தினர், நண்பர்களுடன் செலவிடும்போது, மூளை உற்சாகமடைந்து, மனது திடம் பெறும். மறுவாரத்து வேலைகளை நல்லவிதமாகச் செய்து முடிப்பதோடு, எதிர்பாராது வரும் பிரச்சனைகள், அதிக வேலைகளையும் நல்ல விதமாகவே ஏற்றுச் செய்யுமளவிற்கு, மனதும், மூளையும் தயார் நிலையில் இருக்குமாம்!

வேலை, வேலையென்று அதிலேயே சிக்கித் தவித்து, மன உளைச்சலுக்கு ஆளாகுபவர்களைக் கணக்கெடுத்து, காரணம் கண்டு பிடித்து 'கவுன்சிலிங்'கில் கூறப்படுவது இதுதான்.

**உங்களை நீங்கள் உங்களிடமிருந்து முதலில் காத்துக் கொள்ள வேண்டும்.**

**வேலை, வேலையென்று அதிலேயே அமிழ்ந்து போய் விடக் கூடாது.**



**தினமும் ஒரு ஐந்து நிமிடங்கள் ஒதுக்கி, சத்தமில்லாத இடத்திலே அமர்ந்து, கண்களை மூடிக் கொண்டு ஆழ மூச்சிழுத்து வெளி விடுங்கள்.**

**விடியற்காலை நேரத்தில் இதைச் செய்தால் மனம் வலுவடைந்து, அன்று நடப்பதையெல்லாம் சுலபமாக ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தைப் பெறும்!**

இதை துளசியே முயற்சி செய்து பார்த்து பயனும் அடைந்திருக்கிறாள்!

பாட்டுக் கேட்பது, புத்தகம் வாசிப்பது, ஓவியங்களை ரசிப்பது எல்லாமே மனதை லேசாக்கும் பயிற்சிகள் போலத்தான்!

என்னதான் வேலை முக்கியம், பணம் சம்பாதிக்காமல் எதுவுமே செய்ய முடியாது என்றாலும், அவரவருக்கு குடும்பமும் இருக்கிறதே.

குடும்பம் என்பதே இல்லையென்றாலும் மனிதனுக்கு ஓய்வு அவசியம்தானே?!

மனிதன் ஓடி ஓடி வேலை செய்து சம்பாதிப்ப தெல்லாம் எதற்காக? தனக்கும், தன் குடும்ப நபர்களின் வளமான வாழ்விற்காகவும் தானே!

காலையில் வீட்டை விட்டுக் கிளம்பினால், மாலை யில் வீடு திரும்புவதற்குள் தான் என்னவெல்லாமோ நடந்து விடுகிறதே. மரணம் கூட!

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், தன் பொறுப்பில் வேலை செய்பவர்கள் வாரத்தில் ஒரு முறை, அவரவரின்

குடும்பத்தாருடன் ஒன்றாயிருந்து மகிழும் வாய்ப்பைக் கட்டாயம் அவர்களுக்குக் கொடுப்பது முதலாளிகளின் கடமைதானே!

அப்படியொரு ஞாயிறன்று, வீட்டில் யாருமின்றி போரடிப்பதற்கு பதிலாக, இங்கேயே சற்று நேரம் பொழுதைப் போக்கி விட்டுப் போகலாம் என்று நினைத்துத்தான், வாக்கிங்காக வந்தவள் எப்போதும் போல பாறையின் மீது அமர்ந்தாள்.

கடைசியாக பவனன் எதிரேயமர்ந்து பேசியதெல்லாம் ஒன்று விடாமல் நினைவு வந்தது அவளுக்கு!

அதை நினைத்து தன்னியல்பாக முகம் மலர்ந்தாள் துளசி!

மலர்ச்சியைக் கூட்டுவது போல, "நினைத்தது போலவே ராணியம்மா நகர்வல பவனிக்கு வந்தாயிற்று போலிருக்கிறது" என்று பின்புறமிருந்து கேட்டது ஒரு குரல்.

திடுக்கிடலும், எதிர்பார்ப்புமாகச் சட்டென்று திரும்பினாள் துளசி ராணி!

## 11

'கிட் பேக்'கை தோளில் மாட்டிக் கொண்டு, ஒற்றைக் காலை லேசாக மடக்கி சாய்ந்திருந்த பாறை மீதே வைத்துக் கொண்டு, புன்னகையின் திரு உருவமாக நின்றிருந்தான் பவனேந்திரன்!



என்னவோ ஆண்டாண்டு காலமாகப் பிரிந்திருந்தவனைப் பார்ப்பது போல, பேச்சே எழவில்லை அவளுக்கு!

இது கனவில்லையே!

பவனன் நின்றிருப்பது நிஜம்தானே என்று தன்னையே கேட்டுக் கொண்டு, பாறை மீதிருந்து எழுந்து நின்றாள் துளசி.

"என்ன துளசி. முன் அறிவிப்பின்றி வந்து நிற்கிறேனே என்று திடுக்கிட்டு விட்டாய் போலிருக்கிறது?" என்று கேட்டான்.

"ம்" என்று மெல்லச் சிரித்து, "எப்படியிருக்கிறீர்கள் பவனன்?" என்று கேட்டாள்.

"நிற்கும் தோரணையைப் பார்த்தால் எப்படித் தெரிகிறது அம்மணி. நீ..யே விழி அகலாது பார்க்கிறாய் என்றால், ரொம்பவே 'நன்றாக' உன் கவனத்தைக் கவரக் கூடிய அளவிற்கு நன்றாயிருப்பதாகத்தான் நினைக்கிறேன். சரிதானா?" என்று கேட்டு, வழக்கமான குறும்புன்னகையுடன் 'ஸ்டைலாக' முடியைக் கோதி விட்டான் பவனேந்திரன்.

உறுத்து விழித்தாள் அவள்!

சாதாரணமாகக் கேட்ட சம்பிரதாயக் கேள்விக்கு. என்..னமாக பொருளை மாற்றி பதிலளிக்கிறான். இவனை... விடக்கூடாது!

கண்களை அழகாக மலர்த்தி, "விழி அகலாது பார்க்கிறேனா? உண்மை தான் பவனன். உங்களின் உச்சந்தலையிலே முளைத்திருக்கும் இரண்டு கொம்புகளையும் பார்த்து, என் விழிகள் தானாகவே வியந்து விட்டன!

''இரண்டு கொம்பிலும் கொம்புக்கொரு சலங்கை மணியைக் கட்டி விட்டால், தலையை ஆட்டும் போதெல்லாம் ஜல், ஜல் என்று என்...ன இனிமையாக சத்தம் வரும் தெரியுமா பவன்!

''அடடா! கேட்க இரண்டு காதுகள் போதாது'' என்று சாதுவாகக் கூறி, தன் 'கலீர்' சிரிப்பை அடக்கினாள் துளசி.

இப்போது உண்மையாகவே திடுக்கிட்டுத் திகைத்த வனின் கை, அவனையும் அறியாது தன் தலையைத் தொட்டுப் பார்த்தது!

''பேச்சுத் திறமையில் நொடியில் எதிராளியைத் திணறடிக்கும் உன்னைப் பற்றித் தெரிந்த பிறகும், துணிந்து வம்பிற்கிழுத்தேன் பார் எனக்கு இது தேவை தான். நல்ல வேளையாக கொம்பிற்கு கலர் கலராக பெயிண்ட் அடித்து, ரிப்பன் கட்டாமல் விட்டாயே. அது வரை சந்தோஷம் தாயே'' என்று கூறி, புன்னகை விரிய, இரு கைகளையும் தலைக்கு மேலே தூக்கி, ஒரு கும்பிடு போட்டான் பவனேந்திரன்.

அவன் கூறியதைக் கேட்டு தன்னையும் மீறி சிரித்து விட்டாள் அவள்.

இருவரும் பேசியபடியே வீடு வந்து சேர்ந்தார்கள்.

கேட்டிற்குள் நுழைந்த உடனே, புருவம் மேலேற நாலா பக்கமும் பார்வையை ஓட்டினான் அவன்.

''நல்ல மாற்றங்கள் நிறைய நடந்திருக்கும் போலிருக் கிறதே. குட். வெரி குட்'' என்று மனதாரப் பாராட்டியவன், பாய்ந்து வந்த நாய்களுக்குச் சற்று நேரம் விளையாட்டுக் காட்டி விட்டு வீட்டிற்குள் வந்தான்.



உடையை மாற்றிக் கொண்டு ஷார்ட்ஸ், டீ ஷர்ட்டுடன் கீழே வந்தவனுக்கு, தட்டில் சூடான இட்லியுடன், புதினா, வெங்காயச் சட்னியை வைத்துக் கொடுத்தாள் துளசி.

சாப்பிட்டு முடித்ததும் இருவருமாகச் சேர்ந்து, டைனிங் டேபிளை ஒதுக்கித் துடைத்து விட்டார்கள்.

பயண அலுப்பில் சற்று நேரம் சோபாவில் சாய்ந் திருந்தவன். ஏதோ நினைவு வந்தவனாக தன் 'கிட் பேக்'கில் இருந்து ஒரு பிளாஸ்டிக் டப்பாவை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

"என்ன இது?"

''வெள்ளி இறால். சமைக்கத் தகுந்த மாதிரி சுத்தப் படுத்தியது. இது ரெசிபி புக்'' என்று கொடுத்தான்.

'எதையாவது செய்கிறேன் என்று சொன்னால், இவன் லேசில் மறக்க மாட்டான் போலிருக்கிறதே' என்று உள்ளூர வியந்து விட்டு, இறாலைச் சமைத்தாள் துளசி.

அரை மணி நேரத்திற்கும் மேலாக, வீட்டின் பின் பக்கத் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தவன், ''வீட்டோடு அதைச் சுற்றியிருக்கிற இடத்தையும் பிரமாத மாக மாற்றியிருக்கிறீர்கள் துளசி. உனக்கு நல்ல வேலை யாட்கள் தான் கிடைத்திருக்கிறார்கள்'' என்று மெச்சி னான்.

''எனக்கு அல்ல, உங்களுக்கு. நானும் அவர்களில் ஒருத்தி தானே'' என்று கூறியபடி, சமைத்ததை எடுத்து வந்து டைனிங் டேபிளில் வைத்து மூடினாள்.

''நீ கொஞ்சம் மேல்தான். அவர்களுக்குச் சம்பளம் தருகிறாய் பார்.'' என்றவன், ''ஹே..ய் துளசி. உனக்குச்

சம்பளம் பற்றி நான் சொல்லவேயில்லையே. ம். உன் சம்பளம் ஐந்தாயிரம்'' என்று கூறினான்.

பீங்கான் தட்டுகளையெல்லாம் துடைத்து அடுக்கியவளின் கைகள், சில கணம் அப்படியே நின்று விட்டன!

அவளுக்கு நிறைய சலுகைகள் கொடுத்து, ஆரம்பத்திலேயே கொடுக்கும் சம்பளம் சற்று அதிகம் தானோ?

இதற்கு முன்பு, மூன்றாயிரத்திற்கு முதுகு ஒடிய பத்திலிருந்து ஆறு மணி வரை, ஓயாது வேலை செய்தது நினைவு வந்தது அவளுக்கு!

ஐந்தாயிரத்திற்கு உரிய வேலை அவளுக்கிருக்கிறதா? சந்தேகம் தான்.

சிறு முறுவலுடன் இறால் கிரேவியைச் சுவைத்தவன், ''இதை இப்போதுதான் முதல் தடவையாக நீ சமைக்கிறாய் என்று சொன்னால், யாரும் நம்ப மாட்டார்கள் துளசி'' என்றான்.

அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவன் கண்களில் தெரிந்த மின்னல் அவளுக்கு ஏதோ எச்சரிக்கை செய்ய, ஒரு கணம் நிதானித்தவள், ''ஆ..மாம். சாப்பிட்டுப் பார்த்து, 'தொப்'பென்று மயங்கி விழுந்த பிறகு தான் நம்புவார்கள்'' என்றாள் உதட்டில் குறும் புன்னகை தவழ.

இந்தப் பதிலை எதிர்பார்த்தவனாக அவன் முறுவல் விரிவடைந்தது.

புன்னகை தவழும் அவள் முகத்தை நோக்கினான் பவனேந்திரன்.



எவ்...வளவு நகைச்சுவை உணர்வு கொண்ட பெண் இவள்!

நொடிப்பொழுதில் புரிந்து கொள்வதோடு, வாரி விடவும் தவறுவதில்லையே!

இயல்பிலேயே ரசனையுடைய ஒருத்தியால் தான் தானும் சிரித்து, மற்றவர்களையும் சிரிக்க வைக்க முடியும்!

அவன் பழகிய, அறிந்த பெண்களிலே இவள் மாறுபட்டவள் தான்!

நாளின் பெரும்பகுதி நேரத்தைக் கண்ணாடி முன்பாக நின்று தன்னை அழகு படுத்திக் கொள்ளவும், மீதி நேரத்தை அப்படி அழகு படுத்திக் கொள்ளத் தேவையான பொருட்களை வாங்குவதற்காகவும், செலவிடுகிற பெண்களைத்தான் அவனுக்கு அதிகம் தெரியும்!

துளசி தன் அழகை மெருகேற்ற பெரிதாக சிரத்தை எடுத்துக் கொள்வதில்லை என்பது, அவன் அறிந்த விஷயம் தான்!

உள்ளூர ஏதோ உந்தித்தள்ள அவளை அளவெடுத்தவன்,

''கைகள், கால்களில் இருந்த வெடிப்புகள் மறைந்து, மிருதுவாகி விட்டது போலிருக்கிறதே'' என்றான்.

''வெடிப்பு மறைந்து விட்டதைப் பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம் தான். ஆனால் தொட்டுப் பாராமல் எப்படி மிருதுவாகி விட்டதாகக் கூற முடியும்'' என்பது போல் பார்த்தாள் அவள்.

''பழக்க தோஷத்தில் கற்றுக் கொண்டது பெண்ணே'' என மெல்லக் கூறி கண் சிமிட்டினான் அவன்.

தன் முகச்சிவப்பை மறைக்க, செலவுக் கணக்கு எடுத்து வரும் சாக்கில் எழுந்து சென்றாள் அவள்.

இரண்டு நிமிடத்தில் திரும்பி வந்தவள், ''இதைக் கொஞ்சம் பார்த்து விடுகிறீர்களா பவனன்?'' என்று நோட்டை அவனிடம் கொடுத்தாள்.

''ரெஸ்ட் எடுக்க வந்த இடத்தில் கூட வேலை வாங்குகிறாயே'' என்றுவிட்டு, பக்கங்களை வேகமாகத் திருப்பினான் அவன்.

கால்குலேட்டரைப் பயன்படுத்தாமல், விரல்களைக் கொண்டே அவன் கணக்குப் பார்த்த வேகத்தைக் கண்டு, உள்ளூர வியந்தாள் அவள்!

அத்...தனை வேகம் அதில்!

பார்த்து விட்டதற்கு அடையாளமாக முதலும், முடிவும் கண்டு பிடிக்க முடியாதபடி கையெழுத்துப் போட்டான் பவனன்.

நோட்டை வாங்கிக் கொண்டு, கையில் வைத்திருந்த பணம் மூன்றாயிரத்தை அவனிடம் நீட்டினாள்.

''எதற்கு இது?''

''இதுவரை எனக்காக நீங்கள் செலவு செய்திருக்கும் பணம். என் சம்பளத்திலிருந்து கொடுப்பதாகச் சொன்னேனே.''

புருவம் தூக்கிப் பார்த்த போதும், மறுக்காமல் வாங்கிக் கொண்டான் அவன்.

நாட்கள், 'சாரட்' வண்டியில் பூட்டப்பட்ட குதிரைகள் போல அதிவேகமாகச் சென்றன!

நாற்றங்காலிலே பயிராகிக் கிடந்த தக்காளி, மிளகாய், கத்திரிச் செடிகளைப் பிடுங்கியெடுத்து, தயார்படுத்தி



வைத்திருந்த இடத்திலே நட்டு வைக்க, அவையெல்லாம் இப்போது பூவும், பிஞ்சுமாகச் செழித்து நின்றன!

முள்ளங்கி, வெங்காயம், காலி ஃபிளவர், கேரட் விதைகளையும் ஊன்றிவிட, அவைகளும் பலன் தரும் பருவத்திற்கு வந்திருந்தன!

துளசி துவைத்த துணிகளை அலசிக் கொண்டிருந்த போது, ''அக்கா சிவப்பு கலர் இங்க் இருந்தா கொஞ்சம் தர்றீங்களா? நோட்டுல கேள்வி எழுதறதுக்கு வேண்டும்'' என்று கேட்டவாறு வந்து நின்றாள், காசி - லட்சுமியின் மூத்த மகள் செம்பருத்தி.

''தருகிறேன்'' என்றுவிட்டு துணிகளை உலர்த்தியவள், பக்கெட்டைக் கழுவி, கவிழ்த்து வைத்து விட்டு முன்னே நடந்தாள்.

''துணி சோப்பை மறந்துட்டீங்க அக்கா'' என்று கூறி அதை எடுத்துக் கொண்டு ஓடி வந்தாள், ஒன்பது வயது செம்பருத்தி.

சோப்பை உரிய இடத்தில் வைத்துவிட்டு, ஹாலில் வந்து நின்றாள் சிறுமி.

அறையிலிருந்து வெளிவந்த துளசியின் கையில், 'ஆப்பிள் சைஸில்' ஒரு இங்க் பாட்டில் இருந்தது.

பாதி பாட்டிலுக்கு மேல் இருந்த ரோஜா வண்ண இங்கைப் பார்த்து, 'ஐய்' என்று எகிறி குதித்து, ''இந்தக் கலர் ரொம்...ப நல்லாயிருக்குக்கா. இந்தக் கலர் இங்கையே நான் இப்பதான் பார்க்கிறேன்'' என்று கூறி, சிரித்துக் கொண்டே தன் பேனாவைக் கழற்றினாள் சிறுமி.

அத்தனை பல்லும் தெரியச் சிரித்தபடி, தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய சிறுமியின் முகத்திற்கு ஈடாக,

உலகில் உள்ள எந்தப் பூவையும் கூட ஒப்பிட முடியா தென்று நினைத்தாள் துளசி.

சிறுவர்களின் கள்ளங் கபடமில்லாத அருகாமை எல்லோருக்கும் எளிதாக வாய்த்து விடுவதில்லை தான்.

மனம் என்ன மாதிரியான வேதனையில் இருந்தாலும், கண்ணெதிரே பிள்ளைகள் ஓடி விளையாடி, சத்தமிட்டுச் சிரிப்பதைப் பார்க்கும்போது அவையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக காணாமல் போய் விடுவதை அனுபவித்த வர்கள் மட்டுமே அறிவார்கள்!

தம்பி ராஜாவின் நினைவு வருத்தும்போதெல்லாம், இந்த மூன்று பிள்ளைகளும் விளையாடுவதைப் பார்த்துத்தான், மனதைச் சமாதானப்படுத்த முயலுவாள் துளசி.

அவளின் தனிமையைப் போக்குவதில், இந்தக் குழந் தைகள் பெரும்பங்கு வகிக்கிறார்கள் என்றே சொல்ல லாம்.

இதற்காக அவள் பவனனுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்!

சென்னையிலிருந்து திரும்பி வந்த ஒரே வாரத்தில், "இரவில் பறவைகளின் சத்தம் பயங்கரமாகக் கேட்கிறதே துளசி. அப்போதெல்லாம் லைட்டைப் போட்டு விட்டு எதையாவது படிக்க ஆரம்பித்து விடுகிறாய் போலி ருக்கிறது? முன்பு தனியாக இருந்தபோது பயமாக இருந் திருக்குமே.

''அப்போதே என்னிடம் சொல்லியிருந்தால் ஏதாவது ஏற்பாடு செய்திருப்பேனே. ஏன் சொல்லவில்லை துளசி?'' என சிறு கடுமையுடனே கேட்டான்.



இந்தக் கடுமைக்குப் பின்னேயிருப்பது, அக்கறை மட்டுமா அல்லது அன்புமா?

சொல்லியிருந்தால் மட்டும், இவனால் அப்படியென்ன ஏற்பாடு செய்திருக்க முடியுமென்று யோசனை ஓடியது அவளுக்கு!

முடியும் என்பதை இரண்டே நாட்களில் செய்து காட்டினான் அவன்!

காசியை அழைத்து, ''தோட்டத்து ஓட்டு வீட்டிற்குக் குடிவர உங்களுக்குச் சம்மதமா? வீட்டில் கலந்து பேசி விட்டுச் சொல்லுங்கள்'' என்றான் முதலாளியாக.

ஓட்டு வீட்டைச் சுத்தப்படுத்தச் சொல்வதாகச் சொன்ன லட்சுமிக்கு ரொம்ப சந்தோஷம்.

''கூரை வீட்டிற்கே மாதம் ஆறு நூறு வாடகைம்மா. மழை வந்தால் ஒழுகி வீடே சதசதவென்றாகி விடும். பிள்ளைகளை வைத்துக் கொண்டு கஷ்டமாக இருந்தது. கூரையை வேய்ந்து தரச் சான்னால் ஓனர் காதிலேயே போட்டுக் கொள்வதில்லை. ஆனால் இங்கே எல்லா வசதியோடும் இருக்கிறது ஓட்டு வீடு!

''நான் போய் சுத்தப்படுத்திவிட்டு வருகிறேன்மா. நாளைக்கு புதன்கிழமை நல்ல நாள். பால் காய்ச்சிட லாம்னு என் வீட்டுக்காரர் சொன்னாரு'' என்று தகவல் தெரிவித்துவிட்டு, ஒரு வீட்டை நோக்கி விடுவிடு வென்று வேகமாகச் சென்றாள் லட்சுமி.

ஹப்..பா! என்று நிம்மதியோடு பெருமூச்சு விட்ட போது, எதேச்சையாக அந்தப் பக்கம் வந்த பவனன், தன் வழக்கமான குறும் புன்னகையை வெளிப்படுத்தி விட்டுச் சென்றான்.

'வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டேன் பார்த்தாயா?' என்றது அப்புன்னகை!

# 12

அன்றிலிருந்து இன்று வரை துளசிக்கு நல்ல பொழுது போக்கு கிடைத்தது.

ஒன்பது, ஆறு வயதில் இரண்டு பெண் மகவுகளும், மூன்று வயதில் ஒரு ஆண் மகனும் கொண்ட அக் குடும்பம் ஒட்டு வீட்டிற்குக் குடிவந்ததில் இருந்து, பிள்ளைகள் பள்ளிக்குச் சென்ற நேரம் போக, சிரிப்பு, சண்டை, விளையாட்டென்று அந்த வீடே கலகல வென்று சோபித்திருக்கும்!

வீட்டுப் பாடங்கள் முடிந்த பிறகு, பெற்றோர்களிடம் அனுமதி வாங்கிக் கொண்டு, டீ.வி. பார்க்க இரண்டு பெண் பிள்ளைகளும் ஓடி வந்து விடுவார்கள்.

''தினமும் இவங்களுக்கு என்னாம்மா டீ.வி. வேண்டியிருக்கு'' என்று, சற்று நேரத்திலேயே அழைத்துப் போக வந்து விடுவாள் லட்சுமி.

''விடுங்கள் லட்சுமி. நன்றாகப் படிக்கிற பிள்ளைகள் தானே. படிப்பில் பின் தாங்கினால் மட்டும் கண்டியுங்கள். இன்றைக்கு டீ.வி. மூலம் எவ்வளவோ நல்ல விஷயங்களைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள முடிகிறது. வளரும் பிள்ளைகளுக்கு விஷயம் தெரிந்



திருப்பது அவசியம் தானே?'' என்று தங்களுக்கு சப்போர்ட் செய்யும் துளசியோ, சிறுமிகளின் கண்களுக்குத் தேவதையாகிப் போனாள்!

துளசி ஒரு வேலை சொன்னால், கனசிரத்தையோடு செய்து முடிப்பார்கள் செம்பருத்தியும், தாமரையும்!

தினமும் வேலை செய்து வாழ்க்கை நடத்தும் சாதாரணக் குடும்பமாக இருந்த போதும், பிள்ளைகளை அன்போடும், பண்போடும், பொறுப்புள்ளவர்களாகவும் வளர்த்தார்கள் லட்சுமி - காசி தம்பதியினர்.

மூன்று பிள்ளைகளையுமே, அழுக்கான துணிகளோடோ, பரட்டையான தலை முடியுடனோ, ஒரு நாளும் பார்த்ததில்லை துளசி!

குளிக்க வைத்து சுத்தமான பள்ளிச் சீருடை அணிவித்து, எண்ணெய் வைத்து தலைமுடியைப் படிய வாரி, பவுடர் அடித்து பொட்டு வைத்துக் கொண்டு, புத்தகப் பையைச் சுமந்தபடி பள்ளிக்குச் செல்லும் மகள்களை கையசைத்து அனுப்பி வைத்துவிட்டு, மகள்கள் பள்ளிக்குச் செல்லும் அழகை, ஆசை தீரச் சற்று நேரம் நின்று பார்த்த பிறகே, திரும்பிச் செல்லும் லட்சுமி மீது மரியாதை கூடியது துளசிக்கு!

அவசரம், அவசரம் என்று ஓடிக் கொண்டே இருக்கும் இன்றைய உலகில், முதலில் பெற்றோரை வேலைக்கு அனுப்பி விட்டுப் பிறகு, தாங்களாகவே கிளம்பிச் செல்லும் நிறைய பிள்ளைகளுக்கு மத்தியில், செம்பருத்தி, தாமரை அதிர்ஷ்டசாலிகள் என்றே தோன்றியது!

பணம்! மிகவும் அத்தியாவசியமானது பணம்!

அதைச் சம்பாதிக்க மனிதன் இன்று எதையெல்லாம் இழந்து கொண்டிருக்கிறான்! பெற்ற பிள்ளைகள்!

யாருக்காக ஓய்வின்றிக்கூட சம்பாதிக்கிறார்களோ, அவர்களுடன் கொஞ்ச நேரம் ஒதுக்கிப்பேச, எத்தனைப் பேரால் முடிகிறது? அல்லது நினைக்கிறார்கள்?

கேட்டால் நேரமில்லை. அவர்களுக்காகத்தானே எல்லாம் செய்கிறோம் என்ற பதில்!

விலை மதிப்பே இல்லாத அன்பு கூட, இந்த அவசர உலகில் அலட்சியப்படுத்தப்பட்டு வருவது இயல்பாகிக் கொண்டு வருகிறது தானே!

எல்.கே.ஜி.யிலே குழந்தைகளை ஹாஸ்டலில் சேர்க்கத் தயங்காத பெற்றோர்கள்!

வயதான பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் சேர்க்கிற பிள்ளைகள்!

'எதை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது மனித சமுதாயம்? ஓடுவதை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்க்கும் போது, அங்கே நம்மவர்கள் என்று சொல்ல யாருமின்றி, காலம் கடந்திருப்பது தான் மிஞ்சுமோ?

'தலைக்கு மேலேயிருக்கும் கூரையிலே தீ வைத்திருப்பதை உணராமல், வீட்டிற்குள் சென்று தாழிட்டுக் கொண்டு, எங்கள் குடும்பம் பாதுகாப்பாகத்தான் இருக்கிறது. அதற்கு எந்தக் கஷ்டமும் வராது என்று நினைத்துக் கொள்வது எவ்வளவு பெரிய புத்தி சாலித்தனம்!'

பெரும்பாலானோரின் வாழ்க்கை இப்படித்தான் சென்று கொண்டிருக்கிறது என்று பெருமூச்சு விட்டாள் துளசி.



''அப்பப்பா! உன் பெருமூச்சில் அனல் வீசுகிறதே. அப்படி எதைப் போட்டு வறுத்தெடுத்துக் கொண்டிருக்கிறாய்?'' என கிண்டலாகக் கேட்டு, படித்துக் கொண்டிருந்த 'பிசினஸ் லைன்' பேப்பரை மடித்து, எதிரேயிருந்த வட்டக் கண்ணாடி டீபாயின் கீழ் தட்டிலே வைத்தான் பவனேந்திரன்.

''இது குடும்ப வாழ்க்கை சம்பந்தமானது. உங்களுக்குப் புரியாது'' என்று உதடு வளைத்துக் கூறி விட்டு, அவனுக்குப் பிடித்த மாதிரி முந்திரி வறுவலில் பெப்பர், சால்ட் தூவிக் கொண்டு வந்து டீபாய் மேல் வைத்தாள் துளசி.

இரண்டு முந்திரியை எடுத்துக் கடித்தவன், ''அப்படி என்னம்மா குடும்ப வாழ்க்கையை அதுவும் எனக்குப் புரியா...த குடும்ப வாழ்க்கையை நீ புரிந்து கொண்டாய்? கொஞ்சம் விளக்...கமாகச் சொன்னால் எனக்கும் புரிந்து விட்டுப் போகிறது'' என்று கிண்டலைத் தொடர்ந்தான் அவன்.

ஒரு மாதிரிப் பார்த்தாள் அவள்.

''முறைக்காதே துளசி. சும்மா போனால் போகிறது என்று தான் சொல்லிப் பாரேன்'' என்றான்.

''வசதி, வாய்ப்புகளைத் தேடி ஓடுவதில், அன்பான குடும்பத்தை இழந்து கொண்டிருக்கும் மனிதர்களைப் பற்றி நினைத்தேன். டீ.வி.யிலும் கூட இதைப்பற்றி விவாதிக்க ஆரம்பித்து விட்டார்களே'' என்றாள்.

''யாரும் ஆசைப்பட்டு வாழ்வை இழப்பதில்லையே துளசி. சூழ்நிலைகள் மாறிப்போயிற்று. ஒரு காலத்தில் ஒரு ரூபாய்க்கு பை நிறைய மளிகைச் சாமான்கள்

வாங்குவார்களாம். இன்றைக்கு நூறு ரூபாய் இருந்தால் தான், சிறிய குடும்பமே ஒரு நாளை ஓட்ட முடியும்.

''லைப் ஸ்டைல்' முழுக்க மாறிக் கொண்டிருக் கும்போது, யாரைப் பிடித்து நிறுத்தி வைக்க முடியும்?

''மாற்றத்தின் உச்சமாக கல்வி வியாபாரமாகி வருடக் கணக்காகிறது.

''அரசாங்கம் கல்விக்காக கோடிக்கணக்கில் செலவழித் துக் கொண்டிருக்க, பிள்ளைகளை அரசுப் பள்ளியில் படிக்க வைப்பதை, கௌரவக் குறைச்சலாக நினைப்ப வர்கள் அதிகமாகி விட்டார்கள்.

''அரசுப் பள்ளியில் படிப்பது ஒரு அருமையான அனுபவம் துளசி. அதைப் பற்றி நினைத்துப் பார்ப்பதே ஒரு சுகம். டென்த் வரைக்கும் அந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்ததற்கு, என் அம்மாவிற்குத் தான் நான் நன்றி சொல்ல வேண்டும்'' என்று அனுபவச் சிரிப்புடன் கூறினான் அவன்.

இந்த செய்தி அவளுக்கு வியப்பைக் கொடுத்தது!

''நன்றாக படிக்கிற பிள்ளை, எங்கே படிக்க வைத் தாலும் நன்றாகத்தான் படிக்கும்.

''முட்டை மார்க் வாங்கினாலும், அதைத் தனியார் பள்ளியில் படித்து வாங்கினால்தான் பரவாயில்லை என்கிறார்கள். அதற்கு பீஸ் கட்ட ஓடி ஓடி சம்பாதித் துத்தானே ஆக வேண்டும்?

''உன்னைப் போல் சிலர் வருந்துவதால், பெரிதாக எதுவும் மாறிவிடப் போவதில்லை துளசி.



''அடுத்தக் கட்ட முன்னேற்றத்தை நோக்கி ஓடும் போது, நியாயம், நேர்மை, மனிதாபிமானம் பார்த்துக் கொண்டிருப்பவன் எல்லாம் காணாமல் போய் விடு கிறான்!

''இதைச் சொல்வதற்காக என் மீது நீ கோபம் கூட படலாம். இன்றைய பெண்கள் பல விஷயங்களை, சர்வ சாதாரணமென நினைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

''அட இது தானே என்ற அலட்சியம் கூடிவிட்டது!'' என்றான்.

''எல்லோரையும் அப்படிச் சொல்ல முடியாது பவனன்'' என்றாள்.

''நிச்சயமாக முடியாதுதான். ஆனால் எதையும் நியாயப்படுத்திப் பேச பல பெண்கள் தயாராகி விட் டார்கள் துளசி'' என்றான் உறுதியாக.

உண்மைதான். அவள் சித்தியே ஒரு உதாரணம் தானே. பணம், வசதிக்காகத்தானே துணிந்து தன் வாழ்வை நாசமாக்க நினைத்தார்கள். சிறு உறுத்தலும் இன்றி!

பவனின் கூற்றை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டி யிருந்தது!

''கொஞ்சம் கடுமையான விஷயங்களாகப் பேசி விட்டோம் போலிருக்கிறது. தலை வலிக்கிறதே, ஒரு டீ கிடைக்குமா துளசி'' என்றான்.

''இதோ கொண்டு வருகிறேன்'' என்று எழுந்து சென்றாள் அவள்.

நாட்கள் ஓடிச் செல்ல, இடையே ஒருமுறை சென் னைக்குச் சென்று, ஒரு வாரம் கழித்துத் திரும்பி வந்தான் அவன்.

''நான் ஷாப்பிங் பண்ண கோவை வரைக்கும் போகி றேன் துளசி. நீ வந்ததிலிருந்து இங்கேயே அடைந்து கிடக்கிறாயே. போரடிக்கவில்லையா?

''ஒரு மாற்றத்திற்காகவாவது என்னுடன் வருகிறாயா?'' என்றழைத்தான்.

அவளுக்கும் கூட சில பல பொருட்கள் வாங்க வேண்டி யிருக்கிறது தான். போய் வரலாமே என்று தோன்ற, அவனுடன் கிளம்பினாள் துளசி.

காரை அவனே ஓட்டிக் கொண்டு வந்தான்.

அந்த நீளமான காரை கொண்டை ஊசி வளைவுகளில், மிக லாவகமாக அவன் ஓட்டியதாலோ என்னவோ அவளுக்கு பயமேயில்லை!

காரின் சொகுசை விட சி.டி.யில் ஒலித்த, 'தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே' பாடலைத் தொடர்ந்து ஒலித்த, பழைய பாடல்கள் தான் சிறு வியப்பைக் கொடுத்தது!

ஸ்டியரிங் வீலில் தாளமிட்டபடி, சுத்தத்தைக் கொஞ்சம் கூட்டினான் அவன்.

''இது மாதிரி பழைய பாடல்களைப் போடுவீர்கள் என்று நான் நினைக்கவில்லை'' என்றாள் முறுவலுடன்.

''முன்பெல்லாம் அம்மாவுடன் வெளியே போகும் போது, இது மாதிரி பழைய பாடல்களைத்தான் போடச் சொல்வார்கள். சின்ன வயதில் நானும், யவனா - என் தங்கையும் காதை அடைத்துக் கொள்வோம்.

''அம்மா சிரித்துக் கொண்டே எங்கள் கன்னத்தில் லேசாகத் தட்டி விட்டு, இதே பாடல்களைத் தேடிப்



பிடித்து வாங்கி, நீங்கள் கேட்கிற காலம் ஒன்று வரும். அப்போது பார்த்துக் கொள்கிறேன் உங்களை என்பார்கள்.

''இந்த அம்மாக்கள் சிலர் தீர்க்கதரிசிகள் மாதிரி துளசி. சில விஷயங்கள் தவிர, தன் பிள்ளைகள் எதிர்காலத்தில் எப்படி வாழப் போகிறார்கள் என்பதை முன் கூட்டியே அறிந்து கொள்கிறார்கள். கிரேட்!'' என்றான்.

''அப்படி உங்கள் அம்மா உங்களைப் பற்றி முன் கூட்டியே அறிந்தது, எதுவெல்லாம் இப்போது நடந் திருக்கிறது?'' என்று சுவாரஸ்யமான குரலில் கேட்டாள் துளசி.

''என் பிடிவாதம்! என் கோபத்தை நான் வெளிப் படுத்துகிற விதம் எல்லாம் சற்று வித்தியாசமாக இருக்கும் துளசி.

''எனக்குப் பிடிக்காத விஷயத்தை அம்மா உட்பட யாராலும் செய்ய வைக்க முடியாது!

''இவ்வளவு பிடிவாதம் குடும்பத்திற்கு நல்லதல்லடா மாற்றிக் கொள்ள முயற்சி செய் என்பார்கள்.

''படிக்கிற காலத்திலேயே அம்மாவிற்கு பிசினஸில் அவ்வப்போது உதவுவேன். ஐடியா சொல்லுவேன்.

''ஒரு ரூபாயை பத்தாக்குகிற மூளைடா உனக்கு. நினைத்ததைச் சாதிக்க எவ்வளவு உழைக்கவும் தயங்க மாட்டாய்! இப்படி நிறையவே சொல்லியிருக்கிறார்கள்.

''ஒவ்வொன்றும் நடக்கும்போது, அவர்கள் ஞாபகம்தான் முன்னால் வந்து நிற்கும்'' என்று ஒரு பெருமூச்சை வெளிப்படுத்தியவன் தொடர்ந்து,

''நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள் மாதிரி தான் துளசி. ரொம்ப ஜாலியாக பேசிக் கொள்வோம். நமக்

கிடையே ஏதோ பெரிய இடைவெளி வந்துவிடும்போல, மனது உறுத்திக் கொண்டே இருக்கிறதுடா பவன் என்றார்கள்.

''அப்போது, அம்மா சொன்னது நடக்குமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

''ஆனால், அதுவும் நடந்தது'' என்றான், ஒரு கொண்டையூசி வளைவிலே வேகத்தைக் குறைத்தபடி.

விழிகளை விரித்தாள் அவள்!

''நானும், அம்மாவும் பேசி மூன்று வருடங்களாகி விட்டது. என் நடவடிக்கைகளினால் அவர்களுக்கு மனஸ்தாபம். அவர்கள் சொன்ன சில விஷயங்களுக்கு நான் ஒத்துக் கொள்ளாததால் இடைவெளி மேலும் அதிகமாகி விட்டது.

''பல சந்தர்ப்பத்தில் பேச முயற்சித்தேன். திரும்பியும் பாராது சென்று விட்டார்கள்.

''யவனாவிற்குக் கூட இந்த விஷயத்தில் உள்ளூர என் மீது வருத்தம் தான். ஆனால் அவள் வெளியே காட்டிக் கொள்வதில்லை'' என்றான் சிறு வருத்தமான முறுவலுடன்.

இவன் முகத்திற்குப் பொருந்தாத முறுவல் இது என்று தோன்றியது துளசிக்கு!

''ஜாலியாக ஷாப்பிங் போகலாம் வா என்று விட்டு, உன்னை போரடித்து விட்டேனா துளசி'' என்றான்.

''அப்படியில்லை பவன்'' என்றவளுக்கு, ஆண்டுக் கணக்கில் மகனுடன் பேசாதிருக்கும் அளவிற்கு, ஒரு தாய்க்கு அப்படியென்ன கோபமிருக்கும்? என்ன



காரணத்தினால் பேசாதிருக்கிறார்கள்?' என்று கேட்க தயக்கமாக இருந்தது.

இவன் தான் வேற்றுமை பாராது பேசுகிறானே என்பதற்காக, சொந்த விஷயத்தில் நுழைவது நாகரீகமல்ல!

பொதுவாகவே மற்றவர்களின் விஷயம் பற்றிப் பேசுவதில் எப்போதுமே நாட்டமில்லாதவள் என்பதால், மேற்கொண்டு எதுவும் பேசாமல் வெளியே வேடிக்கை பார்க்கலானாள் துளசி.

வால்பாறைக்கு வந்தபோது, அவனுடைய செல்போன் அழைக்க, ஆன் பண்ணிவிட்டு, ''ஹலோ நலமா யவனா? வீட்டில் அனைவரும் நலமா? என் மருமகன் எப்படியிருக்கிறான்?'' என்று உற்சாகமுடன் பேசினான்.

''நாங்கள் எல்லோரும் நலம். நீ எப்படிண்ணா இருக்கிறாய்?''

''ம். பரம சுகம் தங்கையே. திடீரென்று என் ஞாபகம் கூட வந்திருக்கிறதே! ஏதாவது விஷயமா?''

''ரொம்ப வாராதேண்ணா'' என்று சிணுங்கினாள் தங்கை.

''உண்மையைச் சொன்னால் வாருகிறேனா?'' என்று சிரித்துவிட்டு, ''சரி என்ன விஷயமென்று சொல்லும்மா?'' என்றான் பவனேந்திரன்.

''உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும். தனியாக இருக்கிறாயா? இல்லை...'' என்று இழுத்தாள் தங்கை.

''தனியாக இல்லை. கூட ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு, ஷாப்பிங் போய்க் கொண்டிருக்கிறேன்'' என்று அவன் முடிப்பதற்குள் இடையிட்டு,

''நீ இன்னமும் திருந்தவேயில்லையா? உன்னிடம் பேச நினைத்ததே மகா தப்பு சாமி. நான் வைத்து விடுகிறேன்'' என்று படபடத்துவிட்டுத் தொடர்பைத் துண்டிக்க முயன்றாள் யவனா.

''ஹே...ய் யவனா! இப்போது கூட இருப்பது நீ நினைக்கிற மாதிரி பெண்ணல்ல. சொல்ல வந்ததைச் சொல்'' என்றான்.

அந்த வார்த்தையில் சமாதானம் ஆனவளாக, ''இப் போதெல்லாம் நீ ஆபீஸிற்கு அடிக்கடி வருவதில்லை யாமே. இரண்டு, மூன்று மாதத்திற்குக் கூட காணாமல் போய் விடுகிறாயாம்? என்ன விஷயமென்று உண் மையைச் சொல்'' என்றாள் தங்கை.

சிறு முறுவலை வெளிப்படுத்தி, ''பெரிய சி.ஐ.டி. வேலையெல்லாம் செய்திருக்கிறாய் போலிருக்கிறது?'' என்று கிண்டலாகக் கேட்டான் அண்ணன்.

''என்ன பிரயோஜனம்? உருப்படியாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லையே. உன் வலது கை மிஸ்டர். மூர்த் திக்குத் தெரியும் தானே? ஆனால், தனக்குத் தெரியா தென்று ஒரே வார்த்தையில் நிற்கிறார்.

''இன்றிலிருந்து இத்தனை நாள் வரமாட்டேன் என்று மட்டும் தான் தெரிவிப்பார் மேடம். மேற்கொண்டு எதுவும் சொல்வதுமில்லை, கேட்பதுமில்லை என்று கூலாகச் சொல்கிறார்'' என்று ஆதங்கமுடன் பேசினாள் யவனா.

''உண்மையாகவே மிஸ்டர். மூர்த்திக்கு எதுவும் தெரியாதும்மா. பர்சனல் பற்றி இதுவரை அவரிடம் நான் பேசியதேயில்லை. அவர் சும்மா விளையாட்டிற்காகக் கூட



பொய் சொல்ல மாட்டார் யவனா. இனி அவரைத் தொந்திரவு செய்யாதே'' என்றான் பவனன்.

''உன் வலது கையை விட்டுத் தருவாயா என்ன? சரி நான் யாரையும் தொந்திரவு செய்யவில்லை. எங்கேயிருக் கிறாய் என்று நீயே சொல்லி விடு'' என்று சாதுவாகக் கேட்டாள் தங்கை.

''ம். ஒரு பேப்பரும், பேனாவும் எடுத்துக் கொள். சொல்லச் சொல்ல எழுதுவதற்கு வசதியாக இருக்கும். போக்கிரி. உதைபடப் போகிறாய் நீ'' என்று செல்லமாகக் கடிந்தான் பவனன்.

''பார்க்கிறேன். பார்க்கிறேன். எத்தனை நாளைக்கு இப்படிக் கண்ணாமூச்சி ஆட்டம் காட்டப் போகிறாய் என்று. திருமணத்திற்குப் பிறகு, என் அண்ணியிடம் வசமாக மாட்டப் போகிறாய் நீ'' என்று சிரித்தாள் யவனா.

''அதனால்தான் இப்போதைக்குத் திருமணம் என்ற கூண்டிற்குள் அடைபட, எனக்கு ஐடியாவேயில்லை அன்பான தங்கையே வைத்து விடுகிறேன். பை'' என்று சிரிப்போடே போனை வைத்தான் அவன்.

அருகிலேயே அமர்ந்திருந்ததால், அண்ணனும், தங்கை யும் பேசியது தெளிவாகவே காதில் விழுந்தது துளசிக்கு.

தங்கையுடன் பேச ஆரம்பித்தபோது தோன்றிய முறுவல், இன்னமும் தொடர்ந்தது அவனிடம்!

''எங்கேயிருக்கிறீர்கள் என்பதைச் சொல்லுவதில் என்ன பெரிய ரகசியம்?'' என்று கேட்டாள் துளசி.

''ரகசியம் என்று பெரிதாக எதுவுமில்லை துளசி. என் தனிமையில் குறுக்கீடு வராதபடி பார்த்துக் கொள்கிறேன் அவ்வளவுதான்'' என்று தோள் குலுக்கினான் அவன்.

''குடும்ப நபர்களுக்குத் தெரிவிப்பது கூட வா தனிமையைக் கலைத்து விடும் என்கிறீர்கள். இந்த மலை வீட்டைப் பற்றி, எப்போதும் சொல்லாமலேயேவா இருந்து விடப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''தெரியும்போது தெரியட்டும் என்று விட்டுவிட வேண்டியது தான். அவர்களுக்காகப் பார்த்தால், பிறகு வேண்டாத தொல்லைகள் எல்லாம் வந்து சேரும்'' என்று முணுமுணுத்தான் அவன்.

வேண்டாத தொல்லைகள் யார் மூலமாக வரும் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தால், பின்னொரு நாளில் மனதிலே பலத்த அடி விழும் அளவிற்கு அதிர்ச்சியடைந் திருக்க மாட்டாளோ?

குறைந்த பட்சமாக, தன் மனதைத் திடப்படுத்தி சுதாரித்துக் கொண்டு, அடுத்தென்ன செய்வது என்பதை யாவது யோசித்திருப்பாள்!

ஆனால், ஏதோ காரணங்களுக்காக சில விஷயங்கள் அவளுக்குத் தெரியாது போக, அதனால் அவள் நிறைய சிரமங்கள், அவமானங்களுக்கு உள்ளாக வேண்டி யிருந்தது!

## 13

**கோ**வையின் மிகப்பெரிய கடையின் கார் பார்க் கிங்கில் காரை நிறுத்திவிட்டு, அவளை உள்ளே அழைத்துச் சென்றான் அவன்.



முன் பக்கம் முழுவதும் கண்ணாடியாலேயே கட்டப் பட்டு, நான்கு மாடியும் பளபளவென்று மின்னியது!

''நீ சேலை கட்டினால் நன்றாக இருக்கும் துளசி. வாங்கிக் கொள். நான் வாங்க வேண்டியதெல்லாம் வாங்கிக் கொண்டு வருகிறேன்'' என்று விட்டு வேறு பக்கம் சென்றான் பவனன்.

அவளுக்குமே சேலை வாங்க வேண்டும் என்றே எண்ணமிருந்தது தான். ஆனால் இங்கே எல்லாமே அதிக விலையுள்ளதாகத் தானே இருக்கிறது!

ஐந்தாயிரம் கூட பத்தாது. கையிலிருக்கும் மூன்றா யிரம் எந்த மூலைக்கு!

எதற்கும் இருக்கட்டுமென்று இன்னும் கொஞ்சம் பணமெடுத்த வந்திருக்கலாம். கண்ணில் பட்ட துணி களின் அழகைப் பார்த்து, காலம் கடந்து யோசனை வந்தது அவளுக்கு!

உதட்டைக் கடித்தபடி சுற்றியும் பார்த்தபோது, வாங் கிய பொருளின் பில்லையும், கூடவே ஒரு கார்டையும் கொடுத்தான் பவனன்.

'கிரெடிட் கார்டு' ஏற்றுக் கொள்ளப்படும் என்ற வாசகம் நிறைய இடங்களில் ஒட்டப்பட்டிருந்தது.

தன் ஷாப்பிங்கிற்காக அவனிடம் கடனாக பணம் பெற்றுக் கொண்டு, வீட்டிற்குச் சென்ற பிறகு தந்து விடலாம் என்று தோன்றிய எண்ணத்தை உடனே கைவிட்டாள் அவள்.

ஏனோ அவளுக்குப் பிடிக்கவேயில்லை!

இது கொஞ்சம் அசட்டுத்தனமான பிடிவாதம் தான்!

அவன் உதவியில்லையென்றால் இன்று, தான் இந்த இடத்தில் நின்று கொண்டிருக்கவே முடியாது!

இந்த உண்மை பசுமரத்தாணி போல் மனதில் பதிந் திருந்த போதும், தன் பிடிவாதத்தை விட முடியவில்லை அவளால்!

அவளுடைய உள் மனதில், ஏதோ ஒன்று நினைவு வராது நிற்பது போலிருந்தது!

பவனனிடம் பணம் வாங்காமலேயே, அவள் தான் நினைத்ததையெல்லாம் வாங்க முடியும்.

அது எப்படி முடியும் என்றவளின் கண்களில் பட்டது அந்த ஏ.டி.எம். சர்வீஸ் சென்டர்.

தன் கைப்பையைத் தொட்டுப் பார்த்தவளின் முகத் தில் இளம் புன்னகை தவழ்ந்தது!

பவனேந்திரனைக் கண்களால் தேடிப் பிடித்து அவ னிடம் சென்றவள், "பவனன் ஏ.டி.எம்.மில் பணம் எடுக்க வேண்டும். இதுவரை நான் எடுத்ததில்லை. எனக்கு உதவி செய்யுங்களேன்" என்று கேட்டாள்.

'வா போகலாம்' என்று கடையை விட்டு வெளிவந்து, எதிர் சாலையிலிருந்த ஏ.டி.எம்.க்குள் அழைத்துச் சென்றான் அவன்.

தங்களுக்குள்ளாகவே பேசிக்கொண்டு சென்றவர்கள் மற்ற யாரையும் கவனிக்கவேயில்லை!

கவனித்திருந்தால் இருவருமே ஆளுக்கொரு விதத் தில், திடுக்கிட்டு நின்றிருப்பார்கள் என்பதில் ஐயமே யில்லை!

பணத்தை எடுத்துக் கொண்டு மீண்டும் கடைக்கு வந்தார்கள்.



"அம்மாடியோவ்! பத்தொன்...பதாயிரம் வைத்திருக் கும் அளவிற்கு, நீ பணக்காரியென்று நான் நினைக்கவே யில்லை ராணிம்மா. பேசாமல் உன்னைக் கடத்திக் கொண்டு போய், உன் பணத்தையெல்லாம் பறித்து விடலாமா என்று தோன்றுகிறது" என்று ஏ.டி.எம். அறைக் குள்ளேயே கிண்டலடித்துச் சிரித்தான் பவனேந்திரன்.

முறுவலித்தவாறே 'உதை விழும்' என்று சுட்டு விரலை நீட்டிக் காட்டி எச்சரித்தாள் துளசி.

இக்காட்சியை துரதிஷ்டமாக இருவருக்குமே வேண் டாத சில விழிகள் பார்த்துக் கறுவின!

கறுவியதோடு நில்லாது மேற்கொண்டு தங்களால் என்ன செய்ய முடியுமென்றும் காட்டின!

தங்களைச் சுற்றி நடப்பதை அறியாதவர்களாக, மிகவும் உற்சாகமுடன் ஷாப்பிங்கில் ஈடுபட்டார்கள் பவனனும், துளசியும்,

முன்பு வேலை செய்த அலுவலகத்தில் 'ஷாப்பிங்' செய்வது பற்றி, பெண்கள் எப்படி ஓயாது நேரம் கிடைக் கும் போதெல்லாம் பேசுகிறார்கள் என்ற கேள்விக்கு, இப்போது விடை கிடைத்தது துளசிக்கு!

இவ்...வளவு அழகான பொருட்களைக் கடைநிறையக் குவித்து வைத்திருந்தால், ஷாப்பிங்கிற்கு எப்படி நேரம் பற்றும்?!

கடை முழுவதும் மரத்தாலான அலமாரி அடுக்கு களில், வண்ண வண்ண உடைகள் கண்ணைக் கவரும் வகையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

தொட்டால் ஜில்லென்றும், வழவழவென்று வழுக்கிக் கொண்டும் ஓடிய சேலைகளின், விலை ஸ்டிக்கரைப் பார்த்தாள் துளசி.

ஐநூறுக்கும் குறைவாக ஒன்றுகூட கிடையாது!

ஆனால் விலைக்கு ஏற்றாற் போல், ஒவ்வொன்றும் கண்களைக் குளிர்வித்தது!

ஸீ புளூ கலர் சேலையின் கீழ் பக்கம், ஒரு முழம் அளவிற்கு பாசி நிறத்தில் ஜம்கி. மணிகளை வைத்து, மயில் கழுத்து மாடலில் தைத்திருந்த சேலையை ஆசையுடன் வருடிவிட்டுச் சென்றாள் துளசி.

அத்...தனை மிருதுவாயிருந்தது சேலை!

சேலைக்குப் பொருத்தமாக ஓவல் வடிவத்தில் ஸீ புளூ கலர் கல் பதித்து, அதைச் சுற்றியும் கலர் எனாமல் கோட்டிங் செய்திருந்த, மெட்டல் கழுத்தணி, தோடு, வளையல், மோதிரம்.

எல்லாமே மெட்டல் வகை கவரிங்காகவே இருந்த போதும் கூட, மிக அழகாயிருந்த அந்த செட் சேலை யோடு இலவசமாம்!

என்னதான் இலவசமாகவே கொடுத்தாலும் கூட, நாலாயிரத்து எழுநூறு விலையுள்ள அந்த அழகுச் சேலையை வாங்க, அவள் கனவிலும் நினைக்க மாட்டாள் என்பது, அவளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியமான விஷயமாயிற்றே!

ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே 'பிளவுஸ்' தைத்துத் தரப்படும் என்றுகூட எழுதி ஒட்டப்பட்டிருந்தது.

பெரும்பாலான பெரிய கடைகளில் 'கஸ்டமர்களை' திருப்திப்படுத்தும் நோக்கில் பல வசதிகளைச் செய்து தருகிறார்கள். அதில் இதுவும் ஒன்று!

அந்த ஜில்லென்ற வழவழப்பு மாடலிலே, நான்கு சேலைகளைத் தேர்வு செய்தாள் துளசி.



பேபி பிங்க்கும், பாசிப் பச்சையும் பாதியாகக் கலந்திருந்த சேலை. பொன்னிறத்திலே கறுப்பு நிற சம்பங்கிப் பூ. வெளிர் நிற கத்திரிப் பூ சேலையில் ரோஜா வண்ணத்தில் வட்டமும், சதுரமும் நிறைந்திருந்தது. மயில் கழுத்துப் பச்சையில், வானவில்லின் பல வண் ணங்கள் அலையலையாக கோடிழுக்கப்பட்டிருந்தது!

ஒவ்வொரு சேலையும் ஒவ்வொரு வித அழகு!

சேலையோடு இணைந்திருந்த பிளவுஸை 'லைனிங்' வைத்து தைக்கச் சொல்லி அளவு கொடுத்துவிட்டு, சேலைகளுக்கு 'பால்ஸ்'சும் தைக்கச் சொன்னாள் துளசி.

பிறகு, தேவையான உள்ளாடைகள், நைட்டி என்று சிலதும் வாங்கினாள்.

அடுத்ததாக இருந்த தடுப்பில், அழகு சாதனப் பொருட்கள் பெரும்பகுதியாக அடுக்கி வைக்கப்பட் டிருந்தது.

இவ்வளவு அழகழகான பொருட்களை நிரப்பி வைத் திருக்கும் கடையை விட்டு வெளியே வர, நிறைய பேருக்கு மனம் வராதிருப்பதில் பெரிய ஆச்சரியம் ஏதுமில்லைதான்!

பொருட்களை அடுக்கி வைத்திருக்கும் அழகைப் பார்த்தே, வாங்குவோரை பிரமிக்க வைத்து விடுவதுதான் முதல் வெற்றி போலும்!

கஸ்டமர்களை கடைக்குள் வரவழைத்து விட்டாலே போதும், பத்து வகையான பொருட்களைப் பார்ப்பவர் களின் மனதில் ஆசை தோன்றி, ஒன்றே ஒன்றைக் கூடவா வாங்காமல் போய் விடுவார்கள்.

அந்த நேரத்தில் வாங்கப் பணமில்லை என்றாலும், மறுமுறை வரும் போதாவது வாங்கிவிட வேண்டும் என்று நினைக்க வைப்பதும் கூட, வெற்றிப் படிகளில் ஒன்றுதான்.

பளபளத்த கண்ணாடி அடைப்பிற்குள் இருந்த பல பொருட்களில், முதலில் அவளைக் கவர்ந்தது 'நெயில் பாலீஷ்'தான்!

குட்டியான அரைவட்டம், உருளை, சதுரம் என்ற மாடல் பாட்டில்களில், நெஞ்சை அள்ளிச் செல்லும் பல கலரில் இருந்தது நெயில் பாலீஷ்.

அதில் சாம்பல், வெளிர் ஆரஞ்சு, பேபி பிங்க், பொன் நிறத்திலே இருந்த, பதினைந்து ரூபாய் பாட்டில்களை வாங்கினாள் துளசி.

''இது நெயில் பாலீஷ் 'ரிமூவிங் வாட்டர்' பாட்டில் மேடம். இதை லேசாக பஞ்சில் தொட்டுத் தேய்த்தால் போதும். நகத்திலிருக்கும் பாலீஷ் உரித்துக் கொண்டு வந்துவிடும்'' என்றாள் விற்பனைப் பெண்.

தேன் கலரில் இருந்த ரிமூவிங் வாட்டரைக் கையி லெடுத்தாள் துளசி.

பாதி உரிந்த நிலையிலிருப்பதைச் சுரண்டும்போது, நகம் கீறல் விழுவதைத் தவிர்க்கலாமே!

சுரண்ட கஷ்டப்பட்டுக் கொண்டு மேலே மேலே வைப்பதால், நகம் அசிங்கமாகத் தெரிந்து காட்டிக் கொடுத்து விடுகிறது. அப்படி வைத்திருப்போரைப் பார்த்து அவளே முகம் சுளித்திருக்கிறாளே!

வெறும் இருபத்தைந்து ரூபாய்தானே என்று அதையும் ஒரு பாட்டில் எடுத்து வைத்தாள் துளசி.



அவளிடமிருக்கும் உடைகளின் வண்ணங்களுக்கு ஏற்றார் போல, மெட்டல் வகை வளையல்கள், தோடு, கிளிப், ஸ்டிக்கர் பொட்டு, என ஒவ்வொன்றாகத் தேர்வு செய்தவள், பிறகு ஸ்னோ, பவுடர், சீப்பும் வாங்கினாள்.

வீட்டிலிருக்கும் செம்பருத்தி, தாமரை இருவருக்கும், ஒரு வளையல் செட், தொங்கட்டான், கலர் பொட்டும் எடுத்தாள்.

அடுத்து, லெதர் பையும், செருப்பும் வாங்க வேண்டும். மேல் தளத்தின் ஓரமாக இருந்தது அப்பகுதி.

எதை எடுப்பது, எதை விடுவது என குழம்ப வைக்கும் அளவிற்கு நிறையப் பைகள்!

குட்டைக் கையுடைய கறுப்புநிற லெதர் பையை எடுத்து ஜிப்பைத் திறந்து மூடிப் பார்த்தாள். வலுவான பெரிய 'ஸிப்'புகள். அதிக நாட்கள் உழைக்கும்!

பையின் முன்பக்கம் சிறு வளையல்களில், பட்டாணி அளவிலான சில்வர் நிற மணி உருண்டைகள் தொங் கியது!

அதையும் வாங்கிக் கொணடு செப்பல் பிரிவிற்குள் சென்றாள்.

கால் பாதம் முழுவதும் தரையோடு அழுந்தப் பதிகிற மாதிரி, அதிக உயரமில்லாத செருப்பாக எடுத்தாள்.

பிறகு, வீட்டிற்கு வெளியே நடக்கும்போது பயன் படுத்தவென்று சாதாரண ரப்பர் செருப்பொன்றைப் போட்டுப் பார்த்தபோதுதான், ''அடி சண்டாளிக் கழுதை. நீ இங்கேயா இருக்கிற?'' என பின்னாலிருந்து ஆங்கார மாக ஒலித்தது ஒரு குரல்.

சித்தி நாகவல்லியின் குரல்!

தலையிலே தணலைக் கொட்டிவிட்டது போல, வெகுவாக திடுக்கிட்டுத் திரும்பினாள் துளசி ராணி!

# 14

கடுங்கோபத்துடன் நின்றவள் சாட்சாத் நாகவல்லியே தான்!

இதயம் படபடவென்று அடித்துக்கொள்ள, அதிர்ச்சியில் உறைந்து போனாள் சின்னவள்!

இது மாதிரி எதிர்பாராத சந்தர்ப்பத்தில், எதிர்பாராத இடத்தில் சித்தியை சந்திக்கக் கூடும் என அவள் கனவிலும் நினைக்கவில்லையே!

''என்னாடி ஓடுகாலி திருதிருனு முழிக்கிற? திமிர் பிடித்த பிடாரி, எவ்வளவு துணிவிருந்திருந்தால் கல்யாணத்தை வச்சிக்கிட்டு ஓடிப்போயிருப்பே?

''ஓடிப்போன கழுதைக்கு இவ்...வளவு பெரிய கடைக்கெல்லாம் வந்து செலவு செய்யற அளவுக்கு வசதி வந்துடுச்சோ? இதற்கெல்லாம் எவன்டி கொடுக்கிறான்?'' என்று அசிங்கமாக கத்திப் பேசினாள் நாகவல்லி.

கடைக்குள், வாங்க வந்த யாருமில்லை என்றாலும், கண்ணாடி தடுப்பிற்கு வெளியே இருப்போர், என்ன வென்று வேடிக்கை பார்க்க ஆரம்பிக்கவும், மிகவும் அவமானமாக உணர்ந்தாள் துளசி.



இவள் தொண்டை கிழிந்து விடும் போல் கத்துவதை எப்படி நிறுத்துவது?

எந்தக் காலத்திலுமே சொன்னால் காது கொடுத்துக் கேட்டு, சத்தத்தைக் குறைத்துக் கொள்கிறவள் கிடையாதே சித்தி, என்ன செய்வது என்று துளசி தவித்தபோது,

தவிப்பைக் கூட்டுவது போல, அங்கே வெள்ளையும், சொள்ளையுமாக வந்து நின்றான் தங்...கராஜன்!

''எனக்கு அப்பவே சந்தேகம் தங்கச்சி. ஆளப்பாத்தா அந்த ஓடுகாலி மாதிரியே இருக்கேனுதான் கொஞ்ச நேரம் நின்னு கவனிச்சேன். ரோடுன்னும் பார்க்காம கொஞ்சமும் வெக்கமில்லாம ஒருத்தனோட இளிச்சிக்கிட்டுப் போனா'' என்று வெட்கத்தைப் பற்றி, அந்த வெட்கம் கெட்டவன் கூறினான்.

மகள் வயதிலிருக்கும் பெண்ணை மணக்கக்கேட்ட எருமை மாடு. அவ்ளைப் பார்த்து வெட்கமற்றவள் என்பதா!

பற்றிக் கொண்டு வந்தது அவளுக்கு!

ஆனால் சத்தம் போட்டுப் பேசி ரசாபாசமாகிவிட்டால் கேவலம், என்ன செய்வதென்று யோசித்தாள் துளசி.

சித்திக்கும், தங்கராஜனுக்கும் பெரும் பிரச்சனை வந்திருக்கும். சித்தி எப்படி சமாளிக்கிறாளோ என்று வருத்தப்பட்டோமே!?

அத்தனையும் வீண் என்பது போல, இவர்கள் இருவரும் அண்ணன், தங்கை உறவு முறையல்லவா கொண்டாடுகிறார்கள்!

இது எப்படி சாத்தியமாகும்!

''இந்தக் கழுதையை முடியைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய், என் மீனுக்குட்டிக்கு கால் பிடித்து விட வைக்க வேண்டும். அப்போதுதான் என் ஆத்திரம் அடங்கும். நீ ஓடிப்போயிட்டா எனக்கு கல்யாணமே ஆகா துன்னு நினைச்சியாடி'' என்று கர்ஜித்தான் தங்கராஜன்.

என் மீனுக்குட்டியா?!

ஏனோ அந்த வார்த்தை வயிற்றினுள் புளியைக் கரைத்தது அவளுக்கு.

இவர்கள் பேசுவதைப் பார்த்தால், என்னவோ விபரீதம் நடந்திருக்கும் போலிருக்கிறதே! கடவுளே!

''அந்த முட்டைக் கண்ணை வைத்துக் கொண்டு முழிக்காமல், செய்த தப்பிற்காக காலம் முழுவதற்கும் என் வீட்டில் வேலை செய்து கொண்டு, நாய் மாதிரி நன்றி யோடு கிடக்க வேண்டும் நீ. என்னை நம்ப வைத்து ஏய்த்ததற்கு உனக்கு அதுதான் சரியான தண்டனை.

''என் மீனுக்குட்டியை நான் கண்ணில் வைத்துத் தாங்குவதைப் பார்த்து, இந்த அதிர்ஷ்டத்தை விட்டு விட்டோமே என்று நீ வயிறு எரிய வேண்டும்.

''என் வீட்டிற்குள் போன பிறகு, எப்படி வெளியேறி விடுகிறாய் என்று பார்க்கிறேன். ம் நட'' என்று மிரட்ட லாகக் கூறினான் தங்கராஜன்.

அருவருப்பும், எரிச்சலுமாக நின்றாள் துளசி.

''என்ன மேடம் ஏதாவது பிரச்சனையா? நான் ஏதாவது உதவி செய்ய வேண்டுமா?'' என, ஏதோ சரியில்லை என்பதை ஊகித்து, துளசியிடம் கேட்டான் கடையின் பொறுப்பாளன்.



''நீ என்னாய்யா அவளுக்கு உதவுறது? உனக்கும், அவளுக்கும் என்னா? தோலு கொஞ்சம் வெள்ளையா இருந்தா போதுமே வரிந்து கட்டிக்கிட்டு வந்துடுவீங் களே?'' என்று சண்டைக்கு ஆயத்தமானாள் சித்தி.

''இதோ பாருங்கம்மா. வெளியே பொது இடத்திற்கு வந்தால் மரியாதையுடன் பேசுங்கள். இல்லையென்றால் எங்கள் கடையில் தனியேயிருக்கும் பெண்ணிடம், தகராறு பண்ணுகிறீர்கள் என்று போலீசில் புகார் கொடுக்க வேண்டியிருக்கும்'' என்று மிரட்டலாகவே எச்சரித்தான் பொறுப்பாளன்.

போலீஸ் என்ற வார்த்தையில் கொஞ்சம் அடங்கி னாலும், ''எங்க வீட்டு பெண் பிள்ளை புத்திகெட்டு ஓடிப்போயிட்டா, பார்த்த பிறகு நாங்க அப்படியே விட்டுட்டுப் போக முடியுமா? அடித்தே இழுத்துட்டுப் போனாலும் தப்பில்லை. பெருசா பேச வந்துடுவீங்களே'' என்று சொந்தக் கதையைக் கடைபரப்பி அங்கலாய்த்தாள் சித்தி.

என்னது. அடிப்பாளாமா?!

முன்பு சிலமுறை வீட்டிற்குள் கொடுத்ததெல்லாம் போதாதென்று, இப்போது பலர் பார்க்க வெளியே வேறு அடிக்க வேண்டுமாமா?

சித்தி இப்போது இரண்டு சுற்று பெருத்து விட்டிருக் கிறாளே, அடித்தால் தாங்குவோமா?

அதுவுமின்றி பலர் பார்க்க அடிவாங்குவது எவ்வளவு பெரிய அவமானம்! என்று நினைத்தபோதும், தானும் போலீசைக் கூப்பிடுவேன் என்று மிரட்டி, சித்தியை மாட்டி விடவும் மனமில்லை!

எனவே, ''உங்கள் உதவிக்கு நன்றி சார். சொந்த விஷயம்தான். பிரச்சனையென்று எதுவுமில்லை. நானே பார்த்துக் கொள்கிறேன்'' என்று கூறி உதவ வந்தவரை அனுப்பி விட்டாள்.

நாகவல்லியை மாட்டி விடாததற்கு அவளின் அடிமனதில் பலத்த காரணமிருந்தது!

என்னதான் இருந்தாலும் அனாதையாக நின்ற தன்னை அழைத்து வந்து ஆதரவளித்தவள்.

நகை, சாமான்களுக்காகத்தான் என்றாலும் கூட, அதைச் செய்ய மற்ற யாரும் முன் வராதபோது, சித்தி தானே வந்தாள்!

கொடுமைப்படுத்தினாள் தான். அதே சமயம், திட்டிக் கொண்டே கூட சோறு போட்டவள்!

தன்னால் அவளுக்கு எந்தவித பெரிய சிக்கலும் நேர விடுவது சரியல்ல என்று நினைத்தாள் துளசி.

மனதிற்குள் கன்னா பின்னாவென்று பலமுறை திட்டியிருக்கிறாள் தான். அதற்காக, சிறிதும் தயக்கமின்றி போலீஸில் மாட்டி விடுவதெல்லாம் அவளால் முடியாது!

வேண்டாமென்று ஒதுங்கிப் போனவளிடம் வந்து ஏன் வம்பு பண்ணுகிறார்கள். மடையர்கள்!

இவர்களின் மிரட்டலுக்கெல்லாம் பயப்பட, அவள் ஒன்றும் பழைய துளசி இல்லையே?

இந்த சங்கடமான சூழ்நிலையை எப்படித் தவிர்ப்பது என்று அவள் யோசித்தபோது, தங்கராஜனும், நாகவல்லியும் கண்களாலேயே ஜாடை காட்டிப் பேசினார்கள்!

''சொன்னதெல்லாம் காதில் விழவில்லை. வா'' என்றழைத்தபடி, இரண்டெட்டு முன்னே நடந்து வந்தான் தங்கராஜன்.



கையையேதும் பற்றியிழுத்து விடுவானோ என்ற அருவருப்பில் முகம் சுளித்து, ''கிறுக்குத் தனமாக எதுவும் செய்யாதீர்கள். பிறகு வருத்தப்படுவீர்கள்'' என்று கூறி எச்சரித்தாள் துளசி.

இன்று, தான் இங்கு வந்திருக்கவே கூடாது என்று தோன்றவும் தவறவில்லை. அவளுள்ளம்!

''நான் என்னாத்துக்கு வருத்தப்படப் போறேன்'' என கொக்கரித்தபடி வந்தான் அவன்.

இதற்கு மேல் பொறுமையோடிருப்பது மடத்தனமென்று அவள் முடிவு செய்தபோது, ''உன் கையைக், காலை ஒடித்து 'வீல்' சேரிலே உட்கார வைத்தால் கூடவா வருத்தப்பட மாட்டாய்?'' என்று எகத்தாளமாக கேட்டபடி, அபயம் அளிக்கும் ஆபத்பாந்தவனாக உள்ளே வந்தவன் பவனேந்திரன்!

இடம், பொருள் என்பார்களே அதையெல்லாம் தூக்கி தூரப்போட்டு விட்டு, 'பவன்' என்று ஓடிச்சென்று அவன் தோளோடு முகம் சாய்த்து ஒட்டி நின்றாள் துளசி!

## 15

''ஏய்! என்னடா சொன்னாய்?'' என்று சீற்றமாகத் திரும்பியவன், ''இவன் தான். இவன் கூடத்தான் இளித்துக் கொண்டு கடைக்குள் போனாள். இவளின் லட்சணம் என்னவென்று இப்போதுதானே தெரிகிறது. தூ'' என்று தன் கோபத்தை வெளிக்காட்டினான் தங்கராஜன்.

''கூச்ச நாச்சமில்லாதவளே. யாரடி இது?'' என்று தானும் எகிறினாள் நாகவல்லி.

''ஷ். பொது இடத்தில் சத்தம் போட்டு வீணாக அசிங்கப்படாதீர்கள். மரியாதையாக நடந்து கொள்ளவில்லை என்றால், வயது வித்தியாசம் கூடப் பார்க்காமல் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவார்கள்'' என்று அலட்சியமாகக் கூறினான் பவனேந்திரன்.

மற்ற இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சிறு எரிச்சலோடு அவர்களைப் பார்த்துவிட்டு, ''இவர்கள் உனக்குத் தெரிந்தவர்களா துளசி?'' என்று கேட்டான் பவனன்.

''ம்'' என்றாள் அவள்.

''நினைத்தேன். தெரிந்தவர்கள் தான் என்றாலும், வேண்டாதவர்கள் போலிருக்கிறதே. அப்படித்தானே?''

அவளுக்குக் கஷ்டம் கொடுக்க நினைப்பவர்கள் வேண்டாதவர்கள் தானே. குறைந்த பட்சமாக இப்போதைக்கு!

மனசாட்சியின் கண்களைக் கறுப்புத் துணி கொண்டு கட்டி வைத்து விட்டு, 'ஆமாம்' என்று தலையாட்டினாள் துளசி!

'ஆல்ரைட்' என்று அவர்களைப் பார்த்தவன், ''இதோ பாருங்கள் நீங்கள் யாரென்று தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் எனக்கில்லை. உங்களால் துளசிக்கு ஏதாவது கஷ்டம் வந்தால், நான் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். தொலைத்துக் கட்டி விடுவேன். மரியாதையுடன் விலகிச்



செல்லுங்கள்'' என்று கடுமையான குரலிலே கூறினான் பவனேந்திரன்.

''எங்களையே விலகிப் போகச் சொல்லி மிரட்டுகிறாயா? நீ யாரடா? அவளுக்கும், உனக்குமிடையே அப்...படியென்ன உறவு?'' என ஏளனமாகக் கேட்டான் தங்கராஜன்.

''பார்த்தால் எப்...படித் தெரிகிறது?'' என உதடு வளைத்து கிண்டலாகக் கேட்டான் பவனன்.

அவளைத் தோளோடு அணைத்து, இடையோடு பதிந்திருந்த அவன் கையைப் பார்த்தவர்கள் 'சீ என்று முகம் சுளித்தார்கள்.

அந்தச் 'சீ' உறுத்த, தானுமே திடுக்கிட்டவளுக்கு அப்போது தான், தான் நின்றிருந்த நிலை புரிந்ததோ? அவசர அவசரமாக அவனிடமிருந்து விலக முயன்ற போது, அவன் பிடி இறுகியது!

திகைப்புடன் நிமிர்ந்தபோது அவன் கண்கள் வேறு கதை சொல்ல, விலக முயலாமல் அப்படியே நின்று விட்டாள் அவள்!

மீண்டும் ஒரு முறை முகம் சுளித்து, ''இந்தக் கேடு கெட்டவள் எப்படியோ போய்த் தொலையட்டும். இனி இவளுக்கும், நமக்குமிடையே ஒன்றுமேயில்லை. வாங் கண்ணே போகலாம்'' என்று விட்டு, குடுகுடுவென முன்னே சென்று விட்டாள் நாகவல்லி.

ஏனோ கண்கள் பளபளத்தது துளசிக்கு!

ஒட்டி நின்ற இருவரையும் முறைத்துவிட்டு வெளியேற முயன்ற தங்கராஜன், ''மீனுக்குட்டி நீயா?'' என்று சொல்லி அப்படியே நின்று விட்டான்.

சட்டெனத் திரும்பிப் பார்த்த துளசிக்குப் பேரதிர்ச்சி!

அவளின் அடிமனம் சந்தேகப்பட்டதுபோல, அது மீனா - மீனாட்சியே தான்!

கழுத்தில் அணிந்திருந்த பிடி நகைகளுடன் சேராமல், தனித்து நின்றது மஞ்சள் கயிறு!

தாயாகப் போகிறாள் என்பதை அறிவிப்பது போல, மேடிட்டிருந்த வயிறு!

"நீ ஏன் கண்ணு இவ்வளவு தூரம் வந்த? உனக்கு எந்த சிரமமும் தரக்கூடாதென்றுதானே, காரிலேயே இருக்கச் சொன்னேன்" என்று அக்கறையோடு குழைந்து பேசினான் தங்கராஜன்.

"எனக்கு எந்த சிரமமும் இல்லை. போரடிக்கிறது என்று தான் உள்ளே வந்தேன். பார்த்தால் இவள் நிற்பது தெரிந்தது" என்று, துளசியைப் பார்த்து அலட்சியமாக கை உயர்த்திக் காட்டி, "என் பங்கிற்கு நாலு வாங்கலாம் என்று தான் வந்தேன்" என்றாள் மீனாட்சி.

"அவள் ஒழிந்து போகிறாள் விடுகண்ணு. இதுக்கா நீ படியேறி வந்தாய்?" என்று அங்கலாய்த்தான் அவன்.

"இல்லை 'லிப்ட்'டில் தான் வந்தேன்."

"என்னா துளசி அப்படியே 'பே'னு நிற்கிற. நீ என்னை வேண்டானுட்டா எனக்கு என்னா கல்யாணம் ஆகா துன்னு நினைச்சியா?

"அதே நாளில், அதே மண்டபத்தில் அவள் போனால் போகிறாள் புத்தியில்லாத, அதிர்ஷ்டம் கெட்டவள். நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிறேன் மாமா. உங்கள் மானத்தைக் காப்பாத்தறேன் என்று சொல்லி கட்டிக்



கிட்டா. இப்ப இவ எது கேட்டாலும் வாங்கிக் கொடுத்து ராஜாத்தியாட்டம் பார்த்துக்கறேன்" என்று பெருமை பேசினான் தங்கராஜன்.

"நீங்கள் காருக்குப் போங்கள். நான் ஐந்து நிமிடத்தில் வந்து விடுகிறேன்" என்று கூறி, கணவன் கீழே சென்று வெளியேறுவதைப் பார்த்து விட்டுத் திரும்பினாள் மீனா.

இளம் மனைவி சொன்னதும், அச்சுப் பிசகாமல் அப்படியே நடந்து காட்டிய தங்கராஜனை நினைத்து உதடு வளைந்தது பவனனுக்கு.

இவள் ஒரு வார்த்தை சொன்னால், மீசைக்குக் கூட 'டை' அடித்து அதை முறுக்கி வேறு விட்டிருக்கும் அந்த மனிதன், மனைவி காலடியிலே கூட மணிக்கணக்காக விழுந்து கிடப்பான் போலிருக்கிறதே என ஏளனமாக நினைத்தான் பவனேந்திரன்.

முகத்தில் எதையும் காட்டாது சகோதரியை நோக்கி வந்தாள் மீனாட்சி.

அன்று தொடர்ந்து அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி யடைந்ததாலோ என்னவோ, பவனனின் கைத்தாங்கல் இல்லையென்றால் விழுந்து விடுவோம் என்பதுபோல, தொய்ந்து போனது துளசியின் கால்கள்!

மீனாவும் திட்டத்தானே போகிறாள் என்று மனது வெறுத்துப் போயிருந்தது துளசிக்கு.

ஆனால் சகோதரியின் அருகே வர வர, மீனாவின் முகம் மெல்ல மாறியது. கலங்க ஆரம்பித்த கண்களில் இருந்து தாரை தாரையாக நீர் வழியலானது!

இப்போது முன்பைவிட மேலாக அதிர்ந்தாள் துளசி!

மீனாவா அழுவது?! மற்றவரை அழ வைத்துப் பார்த்து மட்டுமே பழகிப்போன மீனாவா?!

''என்னை மன்னித்து விடுக்கா'' என்று தமக்கையின் கையைப் பற்றிக் கொண்டு தழுதழுத்தாள் சின்னவள்!

பதறிப்போனவளாக, ''அழாதே மீனா. ப்ளீஸ்'' என்று தங்கையின் கண்ணீரைத் துடைத்து, தலையை வருடினாள் துளசி.

அந்த நேரம் கடையில் எந்த கஸ்டமரும் இல்லாததால், அருகிலிருந்த சேரை இழுத்துப்போட்டு, ''பேசிக் கொண்டிருங்கள் உடனே வந்து விடுகிறேன்'' என்று கூறி, சகோதரிகள் தனித்துப் பேசட்டும் என்று வெளியேறினான் பவனேந்திரன்.

வியப்போடு அவனைப் பார்த்து, ''அக்கா இவர்..?'' என்று இழுத்தாள் மீனா.

''இவர் வீட்டில் தான் நான் வேலை செய்கிறேன் மீனா'' என்றவள், ''நீ எப்படியிருக்கிறாய்? உன்னை இப்படியொரு நிலையில் பார்ப்பேன் என்று நான் நினைக்கவேயில்லை'' என்றவளுக்குத் தொண்டை இறுகியது!

''நான் ஏதோ இருக்கிறேன்க்கா. உள்ளூர எதையோ இழந்து, வெளி உலகில் எல்லாவற்றையும் மறைத்து, ஒரு பணக்காரக் கிழவனை ஆட்டி வைக்கிற இளம் பெண்டாட்டி என்ற பெயருடன் நடமாடிக் கொண்டிருக்கிறேன்'' என விரக்தியோடு பேசினாள் மீனா.

''ஏன் விரக்தியோடு பேசுகிறாய். நீயே முன் வந்து தானே அவரை மணந்து கொண்டாய்?'' என்றாள் துளசி.

''ஆமாம். நானே முன் வந்து தான் மணந்து கொண்டேன். யானை தன் தலையில் தானே மண்ணை அள்ளிப்



போட்டுக் கொள்வது போல, எல்லாம் நானே தான் செய்தேன்.

''அவர் என்னை, என்னதான் நன்றாகவே வைத்துக் கொண்டாலும் கூட, என் மனது ஒட்டாமல் தவிக்கிறதேக்கா. நீ ஏன் ஓடிப்போனாயென்று இப்போதுதானே புரிகிறது.

''வாழத் தெரியாத முட்டாள் என்று உன்னை எப்படியெல்லாம் கேலி செய்தேன். அதையெல்லாம் நினைக்கும்போது தான், நான் எவ்வளவு பெரிய முட்டாள் என்பது தெரிகிறது.

''எல்லா வசதிகளும் இருந்தும், முன்பு போல எதிலுமே விருப்பமில்லைக்கா. சில நேரங்களிலே இந்த வாழ்க்கைக்குப் பதிலாக செத்துப் போய் விடலாமா என்று கூடத் தோன்றி விடுகிறது'' என்று தவிப்புடன் கூறினாள் சின்னவள்.

''மீனா! என்ன பேச்சு இதெல்லாம். இரண்டு உயிராக இருக்கும்போது இப்படியெல்லாம் நினைக்கலாமா? போகப் போக எல்லாம் சரியாகிப் போய்விடும் கவலைப் படாதே'' என்று தட்டிக்கொடுத்து தைரியமூட்டினாள் துளசி.

அவளால் வேறு என்ன செய்ய முடியும்?

''என்னால் முடியலையேக்கா. சில இடங்களில், உங்கள் மகளா? என்று கேட்கிறபோது ரொம்...ப கஷ்டமாயிருக்கு. வெறும் வசதிக்காக நான் எவ்வளவு பெரிய தப்பைச் செய்திருக்கிறேன்.

''அம்மாவிற்குக் கூட ஆரம்பத்தில் என் மீது கோபம் தான். நான் எதையாவது சொல்லி சமாளித்திருப்பேனே

அதற்குள் நீ ஏன் வாயை விட்டு பலியாடானாய் என்று திட்டினார்கள். உன்னை சபித்தார்கள்.

''ஆனால் நான் என் பேராசை காரணமாகவே மணந் தேன் என்பது என் மனதிற்குத் தெரியுமே!

''முழு உண்மையையும் சொல்ல வேண்டுமானால், நீ ஓடிப்போனதற்காக அப்போது நான் எவ்...வளவு சந்தோஷப்பட்டேன் தெரியுமா.? உனக்கு மனதார நன்றி கூடச் சொன்னேன்'' என்று வறட்சியாக முறுவலித்தாள் மீனா.

''ரொம்பவும் மாறிவிட்டாயே மீனா?'' என்று வருத்த முடன் கூறினாள் துளசி.

''வலிக்க அடி விழும்போது மாறித்தானே ஆக வேண்டும். என் நல்லதற்காக நீ அறிவுரை கூறியபோது, உன்னை எவ்வளவு கேவலப்படுத்தியிருக்கிறேன். அக்கா என் முழு மனதோடு உன்னிடம் மன்னிப்புக் கேட் கிறேன். நான் தெரிந்தே செய்த தப்பிற்காக தயவு செய்து என்னை மன்னித்து விடுக்கா. என் மனம் கொஞ்சமாவது நிமமதியடையும். ப்ளீஸ்'' என்று கலங்கினாள் மீனா.

பேச்சை மாற்றும் முயற்சியாக, ''என்னிடம் போய் நீ மன்னிப்பெல்லாம் கேட்க வேண்டுமா மீனா'' என்று செல்லமாகக் கடிந்து கொண்ட துளசி, ''ராஜா எப்படி யிருக்கிறான். நன்றாகப் படிக்கிறானா?'' என்று விசாரித்தாள்.

''அவனுக்கு என் மேல் இன்னமும் கோபம். என்ன, ஏது என்பதற்கு மேல் என் முகத்தைக்கூட நிமிர்ந்து பார்ப்ப தில்லை. இன்று போய் உன்னைப் பார்த்தேன் என்று சொல்லப் போகிறேன். அப்போது நிச்சயம் என்னுடன் பேசுவான் என்று நினைக்கிறேன்கா'' என்று உற்சாக முடன் பேச முயன்றாள் மீனா.



பழைய மீனாவின் சாயல்! புன்னகை!

இது குறையக்கூடாதென்று முடிவு செய்து, ''இருப் பதைக் கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ முயற்சி செய் மீனா. நடந்த எதையும் மாற்ற முடியாது. உன்னையும் நன்றாகப் பார்த்துக் கொள்கிறார்கள். உன் குழந்தையைப் பார்க்கும் போது, உனக்கு இந்தக் கலக்கமெல்லாம் காணாமல் போய் விடும் பார்.

''அதற்கு நீ சந்தோஷமாக இருக்க வேண்டும். அப்போது தானே குழந்தை நல்லபடியாக வளரும்'' என்று உற்சாகமுடன் பேசினாள் துளசி.

''என்னவோக்கா. உன்னிடம் மன்னிப்புக் கேட்டு, மனம் விட்டுப் பேசிய பிறகே, எனக்கு நிம்மதியாக இருக்கிறது'' என்று சிரித்தாள் சின்னவள்!

''எப்போதும் இப்படித்தான் சிரித்துக் கொண்டிருக்க வேண்டும்'' என்று கூறி தங்கையின் கன்னத்தை வருடி விட்டாள்.

அப்போது, இரண்டு தம்ளர் ஆப்பிள் ஜூஸ் வாங்கிக் கொண்டு அவர்களிடம் வந்தான் பவனேந்திரன்.

தங்களிடம் கொடுத்த தம்ளரை வாங்கிக் கொண்டு 'தேங்க்ஸ்' கூறி அருந்தினார்கள்.

அந்த வேளையில் குடித்த ஜூஸ், இருவருக்குமே புத்துணர்ச்சியைக் கொடுத்தது!

''அவர்கள் உன்னைக் கஷ்டப்படுத்துகிற மாதிரி பேசியிருப்பார்கள். எனக்காக மன்னித்து விடுக்கா. நான் கிளம்புகிறேன்'' என்று எழுந்தவள், ''அடுத்த வாரம் எனக்கு வளைகாப்பு செய்வதாக இருக்கிறார்கள் என்னை ஆசீர்

வாதம் பண்ணுக்கா'' என்று காலில் பணிய குனிந்தாள் சின்னவள்.

''ஹேய் மீனா. என்ன இது? காலில் விழுந்து கொண்டு, என்றுமே நீ சந்தோஷமாக நலமுடன் இருக்க வேண்டும்'' என்று கூறி, பையிலிருந்த இரண்டு அழகான வளையல் செட்டை எடுத்து தங்கையின் கைகளில் போட்டு விட்டாள் துளசி.

வளையல்களைத் தொட்டுப் பார்த்து ''அழகாயிருக் கிறதுக்கா. தேங்க்ஸ்'' என்று சிரித்துவிட்டு, ஒரு தலை யசைவுடன் விடைபெற்றுக் கிளம்பினாள் மீனா.

இதுவே பழைய மீனாவாக இருந்திருந்தால், 'அழகா யிருக்கு, அழகாயிருக்கு' என்று துள்ளிக் குதித்திருப் பாளே!

நெஞ்சைப் பிசைந்தது துளசிக்கு!

தங்கையின் வாழ்க்கை திசை மாறிப்போக, ஒரு வகை யில் தானும் காரணமோ என்று நினைத்துக் கலங்கியது அவள் உள்ளம்!

''என்ன தங்கைக்கு தைரியம் சொல்லிவிட்டு, உன் முகம் ஏன் கலங்கியிருக்கிறது?'' என்று கேட்டான் பவ னேந்திரன்.

''எ.. எதுவுமில்லை'' என்றுவிட்டு முகத்தைச் சரிப் படுத்த முயற்சி செய்து தோற்றவளாக வாங்கிய பொருட் களுக்கு பணத்தைக் கொடுத்துவிட்டு, தைக்கக் கொடுத்த துணிகளையும் வாங்கிக் கொண்டு அவனுடன் வெளியே நடந்தாள்.

இந்தப் பொருட்களையெல்லாம் வாங்கியபோது இருந்த மகிழ்ச்சி, சத்தியமாக இப்போது அவளிடம் இல்லை.



''முகத்தை ஏன் இப்படி வைத்திருக்கிறாய் துளசி? முடிந்தவரை எதையும் ஈஸியாக ஹேண்டில் பண்ணப் பழகிக்கொள்'' என்றபடி காரின் கதவைத் திறந்தான் பவனேந்திரன்.

பைகளையெல்லாம் காரின் பின் சீட்டிலே வைத்த பிறகு, காரைக் கிளப்பினான் அவன்.

இரு முறை அவள் முகத்தைப் பார்த்துவிட்டு ஒரு தலையசைவுடன் திரும்பிக் கொண்டான்.

''மீனாவின் இந்த நிலைமைக்கு நானும் ஒரு காரணமாகி விட்டேனோ என நினைக்கும்போது, கஷ்ட மாக இருக்கிறது பவன்'' என்றாள் எழும்பாத குரலில்!

''வாட். நீயும் காரணமா? இது நல்ல ஜோக் கோஸ். தானே முன் வந்து மணந்ததாகத்தானே சொன்னார்கள். இதில் நீ எங்கே நுழைந்தாயென்று எனக்குத் தெரிய வில்லையே?'' என உதட்டை மடித்தான் அவன்.

''அவள் சின்னப் பெண் பவன். வசதியான வாழ்வின் மீது கொஞ்சம் ஆசை. அதனால் தான் இப்படி முட்டாள் தனமாக நடந்து விட்டிருக்கிறாள்'' என்று தங்கைக்கே வக்காலத்து வாங்கினாள்.

''சின்னப் பெண் என்பது சரிதான். ஆனால் அந்த 'கொஞ்சம் ஆசை'தான் இடிக்கிறது? கொஞ்...சமான ஆசைக்காகவா தன்னைவிட, கிட்டத்தட்ட இரு மடங்கு வயது மூத்த ஒருவரை மணக்க முன் வருவாள்.

''உன் தங்கையின் ஆசைக்குப் பெயர் கொஞ்சம் ஆசையல்ல துளசி பேராசை. இன்றைக்கு பல பெண் களிடம் பரவி வரும் பேராசை!

''ஆசைப்பட்டது நடக்கும்போது, அது சம்பந்தமான சில பல அசௌகரியங்களையும் சகித்துக் கொண்டுதானே ஆக வேண்டும்.

''இவ்வளவு வயதானவரை மணந்தால், நாளை வரும் நாட்களில் வெளியே போகும் போது, மற்றவர்கள் கேலி செய்ய மாட்டார்களா என யோசித்திருக்க வேண்டு மில்லையா?

''காலம் கடந்த பின் ஞானோதயம் தோன்றி என்ன பிரயோஜனம்?

''கொள்ளிற்கு ஆசைப்பட்டால் கடிவாளத்தையும் ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும்'' என்றான் பவனன்.

முகத்தை அழுந்தத் துடைத்துவிட்டு, ''தப்பே செய் திருந்தாலும் அவள் என் தங்கை, பவனன். அவள் வருத்தப்படும்போது எனக்கும் வருத்தமாகத்தானே இருக்கும்'' என்றாள்.

''உன் வருத்தத்திற்கு அவசியமில்லை என்கிறேன். அந்த மனிதன் உன் தங்கையைக் கொடுமைப் படுத்தவில்லையே?

''இந்த வயதிலே திருமணம் செய்த எத்தனையோ பேர், அரைப் பைத்தியங்கள் மாதிரி நடந்து கொள்கிறார்கள் தெரியுமா? இளம் மனைவிக்கு நிறைய வழிகளில் டார்ச்சர் தருவார்களாம்!

''உன் தங்கை விஷயத்தில் அப்படியெதுவும் நடக்க வில்லையென்று நிம்மதியோடிரு. சொல்லப் போனால் உன் தங்கை விரல் சொடுக்கினால், அந்த ஆள் காலைக்



கூட பிடித்து விடத் தயார் என்பது போலத்தானே நடந்து கொள்கிறார்!

''இதையும் மீறி உன் தங்கைக்காக நீ வருத்தப்படுவது அடி முட்டாள்தனம்'' என்று தெளிவாகவே கூறினான் பவனன்.

பவனன் கடுமையான வார்த்தைகளைச் சொன்ன போதும்கூட, அருகிலிருந்த உண்மைகள் மெல்ல உறைக்க, பெருமூச்சோடு மனதைச் சமாதானப்படுத்த முயன்றாள் துளசி!

அவள் குழப்பங்கள் கட்டுக்குள் வந்திருப்பதைப் போல் தோன்ற அருகேயிருந்தவனைப் பார்த்தாள்.

## 16

சொல்லப்போனால் பவனேந்திரன் உண்மை யாகவே இந்தளவிற்குக் கடுமையான குரலில், இதுவரை அவளிடம் பேசியதில்லை தான்!

கடுமையின் அடித்தளம் அவள் மீதுள்ள அக்கறை யல்லவா!

அந்தச் சிக்கலான நேரத்தில் அவனைப் பார்த்ததும் சுற்றுப்புறம் மறந்து, அல்லது அலட்சியம் செய்து விட் டேனா? இருக்கலாம்!

அவனிடம் ஓடிச் சென்று தஞ்சமடைந்ததை நினைக் கையில், வெட்கத்தால் முகத்தில் செம்பூக்கள் பூத்தன!

சிக்கலென்று வரும்போது அவனிடம் தஞ்சமடை வதே வேலையாகிப் போயிற்று. முன்பு அவன் வீட்டில், இப்போது தோள்களில்!

''சரியான நேரத்தில் அங்கே வந்ததற்கு தேங்க்ஸ் பவன்'' என்றாள் மனதார.

''இருக்கட்டும்'' என தலையசைத்தவன், ''தனியாக இருக்கும்போது பிரச்சனையை எதிர்கொள்ள நேர்ந்தால், மூளையைப் பயன்படுத்த வேண்டும் துளசி. அதை விட்டுவிட்டு அவர்கள் சொன்ன மாதிரி, 'பே'னு பார்த்துக் கொண்டு நிற்கக்கூடாது'' என்றான் புரிந்து கொள்ள முடியாத குரலில்.

சற்று ஆதங்கம் எட்டிப் பார்க்கிறதோ!

மேற்கொண்டு என்ன சொல்கிறான் பார்க்கலாமென்று அமைதி காத்தாள் துளசி.

''நம்மிடம் ஒருவர் சத்தம் போடும் போது, ஒரேயடியாக அடங்கி நிற்க வேண்டியது அவசியமல்ல துளசி. திருப்பி அடிக்கும் விதத்தில் அடித்தால், எதிராளியின் சத்தம் தானாகவே குறைந்து விடும். அதுமாதிரி சூழ்நிலைகளில் நாகரீகம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அவசிய மில்லை. இனியாவது மனதில் பதிய வைத்துக்கொள்'' என்றான்.

''நான் பதிலுக்குப் பேசாதிருந்தது நாகரீகத்தின் காரண மாயில்லை. கடை ஊழியர் கூட போலீஸைக் கூப்பிடு வேன் என்றார். நான், நான்தான் தடுத்து விட்டேன்'' என்றாள் சிறு தடுமாற்றமுடன்.

''ஓ?!'' என்றான் வேகமாக. ''நீயாகவும் உன்னைக் காப்பாற்றிக் கொள்ள மாட்டாய். உதவியையும் மறுத்திருக்



கிறாய். பெரிய பூமா தேவியென்ற எண்ணமா? எவ்வளவு போட்டாலும் தாங்கிக் கொண்டு நிற்க'' என்றான் எரிச்சல் எட்டிப் பார்க்க.

''அவர்கள் என் உறவினர்கள் பவன். என் மீது கோபப் பட்டாலுமே கூட பொறுத்துப் போய்விடலாம் என்றுதான் தோன்றுகிறது.

''ஆதரவில்லாத போது என்னை ஏற்றுக் கொண்டவர்கள். லாபத்தின் காரணமாகத்தான் என்னை அழைத்துச் சென்றார்கள். நிறைய கஷ்டமும் கொடுத்திருக்கிறார்கள் தான். இருந்தாலும் அவர்களை வேதனைப்படுத்த என் னால் முடியாது பவன்!

''ஒதுங்கிப்போய் விடலாமென்று தான் நினைப்பேன். மீனாவைப் போல, சித்தியும் கூட ஒரு நாள் என்னைப் புரிந்து கொள்ளும் நேரம் வரலாமே?

''உறவுகளின் அருமை தெரிந்தவர்கள், அதை இழக்க விரும்ப மாட்டார்கள் பவன்.

''வெறும் ஏழெட்டு மாதங்களுக்கு முன்பு மீனாவிற்கு வசதியான வாழ்வின் மீது இருந்த ஆசை இன்றில்லையே.

''எத்தனையோ விதத்தில் என்னை வருந்தச் செய்த மீனா, மனம் விட்டுப் பேசி, மன்னிப்புக் கேட்க வேண்டு மென்று ஏன் வரவேண்டும்?

''ஏதோ ஒரு விதத்தில் நான் அவளை பாதித்திருக் கிறேன்!

''அவளுக்குப் பிடித்த மாதிரி ஒரு ரப்பர் பேண்ட், கிளிப் வாங்கிக் கொண்டு போகும்போது, அது ஐந்தே ரூபாயாக இருந்தாலும் கூட, துள்ளிக் கொண்டு சந்தோஷப்படுவ தோடு, இரு உனக்கு டீ கொண்டு வருகிறேன் என்பாள்!

"அடி மனதில் உறவென்ற நினைப்பில்லை என்றால், அதெல்லாம் சாத்தியமல்ல பவன்" என்றாள் ஆழ்குர லிலே.

"புரிகிறது" என்று ஆழ மூச்சிழுத்து வெளிப்படுத்தி விட்டு, காரின் வேகத்தைக் குறைத்து சாலையோரம் நிறுத்தினான் பவனேந்திரன்.

ஏன் என்பதுபோல அவனைப் பார்த்தாள்!

"சின்ன வயதில் ரொம்பக் கஷ்டப்பட்டாயா ராணிம்மா?" என மென்குரலில் கேட்டான்.

ராணிம்மாவில் வழக்கம் போலவே உடைய நினைத்த மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு, வெறுமனே தலையை மட்டும் அசைத்தாள்.

அவளால் அது மட்டும்தான் முடிந்தது!

'ஷ். ராணி' என்று அவளின் வலது கையைப் பற்றி தட்டிக் கொடுத்தான் அவன்.

"இப்போது அதெல்லாம் பெரிதாகத் தோன்றவில்லை. தனித்து நிற்பதற்குப் பதிலாக திட்டுவதற்காவது நமக்கென்று உறவிருக்கிறதே என்று, சில சமயத்தில் ஆறுதலாகக் கூட உணர்ந்திருக்கிறேன்" என்று மெல்ல முறுவலிக்க முயன்றாள் துளசி.

பற்றிய கையை வருடியவன், "உன்னை நினைக்கும் போது, நல்ல வைரத்தின் ஞாபகம்தான் வருகிறது ராணி!

"ஏனென்ற காரணம் எனக்கே தெரியவில்லை. நீ மாசில்லா நல் வைரத்திற்கு இணையானவள்" என்றான்!

அடிமனதிலிருந்து வெளிவந்த வார்த்தைகள்!

நல் வைரமாமே!



சிலிர்த்துப் போனது அவளுக்கு.

அவனுடைய காந்தப்பார்வையைத் தொடர்ந்து பார்க்கும் சக்தியற்றவளாக, கையை மெல்ல உருவ முயன்றாள் அவள்.

விடாததோடு, "ஏன்?" என்று வேறு கேட்டான் அவன்.

என்னவென்று சொல்வது?

உங்களைத் தொடர்ந்து பார்த்தால் என் மனம் தடு மாறிவிடும் என்ற உண்மையையா?

சொன்னால் இவன் என்ன செய்யக்கூடும்?!

திகைத்துத்தான் போவான். கிணறு வெட்ட பூதம் கிளம்பி விட்டதோ என்று!

அல்லது ஒருவேளை நல்வைரம் கைசேர்ந்தது என்று...

அதற்குமேல் ஓட முயன்ற கற்பனையைப் பாடுபட்டு நிறுத்தினாள் துளசி.

அவன் சொன்னது போல சில சமயங்களில் முட்டாள் தனமாகத்தான் நடந்து கொள்கிறாளோ?

"ஏன் என்று கேட்டேனே?" என்றான் மீண்டும்.

உள்ளூர படபடத்ததை மறைத்துக் கொண்டு, "ம். வைரம் அதுவும் நல் வைரம் என்றுவிட்டு கையை விடாமல் பிடித்திருக்கிறீர்களே. எனக்கே தெரியாமல் விரலைக் கழற்றி எடுத்துக் கொண்டு போய் விடுவீர் களோ என்ற பயம்தான். வேறென்ன? சுண்டு விரலாகவே இருந்தாலும் எவ்...வளவு பணம் கிடைக்குமே!" என்று கண்களை உருட்டினாள் துளசி.

பளிச்சென்று சிரித்தான் அவன்.

'போக்கிரி' என்று செல்லமாக அவள் தலையில் தட்டியவன், "வேண்டுமென்று முடிவு செய்து விட்டால் உன்னையே தூக்கிக் கொண்டு போய் விடுவேன். இந்த விரல் எம்மாத்திரம் கண்ணே!" என்று கண் சிமிட்டினான் அவன்.

நெஞ்சு விம்ம முறைத்தவள், "செய்வீர்கள். செய்வீர்கள். ஆனால் அதற்குக் கையும், காலும் ஒழுங்காக இருக்க வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள் சார்" என்றாள் சளைக்காமல்.

"அடடா. நீங்கள் கை, காலை உடைப்பீர்களாம். நாங்கள் அப்படியே பார்த்துக் கொண்டு நிற்போமாக்கும். இந்த வீர வசனத்தையெல்லாம் என்னிடம் மட்டும்தானே அரங்கேற்றுவாய்?

"மற்றவர்கள் முன்னால் ஒரு வார்த்தை வீரமாக வெளி வராதே. ஆனாலும் ராணிம்மா, 'பே'னு நிற்பவர்களுக்காக 'ஆஸ்கார்' அவார்டு கொடுத்தால், உன்னை மிஞ்ச ஒருவராலும் முடியாதென்பது என் திடமான நம்பிக்கை. அதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என கிண்டலடித்தான் பவனேந்திரன்.

"பவன் வேண்டாம். இத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள். பிறகு..." என்று சுட்டு விரலை நீட்டி எச்சரித்தவளுக்கு, கலீரென்று சிரிப்பு வந்து விட்டது!

தானும் புன்னகைத்து, "பிறகு என்ன பிறகு? அதற்கு மேல் சொல்லத்தான் அங்கே ஒன்றுமேயில்லையே" என்று தன் தலையைத் தொட்டுக் காட்டினான்.

"உண்மைதான். ஒன்றுமேயில்லையென்று விட்டு 'உங்கள்' தலையை அல்லவா தொட்டுக் காட்டினீர்கள்.



அதனால் நிச்சயமாக, நூறு சதவீதமாக ஒத்துக் கொள்கிறேன்பா" என்று சாதுவாகக் கூறி கலகலத்தாள் அவள்.

"ஹே...ய் ராணி! போதும் போதும். எனக்கு வயிற்று வலியே வந்து விடும் போலிருக்கிறது" என்று கூறி முயன்று தன்னைக் கட்டுப்படுத்தினான் அவன்.

ஆனால் ஒருவரையொருவர் பார்க்கும் போதே, மீண்டும் சிரிப்பு அலையலையாகத் தோன்றி தொடரவும் செய்தது!

இந்த மகிழ்ச்சியான மனநிலையுடனே, காரை ஒரு அழகான ரெஸ்டாரெண்டிற்கு ஓட்டிச் சென்று நிறுத்தினான் பவனேந்திரன்.

சுற்றியும் ஓங்கி வளர்ந்த மரங்கள், பூந்தோட்டங்கள். சரியான இடைவெளி விட்டு அமைக்கப்பட்டிருந்த, பெரிய பெரிய கலர் நிழல் குடைகள். அதன் கீழ் கண்ணாடி டேபிளும் சுற்றி நான்கு சேரும் போடப்பட்டிருந்த ரெஸ்டாரெண்ட்.

சிலுசிலுவென்று வீசிய தென்றல் காற்று!

அமைதியாயிருந்த அந்த இடம் மனதிற்கு இதமாயிருந்தது!

"இந்தக் கிளைமெட்டிற்கு இரண்டு பெக் 'ஸ்காட்ச்' குடித்தால் எப்...படியிருக்கும் தெரியுமா?" என்று கூறி கண்களை மூடி ரசித்தான் அவன்.

"ஸ்காட்ச்சா! நீங்கள் குடிப்பீர்களா பவன்?" என்றாள் ஒரு மாதிரியாக.

"கிளைமெட் பிடித்திருந்தால் எப்போதாவது சுவைக்கிற பழக்கமுண்டு" என்றவன், "உனக்கு என்ன வேண்டும்?"

என்று கேட்டுக்கொண்டு, பேரரை அழைத்து ஆர்டர் கொடுத்தான்.

வெரி ஸ்ட்ராங் டீயுடன் சுவைத்த வாழைப்பூ வடை அலாதி சுவை!

வடையில் என்னென்ன மசாலாக்கள் போடப்பட்டிருக் கிறது என்று பார்த்தாள் துளசி.

''ஒன்றையும் விட மாட்டாயா?'' என்று சிரித்தான் அவன்.

சிரிப்பும், கிண்டலுமாக ஒருவரையொருவர் வாரி னார்கள்.

இன்று ரொம்பவும் சிரிக்கிறோமோ என்று கூட ஓரிரு முறை நினைத்தாள் துளசி.

உலக விஷயங்களில் எதெல்லாம் ஞாபகம் வந்ததோ அதைப்பற்றியெல்லாம் பேசினார்கள்.

தன் தொழில் பற்றியும் சிலது கூறினான் பவனன்.

இறால் குஞ்சுகளை எப்படி சேகரிப்பது என்பதி லிருந்து, நூறு நாட்கள் வரை வளர்த்து விற்பனை செய்வது வரையும் சொன்னான்.

அவளுக்கு முன்பு தோன்றியது போலவே, இப்போதும் பிரமிப்புதான்!

இதில் இவ்...வளவு வேலையிருக்கிறதா?

ஆரம்பத்தில் சந்திக்க நேர்ந்த போட்டிகளைப் பற்றி சுவாரஸ்யமாகச் சொன்னான்.

''எனக்குக் கிடைத்த நிர்வாகிகள் நியாயமானவர்கள். அவர்களை நல்ல விதமாகப் பயன்படுத்தி கடுமையான உழைப்பினால் தான் தொழிலை வளர்த்தேன்.



''குடும்பத் தொழில் சர்க்கரை பாக்டரி துளசி. நான் வேறு தொழிலைத் தேர்ந்தெடுத்ததில் ஆரம்பத்தில் அம்மாவிற்கு என் மீது வருத்தம் தான்.

''பிறகு இதில் இலாபத்தோடு வளர்ச்சி காணவும், என் முடிவு சரிதான் என்றார்கள்.

''இப்போது கேரளாவில் மேலும் ஒரு கிளை ஆரம்பிக் கலாம் என்ற ஐடியா! அதைப்பற்றி பேசுவதற்காக ஜி.எம். மிஸ்டர் மூர்த்தியை இங்கே வரவழைக்கலாம் என் றிருக்கிறேன்'' என்று விட்டு தட்டில் பில் பணத்தை வைத்து விட்டு எழுந்தான்.

மாலை ஐந்து மணியளவில் வீட்டை அடைந்தவர்கள் நன்றாக ஓய்வெடுத்தார்கள்.

மறுநாள் பொன்னிறத்திலிருந்த சேலையை உடுத்திக் கொண்டு வந்தவளைப் பார்த்து, ''சேலை எவ்வளவு அழகான உடையென்பது, நிறைய மட்டிப் பெண் களுக்குத் தெரிவதேயில்லை?'' என்று விட்டு அலுவலக அறைக்குள் சென்றான்.

லட்சுமியின் மகள்களை அழைத்து அவர்களுக்கு வாங்கி வந்த பொருட்களைக் கொடுத்தாள்.

சிறுமிகள் சந்தோஷமாக குதித்துக் கொண்டு ஓடி னார்கள்.

தொடர்ந்து நான்கைந்து நாட்களாக அலுவலக அறை யில், தீவிர வேலையில் இறங்கியிருந்தான் பவனன்.

வேலையில் லயித்துவிட்டால் முடிக்கும் வரை ஓய மாட்டேன் என்று, ஒருமுறை சொன்னது ஞாபகம் வந்தது அவளுக்கு.

அவனுக்குத் தேவையான நேரத்தில் உணவு, டீ, ஸ்நேக்ஸ் என்று வயிற்றுக்கு தேவையானதை நேரம் தவறாமல் கொடுப்பதோடு, இடையூறு வராமலும் பார்த்துக் கொண்டாள் துளசி.

அதே சமயத்தில், பின் பக்க நிலத்தில் காய்கறிகள் நல்ல விளைச்சலைக் கொடுக்க ஆரம்பித்திருந்ததால், அதையெல்லாம் விற்பனைக்காக டவுன் மார்க்கெட்டிற்கு அனுப்புவதில் நேரத்தைச் செலவிட்டாள்.

''நீங்கள் ஏம்மா பறிக்கறீங்க? தக்காளிச் செடியின் பச்சை சாயம் துணியில் பட்டால் லேசில் விடாது. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் மேலே ஏறிக்கங்க'' என்றான் காசி.

'நல்லவேளை ஞாபகப்படுத்தினாரே. இல்லையென்றால் இந்த பேபி பிங்க் சேலை பாழாகிப் போயிருக்கும்' என்றெண்ணியபடி, மேலே ஏறி நின்று கொண்டாள் துளசி.

விளைச்சலின் அளவு நாளுக்கு நாள் கூடவும், தினக் கூலிக்கு இரண்டு பேரை அழைத்துக் கொண்டான் காசி.

''தக்காளி நல்ல விலைம்மா. கிலோ இருபது ரூபாய். ஒரு நாளைக்கு நூற்றைம்பது கிலோவிற்குக் குறையாது விளைகிறது. தொடர்ந்து மற்ற வகைக் காய்களும் பறிக்கும் போது நிறைய வருமானம் வரும்'' என்று உற்சாகமுடன் கூறினார்கள் வேலை செய்பவர்கள்.

முதல் நாள் மார்க்கெட்டிற்குச் செல்வதற்காக, 'உங்கள் கார் சாவியை எங்கே வைத்தீர்கள் பவன். வழக்கமாக மாட்டுமிடத்தில் காணவில்லையே?'' என்று கேட்டாள்.



''இங்கேயிருக்கிறது'' என்று மேசை டிராயரிலிருந்து எடுத்துக் கொடுத்தவன், ''எதற்கு கடைக்கு அனுப்பவா?'' என்றுவிட்டு பைலின் அடுத்த பக்கத்தைத் திருப்பினான்.

''காய்கறிகளை மார்க்கெட்டிற்கு அனுப்பப் போகிறேன்'' என்றுரைத்தாள்.

சட்டென்று தலையை நிமிர்த்தி, ''ஹே...ய்! என்னுடைய 'மெர்ஸிடிஸ் பென்ஸ்' உனக்கு காய்கறி அனுப்பி வைக்கிற சரக்கு வண்டியா? அதன் விலை என்ன தெரியுமா? கிட்டத்தட்ட ஒரு கோடி. நூறு லட்சங்கள் அம்மணி நினைவிருக்கட்டும். இன்று ஒரு நாள் மட்டும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நாளை முதல் வேறு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்'' என்றான்.

நூ...று லட்சமா?!

அப்படி அந்தக் காரில் என்ன இருக்கிறது. குண்டு, குழிகளில் போகும்போதுகூட குலுங்காமல் ஜம்மென்று போகிறது. இது ஒன்றுதான் அவள் கண்டு பிடித்தது.

கண்டுபிடிக்க முடிந்ததென்று சொல்வதுதான் சரியாக இருக்குமோ?

மறுநாள் முதல் வாடகைக்கு வண்டி வரவழைத்துக் கொண்டார்கள்.

நாளுக்கு நாள் அதிகமாகிற காய்கறி மூட்டைகள், கூடைகளைப் பார்த்துவிட்டு, ''ஒரு நாளைக்கு வண்டி வாடகை எவ்வளவு தருகிறீர்கள்?'' என்று விசாரித்தான் பவனன்.

அடுத்த மூன்றாவது நாள் வீட்டின் முன்னால் வந்து நின்றது, ஒரு 'மினி டோர் ஆட்டோ.'

''இனி வண்டிக்காக காத்திருக்க வேண்டியதில்லை. தேங்க்ஸ் பவன்'' என்றாள்.

அதன் பிறகு போக்குவரத்து பிரச்சனையின்றிப் போக, வேலைகள் தாமதமின்றி நடக்கலானது.

## 17

''என்ன ஒரேயடியாக வேலையிலேயே மூழ்கிவிட் டீர்கள் போலிருக்கிறது. சுற்றியும் என்ன நடக்கிறதென்று அவ்வப்போது வெளியே வந்து பாருங்கள் சார்'' என்றாள் கிண்டலாக.

சிரித்தபடியே கைகளை மேலே தூக்கி சோம்பல் முறித்தவன், ''புது புராஜெக்டின் திட்டத்தை முடிப்பதற் காகத்தான் இந்தத் தீவிரம். இனி ஜி.எம்.ஐ வரவழைத்துப் பேச வேண்டும். வேலையை அவரிடம் ஒப்படைத்து விட்டால் நான் ரிலாக்ஸ்ஸாகி விடுவேன்'' என்றான் பவனன்.

''முழு வேலையையும் ஒப்படைக்கிற அளவிற்கு, திறமையான நல்ல நிர்வாகிகள் எல்லா முதலாளி களுக்கும் கிடைத்தால், உங்களைப்போல நிறைய ஒய்வு அவர்களுக்கும் கிடைக்கும்'' என்றாள் அவள்.

''மிஸ்டர். மூர்த்தி வேறு ரகம் துளசி. இயல்பிலேயே நல்ல மனிதர். அவர் எங்கிருந்தாலும் அந்த இடம் கலகலப்பாகி விடும். பேக் பண்ணுகிற செக்ஷனிலிருந்து



எல்லோரிடமும் தட்டிக் கொடுத்து, உற்சாகப்படுத்தி வேலை வாங்கத் தெரிந்தவர்.

''ஒரு சிலரைப் பார்த்தால் எஸ்கேப்பாகி ஓட நினைக்கிற பையன்கள் கூட, இவரைப் பார்த்தால் கையை ஆட்டி விட்டாவது செல்வார்கள். அப்படி நிறையவே பார்த் திருக்கிறேன்.

''மனது வருத்தப்படுகிற மாதிரி யாரிடமும் பேசி நான் பார்த்ததில்லை. பொதுவாக ஆபீஸில் எல்லோருக்கும் பிடித்த பொது நபர்.

''மற்றபடி, ஒரு முதலாளி முயற்சி செய்தால், தன் கீழ் வேலை செய்கிறவர்களை ஓரளவிற்காவது நல்ல விதமாக உருவாக்கிக்கொள்ள முடியுமென்பது என் அபிப்ராயம்'' என்றான்.

பவனேந்திரனின் நன்மதிப்பைப் பெற்ற அந்த ஜி.எம்.ஐ பார்க்க, துளசிக்கும் ஆர்வம் அதிகரித்தது!

மறுநாள், ஹாலில் அமர்ந்திருந்த அவரைப் பார்த்து அப்படியே நின்று போனாள் துளசி.

பவனனின் வயதை ஒத்த இளைஞராயிருக்கும் என நினைத்ததிற்கு மாறாக, இவருக்கு ஐம்பது வயதிற்கு மேலிருக்கும் போல் தெரிகிறதே!

வந்தவரிடம் துளசியை அறிமுகப்படுத்தினான் பவனன்.

இருவருக்கும் ஆப்பிள் ஜூஸ் எடுத்து வந்து கொடுத் தாள்.

''ஓ! ஆப்பிள் ஜூஸ். தேங்க்யூ மேடம். எனக்கு மிகவும் பிடித்தது'' என்று ரசித்துக் குடித்தார் மூர்த்தி.

''தெரியும் சார். உங்களைப் பற்றி இவர் நிறைய சொல்லியிருக்கிறார்'' என்று முறுவலித்தாள் துளசி.

அவர் கண்களில் ஒரு பளிச்சிடல்.

''இப்போது நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் சார். மதியத்திற்கு மேல் வேலையைத் தொடங்கலாம்'' என்று கூறி, கெஸ்ட் ரூமிற்குள் அவரை அனுப்பி விட்டு வந்தான் பவனன்.

புது விருந்தாளிக்காக மதிய உணவின்போது, 'ஆரஞ்சு வண்ண பூசணிக்காய் அல்வா' செய்தாள்.

''ம். டேஸ்டாக இருக்கிறது மேடம்'' என்றவர், ''நீங்கள் ஏன் அடிக்கடி ரெஸ்ட் எடுக்கவென்று கிளம்பி விடுகிறீர்கள் என்பது இப்போதுதான் புரிகிறது. இந்த அழகான இடத்தில், அருமையான உணவும் கிடைக்கும்போது வேறு என்ன வேண்டும்?'' என்றார் மூர்த்தி.

இருவருமாக ஒரு நாள் முழுவதும் பேசினார்கள். முடிவில், ''இடத்தைப் பாருங்கள் சார். எது நமக்கு சூட்டாகுமென்று முடிவு செய்து விட்டு, வேலையை ஆரம்பியுங்கள்'' என்று கூறி அவரை அனுப்பினான் பவனன்.

அவளிடமும் கூறிக்கொண்டு கிளம்பினார் மூர்த்தி.

என் வரையில் ஒரு பெரிய வேலை முடிந்ததென்பது போல, சோபாவில் அமர்ந்து காலை நீட்டி விட்டுக் கொண்டு, ஜாலியாக டீ.வி. பார்க்கலானான் பவனேந்திரன்.

அந்த மாதம் கணக்கெழுதியதில் இருபத்து இரண்டாயிரம், காய்கறி விற்றதில் வருமானம் என்று காட்டியிருந்தாள்.



''வெரிகுட்'' என்றவன், ''இதற்காக வேலை செய்தவர்களுக்கு ஆளுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து விடு துளசி'' என்று கூறிவிட்டு, அவளிடம் ஒரு கவரைக் கொடுத்தான்.

பெரிய டிசைன் பை!

உள்ளே ஜம்மென்று உட்கார்ந்திருந்தது, ஷாப்பிங் போனபோது அவள் ஆசையுடன் வருடிவிட்டு வந்த, ஸீ புளூ, பாசி நிற சேலை செட்!

''இதை எப்போது வாங்கினீர்கள்?''

''அன்றே வாங்கி, நீ கொடுத்த அளவிலேயே இதையும் தைக்கச் சொல்லி வாங்கி வந்தேன். அப்போதே கொடுத்தால் மறுப்பாயென்று தான் நானே வைத்திருந்தேன்.''

''இப்போது மட்டும் மறுக்க மாட்டேன் என்று உங்களுக்கு யார் சொன்னது?'' என்றாள் ஒரு மாதிரியாக.

''மாட்டாயென்று ஒரு நம்பிக்கைதான். ரொம்ப மறுத்தால் இன்றைக்கு என் பிறந்த நாள். அதனாலாவது வாங்கிக் கொள் என்ற உண்மையைச் சொல்லி விடலாமென்றிருக்கிறேன்.''

''பவன்! உண்மையாகவேவா'' என்று கேட்டவள், ''மனமார்ந்த வாழ்த்துக்கள்'' என்று சிரிப்போடு கூறினாள்.

''தேங்க்யூ துளசி. இன்று இதை நீ அணிந்து கொள்ள வேண்டும். ப்ளீஸ்.''

அதற்கு மேல் மறுக்க முடியவில்லை அவளால்!

சற்று நேரத்திலேயே பாஸ்மதி ரைஸ் பாயாசம் தயாரித்து அவனுக்கும், மற்றவர்களுக்கும் கொடுத்து விட்டு, தன் அறைக்குள் சென்றாள்.

சேலையை உடுத்திக் கொண்டு வந்தவளைப் பார்த்து, 'வா..வ்.. பியூட்டிபுல் துளசி' என்றவனின் பார்வை, என்றுமில்லாதவாறு அந்த நிமிடம் மாறியது!

தலையைத் தாழ்த்திக் கொண்டாள் துளசி!

"நானும் கிளம்பி வருகிறேன். இருவரும் உன் ரெகுலர் கோவில் வரை ஒரு வாக்கிங் போய் வரலாம்" என்று விட்டு, விசிலடித்துக் கொண்டு மாடியேறினான்.

மலையம்மனுக்காக பூப்பறித்துக் கொண்டு வந்தவள், கூடவே லைட் கத்திரி, ஆரஞ்சு, குங்கும நிற டேலி யோக்களைப் பெரிய காம்புகளுடன் பறித்துக் கட்டி, காம்பின் முடிவில் கலர் ஜிகினா பேப்பரைச் சுற்றி அழகான பூங்கொத்தாக்கி, அவனிடம் கொடுப்பதற்காக கையில் வைத்துக் கொண்டு ஹாலில் காத்திருந்தாள்.

புத்தம் புது பூக்கள், நளினமாக புன்னகைப்பது போல் தோன்றியது!

பூக்களின் மென்மையான இதழ்களை, வலித்து விடுமோ என்பதுபோல மெல்...ல வருடினாள் துளசி!

குறைந்த பட்சம், சில நிமிடங்களாவது நீடித்திருக்க வேண்டிய இனிய தருணம் அது!

உனக்குக் கொடுத்து வைக்கவில்லை துளசி என்பது போல, அப்போது சர்ர்ரென்று வேகமாக வந்து நின்றது ஒரு டேக்ஸி.

அதிலிருந்து இறங்கிய நவ நாகரீக சுந்தரியொருத்தி இரண்டு சக்கர சூட்கேசுகளை எடுத்துக் கீழே வைத்து விட்டு, வேகமாக உள்ளே வந்தாள்!

'இவளுக்குத் தன் பெட்டிகளை எடுத்து வைத்துப் பழக்கமில்லை போல் தெரிகிறது. இல்லையென்றால் போர்ட்டிக்கோவின் நடுவிலேயே வைத்துவிட்டு வரமாட்டாள். குறைந்தபட்சமாக சற்று ஓரமாகவாவது வைத்திருப்பாள்!



'யாராக இருக்கக்கூடும்? யாரென்று கேளாமல் செக் யூரிட்டி உள்ளே அனுப்ப மாட்டாரே?' என்று கேள்விகள் தொடர்ந்தது!

பந்தயக்குதிரை மாதிரி டக், டக்கென்று நடந்து வந்த புதியவளின் கண்களில், அழகாக உடுத்திக் கொண்டு கையில் பூங்கொத்துடன் வரும் துளசி பட்டாள்!

அதே கழுதை தான்!

புதியவளின் கண்களில் அவ்...வளவு சீற்றம் வெளிப் பட்டது!

"நீங்கள் யார்? யாரைப் பார்க்க வேண்டும்?" என்று மரியாதையுடன் நிதானமாகக் கேட்டாள் துளசி.

"நான் யாரென்பது இருக்கட்டும். உன் முந்தானையில் முடிந்து வைத்துக்கொண்டு, அலுவலகம் கூட போக விடாது நாசமாக்கிக் கொண்டிருக்கிறாயே, அந்த மனிதர் எங்கே. எங்கே பூட்டி வைத்திருக்கிறாய்?

"உன்னைப் போன்ற மேனா மினுக்கிகளுக்கெல்லாம் அழிவே கிடையாதாடி? ஒருத்திப் போனா ஒருத்தியென்று வந்து கொண்டே இருப்பீர்களா?

"இந்தரை மாதக் கணக்காக இங்கேயே பிடித்து வைத் திருக்கிறாயே? அப்படி என்ன சொக்குப் பொடியடி போட்டாய்?" என்று தூற்றினாள் வந்தவள்.

பவனேந்திரனைத் தான் - இந்தர் என்கிறாள் போலிருக் கிறது.

அவள் பேசப்பேச சுறுசுறுவென்று ஆத்திரம் வந்தது துளசிக்கு.

முந்தானை, சொக்குப்பொடி என்று எவ்வளவு கேவலமாகப் பேசுகிறாள். என்ன தைரியமிருந்தால் இப்படிச் சொல்லுவாள்?

வீடு தேடி வந்தவள் என்று மரியாதை கொடுத்தது தப்பு போலிருக்கிறது!

''கொஞ்சம் நாக்கை அடக்கி மரியாதையுடன் பேசுகிறீர்களா? யார் என்னவென்று தெரியாமல் கண்டபடி உளற வேண்டாம்'' என்று கடிந்தாள் துளசி.

''நான் நாக்கை அடக்க வேண்டுமா? எதற்கு. உன்னைப் போன்ற கழிசடைகளுக்கு வசதியாக இருக்குமென்றா? நீ யாரென்று உன் மேக் அப்பைப் பார்த்தாலே தெரியவில்லை. ஆள் மயக்கி. ஆசை நாயகியாக வாழ்ந்தே அத்தனை வசதிகளையும் அனுபவிக்கிற ஈனப்பிறவிகள்'' என்று எடுத்தெறிந்து பேசினாள்.

சீ! என்ன பிறவி இவள்? முழுவதுமாக எதையும் அறியாமல், தான் யார் என்றும் சொல்லாமல், கண்டபடி உளறிக் கொண்டு.

பவனுடன் பழகும் பெண் என்று, தன்னைப் பற்றி தவறாக எண்ணிக் கொண்டு பேத்துகிறாளே!

இவ்வளவு அழகான பெண்ணின் வாயிலிருந்து வரத்தக்க வார்த்தைகளா இதெல்லாம்?

அத்திப்பழம் என்றொரு பழமுண்டு!

வெளிப்பக்கம் அத்தனை அழகாக மிருதுவாயிருக்கும். பிட்டுப் பார்த்தால் தான் உள்ளேயிருப்பதெல்லாம் பூச்சி, சொத்தையென்பது தெரியுமாம்!



அழகான அமைப்பைக் கொண்ட பல பெண்களிடம், அலங்கோலமான குணம்தான் வெளிப்படுகிறது போலும்!

இவள் உளறிக் கொட்டுவதை எப்படி நிறுத்துவது என்று துளசி நெற்றியைச் சுருக்கியபோது, ''என்ன சத்தம் துளசி?'' என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தான் பவனேந்திரன்.

புதியவளைப் பார்த்தவனுக்கு அதிர்ச்சியென்பதை, அவனுடைய முகமாற்றத்திலிருந்தே தெரிந்து கொண்டாள் துளசி!

ஏன்?

''சுமனா நீயா?'' என்றான் நம்ப மாட்டாதவனாக!



## 18

இவள் தெரிந்தவள்தான் போலிருக்கிறது என்று நினைத்ததையும் மீறி, இப்படியொரு தெரிந்தவள் இருக்க வேண்டுமா? என்று தோன்றவும் தவறவில்லை துளசிக்கு!

ஆனால் சுமனா அலட்சியமாகத் தலையை வெட்டி, ''பரவாயில்லையே என் பெயர் கூட இன்னும் ஞாபகமிருக்கிறதே. என்ன அதிசயம்?'' என்று ஏளனமாக உதட்டைப் பிதுக்கினாள்.

முறைத்தான் அவன்.

''உண்மையைச் சொன்னால் ஏன் முறைக்கிறீர்கள் இந்தர்?'' என்றாள் ஏளனம் தொடர.

"நீ எப்படி இங்கே வந்தாய்? எதற்காக வந்தாய்?'' என எரிச்சலோடு கேட்டான்.

''இவ்வளவு நாளாக பொறுமையோடிருந்தது போது மென்று அத்தையின் பேச்சையும் மீறி, நானே ஒரு டிடெக்டிவ் ஏஜென்ஸியை அணுகி, நீங்கள் அடிக்கடி காணாமல் போகும் மர்மத்தைக் கண்டு பிடிக்க முயன் றேன்.

''அவர்களிடமிருந்து சமீபத்தில்தான் எனக்கு இந்த அட்ரஸ் கிடைத்தது. சில நாட்களுக்கு முன்பு கோவை யில், தற்செயலாக உங்களோடு இவளையும் பார்த்தேன்.

''உங்களின் ஜகதல பிரதாபத்தனம் இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறதென்பதை, கண் முன்னே பார்த்த பிறகும் சும்மாயிருக்க முடியுமா?

''அதனால் அத்தைக்கும் தெரிவித்தேன். அவர்களும் இப்போது வந்து கொண்டிருக்கிறார்கள்'' என்றாள் சுமனா.

''அம்மாவா?'' என திடுக்கிட்டுக் கேட்டான் அவன்.

''ஆமாம். உங்கள் அம்மாவேதான். அவர்கள் வந்தால் தான் சில பிசாசுகளையெல்லாம் விரட்டியடிக்க முடியு மென்று தகவல் கொடுத்தேன். கிளம்பிய நேரத்திற்கு, இன்னும் சில நிமிடங்களில் வந்து விடுவார்கள்.

''அதன் பிறகு என்னை எப்படி அலட்சியப்படுத்திப் பேசுகிறீர்கள் என்று பார்த்து விடுகிறேன்'' என்று சவால் விடுவது போல் கூறினாள் சுமனா.

''முட்டாளே. உன் கிறுக்குத் தனத்திற்கு அளவில் லையா? காலிலே ஆபரேஷன் செய்திருப்பவர்களைப் போய், இவ்வளவு தூரம் பயணம் செய்ய வைத்திருக் கிறாயே? வலி உண்டாகுமென்று தெரியாது. படுத்துக் கொண்டும் வர முடியாதே'' என்று வேதனையோடு நெற்றியை நீவியவன், ''துளசி கீழேயிருக்கும் பெரிய அறையைத் தயார் படுத்தி வை'' என்றவனுக்கு இருப்புக் கொள்ள முடியவில்லை!



அமைதி கலைகிறதென்று அவன் அம்மா செல்போன் பயன்படுத்துவதில்லையே. அதற்காக இப்போது வருத் தப்பட்டான் பவனேந்திரன்.

'செல்போன் வைத்திருந்தால் அவர்களின் நலன் குறித்து அறிந்திருக்கலாமே!' என்று தவித்தபடி முகத்தைத் துடைத்தபோது, டேக்ஸி வந்து நின்றது.

கண் இமைக்கும் நேரத்திற்குள் வெளியே சென்று, டேக்ஸியின் கதவைத் திறந்து, 'அம்மா!' என்றான் பவனன்.

''விடுடா. என்னால் திவ்வியமாக நடக்க முடியும்'' என்று தாயார் கூறியபோதும், அவரின் கரம் பற்றி, ஒட்டியே நடந்து வந்தான்!

''முதலில் சற்று நேரம் படுத்து ஓய்வெடுங்கம்மா'' என்று கூறி அறையினுள் அழைத்துச் சென்றான்.

இரண்டு தலையணைகளை எடுத்து வசதியாக வைத்தாள் துளசி.

'குட்' என்று கண்களிலேயே பாராட்டியவன், ''அம்மா இவள் துளசி'' என்று அறிமுகப்படுத்தினான்.

தன் மெல்லிய கரங்களைத் தாமரை மொட்டாகக் குவித்து, 'வணக்கம்' என்றாள் துளசி.

'ம்' என்று தலையசைத்து, உச்சி முதல் பாதம் வரை அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, தலையணையில் சாய்ந்தார் வேதவதி.

"துளசி! அம்மாவிற்கு ஸ்ட்ராங்கா கறுப்பு டீ போட்டுக் கொண்டு வா" என்று அவன் முடிக்கும் முன், சமைய லறைக்குச் சென்று விட்டிருந்தாள் அவள்.

"பெற்றவளைத் தாங்குகிற நல்லவனாக உன்னைக் காட்டிக் கொள்கிறாய் போலிருக்கிறது. உண்மையிலேயே என் மீது அன்பும், அக்கறையிருப்பவனால், வருடக் கணக்காக பேசாதிருக்க முடியுமாடா?" என முகத்திற்கு நேராகக் கேட்டார்.

"என் பேச்சைக் கேட்காதவன் என் முகத்தில் விழிக் கவோ, பேசவோ வேண்டாமென்று நீங்கள் சொன்ன பிறகு நான் எப்படிம்மா வருவது?"

"ஓ. கௌரவமோ? நான் சொன்னதைக் கேட்டுச் செய்து விட்டுப் பார்த்திருக்கலாமே?"

"அது முடியாதேம்மா" என்றான்.

"ஏன் முடியாது?" என்று கேட்டார் வேதவதி.

"ஏன் மௌனமாகிறீர்கள் இந்தர். பதில் சொல்வது தானே?" என்று எள்ளினாள் உள்ளே வந்த சுமனா.

"நீ உள்ளே நுழையாதே" என்று பல்லைக் கடித்தான்.

"அவள் கேட்காமல் வேறு யார் கேட்பார்கள்?" என்றாள் பெற்றவள்.

அப்போது டீயுடன் உள்ளே வந்த துளசியின் காதில், எதுவும் தெளிவாக விழவில்லையென்றாலும், நடந்த ஒன்றிரண்டு சம்பவங்களிலேயே ஆடிப்போனது அவள் மனது.



"உன் டீ நன்றாயிருக்கிறது துளசி" என்று ஒருமுறை சுவைத்துவிட்டு நிமிர்ந்து கூறினார் வேதவதி.

மெல்ல முறுவலித்தாள் துளசி.

"என் மகனுடன் நான் சற்று நேரம் பேசவேண்டும். போகும்போது கதவை நன்றாக மூடிவிட்டுப் போம்மா" என்றார்.

அவ்வாறே செய்தாள் துளசி.

"உடனே பேசவேண்டுமா அம்மா? அலைச்சல் போக ஓய்வெடுத்துக் கொண்ட பிறகு பேசலாமே" என்றான்.

"தொழிலையே தனியாக நடத்தும்போது இந்தப் பயணம் பெரிய கஷ்டமா என்ன? மேலும் என் கடமையைச் செய்து முடிக்கும் வரை ஓய்வும், நிம்மதியான உறக்கமும் ஏது?

"உன்னைப் போல எத்தனை நாள் வேண்டுமானாலும் ரெஸ்ட் எடுக்க, எல்லோருக்கும் கொடுத்து வைக்குமா என்ன?

"ஏதோ கிடைக்கிற நேரத்தில், கோழித் தூக்கம் போட்டுக் கொள்ள வேண்டியதுதான்" என்று ஆரம்பிக்கும் போதே தாக்கினார் வேதவதி.

கேட்டுக் கொண்டிருந்த சுமனாவிற்கு கை தட்டலாம் போலிருந்தது!

இந்த வயதிலும் அத்தை எப்படி பாயிண்டாகப் பேசுகிறார்கள்?

இப்போது ரசித்தாலும், பின் வரும் காலங்களில் கொஞ்சம் அடக்கி வைக்கும்படிச் செய்ய வேண்டும். இல்லையென்றால் தன் சுதந்திரத்திற்கே வினையாக முடியலாம் என நினைத்தாள் சுமனா.

''ஏம்மா ஒரு மாதிரி ஒதுங்கிப் பேசுகிறீர்கள். உங்களால் முடியுமென்றுதானே நான் எதிலும் தலையிடுவதில்லை. என் தேவை வேண்டுமென்று சொன்னால் ஓடி வந்திருக்க மாட்டேனா?'' என்றான்.

''பெற்றவள் தனியே கஷ்டப்படுகிறாளே என்று நீயாகவே ஓடி வந்திருக்க வேண்டுமடா. மகனே ஆனாலும் நான் எதையும் கேட்டு வாங்க மாட்டேன்'' என்று தலையை நிமிர்த்திக் கூறினார் வேதவதி.

அந்த கம்பீரத்தைக் கண்டு, தானுமே ஒரு கணம் வாயடைத்துப் போனாள் சுமனா!

இந்த அத்தைக்கு அவ்வப்போது உடல் சுகமின்றிப் போகிறது என்ற சேதி பொய்யோ? உண்மையாக இருந்தால் எப்படி இவ்வளவு கம்பீரமுடன் பேசமுடியும்?

இவர்களிடமிருந்து இன்னும் நிறையவே கற்றுக் கொள்ள வேண்டும் போலிருக்கிறதே!

''தவறாகப் பேசியிருந்தால் மன்னித்து விடுங்கம்மா'' என்றான் பணிந்து.

''அதை விடு பவன். இந்த முறை இரண்டிலொரு முடிவு தெரியாமல் உன்னை விட முடியாது'' என்றார்.

''பேசுவதற்கு நானும் தயாராகத்தான் இருக்கிறேன் அம்மா. ஆனால் தனியாக'' என்றுவிட்டு, எழுந்து ஜன்னலருகே சென்றான் அவன்.

அவன் முதுகிலேயே ஓங்கி ஒன்று வைக்க வேண்டும் போல ஆத்திரம் வந்தது சுமனாவிற்கு.

'என்ன கொழுப்பிருந்தால் அவளையே வெளியே போகச் சொல்லுவான். இருக்கட்டும். பிறகு வட்டியும்,



முதலுமாகப் பார்த்துக் கொள்கிறேன்' என்று கறுவியபடி வெளியேறினாள் சுமனா.

''நீ செய்வது சரியல்ல பவன். சுமனாவிற்கு நீ மரியாதை கொடுக்க வேண்டும். அந்தக் கடமை உனக்கிருக்கிறது'' என்றார் வேதவதி.

''அவள் பொருட்டு மரியாதையோ, கடமையோ எனக்கிருப்பதாக நான் நினைக்கவில்லை அம்மா'' என்றான் தெளிவாக.

''அப்படிச் சொல்லி தப்பித்துக் கொள்ள முடியாதுடா. மூன்று வருடத்திற்கு முன்பாக ஊரறிய விழா நடத்தி, அவளைத் திருமணம் செய்து கொள்வதாக நிச்சயம் செய்து ஒத்துக் கொண்டிருக்கிறாய் நீ'' என்றார்.

''பெரிய நிச்சயம்'' என்று ஏளனமாகக் கூறினான் அவன்!

## 19

''ஓரளவிற்குப் பெரிய நிச்சயம் தான். ஐநூறு பேருக்கு மேல் வந்ததாக சுமனா அப்பா சொன்னாரே'' என்ற கேலி இழையோடக் கூறினார் வேதவதி.

சட்டென்று சிரிக்க நினைத்த மனதை அடக்கிக் கொண்டு, ''ஐந்தாயிரம் பேரின் முன்னிலையில் நடந்திருந்தாலும் அதைப்பற்றி எனக்கு ஒன்றுமில்லையம்மா. இந்தத் திருமணம் நடக்காது. மேற்கொண்டு எந்த ஏற்பாடும்

செய்ய வேண்டாம் எல்லாவற்றையும் நிறுத்தி விடுங்கள் என்று, சுமனாவின் வீட்டிற்கே சென்று சொல்லி விட்டேனே.

''முடிந்த விஷயம் பற்றி மீண்டும் ஏன் பேசுகிறீர்கள்?'' என்றான் மகன்.

''விஷயம் இன்னும் முடியவில்லை என்பதால் தான்'' என்றார்.

''என்னைப் பொறுத்தவரை எல்...லாமே முடிந்து போயிற்றும்மா. சுமனா போன்று ஒரு பெண்ணையே நான் மறக்க நினைக்கிறேன்.

''ஊரறிய நிச்சயம் நடத்தி விட்டால், பிறகு தங்கள் இஷ்டப்படி ஆட்டி வைக்கலாம் என தப்புக் கணக்குப் போட்டு விட்டார்கள்.

''என்ன தைரியமிருந்தால், சொத்து முழுவதையும் சுமனா பெயருக்கு மாற்றினால்தான், மேற்கொண்டு திருமணம் நடக்கும் என்பார்கள்!

''என் பெயரிலிருந்தால் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில், கண்டவளுக்கும் வாரி இறைத்து விடுவேன் என்ற விளக்கம் வேறு.

''கேட்கும் போது எப்படியிருந்தது தெரியுமா?

''அந்த வீட்டு ஆண்கள் பேசப்பேச, இவள் ஒத்தூதிக் கொண்டுதான் நின்றாள்.

''நிச்சயம் தான் நடந்து விட்டதே, இனிமேல் திருமணம் நின்றால் அசிங்கம், கண்டவர்களின் வாயிலும் விழ வேண்டியிருக்கும். அதற்கு பயந்தே ஒத்துக் கொள்வான் என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டார்கள்.



''எல்லாவற்றையும் எழுதிக் கொடுத்துவிட்டு, இவளுக்கு கூஜா தூக்கிக் கொண்டு சுற்றுவேன் என்று நினைத்து விட்டார்கள்.

''அழகான பெண்ணைப் பெற்றிருக்கிறோம் என்ற திமிர்!

''பைசா எழுதித் தர முடியாது. நீங்கள் என்ன திருமணத்தை நிறுத்துவது, நானே நிறுத்துகிறேன். இந்த நிமிடத்திலிருந்து நமக்கிடையே எந்த பந்தமும் இல்லையென்று விட்டேனே.

''பிறகு ஏன் தேடி வந்து தொல்லை பண்ண வேண்டும்?'' என்று எரிச்சலோடு கூறினான் பவனன்.

''இந்தரைக் கணவனாக நினைத்துவிட்டு, வேறு ஒருவரை என்னால் மணக்க முடியாது என்று கூறி, மற்ற திருமண ஏற்பாட்டையெல்லாம் கூட தடுத்துவிட்டு, உனக்காகவே காத்திருக்கிறாள் சுமனா'' என வக்காலத்து வாங்கினார் தாயார்.

''வேறு திருமண ஏற்பாட்டைத் தடுக்கிறாளாமா? இந்தக் கூத்தெல்லாம் கூட நடந்ததாமா?'' என்றான் கிண்டலாக.

''இன்னமும் உன் கோபம் குறையவில்லை போலிருக்கிறது. நம்ம வீட்டுப் பெண்ணின் வாழ்க்கை கடைசி வரை நல்ல முறையிலிருக்க வேண்டும் என நினைப்பது பெற்றோரின் தப்பில்லையே பவன்.''

''தப்பே...யில்லை அம்மா. எந்த மடையன் கூஜா தூக்கிக் கொண்டு சுற்றத் தயாராக இருக்கிறானோ, அவனுக்கே திருமணம் செய்து வைக்கச் சொல்லுங்கள்'' என்றான் ஏளனமாக.

''செய்த தப்பிற்காக ஒருவர் வருந்தும்போது மன்னிக்க வேண்டும் கண்ணா. சொத்தை எழுதிக்கேட்ட ஒரே காரணத்திற்காக, அவளை உனக்குப் பிடிக்காமல் போய் விட முடியுமாடா? என்னால் நம்ப முடியவில்லை'' என்றார் விடாமல்.

''அம்மா. ப்ளீஸ் ஒரு விஷயத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். பணம் பெரிதல்ல, மனிதர்கள்தான் முக்கியம் என்று சின்ன வயதில் நீங்கள் சொல்லிக் கொடுத்ததை, இன்று வரை நான் மறக்கவில்லை.

''என் மீது நம்பிக்கையின்றி, பணம் தான் தனக்குப் பாதுகாப்பென்று நினைத்தவளை எப்படி மன்னிப்பது?

''மேற்கொண்டு அவளைப்பற்றி பேசவும் எனக்கு விருப்பமில்லை அம்மா'' என்று பேச்சை முடிக்க முயன்றான் அவன்.

ஒரு பெருமூச்சை வெளிப்படுத்தி, ''என்ன நடந்திருந்தாலும் என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளச் சொல்லுங்கள் அத்தை. அவர் காலில் விழுந்து கேட்கவும் தயாராயிருக்கிறேன் என்று கண்ணீர் விடுகிறாள் சுமனா.

''அவள் வீட்டு மனிதர்களும் உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறார்கள். இதற்கு மேலும் என்னடா? பெண் பாவம் வேண்டாம் பவன். நான் சொல்வதைக் கேள்'' என்று அறிவுறுத்தினார் தாயார்.

''என் மனம் மாறாதம்மா.''

''மாறாதா? மாற விருப்பமில்லையா? அதற்குக் காரணம் அந்தப் பெண் துளசியா?'' என்று கோபமுடன் கேட்டார்.



''தயவு செய்து துளசி மீது சந்தேகப்படாதீர்கள் அம்மா. அவள் முழுக்க முழுக்க வேறு மாதிரி'' என்று கூறி, அவள் எப்படி இங்கே வந்தாள் என்பதிலிருந்து, மேலோட்டமாக எல்லாவற்றையும் சொன்னான்.

''அவள் நல்லவள் என்பதைப் பழகப்பழக தெரிந்து கொள்வீர்கள்'' என்றான் முடிவாக.

''பார்க்கலாம்'' என்றவர், ''நான் சில நாட்கள் இங்கே தங்கலாம் என்றிருக்கிறேன். உனக்கு ஆட்சேபணையில்லையே?'' என்று கேட்டார்.

''என்ன கேள்விம்மா இது'' என்றான் தாக்கமுடன்.

''என்னுடன் சுமனாவும் இருக்கப் போகிறாள்'' என்று கூறி சிரித்தார் வேதவதி.

''இங்கே யாரை வேண்டுமானாலும் தங்க வைக்கிற உரிமை உங்களுக்கு உண்டு'' என்றான் மகன்.

நன்றாகவே சிரித்து ''பிறந்த நாளும் அதுவுமாக கொஞ்சம் வாட்டி விட்டேனோ?'' என்று மகனின் உச்சி முகர்ந்து வாழ்த்தினார்.

அதன் பிறகு வந்த நாட்களையெல்லாம், நெட்டித் தள்ளுவதைப் போல் தோன்றியது துளசிக்கு!

எந்த நேரமும் சதா யாருடனாவது, செல்போனில் அரட்டையடித்துக் கொண்டிருந்தாள் சுமனா.

அவளின் அலட்சியப் பார்வையும், உதாசீனத்தையும் சகித்துக்கொள்ள வேண்டியிருந்தது துளசிக்கு.

''சை! இவ்வளவு காரமாகச் சமைத்தால் பத்தே நாளில் அல்சர் வந்துவிடும். தினமும் இப்படித்தான் சாப்பிடுகிறீர்களா இந்தர்?'' என்று அக்கறையோடு கேட்டு விட்டு, முறைப்போடு துளசியைப் பார்த்தாள்.

''எனக்குப் பிடித்த மாதிரி நான் சாப்பிடுகிறேன். அதைப் பற்றி நீ என்ன சொல்வது. பிடித்தால் சாப்பிடு இல்லையென்றால் நீயே சமைத்துக் கொள்''. என்று விட்டு, இன்னும் கொஞ்சம் குருமாவை எடுத்து தட்டில் ஊற்றிக் கொண்டான் அவன்.

சிரிப்பைக் கட்டுப்படுத்தவென்று, தண்ணீர் ஊற்றும் சாக்கில் தலை குனிந்தாள் துளசி!

'கழுதை இளிக்கவா செய்கிறாய்? எத்தனை நாளைக் கென்று பார்த்து விடுகிறேன்' என்று நினைத்துவிட்டு, கோபமாக எழுந்து சென்றாள் சுமனா.

''இன்றைக்குக் குருமா வெகு சுவை துளசி'' என்று சிரித்துவிட்டுச் சென்றான் பவனன்.

அன்று மாலை நேரம், டீ.வி. பார்க்கவென்று ஓடிவந்து, துளசியைத் தேடிய செம்பருத்தியையும், தாமரையையும் பிடித்து நிறுத்தினாள் சுமனா.

''நீங்கள் அந்த வேலைக்காரர்களின் பிள்ளைகள் தானே? உங்களுக்கு வீட்டிற்குள் என்னடி வேலை? எதற்காக வந்தீர்கள்?'' என்று அதட்டினாள்.

''துளசிக்காவுடன் சேர்ந்து டீ.வி.யில் டேன்ஸ் போட்டி பார்க்க வந்தோம்.'' என மிரட்சியோடு பதில் சொன்னார்கள் சிறுமிகள்.

''ஆமாம். நீங்கள் பார்க்கவில்லையென்று தான் ஆடுபவர்கள் எல்லாம் அழுகிறார்களா? வேலைக்காரர் களின் பிள்ளைகளுக்கு வீட்டிற்குள் என்ன வேலை? இனிமேல் உள்ளே வரக்கூடாது. ஏதாவது வேண்டுமென் றால் வெளியே நின்று தான் கேட்க வேண்டும் புரிந்ததா?



ஓடிப்போங்கள்'' என்று விரட்டிவிட்டு, ஃபேஷன் சேனலை ஓட விட்டாள் சுமனா.

சத்தம் கேட்டு வேகமாக வந்த துளசிக்கு பலத்த அதிர்ச்சி!

'ஓடிப்போங்கள்' என்று அந்தச் சிறுமிகளைப் போய் விரட்டுகிறாளே. என்ன பிறவி இவள்?

சட்டென்று வாடிய பூவைப் போல முகம் மாற, கலங்கிய கண்களுடன், ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டு, வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்திருந்தார்கள் சிறுமிகள்!

மான் குட்டிகள் போல துள்ளிக் கொண்டு செல்லும் சிறுமிகளின் நடை, இன்று தயக்கமுடன் அடியெடுத்து வைத்தது!

உடனே திரும்பிச் சென்றால் பெற்றவள் என்ன வென்று கேட்பாள். திட்டியதைச் சொன்னால் ஏன் போனீர் கள் என்று வைவாளோ என்றெண்ணித் தயங்கி நடக் கிறார்களோ?

நினைத்தாலும் ஆச்சரியமில்லைதான். அத்தனை புத்திசாலித்தனமான சிறுமிகள்!

அந்தப் பூக்களின் தளர் நடை, துளசியைக் கலங்க வைத்தது!

அவசரமாக முகத்தைச் சரி செய்து கொண்டு நிமிர்ந்த போது, தற்செயலாக எதிரே நடந்து வந்தான் பவனன்.

நின்று பார்த்தவனைக் கடந்து வேகமாக வெளியே சென்று சிறுமிகளைப் பிடித்தாள்.

பெயர் சொல்லி அழைக்காமல் தோளில் கை வைத்துத் திருப்ப முயன்றபோது, ''அய்யோக்கா. அடிச்சிடாதீங்க.

இனி மேல் நாங்கள் வரமாட்டோம், வரவில்லை'' என்று நடுங்கியபடியே கூறித் திரும்பினார்கள்.

மண்டியிட்டமர்ந்து சிறுமிகளைத் தோளோடு அணைத்துக் கொண்டாள் துளசி.

''அந்த அக்காதானோ என்று பயந்தே போயிட்டோம்'' என்று நிம்மதியான போதும், சிரிப்பு மலரவில்லை.

''புது அக்கா, இனிமேல் நாங்க பெரிய வீட்டுக்கு உள்ளே வரக்கூடாது, வெளியே நின்னுதான் எதுன்னாலும் கேட்க வேண்டும்னு சொல்லிட்டாங்க'' என்றாள் செம் பருத்தி.

''நீங்க பார்க்கலைன்னுதான் அழுவறாங்களா? அப் படீன்னாங்க'' என்று தலையைக் குனிந்து, மேல் சட்டையின் ஓரத்தை விரலில் சுற்றியபடியே சொன்னாள் தாமரை.

''அவர்கள் பேசியதையெல்லாம் விட்டுவிட்டு, இப்போது நாம் கண்ணாமூச்சி விளையாடலாமா?'' என்று கேட்டு, அப்படியே ஓடிப்பிடித்து விளையாடி சிறுமிகளை முகம் மலரச் செய்தாள் துளசி.

மறுதினம் மாலைக்குள் சிறுமிகளின் வீட்டிற்கு வந்து சேர்ந்தது, ஒரு அழகிய டீ.வி.யும், குட்டி டிஷ் தட்டும்.

கறிவேப்பிலை பறிக்க தோட்டத்திற்குச் சென்ற போது, ''துளசிக்கா. எங்க வீட்டிற்கும் டி.வி. வந்தாச்சு. பெரிய வீடு சார் வாங்கித் தந்தாங்க'' என்று, தன் மட்டற்ற மகிழ்ச்சியை முகத்தில் காட்டினாள் செம்பருத்தி!

பவனன் நின்று பார்த்ததின் அர்த்தம் இதுதானோ? சிறுமிகளுக்காகவும் கூட அவன் யோசிப்பானென்று அவள் நினைக்கவில்லையே!



வழியிலேயே வந்தவன், ''அதன் விலை ஒன்பதாயிரத் தையும் என் செலவுக் கணக்கில் எழுதி விடு துளசி'' என்று கூறினான்.

முறுவலோடு தலையாட்டினாள் துளசி.

இருவரையும் எரிச்சலோடு பார்த்தாள் சுமனா!

## 20

சுமனாவுக்கு துளசியைக் கண்டாலே பிடிக்கவில்லை. பவனேந்திரன் ஒரு பெண்ணிடம் நின்று பேசினாலே ஏற்க முடியாது!

இங்கே சகலமும் துளசி மயம் என்றல்லவா வைத்திருக் கிறான்!

இங்கே வந்த முதல் நாளே, அவளை அடித்து விரட்ட வேண்டுமென்று அவ்வளவு கோபம் வந்தது!

அவள் கட்டியிருந்த புடவை தான் அழகாக இருப்பது மின்றி, தன்னை உடுத்துகிறவர்களையும் நல்ல அழகி யென்று காட்டுகிற ரகம்.

இப்படி அலங்கரித்துக் கொண்டுதான் அவன் தன்னை விட்டுப் போய்விடாதபடி பிடித்து வைத்திருக்கிறாள்.

விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சலம் மாதிரி இவ ளுக்கு துளசி ராணியென்ற பெயராம். தூ!

இவளை எப்படியாவது விரட்டியாக வேண்டும். அதற்கு அத்தையின் உதவி அவசியமென்பதை உணர்ந்து, அவர்களைப் பார்க்கச் சென்றாள்.

''துளசி இங்கேயிருக்கும் வரை, இந்தருக்கும், எனக்கும் திருமணம் நடக்க வாய்ப்பேயில்லை. அவள் தப்பானவள். முதலில் அவளை வீட்டை விட்டு விரட்டுங்கள் அத்தை'' என்று முறையிட்டாள்.

''விஷயம் தெரியாமல் பேசாதே சுமனா. நாம் நினைத்த மாதிரி துளசி தப்பான பெண் அல்ல'' என்று தொடங்கி, அவள் இங்கே வந்த கதையைச் சொன்னார் வேதவதி.

இந்த அத்தை, மகன் சொன்னால் அப்படியே நம்பிக் கொள்வாளா?

சுமனாவும் அதே மாதிரி, நம்ப வேண்டுமென்ற அவசியமில்லையே? இருந்தாலும் அத்தையை மறுத்துப் பேசி காரியத்தைக் கெடுக்க விரும்பவில்லை அவள்.

எனவே, ''அவள் நல்லவள் என்கிறீர்கள். சரி இருக்கட்டும். ஆனால், அவள் மனதிற்குள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பது நமக்குத் தெரியாதே?

''தனியேயிருக்கும் இருவரிடையே ஈர்ப்பு ஏற்படுவது இயற்கைதானே. அப்படி இவர்கள் மனதில் ஏதாவது எண்ணமிருந்தால் என்ன செய்வது?

''அவள் நல்லவள். மனதில் வேறு மாதிரி ஆசையில்லாதவள் என்றால், வெளியே ஒரு வேலை வாங்கிக் கொடுத்து அனுப்பி விடலாம். மறுக்காமல் போகட்டும்.

''அவளை வெளியே அனுப்பினால் தான் எனக்கு நிம்மதி. அதற்கு நீங்கள்தான் வழி பண்ண வேண்டும்'' என்றாள் சுமனா.

சுமனா இவ்வளவு அவசரப்படவும், கோபமடையவும் நிறையவே காரணமிருந்தது.



இவன் பாட்டில் திருமணத்தை நிறுத்திவிட்டு வந்தால், அவள் எத்தனை பேருக்குப் பதில் சொல்லி மாய்வது?

இதில், விஷயம் தெரிந்து கொண்ட பிறகும், வேண்டுமென்றே கேட்கிற கழுதைகள் வேறு!

சும்மா மிரட்டினால் குடும்ப மானத்தைக் காக்கவென்றாவது, படிந்து விடுவான் என்றெண்ணியது அவர்களுக்கே திருப்பியடித்து விட்டதே!

கண்டவர்களின் கிண்டலுக்கும் ஆளாக நேர்ந்ததே, அவளுள் பெருங்கோபத்தை வளர்த்திருந்தது.

திருமணத்திற்குப் பிறகு இதற்கெல்லாம் பவனேந்திரன் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

விருப்பமில்லையென்றாலும் காரியம் நடக்க வேண்டுமென்று, தன் குடும்பத்தாருடன் வேதவதியைக் காணச் சென்று, கொஞ்சம் கண்ணீர் விட்டு தன் உரிமையைப் பெற முயன்றாள்.

ஆனால், அவன் தாயையே பகைத்துக் கொண்டு கிளம்பி விட்டான்!

ஒரு வழியாக அவனைக் கண்டு பிடித்துப் பேச வந்தால், இங்கே கூடவே ஒரு சனியனும் ஜம்பமாக நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறாள்!

'நூறு பேர் வேலை செய்கிற மாதிரி, அதை இவள் நிர்வகிக்கிறாளாம். வேறு ஒன்றுமேயில்லையாமா?

'இருவருமே சேர்ந்து யாரிடம் காது குத்துகிறார்கள்?' என ஏளனமாக நினைத்தாள் சுமனா.

முதலில் அவன் மனைவியாக வேண்டும். பிறகு, அவனோடு எந்தக் கழுதையாவது ஒட்ட முயன்றால்,

வாலை ஒட்ட நறுக்கி, வேப்பிலை அடித்து ஓட்டிவிட முடியாதா என்ன?

சை! இந்த நம்பிக்கை முன்பே இருந்திருந்தால், சொத்தை எழுதித்தா என்று கேட்டிருக்கவே மாட்டார்கள் தான்.

போகட்டும். முடிந்ததை நினைப்பதில் பயனில்லை. கண் முன்னேயிருப்பவனிடம் பேசி சமாதானப்படுத்தி, கெஞ்சி, நடித்தாவது மணந்தாக வேண்டும்.

"ஏற்றுமதியில் கிடைக்கும் பணத்தைக் கோணிப்பை கொண்டுதான் அள்ள வேண்டும் சுமி. பவனனின் தொழில் அப்படியொரு அசுரத்தனமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. நாம் கொஞ்சம் அவசரப்பட்டு விட்டோம் என்று தோன்றுகிறதும்மா" என்று அம்மா சொன்ன பிறகு, அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை!

வேதவதி எப்போதும் நியாயமான பெண்மணி.

தன் ஒன்றுவிட்ட தம்பி மகளை நிச்சயித்துவிட்டு அப்படியே விட்டுவிட மாட்டார்.

நியாய தர்மமென்று பேசி, அவரைத் தூண்டிவிட வேண்டிய அவசியம் இல்லையென்பது போல, அவருக்குமே நின்ற திருமணத்தை எப்படியாவது நடத்திவிட வேண்டும் என்பதே ஆசை!

அந்த ஆசைக்கு அவ்வப்போது தூபமிட்டாள் சுமனா.

சுமனா சொன்னது பலவிதத்திலும் சரியாகவே தோன்ற, மீண்டும் மகனிடம் பேசினார் வேதவதி.

அவன் மனது கொஞ்சமும் மாறாததோடு, துளசியை உயர்த்திப் பேசி புகழாரம் சூட்டினான்.



அதற்குமேல் மகனுடன் எதுவும் பேசவில்லை வேதவதி.

'நல்லவேளை நான் துளசியை விரும்புகிறேன் என்று உளறாமல் இருக்கிறானே. அதுவரை சந்தோஷம் ஏழு மலையானே' என்றெண்ணியவருக்கு, துளசி இங்கேயிருப்பது யாருக்குமே நல்லதல்ல என்ற எண்ணம் வலுவானது!

காலையில் குடிக்க சத்துமாவுக் கஞ்சி தயாரித்து, ஏலக்காயையும் தட்டிப் போட்டு எடுத்துக் கொண்டு, வேதவதியின் அறைக்குள் சென்றாள் துளசி.

அன்று அவளை வித்தியாசமாகப் பார்த்தாள் வேதவதி.

பெரிய தொழிலைத் தனியே நடத்தும் பெண்மணி என்ற பிரமிப்பு துளசிக்கு அவரிடத்திலே உண்டு.

மேலாக பவனேந்திரனின் தாய்!

கஞ்சி தம்ளரை அவர் கையிலே கொடுத்துவிட்டு நின்றாள்.

இவர்கள் ஏன் இந்த அறைக்குள்ளேயே இருக்கிறார்கள்!

குடித்த பிறகு, தம்ளரைக் கழுவி எடுத்துக் கொண்டு, "பின்பக்கத்திலிருக்கும் தோட்டத்தில் நன்றாக காற்று வீசும் அம்மா. சற்று நேரம் நடந்தாலும் புத்துணர்ச்சியாக இருக்கும்" என்றாள் துளசி.

பசேலென்றிருந்த தோட்டத்தை ஜன்னல் வழியே பார்த்து விட்டுத் திரும்பியவர், "அதையெல்லாம் நீதானே திட்டமிட்டு உருவாக்கினாயாம். பவனன் சொன்னான்" என்றார்.

"திட்டம் மட்டும்தான் என்னுடையதும்மா. உழைப்பெல்லாம் தோட்டவேலை செய்பவர்களுடையது" என்றாள்.

மெல்ல முறுவலித்தவரின் பார்வையில், பழைய ஆராய்ச்சி இல்லாததைக் கண்டு சற்றே நிம்மதியுற்றாள் துளசி.

அந்த நிம்மதி சில கணம் கூட நிலைக்காததோடு, தலையிலே பாறாங்கல் விழப்போவதையும் அறியவே யில்லை அவள்!

"உன்னோடு சில விஷயம் பேசவேண்டும். கதவை மூடிவிட்டு வாம்மா" என்றார் வேதவதி.

"உட்கார்ந்து கொள்" என்று விட்டு, "சுமனா யார்? எதற்காக இங்கேயிருக்கிறாள் என்று உனக்குத் தெரியுமா துளசி?" என்று கேட்டார்.

இல்லையென்று தலையாட்டினாள்.

அத்தையென்று உரிமையோடு அழைக்கிறாளே, உறவுக்காரப் பெண் போலிருக்கிறது என்பதற்கு மேல், அவளைப் பற்றித் தெரிந்து கொள்வதில் ஆர்வமில்லை துளசிக்கு.

சிறு பிள்ளைகளிடம் கூட மனம் நோகப் பேசுகிற ஒருத்தி. யாராகவிருந்தால் நமக்கென்ன? தொல்லை செய்யாதிருந்தால் சரி என்பதற்கு மேல், யார் என்ன வென்று அநாகரீகமாக தோண்டித் துருவும் பழக்கம் அவளுக்கு எப்போதுமே பிடிக்காதே!

"சுமனா என் வருங்கால மருமகள். கிட்டத்தட்ட மூன்றாண்டுகளுக்கு முன்பாக, பவன் - சுமனாவிற்கு திருமண நிச்சயம் நடந்தது" என்று தெரிவித்தார்.

வெகுவாக அதிர்ந்து போனாள் துளசி!

பவனன் இன்னொரு பெண்ணுக்கென நிச்சயமான வனா?!



இதைப்பற்றி அவளிடம் ஏன் சொல்லவில்லை. தேவையில்லையென்று நினைத்திருப்பானோ? மறைக்க வேண்டியது அவசியமா?

சொல்லவில்லை என்பது ஒரு பக்கமிருந்தாலும், ஏன் திருமணம் நடக்கவில்லை? சுமனாவிடம் ஏன் அலட்சியமாக நடந்து கொள்கிறான்?

இத்தனை வருடமாக திருமணம் நடக்காததால் தான், எல்லோரிடமும் சுமனா எரிந்து விழுகிறாளோ?

வேதவதியைப் பார்த்தாள் துளசி.

"நிச்சயம் நடந்த மறுநாளே திருமணத்தை நிறுத்தும் படிச் சொல்லிவிட்டு வந்துவிட்டான். அவர்களுக்கு எப்படியிருந்திருக்கும் சொல்லு?"

முன்பைவிட அதிகமாக அதிர்ந்து, "ஏன் நிறுத்தினார் அம்மா? என்று கேட்டாள்.

"இவன் கண்டபடி வாரி இறைத்து விடுவானோ என்ற பயத்தில், அவர்கள் ஒரு நிபந்தனை விதித்தார்கள்.

"திருமணத்திற்குப் பிறகு சொத்து முழுவதையும், சுமனா பெயருக்கு மாற்றிவிட வேண்டுமென்றார்கள்.

"அவர்கள் கேட்டதில் பெரிதாக குறையிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இவன் போக்கு அளவு மீறிப் போய்க் கொண்டிருந்த சமயம் அது.

"திருமணம் நடந்தால் போதும். கணவன், மனைவி யான பிறகு யார் மீதிருந்தால் என்ன என்று, நான் சுமனா விற்கு ஆதரவாக நின்றேன்.

"இப்படியொரு திருமணமே எனக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டான்.

''இவன் தூக்கியெறிந்து வருடங்கள் சென்றபோதும், இந்தரைத் தவிர வேறொருவரை மணக்க மாட்டேன் என்று உறுதியோடு இருக்கிறாள் சுமனா'' என்று கூறினார்.

பவனேந்திரனை விட, சொத்தைப் பெரிதென்று கேட்டிருக்கிறாளே? இந்த சுமனா எவ்வளவு பெரிய முட்டாள்!

''உங்கள் மகனுக்கு ஒரேயடியாக விருப்பமில்லை யென்றால், என்னம்மா செய்ய முடியும்?'' என்று கேட்டாள்.

''மூன்று வருடத்திற்கு முன்பு ஒத்துக் கொண்டவன் தானேம்மா. அவன் மனதை மாற்ற முடியுமென்று சுமனாவும் நம்புகிறாள். நீ தான் என் மருமகள் கவலைப் படாதே என்று அவளுக்கு உறுதியளித்திருக்கிறேன்'' என்றார் வேதவதி.

தொடர்ந்து தலையில் விழுந்த சம்மட்டி அடிகளில், கதிகலங்கிப் போயிருந்தது துளசியின் மூளை!

பவனன் - சுமனாவிற்காக நிச்சயிக்கப்பட்டவன்!

சுமனாவே மருமகள் என்று நினைக்கும் தாயார்!

இந்த அம்மா தன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்? சுமனா வந்த முதல் நாளே வேண்டுமளவிற்குப் பட்டமளித்து விட்டாள்.

இவர்களும் அதேபோல் தப்பானவள் என்றுதான் நினைக்கிறார்களா?

''என்னைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமாம்மா?'' என்று கேட்டாள்.

''தெரியும்மா பவன் சொல்லியிருக்கிறான். பெயரைப் போலவே நீ தூய்மையானவள் என்பது வரை.



''உன்னைப் பற்றிப் பேசும்போதே அவனிடம் ஒருவிதமான மாற்றம் தோன்றுகிறது துளசி.

''அவனுக்கு உன்மீது ஏதோ ஒரு நல்லெண்ணம் துளசி. நீ குணவதியென்பதால் அவன் கவனம் கலைந் திருப்பதில் வியப்பு ஏதுமில்லை'' என்று கூறி, கேட்ப வளின் மனதோடு காதையும் குளிர்வித்தார் வேதவதி.

அந்தக் குளிர்ச்சி குறையும் முன்பாகவே தணலைக் கொட்டுவதுபோல, ''அவனுடைய நல்லெண்ணம், ஆசை, காதலென்று மாறுவதற்கு முன்பாக, நீ இங்கிருந்து வெளியேறி விடுவது தான் எல்லோருக்கும் நல்லது துளசி'' என்றார் வேதவதி.

தணல் என்றால் இது அல்லவோ செந்தணல்!

## 21

''எங்கே போவதென்று நீ கலங்க வேண்டாம் துளசி. உனக்கு நல்ல இடத்தில் வேலைக்கு ஏற்பாடு செய்து தருகிறேன். இப்போது தான் எல்லா நகரங்களிலும் லேடீஸ் ஹாஸ்டல் இருக்கிறதே.

''எது நல்லாயிருக்கிறதென்று விசாரித்து பிறகு தங்கிக் கொள்ளலாம்.

''நீ இங்கேயிருப்பதால் சுமனா அனாவசிய கோபத்திற்கு ஆட்படுகிறாள். ஏனோ நீ இங்கேயிருப்பதை அவள் விரும்பவில்லைம்மா.

"வேலை தானே. வேறு இடத்தில் வாங்கிக் கொடுத்து அனுப்பி விடலாம் என்கிறாள்.

"எனக்கு, என்மகன் மற்றவர்களைப் போல மனைவி, குழந்தைகளென்று குடும்பஸ்தனாக வாழ்வதைப் பார்க்க வேண்டும் துளசி. இல்லையென்றால் என் ஆத்மாவிற்குக் கூட நிம்மதி கிடைக்காது" என்று கூறி கண்களை இறுக மூடினார் வேதவதி.

"அம்மா ப்ளீஸ். ஏன் இது மாதிரியெல்லாம் பேசுகிறீர்கள்? என்னால் எப்போதும், யாருக்கும் தொந்திரவு வராதும்மா. நான் இங்கிருந்து எப்போது போகவேண்டுமென்று சொல்லுங்கள்" என்றாள் துளசி.

"நீ புரிந்து கொள்வாயென்று தெரியும் துளசி. திருச்சியில் உனக்கு வேலைக்குச் சொல்லிவிட்டேன். நாளைக்கே கிளம்பத் தேவையான ஏற்பாடெல்லாம் செய்து விடுகிறேன்.

"உன் பொருட்களைப் பேக் பண்ணிக் கொள்ளும்மா." என்றவர் சிறு தயக்கமுடன், "துளசி இங்கிருந்து கிளம்புவது பற்றி பவனனிடம் தெரிவிக்கும்போது, சுமனாவின் பங்கு இதில் இருப்பதாகக் காட்டி விடாதேம்மா. அவர்களுக்குள் இடைவெளி இன்னும் அதிகமாகிவிடும்" என்றார் வேதவதி.

ஒரு சில நிமிடங்களில் உலகம் அழகற்று, வெறுமையாகப் போய்விடுமா?!

துளசியின் உலகம் அப்படித்தான் ஆனது!

தன் பொருட்களையெல்லாம் எடுத்து வைத்துவிட்டு, பவனனைத் தேடிச் சென்றாள்.



சுமனா வந்த பிறகு, இருவரிடையேயும் கண்ணுக்குத் தெரியாத அளவு, சிறு இடைவெளி வந்து விட்டதோ?

அலுவலக அறையின் பெரிய சேரில், கண்களை மூடிக் கொண்டு தொய்வுடன் சாய்ந்திருந்தான் பவனேந்திரன்.

இதுவரை அவனைப் பார்க்காத தோற்றம்!

சதா அவன் கண்களில் மின்னும் முறுவல், கொஞ்ச நாளாக காணவில்லை என்பது உண்மையா? அல்லது குழம்பிய தன் மனதின் பிரேமையா?!

"என்ன துளசி. அம்மா ஏதும் வரச்சொன்னார்களா?" என்று கேட்டு, தலையை நிமிர்த்தினான்.

"இல்லை. உங்களிடம் பேசவேண்டும்" என்றாள்.

"ம். சொல்லு" என்று கூறி, வெண்ணிற டவலை எடுத்து முகத்தைத் துடைத்தான் அவன்.

"நான் இங்கிருந்து கிளம்புவதாக இருக்கிறேன்" என்றாள்.

"வாட்?!" என்றவனிடமிருந்து சில நிமிடங்கள் பேச்சே இல்லை!

அவனுடைய கூர் விழிகள் அவளைச் சுக்கலாக துளைப்பது போல் தோன்ற, பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"திடீரென்று ஏன் இந்த முடிவு துளசி?" என்றவன் நெற்றியைச் சுருக்கிவிட்டு, "அம்மா உன்னிடம் பேசினார்களா?" என்று கேட்டான்.

"ஆமாம். உங்களின் திருமண நிச்சயம் உட்பட, நீங்கள் சொல்லாத சில விஷயங்களைச் சொன்னார்கள்" என்றாள் அவள்.

''ஓ! அந்த விஷயம் பற்றி சொல்லக் கூடாதென்று நினைக்கவில்லை. சொல்லுமளவிற்கு முக்கியமல்ல என்று நினைத்தேன். அவ்வளவு தான்'' என்றான்.

''அவ்வளவு சுலபமாக முக்கியமல்ல என்று ஒதுக்கி விட முடியாது பவன். எனக்கும் கூட அதே எண்ணம் தான். தன் மகனின் வாழ்க்கை நல்ல விதமாக அமைய வேண்டுமென்று நினைப்பது தாயின் இயல்பு!

''எது நடந்திருந்தாலும் ஒதுக்கிவிட்டு சுமனாவை மணந்து கொள்ளுங்கள். உங்களின் மாற்றத்தை எதிர் பார்த்து மூன்று வருடமாக காத்திருக்கிறார்களே. அதை சாதாரண விஷயமென்று கூற முடியாதே.

''கோபத்தை விட்டுவிட்டு, மனம் விட்டுப் பேசினால் எல்லாம் சுபமாகும். சுமனாவின் நிலையிலிருந்து பார்த்தால் தான் அவள் கோபத்தின் நியாயம் புரியும்'' என்றாள்.

எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான் அவன்.

''வேலைக்கும், தங்குவதற்கும் உங்கள் அம்மா மூலமாக ஏற்பாடு செய்து கொண்டேன்.

''இன்று வரை எனக்கு நிறைய உதவி செய்திருக் கிறீர்கள், அக்கறையோடு பார்த்துக் கொண்டீர்கள். எல்லாவற்றுக்கும் நன்றி பவன்'' என்றாள்.

''இங்கிருந்து கிளம்பிய பிறகு, நிம்மதியோடு இருந்து விட முடியுமென்று நினைக்கிறாயா துளசி?''

கடினமான கேள்வி!

இந்த ஓராண்டு காலம், அவள் வாழ்வின் பொற்காலம் என்றே சொல்லலாம். இது கிடைக்க முழுமையான காரணம் இவன் தான்!



இதனால்தான் என்று சொல்ல முடியாமல், எப்படியோ அவளின் மனக்கதவைத் திறந்து உள்ளே சென்று, இரத்தினக் கம்பளம் விரித்து அமர்ந்து கொண்டவன்.

அவனிடமிருந்து இப்படியொரு கேள்வியை எதிர் பார்க்கவில்லை அவள்!

அதீதத்திற்கு ஆசைப்படுவது தப்பேதான்!

அதுவும் இன்னொரு பெண்ணுடன் நிச்சயமானவன் என்று தெரிந்த பிறகு, தன் நேசத்தைத் தன்னுள்ளேயே வைத்துப் புதைத்து விடுவது தான் நியாயம்.

இவன் அம்மா சொன்னது போல ஏதாவதொரு விதத்தில், நான் இவனுள் பாதிப்பை ஏற்படுத்தியிருந் தால், அதை இக்கணமே கிள்ளி எறிந்துவிட வைக்க வேண்டும். அதுதான் சரி என்று தீர்மானித்தாள்.

எனவே தலையை நிமிர்த்தி, ''ஏன் முடியாது பவன்?'' என்று கேட்டாள்.

''உன்னால் முடியுமென்று நம்புகிறாயா?''

''சர்வ நிச்சயமாக முடியும். இங்கே நான் எந்தவிதப் பிரச்சனையுமின்றி, என் விருப்பம்போல சந்தோஷமாக இருக்கிறேன் தான்.

''அதற்காக இங்கேயேவா இருந்துவிட முடியும்?

''எனக்கென்று ஒரு வாழ்க்கை அமைய வேண்டு மில்லையா? உங்களுக்கு அமையவிருப்பதைப் போல.

''இந்த மலை வீட்டிலேயே இருந்தால், நான் எப்படி வெளி உலகைப் பார்ப்பது? வெளியே சென்றால் தானே நாலு பேரிடம் பேச முடியும். யாரையாவது பிடித்தால் திருமணம் செய்து கொண்டு வாழமுடியும்!

"என் வாழ்வின் அடுத்தக் கட்டத்தை நோக்கிச் செல்லப் போகிறேன். எனக்கு இது உள்ளூர உற்சாகத்தையும், எதிர்பார்ப்பையும் கூட ஏற்படுத்தியிருக்கிறது தெரியுமா?'' என்றாள்.

''ம். உன் வாழ்க்கை. உன் இஷ்டப்படி முடிவெடுக்கத்தான் உனக்கு முழு உரிமையும் உண்டே'' என்று கூறி, எழுந்து சென்று ஜன்னலருகே நின்று வெளியே பார்த்தான்.

''நீ இவ்வளவு விரைவில் இங்கிருந்து கிளம்புவாயென்று நான் நினைக்கவேயில்லை. அதுவும் உற்சாகமுடனே என்னிடம் சொல்வாயென்று எதிர்பார்க்கவில்லை.

''முதல் தடவையாக என் கணிப்பு தவறாகியிருக்கிறது'' என்று கூறி பின் கழுத்தை ஒரு முறை அழுந்த தேய்த்துவிட்டான்.

செலவுக் கணக்கு நோட்டையும், மீதிப் பணத்தையும் அவன் முன்னே டேபிள் மீது வைத்தாள்.

ஒரு பெருமூச்சை வெளிப்படுத்தி விட்டுத் திரும்பி வந்து அவள் எதிரே நின்றான் பவனேந்திரன்.

இவ்வளவு அருகே இவனைப் பார்க்கும் பாக்கியம் இன்றோடு கடைசியோ?

தொண்டையில் அடைத்ததை விழுங்க முயன்று தோற்றவளாக நின்றாள் துளசி.

''நீ எங்கே சென்றாலும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். அதுதான் என் விருப்பம்'' என்று மெல்ல முறுவலித்தான் அவன்.

அந்த வருத்தமான முறுவலிலும் கம்பீரம் குறையாத பவன்!



இந்த அன்பிற்குத்தானே அவள் மனம் அடிமையாகிக் கிடைக்கிறது!

நல்லவேளை அது இவனுக்குத் தெரியாது என்று சற்று நிம்மதியுற்றாள்!

ஆனால் அது நல்லவேளை தானா?

அடுத்ததாக, கழற்றி வைத்திருந்த 'ரூபி' நகையை முன்னே வைத்தாள்.

ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

''இங்கிருக்கும் வரை மட்டும்தான், இதை அணிந்து கொள்வேன் என்று சொல்லியிருக்கிறேன் பவன்.''

மெல்ல முறுவலித்து, அவள் தலையை வருடிவிட்டு, ''ஆல் தி வெரி பெஸ்ட், ஃபார் யுவர் பிரைட் பியூச்சர் ராணிம்மா'' என்று வாழ்த்தினான்.

மேற்கொண்டு ஒரு கணம் நின்றாலும் கதறி விடுவோம் என்று புரிய, பளபளத்த கண்களைக் காட்டாமல் வேகமாக வெளியேறினாள் துளசி.

அவள் அறையின் கட்டிலில் விழுந்தவளுக்கு, மடை திறந்தது போல கண்களிலிருந்து நீர் வழிந்தது!

எவ்...வளவு மிருதுவான வருடல்! ஒரு குழந்தையை, பூவிதழை வருடுவது போலல்லவா வருடுகிறான்.

அவளிடம் பலமுறை இந்த மென்மையை வெளிப்படுத்தியிருக்கிறான்.

இந்த பாக்கியத்தை உரிமையுடன் அனுபவிக்கப் போகிறவள் சுமனா. இதை விட்டு விடாமல் காப்பாற்றிக் கொள்ளத் துடிப்பது நூறு சதம் நியாயமே!

எப்படியோ இந்த வீட்டிற்குள் வந்து அடைக்கலமாக வாழ்ந்த தனக்கே, உயிர் பிரிவது போன்ற வேதனை யிருக்கும்போது, ஊரறிய மணக்கப் போவதாகச் சொல்லி விட்டு, பிறகு மறுத்தால் அது நியாயமில்லையே? என தன் நியாய மனது புத்தி புகட்ட சற்றே தெளிவானாள் துளசி.

அழுகையை வெளிக்காட்டாது மனதிற்குள்ளே நாற்காலி போட்டு அமர வைத்துவிட்டு, உடைகளின் இடையே தான் சம்பாதித்த பணத்தையும் எடுத்து வைத்தாள்.

''உன்னிடம் இதை எதிர்பார்க்கவில்லை. போகமாட் டேன் என அடம் பண்ணுவாயென்று நினைத்தேன்'' என்று அறையினுள் வந்து நின்று அலட்சியமாகக் கூறி னாள் சுமனா.

'நானும் தான் எதிர்பார்க்கவில்லை. உன்னைப் போல ஒருத்தி வருவாள், அவளுக்காக வெளியேற வேண்டி யிருக்கும் என்று கனவிலும் நினைக்கவில்லை' என்று நினைத்த துளசி, டவலை எடுத்து உள்ளே வைத்து 'ஸிப்'பை இழுத்து மூடினாள்.

''எதற்காகவுமே அடம் செய்து எனக்குப் பழக்கமில்லை சுமனா'' என்று கூறிவிட்டு எதிரேயிருந்தவளைப் பார்த் தாள் துளசி.

நல்ல உயரமுடன், தேன் கலரில் மின்னும் தேக முடைய வெகு அழகான பெண் தான்!

செல்வச் செழிப்பில் வளர்ந்திருக்கும் நாகரீக மங்கை!

இந்தப் பெண்ணுடன் பவனனின் வாழ்க்கை நல்ல படியாக அமைய வேண்டும்.



''பவனனுடன் உங்கள் திருமணம் நல்லமுறையில் நடக்க மனமார்ந்த வாழ்த்துக்கள் சுமனா'' என்றாள்!

அலட்சியமாகவே பார்த்தபோதும் ''வாழ்த்து எதிரி யிடமிருந்து கிடைத்தாலும் பெற்றுக்கொள்ள வேண்டு மென்று என் அப்பா சொல்லுவார். எனிவே தேங்க்ஸ்'' என்றவள் தொடர்ந்து, ''நீ வேலைக்குப் போகிற இடம் அத்தையின் தூரத்து உறவினரின் நிறுவனம். அவர்களின் பெயரை 'ரிப்பேர்' செய்து விடாதபடி நடந்து கொள்'' என்று கொட்டு வைப்பது போல் கூறினாள்.

தன்னை வெளியேற்ற இத்தனை நாளானதில் உண் டான கோபம் போலிருக்கிறது என்று அமைதியோடிருந் தாள் துளசி.

அந்த அமைதி மற்றவளுக்குப் பிடிக்காததோடு, எரிச்சலூட்டியது!

இந்த ஒண்ட வந்தவளால், எவ்வளவு மன உளைச்ச லுக்கு உள்ளானாள் என்பது அவளுக்குத் தானே தெரியும்? எனவே சும்மா போகிறதென்று விடவும் மனமில்லை சுமனாவிற்கு!

''அத்தை பயங்கரமான திறமைசாலியென்று என் அப்பா அடிக்கடி சொல்லுவார்.

''இல்லையென்றால் இந்த வயதிலும் தொழிலைத் தனியே நடத்த முடியுமா? இருந்த இடத்தில் இருந்து கொண்டே அத்தனை வேலைகளையும் செய்ய வைப் பார்களாம்!

''அது முழு உண்மையென்பதை இப்போது நன்றாகப் புரிந்து கொண்டேன்.

''என்ன செய்வீர்களோ தெரியாது அத்தை. துளசியை இங்கிருந்து அனுப்பி விடுங்கள் என்றேன். பேசும்

விதமாகப் பேசி விஷயத்தை முடித்து விட்டார்கள். அதுதான் வேதவதி அத்தை'' என்றாள் பெருமிதமுடன்.

இதற்கும் துளசியிடம் மௌனமே தொடர்ந்தது!

உதட்டை வளைத்துக் காட்டிவிட்டு, டக் டக்கென்று ஒலியெழுப்பியபடி திரும்பிச் சென்றாள் சுமனா.

ஒரே ஒரு முறை, 'பெரிய தியாகி மாதிரி விட்டுக் கொடுத்து விட்டுப் போவது சரியா?' என்று தோன்றத் தவறவில்லை துளசிக்கு!

ஆனால் வேறு என்ன செய்ய முடியும் அவளால்?

நிச்சயம் செய்தவளை எதிரே வைத்துக் கொண்டு, உங்களை விரும்புகிறேன் பவன் என்று சொல்ல முடியுமா? எந்த விதத்தில் நியாயமாகும்?

தன் விருப்பத்தைப் பற்றி சிறு துளியும் வெளிக் காட்டாதது, அவன் வரையிலாவது நல்லதுதான்!

அந்த நிம்மதியோடு கிளம்பி விடுவது தான் உத்தமம்!

வீட்டில் வேலை செய்வோரிடமும் சொல்லிக் கொள்ளச் சென்றாள் துளசி.

அனைவருக்குமே அதிர்ச்சி தான்!

''என்னாம்மா சொல்லறீங்க? எங்களுக்கு என்ன உதவி வேண்டுமென்றாலும் உங்களிடம் தானேம்மா சொல்லுவோம்.

''இனிமேல் என்ன செய்வோம்? அந்த ஆட்டக்குதிரை மாதிரி நடக்கிறம்மா வந்தபோதே, என் மனதிற்கு ஏதோ அசம்பாவிதமாகப் பட்டது. இப்படியாகுமென்று நினைக்கவில்லையே'' என்று புலம்பினாள் லட்சுமி.



''இது மாதிரி பேசக்கூடாது லட்சுமி. சுமனா இந்த வீட்டின் முதலாளியைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்கள். அவர்களிடம் மரியாதையுடன் நடந்து கொள்வது தான் முறை'' என்றாள்.

''என்னவோம்மா. அந்தம்மா எல்லாரையும் 'ஏய்' என்று கூப்பிடும்போது சங்கடமாயிருக்கிறது. போகப்போக எப்படி மாறுமோ? இளக்காரமா பேசும்போது எத்தனை நாளைக்குப் பொறுமையோடிருக்க முடியும்?'' என்றான் ரகு டிரைவர்.

இதற்கு அவள் ஒன்றும் செய்ய முடியாதே. ஆறுதலான பார்வையுடன் திரும்பி விட்டாள் துளசி.

ஏனோ வீடு முழுவதும் பலத்த மௌனம் நிலவுவது போல் தோன்றியது!

இல்லை அவளுக்கு மட்டும் தான் அப்படித் தோன்றுகிறதா?

மறுநாள் காலையில் வேதவதியின் எதிரே நின்றாள் துளசி.

''காரில் கோவை ஜங்ஷனுக்குச் சென்று விடும்மா. திருச்சிக்குச் செல்ல முதல் வகுப்பு டிரெயின் டிக்கெட், போக வேண்டிய அலுவலக முகவரி இதிலிருக்கிறது. உன்னை அழைத்துப் போக ஆட்கள் காத்திருப்பார்கள். பிடித்த ஹாஸ்டலில் தங்கிக் கொள். உன்னை மரியாதையுடனே கவனித்துக் கொள்வார்கள். மேற்கொண்டு என்ன தேவையென்றாலும் சொல்லும்மா'' என்றார்.

டிக்கெட், முகவரியுடன் நூறு ரூபாய் நோட்டுக் கட்டொன்றையும் கொடுத்தார் வேதவதி.

"தேவையான பணம் என்னிடமிருக்கிறதம்மா" என்று கூறி பணத்தை மறுத்து விட்டாள் துளசி.

தன் துணிமணிகள் அடங்கிய 'கிட்' பேக்குடன் காரில் ஏறியபோது, நாய்கள் இரண்டும் படுத்துக் கொண்டே தலையைத் தூக்கிப் பார்த்து வாலாட்டின!

சிறு முறுவல் - வருத்தமான முறுவல் தோன்றியது. கதவை மூடிவிட்டு விழிகளால் எல்லாவற்றையும் ஒரு முறை நிறைத்துக் கொண்டாள் துளசி.

ஆவலோடு பார்த்துக் கொண்டு வந்தவளின் கண்களில், அலுவலக அறை ஜன்னலில் சாய்ந்து நின்று கொண்டிருந்த பவனன் பட்டான்.

அவன் முகத்தில் தெரிந்த அமைதி, ஏனோ அவள் மனதைக் கலங்கச் செய்தது.

அர்த்தம் கண்டு கொள்ள முடியாதபடி என்ன பார்வையிது?

முழுதாகப் பார்க்கும் முன்பாக, கார் கேட்டைக் கடந்து வெளியே வந்துவிட்டது.

பெருமூச்சோடு தலையைத் திருப்பிக் கொண்டாள் துளசி.

சாலையின் குண்டு குழிகள் எல்லாம், எனக்கு ஒரு பொருட்டே கிடையாது தெரியுமா? என்று சவால் விடுவது போல, குலுங்காமல் கூட்டிச் சென்றது மெர்ஸிடிஸ்!

'என் கார் உனக்கு சரக்கேற்றுகிற வண்டியா? விலை நூறு லட்சம் அம்மணி' என்றானே!

சின்ன அசைவில் கூட தொடரும் அவனுடைய ஞாபகம். அது தரும் வலியை எத்தனை நாளைக்கு அனுபவிப்பது?



காலம் முழுவதுமா? முடியுமா?

இமைகளை மூடிக் கொண்டு இருக்கையில் தலை சாய்த்தாள்.

இமைகளையும் மீறி, பெரிய நீர்மணிகள் உருண்டு வந்து கன்னத்தில் கோடிழுத்தது!

## 22

நேரம் போவதற்காக பொழுதை நெட்டித்தள்ள வேண்டியிருந்தது துளசிக்கு.

திருச்சி அலுவலகமும், தங்குமிடமும் பிரச்சனையின்றி அமைந்தது.

கொஞ்சம் சகிக்கிற மாதிரியான சாப்பாடுதான் ஹாஸ்டலில் செய்தார்கள்.

காலையில் டிபன் இட்லி, தோசை, வெண் பொங்கல் என்று ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொன்று.

மதியம் தக்காளி, எலுமிச்சை, தயிர் என்று வெரைட்டி சாதம்.

இரவில் சப்பாத்தி, சாம்பார் சாதம் என்று ஒரே மாதத்தில் பழகிப் போனது.

மூச்சு விடுவது போல, எந்நேரமும் பவனனின் ஞாபகம் தொடர்வதைத் தடுப்பதற்காகவே, அலுவலக வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள் துளசி.

இல்லையென்றால் வாரத்தில் நான்கு நாட்கள் கூட, மாலை நேரத்தில் வினாயகரை தரிசிக்க மலைக் கோட்டைக்குச் சென்று விடுவாள்.

ஓய்வின்றி வேலை செய்துவிட்டு, சில நூறு படி களையும் ஏறி இறங்குவதால், உடல் சோர்வுற்று அப் படியே படுத்து விடுவது வழக்கமானது.

இரண்டு முறை அலுவலக போனில் அழைத்து நலம் விசாரித்தார் வேதவதி.

முதல் தடவையாக, சுமனா கொடுத்த டீயை, பவன் மறுக்காமல் வாங்கிக் கொண்டானாம். ஏதாவது கேட்டால் ஆம், இல்லையென்றாவது பதில் சொல்கிறானாம் என்று தெரிவித்தார் வேதவதி.

நியாயமான மனது மகிழ்ந்தாலும், ஆசைப்பட்ட மனது அன்றைய தூக்கத்தைக் கெடுத்தது!

மறுமுறை அழைத்தபோது, முழு அக்கறையுடன் நலனறிந்தவர், ''உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள் அம்மா. புதுவேலை ஆரம்பித்திருக்கிறோம். ஒரு மாதத் திற்குப் பிறகு திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டான். எனக்கு கனவு போலிருக்கிறது துளசி'' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

தன் இதயத்திலிருந்து 'லப் டப்' ஓசை வருகிறதா என்றொரு சந்தேகம் துளசிக்கு.

'இந்தம்மா பேசாமல் போன் பண்ணாமலே இருந் திருக்கலாம். குறைந்த பட்சம் இன்று தன் தூக்கமாவது கெட்டிருக்காது' என நினைத்துவிட்டு, அந்த நினைப் பிற்காகத் தன் மீது கோபமும் கொண்டாள் துளசி.



அவளை இன்னமும் ஞாபகம் வைத்துப் பேசுபவரைப் பற்றி, இப்படியா நினைப்பது என்று தன்னையே கடிந்து கொண்டு, அவர்களின் பேச்சில் உற்சாகமானதைப் போல காட்டிக் கொண்டாள்!

மகனின் திருமண வைபவத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தாயின் மனநிலை அவர் பேச்சிலே தெரிந்தது.

தன் வலியை மறைத்துக் கொண்டு கடினப்பட்டு முயன்று, உற்சாகமானதைப் போல காட்டிக் கொண்டாள் துளசி.

ஜெட் வேகத்தில் நாட்கள் ஓடி, திருமணத்திற்கு இன்னும் எட்டு நாட்கள் மட்டுமே இருந்தபோது தான், இடி விழுந்த மாதிரி அந்தச் செய்தி அவள் காதிலே விழுந்தது!

பவனனின் கார் விபத்திற்கு உள்ளாகி, அவனுக்கு பலத்த அடியாம். விபத்து நடந்தே நான்கு நாட்களாகி விட்டதென்று யாருக்கோ ஃபோனில் தகவல் சொன்னார் முதலாளி.

'வேதவதியம்மாவின் மகன் பவனேதாம்பா' என்ற வாக்கியத்தைத் தொடர்ந்து கேட்டவள், டேபிளைப் பிடித்துக் கொண்டு மயங்கிச் சரிந்தாள் துளசி.

முகத்திலே தெளிக்கப்பட்ட நீரினால் கண் விழித் தவள், 'என்னம்மா உடம்பு சரியில்லையா? சாப்பிட்டாயா இல்லையா?' என்ற கேள்விகளையெல்லாம் காதிலேயே வாங்காமல், ''சார். அவர், பவனன் இப்போது எப்படி யிருக்கிறார்? பெரிதாக ஆபத்தில்லையே?'' என்று குரல் நடுங்க, கண்ணீர் வழியக் கேட்டாள்.

"பவனனை உனக்குத் தெரியுமா?" என்றுவிட்டு, "என்னத்தைம்மா சொல்வது? தலையிலே பலத்த அடியாம். ஏதோ முக்கியமான நரம்பே பாதித்ததில் ஒரு பக்கம் கையும், காலும் செயல் இழந்து விட்டதாம். குணமாகுமா இல்லையா என்பது பற்றி, டாக்டர்கள் உறுதியாக எதையும் சொல்லவில்லையாம்.

"திறமையான இளைஞன். அவனுக்கா இப்படியாக வேண்டும்" என்று பரிதாபப்பட்டார் முதலாளி.

சப்த நாடியும் ஒடுங்கிப் போயிற்று துளசிக்கு!

எவ்..வளவு வலிமையும், கம்பீரமுமான கை, கால்கள். அதில் இனிமேல் ஒரு பக்கம் செயல்படாது என்பதை எப்படி ஜீரணிப்பது?

அய்யோ! அவளின் பவனன் இந்த இழப்பை எப்படித் தாங்கிக் கொண்டிருக்கிறானோ? என்னமாக தவித்துக் கொண்டிருக்கிறானோ?

"இப்போது எந்த மருத்துவமனையில் இருக்கிறார் சார்?" என்று கேட்டாள்.

"வால்பாறை மலையிலே வீடு இருக்கிறதாமே? குளிர் பிரதேசம் இதமாயிருக்கும் என்று டாக்டர்கள் சொன்னதால், சகல வைத்திய வசதியுடன் அங்கே போகிறார்களாம். இன்று விடியற்காலையே கிளம்பியிருப்பார்கள்." என்றவர், "உனக்கு ரொம்ப அதிர்ச்சியென்றால், சற்று நேரம் உட்கார்ந்திருந்து விட்டு வேலையைப் பாரும்மா" என்றார்.

வேலையாவது, மண்ணாங்கட்டியாவது?

அங்கே அவளின் உயிருக்கு உயிரானவன் அடிபட்டுக் கிடக்கிறான். இந்த வேலையா பெரிதென்று நினைத்த



வளுக்கு, 'நான் கிளம்புகிறேன்' என்பதற்கு மேல் எதுவும் சொல்லத் தோன்றாமல் வெளியே வந்தாள்.

ஹாஸ்டலுக்கு வந்து கையில் அகப்பட்ட துணிகளை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு, இரயில் நிலையத்திற்குச் சென்றாள்.

இரயில், பஸ், டேக்ஸி என்று மாறிமாறிச் சென்றவளின் நினைவு முழுவதும் அவனிடமே நிலைத்தது!

அத்தனை அசௌகரியங்களையும் சகித்துக் கொண்டு பயணித்தபோதும், கிட்டத்தட்ட மாலை நேரம் தான் வீட்டைச் சென்றடைய முடிந்தது!

வீடு முழுவதும் அமைதி! அமைதி! பேரமைதி!

நடுங்கும் கால்களை சிரமப்பட்டு அடியெடுத்து வைத்து உள்ளே சென்றாள்.

ஹாலில் ஒருவரையும் காணவில்லை!

பவனனை எந்த அறையில் படுக்க வைத்திருக்கிறார்கள் என்று தெரியாமல் விழிகளால் துழாவினாள்.

"நீங்கள் யார்?" என்று கேட்டபடி வந்தாள் ஒரு இளம்பெண்.

வேதவதியின் சாயல். இவள் தான் யவனாவோ? அதற்கு மேல் யோசிக்க முடியாமல் நின்று விட்டது மூளை!

"நீங்கள் துளசியா?" என்று கேட்டாள்.

வெறுமனே தலையசைத்தாள் துளசி.

"அண்ணன் கீழ் அறையில் தானிருக்கிறான் வாருங்கள்" என்று அழைத்துச் சென்றாள் யவனா.

அங்கே அவள் பார்த்த காட்சி, புத்தியையே பிசக வைத்து, இதயத் துடிப்பை, ஏன் உயிர் மூச்சையே நிறுத்த முயன்றதென்று சொன்னாலும் மிகையில்லை தான்!

அசைவின்றிக் கண்மூடிப் படுத்திருந்தான் பவனேந் திரன்.

தலை, கை, காலிலே சின்னதும் பெரியதுமாக கட்டு களுடன் இருந்தவனைப் பார்த்து, உதடு துடித்து கண்ணீர் வழிந்தது!

சதா கண்களில் துள்ளும் புன்னகையுடன், உற்சாகமா யிருந்தவன் பட்டத்து யானை வீழ்ந்தது போல் அல்லவா கிடக்கிறான்!

துவண்ட கால்களை சிரமப்பட்டு நகர்த்திச் சென்று அவனருகே நின்றாள் துளசி.

பொலிவின்றிக் களைத்திருந்த முகத்தைத் தொட்டு வருடிவிட வேண்டும் போல் தோன்றியது.

இது பொய்யாக இருக்கக் கூடாதா என்று மனம் ஏங்கியது!

அவள் கண்களிலிருந்து சிதறிய நீர் மணிகள், அசை வின்றிக் கிடந்த கையில் பட்டதும், ஒரு நொடி அவன் முகம் மாறியதோ?

ஏதோ உறுத்த, உற்று நோக்கும் முன்பாக, கண்டது கற்பனையோ என்பது போல அவன் முகம் பழைய மாதிரியே ஆகிவிட்டிருந்தது!

அவளின் கற்பனையேதான்!

தலையில் அடிபட்டவனுக்கு எல்லோரையும் ஞாபக மிருக்கிறதா? அவளை?

யாரிடம் கேட்பது? அறையைக் காட்டிய யவனா எங்கே போனாள்?

வேதவதி எவ்வளவு மகிழ்ச்சியுடன் திருமணத்தை எதிர்பார்த்தார். சுமனாவும் பாவம்தான். வருடக் கணக்காக



காத்திருந்து, சந்தோஷமாயிருக்க வேண்டிய நேரத்தில் இப்படியாகி விட்டதே!

பவனன் முகம் கொடுத்துப் பேச மாட்டானா என்று, முன்னால் வந்து நிற்பாளே சுமனா.

இந்த விபத்தால் கலங்கிப் போயிருப்பாள் சுமனா. அவளால் அனுபவித்த வேதனைகளையெல்லாம் ஒதுக்கி விட்டு, சுமனாவை நினைத்து பரிதாபமே தோன்றியது துளசிக்கு!

சோர்ந்த நடையுடன் உள்ளே வந்தார் வேதவதி.

என்னால் திவ்வியமாக நடக்க முடியுமென்று சர்வ சாதாரணமாகக் கூறிய பெண்மணி!

''வாம்மா'' என்றுவிட்டு, மகனைப் பார்த்துக் கொண்டு சற்று நேரம் நின்றார்.

பிறகு, பெருமூச்சோடு திரும்பி, "என் பிள்ளை அடி யோடு வீழ்ந்து கிடப்பதைப் பார்க்கும்போது, நெஞ்சே வெடித்து விடும் போலிருக்கிறது துளசி. என் உலகமே இருண்டு விட்ட மாதிரி வெறுமையாக இருக்கிறது. உனக்குத் தெரிவிக்க வேண்டுமென்பது கூட நினைவு வரவில்லைம்மா'' என்றார் மெல்லிய குரலில்.

நடமாடியபோதும் அவரிடம் ஜீவனில்லை. உள்ளூர உடைந்து போயிருக்கிறார் என்பது நன்றாகவே தெரிந்தது.

அவரின் கைகளைப் பற்றிக் கொண்டு, ''டாக்டர்கள் என்னம்மா சொல்கிறார்கள்?'' என்று கேட்டாள் துளசி.

''இன்னும் உறுதியான முடிவாக எதுவும் சொல்லவில் லைம்மா. நாலு மாதமோ, வருடமோ கழித்தாவது சரியாகிவிடும் என்று சொன்னால், கொஞ்சம் திடமுடன் இருப்பேனே. எதையும் சொல்லாமல் அந்த ரிப்போர்ட்

டையே ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்'' என்றார் கொஞ்சம் பொறுமை இழந்த குரலில்.

காத்திருப்பதில் உண்டாகும் அவஸ்தை தான், பொறு மையை இழக்க வைக்கிறதோ?

''அம்மா ப்ளீஸ். இப்போது தைரியம்தான் பெரிய மருந்து. அதையே இழந்தால் எப்படிம்மா?'' என்று ஆறுதல் கூறினாள் துளசி.

சூடான டீயை துளசியிடம் கொடுத்தாள் யவனா.

''குடி துளசி. நீயும் வெகு தூரம் பயணித்திருக்கிறாய். பவன் விழிக்க நேரமாகும். அதுவரை சற்று இளைப்பாறு'' என்று கூறிவிட்டு, மகனின் தலையை வருடிய பின்பு, தன் அறைக்குச் சென்றார்.

துளசியை உற்றுநோக்கிய யவனா, ''அண்ணன் உங் களை 'ராணிம்மா' என்று எப்போதாவது அழைத்ததுண்டா துளசி?'' என்று கேட்டாள்.

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் மற்றவள்.

''விபத்து நடந்து மயக்கமாகும் முன்பு, கடைசியாக அப்படித்தான் சொன்னாரென்று மிஸ்டர். மூர்த்தி தெரிவித்தார்'' என்றாள் யவனா.

மயக்கமாகும் நிலையிலும் தன் பெயரை உச்சரித் தானா?

தன் ஞாபகம், அவ்வளவு ஆழமாகவா அவன் மனதில் பதிந்திருக்கிறது!

''எப்போதாவது அழைத்திருக்கிறார்'' என்றுவிட்டு அரும்பிய கண்ணீரைத் துடைத்தாள் துளசி.

ஊசி போடவென்று நர்சும், உதவியாளும் உள்ளே வந்தார்கள்.



வெளியே வரும்போது, ''சுமனாவைக் காணவில் லையே யவனா?'' என்று விசாரித்தாள்.

''அவளுக்கும் பலத்த அதிர்ச்சி இல்லையா? திருமண ஷாப்பிங்கில் ஜாலியாக இருந்தபோது வந்த செய்தியில் இடிந்து போய் விட்டாள். அவள் மயக்கம் தெளியவே சில மணி நேரமானது.

''அண்ணனின் ரிப்போர்ட்டை பெரிய 'ஸ்பெஷலிஸ்ட்' டாக்டரிடம் காட்டி, அடுத்ததாக என்ன செய்யலாம்? வெற்றி வாய்ப்பு எப்படியிருக்கிறதென்று கேட்கப் போவதாக மிஸ்டர் மூர்த்தி சொன்னார்.

''நானும் அவருடன் சென்று, டாக்டரிடம் பேசிவிட்டு வருகிறேன் என்று கூறி சென்னையிலேயே இருக்கிறாள்'' என்று தெரிவித்தாள் யவனா.

திருமணம் செய்யப் போகிறவன் இங்கேயிருக்க, சுமனாவினால் அங்கேயெப்படி இருக்க முடிகிறது?

இரண்டாவது தடவையாக மீண்டும் ஏதோ நெருடியது துளசிக்கு!

'மூர்த்தி சார் மட்டும் டாக்டரிடம் பேசிவிட்டு விஷ யத்தைச் சொன்னால் போதுமே?

'இவள் ஏன் கூடவே அலைய வேண்டும்?

'அடிபட்டவனுக்கு ஆறுதலாக அருகில் இல்லாமல், சென்னையிலிருந்து பிரயோஜனமென்ன?' என்று தோன்றியது துளசிக்கு.

அன்று மாலை, மெல்ல துயில் கலைந்தான் பவனேந் திரன்.

''பத்து நிமிடம் மட்டும் பேசுங்கம்மா. அதிகம் பேசி னால் அவரின் மயக்கம் சோர்வினால் நீடிக்கும்'' என்று கூறிவிட்டு வெளியே சென்றாள் நர்ஸ்.

எல்லோரையும் அடையாளம் கண்டவனின் பார்வை, துளசியிடம் நிலைத்தது.

நம்ப மாட்டாதது போல அவன் கண்கள் பளபளக்கின்றதோ!

ஒருமுறை விழிகளை மூடித்திறந்தவன், மெல்ல முறுவலிக்க முயன்றான்.

''வலிக்கிறதாடா கண்ணா?'' என்று கேட்டு, விரல் நடுங்க மகனின் கன்னத்தை வருடினார் வேதவதி.

''வருத்தப்படாதீர்கள் அம்மா. நான் சமாளித்துக் கொள்வேன்'' என்று முணுமுணுப்பாகக் கூறினான் மகன்.

மருந்தின் மயக்கமோ? விழிகளைச் சொருகியது அவனுக்கு.

துளசியை உற்று நோக்க முயல்வதைக் கண்டு, ''இன்னும் அருகே வாம்மா'' என்றார் வேதவதி.

துடிக்கும் உதடுகளைக் கடித்தபடி, அவன் தலையருகே மண்டியிட்டு அமர்ந்தாள் துளசி.

எதுவும் பேசாமல் அவளையே பார்த்தான் அவன்.

அவன் கைவிரல்களை வருடி, ''உங்களுக்கு விரைவில் குணமாகிவிடும் பவன். சீக்கிரமாகவே எழுந்து நடக்கப் போகிறீர்கள் பாருங்கள்'' என்று நம்பிக்கையூட்டிப் பேசினாள் துளசி.

வறட்சியாகப் புன்னகைத்து, ''எனக்கென்னவோ உருட்டிக் கொண்டுதான் போகப் போவதாகத் தோன்றுகிறது. சக்கர நாற்காலியை'' என்றான்.

''ஷ். பவன். உங்களைப் போன்ற ஒருவர், இது மாதிரி நம்பிக்கையின்றிப் பேசலாமா?'' என்றாள் இறுகிய தொண்டையைச் சரி செய்தபடி.



''ஒருவேளை குணமாகாமலே போய் விட்டால்?'' என்றான் வெறித்தபடி.

''நிச்சயம் குணமாகியே தீரும். அதுவரைக்கும் உங்களின் கையும், காலுமாக நானிருப்பேன் பவன்'' என்றாள் உறுதியாக!

அருகேயிருந்த தாயும், மகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

புன்னகைத்தபடியே கண்களை மூடினான் பவனேந்திரன்.

''இன்றைக்குத்தான் தொடர்ந்து இத்தனை வார்த்தை பேசியிருக்கிறான். என் மனதிற்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்கிறது'' என்றார் வேதவதி.

இரவில் ஏதோ பேருக்குச் சாப்பிட்டுவிட்டுப் படுத்தார்கள்.

மறுதினமே எல்லோருக்கும் நம்ப மாட்டாத பல அதிர்ச்சிகள் காத்திருந்தது!

## 23

காலையில் சுடுநீரில் உடல் துடைத்த பிறகு, பெற்றவள் ஊட்டிய நான்கு இட்லியைப் புதினா சட்னியுடன் சாப்பிட்டான் பவனேந்திரன்.

அரை மணி நேர இடைவெளிக்குப் பிறகு, மருந்தையும் கொடுத்தார்கள்.

தன் மூன்று வயது குழந்தை 'உதயன்' விழித்துக் கொண்டு அழவும், வேகமாக எழுந்து சென்றாள் யவனா.

மெல்லிய சத்தத்துடன், பவனனுக்கு பேப்பர் வாசித்துக் காட்டினாள் துளசி.

பூஜையை முடித்துவிட்டு மகனிடம் வந்தார் வேதவதி.

அமைதியோடு சென்று கொண்டிருந்தது நேரம்!

கிரீச்சிட்டபடி வந்து நின்ற காரிலிருந்து இறங்கி வந்தவள் சுமனா.

எல்லோருமே சிறு ஆவலோடு அவளைப் பார்த்தார்கள்.

''சுமனா டாக்டர்கள் என்னம்மா சொன்னார்கள்?'' என்று நம்பிக்கையோடு கேட்டார் வேதவதி.

''குணமாகும் வாய்ப்பு மிகவும் குறைவு. அதிர்ஷ்டமிருந்தால் எழுந்து நடப்பார் என்று விட்டார்கள். மேற்கொண்டு ஏதாவது சந்தேகமென்றால், மிஸ்டர். மூர்த்தி வந்து கொண்டிருக்கிறார் அவரிடம் கேளுங்கள்'' என்று பட்டும் படாமலும் கூறிவிட்டு, தான் தங்கியிருந்த அறைக்குள் சென்று விட்டாள்.

இனி என்ன செய்வதென்று தெரியாதவர்களைப் போல, திகைத்துப் போனார்கள் அனைவரும்!

லேசாகத் தடுமாறிய வேதவதியைக், கீழே விழுந்து விடாமல் பற்றி சோபாவில் அமர வைத்தார்கள்.

பவனனைப் பார்க்காமல், எப்படியிருக்கிறான் என்று கூடக் கேட்காமல், சுமனா சென்றது எல்லோரையும் குழப்பியது!

என்னவாயிற்று இவளுக்கு டேக்ஸிக்காரன் திரும்பிச் செல்லாமல் ஏன் ஓரங்கட்டி நிறுத்தியிருக்கிறான்?!



முன்பெல்லாம் துளசியைப் பார்த்தாலே எரிந்து விழுந்த சுமனா, இன்று அவளை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை போலிருக்கிறதே!

சற்று நேரத்திலேயே மூர்த்தியும் வந்து விட்டார்.

சிறு வருத்தமுடன் பார்த்தவர் உள்ளே சென்று பவனனுடன் கொஞ்ச நேரம் தனித்துப் பேசினார்.

பிறகு பெண்களையும் அழைத்து, ''உடனடியான வெற்றி வாய்ப்பு குறைவுதான் என்றபோதும், ஒரு நாள் நிச்சயம் குணமாகியே தீரும் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். அது ஒரு வருடமோ, பத்து வருடமோ என்பது கடவுளுக்குத் தான் தெரியும்.

''நம்பிக்கையுடன் இருங்கள் மேடம். சின்னதாக இருக்கும் காயங்கள் சரியான பிறகு, 'ஸ்பெஷல் ட்ரீட்மெண்ட்டை ஆரம்பித்து விடலாம் என்று டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்கள்'' என்று கூறினார்.

''நீங்கள் இல்லையென்றால் பவனனை இந்தளவிற்குக் கூடக் காப்பாற்றியிருக்க முடியாது. ஹாஸ்பிடலில் சேர்க்க இன்னும் அரை மணி நேரம் தாமதமாகியிருந்தாலும், விளைவு பயங்கரமாகியிருக்குமென்று டாக்டர் சொன்னார். ரொம்ப நன்றி சார்'' என்று கை கூப்பினார் வேதவதி.

''நன்றியெல்லாம் எதற்கு மேடம். இது என் கடமை. நம்பிக்கையுடன் இருங்கள். 'பாஸ்' இப்போது சில முக்கியமான வேலைகள் சொல்லியிருக்கிறார். நான் கிளம்புகிறேன். புது 'ட்ரீட்மெண்ட்' ஆரம்பிக்கும்போது வருகிறேன் மேடம்'' என்று விட்டுக் கிளம்பிச் சென்றார் மூர்த்தி.

எதற்காகவோ வெளியே வந்த சுமனாவை அழைத்தார் வேதவதி.

''உன் பெற்றோரிடம் பேசவேண்டுமே சுமனா. அவர்கள் உன்னுடன் இங்கே வருவார்கள் என்று நினைத்தேன்'' என்றார்.

''அவர்களுக்கு வேலை வெட்டியென்று நிறைய இருக்கிறது. அதை விட்டு விட்டு இங்கே வந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு வெட்டியாக உட்கார்ந்திருக்க முடியுமா?'' என்றாள் சுமனா.

'இந்த இடம் ரொம்ப அழகாயிருக்கிறது அத்தை. என் பெற்றோரை ஒரு பத்து நாளைக்காவது, வந்து தங்கி விட்டுப் போகச் சொல்லட்டுமா அத்தை' என்று சமீபத்தில் தானே சொன்னாள்.

இப்போது வரவேண்டிய அவசியத்திற்குக் கூட வராமல் இருப்பது ஏன்?

''சரிம்மா. எப்படியும் உன்னிடம் கேட்டுத்தானே எந்த முடிவும் எடுக்க முடியும். திருமணத்திற்கு ஒரு வாரம் தான் இருக்கிறது. அதே தேதியில் நடத்தலாமா? இல்லை தள்ளிப்போடலாமா?'' என்று கேட்டார்.

''யாருடைய திருமணத்திற்கு அபிப்பிராயம் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டு அதிர வைத்தாள் சுமனா!

''சுமனா?''

''நான் இன்னமும் உங்கள் மகனை மணப்பேன் என்று எப்படி எதிர்பார்க்கிறீர்கள்?'' என அலட்சியமாகக் கேட்டாள்.

''என்ன சொல்கிறாய்? இவனை மணக்கத்தானே வருடக் கணக்காக காத்திருந்தாய்?'' என்றாள் யவனா.

''காத்திருந்தேன் தான். அப்போது உன் அருமை அண்ணனுக்கு எந்த விதமான குறையுமில்லையே?



''ஆனால் இப்போது, நடக்கக்கூட முடியாத நிலைமையென்பதை ஞாபகம் வைத்துக் கொள் யவனா'' என்றாள்.

''பெரிதாக நேசம், பாசம் என்று அளந்தாயே. அதெல்லாம் இப்போது எங்கே போயிற்று?'' என கோபத்தில் முகம் சிவக்க சூடாகக் கேட்டாள் யவனா.

நிகரில்லா கம்பீரமான அவள் அண்ணன் படுக்கையில் கிடப்பதே கொடுமையென்றால், இவள் வேறு தத்துப் பித்தென்று உளறுகிறாளே. முட்டாள் பெண்!

''உடல் குறை பெரிதாகத் தெரியும்போது, நேசமாவது மண்ணாவது? தனக்குத் தேவையானதைச் செய்து கொள்ளவே முடியாதவரை மணந்து கொண்டு, நான் எப்படி மகிழ்ச்சியாக வாழ முடியும்?'' என்று திருப்பினாள்.

''பவனனுக்கு குணமாகும் என்ற நம்பிக்கையில்லையா உனக்கு?'' என்று கேட்டார் வேதவதி.

''வெறும் நம்பிக்கையை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது? பத்து வருடம் இப்படியே கிடந்தால் என் வாழ்க்கை என்னாவது?

''நோயாளியை மணந்து கொண்டு, காலம் முழுவதும் பணிவிடை செய்யவா நான் பிறந்திருக்கிறேன்? எனக்கு வாழ்க்கையை அனுபவித்து வாழ வேண்டும்.

''பவனனை மணந்தால் என் வாழ்வு வீணாகிப் போகுமே, அதற்கு என்ன சொல்கிறீர்கள்?'' என்று, தன் மனதிலிருப்பதையெல்லாம் தெளிவாகவே சொன்னாள்.

'நான் பேசியதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. என் வாழ்க்கையை நான் பாதுகாத்துக் கொண்டேன். அவ்வளவுதான்' என்பது போல, தலையை நிமிர்த்தியே நின்றாள் சுமனா.

'இந்த குணமில்லாத பிசாசை மணந்தால், அண்ணனின் வாழ்க்கைதான் அதோகதியாகும்' என்று நினைத்தாள் யவனா.

'சுமனா இவ்வளவு சுயநலமானவளா? சீ!' என அருவருப்போடு முகம் திருப்பினாள் துளசி.

காதில் விழுந்த வார்த்தைகளையெல்லாம் ஜீரணிக்க முடியாமல், மீண்டும் சோபாவிலேயே அமர்ந்து விட்டார் வேதவதி.

சுமனாவைப் பற்றிய தன் நினைப்பு, இப்படித் தப்பாகிப் போகுமென்று நினைக்கவேயில்லையே!

இந்த வார்த்தைகளை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கும் மகனின் மனது என்...ன பாடுபடும்!

சட்டென்று மகனைப் பார்த்தார்.

பாதியளவு திறந்திருந்த கதவின் வழியே, வெறித்தபடி பார்த்துக் கொண்டிருந்தான் பவனன்.

அப்பார்வை வெளிப்படுத்திய வலியை, அந்தத் தாயினால் தாங்க முடியாது போனது.

"போதும் சுமனா. இதற்கு மேல் நீ எதுவும் பேச வேண்டாம். உடனே இங்கிருந்து கிளம்பி விடு" என்று, கடுமையான குரலில் கூறினார் வேதவதி.

"எனக்கும் இங்கேயிருக்க வேண்டுமென்று ஆசையெதுவும் இல்லை. என் பொருட்களை எடுத்துக் கொண்டு போக மட்டும் தான் வந்தேன். வேறு எதற்காகவும் நான் இங்கே வரவேண்டிய அவசியமில்லை" என்று தலையை வெட்டிக் கூறிவிட்டு, டக் டக்கென்று நடந்தாள்.

உள்ளே சென்று தன் இரண்டு பெரிய பெட்டியையும் இழுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.



'சுமனா' என்றழைத்து, எல்லோரையும் திரும்ப வைத்தான் பவனேந்திரன்!

நன்றாக இருக்கும் கையைத் தூக்கி 'வா' என்றான்!

எதற்காக அழைக்கிறான் என்று நினைத்தபடி வந்தாள் சுமனா.

"இப்போது என்னை மணந்துகொள்ள உனக்கு விருப்பமில்லையா? என்று கேட்டான்.

"சர்வ நிச்சயமாக ஒரு துளியும் கூட இல்லை" என்றாள்.

"உண்மையாகத்தான் சொல்கிறாயா?"

"கற்பூரம் ஏற்றி சத்தியம் வேண்டுமானால் பண்ணட்டுமா?"

"அதற்கெல்லாம் அவசியமில்லை சுமனா. உன் மனதிலிருப்பதை உடனே வெளியிட்டதற்காக நன்றி" என்றுவிட்டு, துளசியைப் பார்த்தான்.

நொடியில் அருகே வந்து, அவன் கையைப் பிடித்துக் கொண்டு மண்டியிட்டமர்ந்தாள் துளசி.

அவன் முகத்தை ஆழ நோக்கி, "வாழ்க்கை முழுவதற்கும் எனக்கு குணமாகாமலே கூட போகலாம் ராணிம்மா. எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு, என்னை மணந்து கொண்டு என்னுடன் வாழ உனக்குச் சம்மதமா?" என்று கேட்டான்.

"அது என் பாக்கியம் பவன்" என்று கூறி, அவன் கையை இறுக பற்றிக் கொண்டாள்.

"உன்னைப் பற்றி எனக்குத் தெரியும் கண்ணம்மா" என்று மெல்ல முறுவலித்தான்.

நடப்பதையெல்லாம் நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார் வேதவதி.

என்னதான் தைரியமான பெண்மணி என்று பெயர் வாங்கியிருந்தாலும், தாயென்று வரும்போது மனம் தளர்ந்து போவது இயற்கைதானே!

''அம்மா. துளசி மருமகளாக வருவதில் உங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லையே?'' என்று நிதானமான குரலில் கேட்டான்.

முகம் பிரகாசிக்க, ''இந்த குணவதியை மருமகளாகப் பெற, நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும் கண்ணா'' என்றார்.

'இவளை விட்டால் வேறு வழியில்லை என்று ஒத்துக் கொண்டு விட்டு, கொடுத்...து வைத்திருக்க வேண்டும் என்று என்னமாகக் கதை விடுகிறார். பயங்கரமான ஆள்தான்' என்று உள்ளூர கேலி செய்தது சுமனாவின் மனது.

''இருவருக்கும் நல்...ல பொருத்தம்'' என்று ஏளன மாகக் கூறி உதட்டைப் பிதுக்கினாள் சுமனா.

''ஏன். எங்கள் பொருத்தத்திற்கு என்ன குறை? நாங்கள் இருவரும் ஒன்றாக நடந்துச் சென்றால், பார்ப்பவர்களில் பலரும் திரும்பிப் பார்ப்பார்கள் என்பது, என் தாழ்மையான அபிப்பிராயம் சுமனா'' என்றான் பவனேந்திரன்.

''நிச்சயமாகப் பார்ப்பார்கள் தான். உங்களை 'வீல்' சேரில் உட்கார வைத்து, துளசி தள்ளிக் கொண்டு போகும் போது பார்க்கத்தானே செய்வார்கள்'' என்று எள்ளினாள் சுமனா.



இதைக் கேட்டதும் மற்ற பெண்களுக்குச் சுமனாவின் மீது கோபம் அதிகரித்தது.

''வீல் சேரா? என் கைகளும், கால்களும் திவ்வியமாக இருக்கும்போது, வீல் சேரின் தேவையெதற்கு சுமனா?'' என்று அலட்சியமாகக் கூறிவிட்டு, யாருமே எதிர்பார்க்காத விதமாக, இளஞ்சிங்கம் போல விருட்டென்று எழுந்து நின்று, தலையை நிமிர்த்திச் சிரித்தான் பவனேந்திரன்!

'ஆ'வென்று சுமனா அதிர்ந்து நிற்க.

மற்ற மூன்று பெண்களும் கூட கண்ணெதிரே நடப் பதைக் கண்டு அதிர்ந்து தான் போனார்கள். அவர்களுக்கு இன்...ப அதிர்ச்சி!

## 24

வேதவதி உறைந்த புன்னகையோடு அமர்ந்துவிட, இளம் பெண்கள் இருவரும் ஓடிச்சென்று, அவனைத் தொட்டுப் பார்த்து ஐயம் தெளிந்தார்கள்!

''என்ன சந்தேகம் தீர்ந்ததா? இல்லையா?'' என்று முறுவலுடனே கேட்டு, அவர்களைத் தட்டிக் கொடுத்து விட்டுத் தாயிடம் சென்றான்.

மகனின் உடலைக் கை நடுங்க வருடினார் வேதவதி.

''எனக்கு எதுவுமில்லைம்மா. நான் ஆரோக்கியமாகத் தான் இருக்கிறேன்'' என்று கூறி, தாயின் கைகளைப் பற்றி கன்னத்தோடு அழுத்திக் கொண்டான்.

கேள்வியோடு பார்த்தாள் பெற்றவள்.

''விபத்தில் பட்ட உண்மையான அடிகள் தலையில் லேசான காயமும், உடலில் சிராய்ப்புகளும் மட்டும் தான். மற்றதெல்லாம் நாடகத்திற்காகச் சொல்லப்பட்ட வைகள்.

''என் வேண்டுகோளுக்காக பலரும் சேர்ந்து நடத்திய நாடகமிது'' என்று கூறினான்.

மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''திருமணத்திற்குச் சம்மதம் என்று கூறிவிட்டு, சுமனா வின் முகத்திரையைக் கிழிக்க என்ன வழியென்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

''பிறகு, தற்செயலாக நடந்த விபத்தை பெரிய அளவில் காட்ட வேண்டுமென்று முடிவு செய்தேன்.

''பல நன்மைகளின் பொருட்டு உதவும்படி, டாக்டர்ஸ், மூர்த்தி சாரிடம் கேட்டபோது, அவர்கள் ஒத்துக் கொள்ள நாடகத்தைத் துவங்கினேன்.

''என்னென்ன சொன்னேனோ அதையெல்லாம் அப் படியே செய்தார்கள்.

''சுமனா சாயம் வெளுத்துப் போவாள் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. அப்படியே நடந்தும் விட்டது.

''மனதளவில் உங்கள் எல்லோருக்கும் நிறைய வேதனையளித்து விட்டேன். அதற்காக என்னை மன் னித்து...'' என்றவனை வாரி அணைத்துக் கொண்டு உச்சி முகர்ந்தார் வேதவதி.

சில நொடிகளுக்குப் பிறகு சுமனாவைப் பார்த்தவன், ''உன் வாய் மூலமாகவே என்னை மணந்து கொள்ள விருப்பமில்லை என்று சொல்ல வைக்க நினைத்தேன்.



''அப்போதுதான் என் அம்மா குற்ற உணர்வின்றி நிம்மதியோடிருப்பார்கள். பெண்ணின் பாவம் குடும் பத்தையே வேரறுத்து விடுமென்பது அம்மாவின் ஆழ மான எண்ணம். ஆனால் இப்போது உன் தகுதியென்ன என்பதை நீயே காட்டி விட்டாய் சுமனா'' என்றான் அவன்.

என்ன பேச முடியும் அவளால்!

திருட்டுப் பூனை. என்னமாகத் திட்டமிட்டு முகத்தில் கரி பூசி விட்டான். இவன் கையும், காலும் உண்மையி லேயே விளங்காமல் போகட்டும் என்று சபித்துக் கொண்டே, முகத்தில் அனல் பறக்க வெளியே சென்று விட்டாள் சுமனா.

''ஹப்...பா! ஒரு வழியாக நாடகம் முடிந்ததே. ஒரேயிடத்தில் படுத்துக் கிடப்பது ரொம்ப கஷ்டம்'' என்று கூறிவிட்டுச் சிரித்தான் பவனேந்திரன்.

''ஏய்! எப்படிடா சின்ன சந்தேகம் கூட வராதபடி உன் னால் நடிக்க முடிந்தது?'' என்று வியப்போடு கேட்டாள் யவனா.

ஸ்டைலாக முடியைக் கோதிவிட்டுச் சிரித்தான் அண்ணன்.

''எனக்கு ஒருமுறை சின்னதாக நெருடல் தோன்றியது. அப்போது அதைப் பெரிதாக நினைக்காமல் விட்டுவிட் டேன் யவனா'' என்றாள் துளசி.

''ஆஹா! அது என்ன அண்ணி?'' என்று உற்சாக முடனே கேட்டாள் யவனா.

அந்த அண்ணியில் துளசியின் முகம் சிவக்க, அதை ரசித்தபடி தானும் ஆவலுடனே பார்த்தான் பவனன்.

''ஒரு துளி கண்ணீர் 'அந்தக் கை' மீது பட்டதும், மெல்லமாக கண்களை அசைத்தார்.

''உணர முடியாததை எப்படி உணர்ந்தார் என்று தோன்றியது? தானாகவே தான் கண்ணசைத்திருப்பார் என்று நினைத்துக் கொண்டு விட்டுவிட்டேன்'' என்றாள்.

''ராணி இந்தளவிற்கெல்லாம் நோட் பண்ணினால், வருங்காலத்தில் என் கதி என்னாவது?'' என்று பயந்தவனைப் போல் கூறினான்.

''சரியான ஆளிடம்தான் மாட்டியிருக்கிறாய் அண்ணா. இனி உன் பாடு திண்டாட்டம் தான். ஆழ்ந்த அனுதாபங்கள்'' என்ற விட்டு கலகலவென்று சிரித்தாள் யவனா.

சட்டென்று, நாணம் வந்து ஒட்டிக் கொண்டது துளசிக்கு.

''அண்ணிக்கு அதற்குள் மணப்பெண்ணின் வெட்கம் வந்து விட்டது போலிருக்கிறது என்று கேலி செய்து விட்டு, முதலில் இந்த விஷயத்தையெல்லாம் நான் 'அவரிடம்' சொல்ல வேண்டும்'' என்று செல்லுடன் வெளியே சென்றாள் யவனா.

கண்களில் தோன்றிய சிறு பயத்தோடு, பெரிதாக கட்டுப்போட்டிருந்த அவன் தலையைத் தொட்டு, ''இப்போது உள்ளே ஒன்றுமில்லையே பவன்?'' என்று கேட்டாள் துளசி.

சட்டென்று கண்களிலே சிரிப்பு எட்டிப் பார்க்க, ''பாருங்கம்மா உங்கள் மகனின் தலைக்குள்ளே 'ஒன்றுமில்லையே' என்று கேட்கிறாள்'' என புகார் சொன்னான்.



''உண்மையைத் தானேடா கேட்கிறாள்'' என்று வாரி விட்டாள் பெற்றவள்.

கலீரென்று சிரித்து விட்டாள் துளசி.

அவள் முகத்தை ஆசையுடன் வருடி விட்டு, ''அடுத்த சுபமுகூர்த்தம் எப்போதென்று பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார் வேதவதி.

பழைய கம்பீரத்துடன் நடந்து சென்றவரைப் பார்த்து, ''உங்களின் கேலி, கிண்டல் எல்லாம் யாரிடமிருந்து வந்ததென்பது இப்போதுதான் தெரிகிறது பவன்'' என்றாள்.

''நாளைக்கே நல்ல முகூர்த்தம் இருக்கிறது. உனக்கு இந்த தேதியில் ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதாம்மா'' என்று கேட்டார்.

தலையாட்டி 'இல்லைம்மா' என்றாள்.

''இனி அத்தையென்று அழைக்கப் பழகு'' என்றவர், ''நாளைக்கு மலையம்மன் கோவிலில் சாதாரணமாக திருமணத்தை முடித்துக் கொண்டு, எல்லோருக்கும் சென்னையில் வரவேற்புக் கொடுத்து விடலாம். சரி தானே பவன்'' என்று கூறினார்.

அந்த வீடே சந்தோஷமானது!

மறுநாள் நன்முறையில் திருமணம் நடந்தேறியது.

வீட்டில் விருந்துக்கு ஏற்பாடு செய்ததோடு அனைவருக்கும் புத்தாடையும் வழங்கினார்கள்.

யவனாவின் கணவன் வெளிநாட்டில் இருந்ததால், போனில் வாழ்த்துக் கூறினார்.

சூரியனுக்கு ஓய்வளித்துவிட்டு, இரவு நிலவு ஒளி வீசியது!

தன் அறையின் கட்டிலில் கழுத்தில் மஞ்சள் கயிறு மின்ன, ஜொலிஜொலிப்புடன் அமர்ந்திருந்த துளசியைப் பார்த்தான் பவனன்.

நாணத்தோடு கவிழ்ந்திருந்தது அவளின் தாமரை முகம்.

ஒற்றை விரலால் தாமரை மலரை நிமிர்த்தினான் அவன்.

"உன்னிடம் மனம் திறந்து சில விஷயங்கள் பேச வேண்டும் ராணிம்மா" என்றான்.

"சொல்லுங்கள் பவன்" என்றாள்.

"நான், என் பழைய வாழ்க்கை எப்படிப்பட்டதென்று உனக்குத் தெரியும். அதை நினைத்து எப்போதாவது நீ வருத்தப்படக் கூடுமா?" என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு கேட்டான்.

இயல்பிற்கு மாறாக, கவலை எட்டிப் பார்த்த முகம். இறுகியிருந்த குரல்!

இவன் மீது அவளால் எப்படி வருத்தப்பட முடியும். சூரியன் மாற்றி உதித்தாலும் சாத்தியமல்ல!

"நிச்சயமாக இல்லை" என்றாள்.

நிம்மதியாக மூச்சுவிட்டு, "இந்தக் கேள்விதான் என்னை உறுத்திக் கொண்டே இருந்தது. என் பழைய விஷயம் பற்றி எப்போதாவது நினைக்க நேர்ந்து, நீ உள்ளூர வருத்தப்பட்டு விடுவாயோ என்ற நினைப்பை என்னால் தாங்க முடியவில்லை.



"பின்னொரு நாளில் உன்னைப்போல் ஒரு பெண்ணை சந்திக்கக் கூடும் என்பது தெரியாமல், மட்டித்தனமாக கண்டபடி வாழ்ந்து விட்டோமே என்று, என் மீதே எனக்கு வருத்தம்தான்" என்றவன் தொடர்ந்து,

"உன்னைப் பார்த்த பிறகு நான் முழுவதுமாக மாறி னேன். இனி ஒழுக்கமுடன் வாழ வேண்டுமென்று முடிவு செய்து, அதில் உறுதியோடும் இருக்கிறேன். இதை நீ நம்புகிறாய் தானே ராணிம்மா?" என்று கேட்டான்.

கேட்கக் கேட்க கண்கள் விரிந்தன அவளுக்கு!

நமக்காகவா இவன் தன்னை மாற்றிக் கொண்டான் என்ற பிரமிப்பு!

"என்னால் நம்பவே முடியவில்லை பவன். என்னைப் போலவே நீங்களும் பாதிக்கப்பட்டிருப்பீர்கள் என்று நான் நினைக்கவேயில்லை" என்றாள்.

"ஒருமுறை 'உங்களுக்காகவே நீங்கள் நல்ல முறை யில் வாழலாமே' என்றாயே, நினைவிருக்கிறதா? அந்த நிமிடம்தான், முழுக்க உன் மீது மையல் கொண்டு அடியோடு வீழ்ந்தேன்" என்று சிரித்தான்.

"இதை ஏன் அப்போதே சொல்லவில்லை?" என்று ஆர்வமுடன் கேட்டாள்.

"எப்படிச் சொல்வதாம்? பெரிய சத்யவான் மாதிரி முதல் நாளே ஜம்பமாக, நான் ஒழுக்கத்தைப் பெரிதாக மதிக்கிறவன் கிடையாதென்று சொல்லி விட்டு, உன்னை விரும்புகிறேன். என்னை மணந்து கொள்கிறாயா என்று, எந்த முகத்தை வைத்துக் கொண்டு கேட்பதென்ற தயக்கம்.

"சந்தோஷமாகவே பழகியபோதும், நீயும் என்னிடம் எதையும் சொல்லவில்லையே? என் அருகாமை உன்னைக்

கொஞ்சம் கூடவா பாதிக்காது என்று தான் அடிக்கடி இங்கேயே வந்தேன்.

''கண் முன்னே நீ நடமாடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதே, எவ்வளவு சந்தோஷமாயிருக்கும் தெரியுமா? உன் அன்பை எப்படியும் பெற்று விடலாம் என்று, மகிழ்ச்சியுடனே காத்திருந்தபோதுதான், நீ 'கிளம்புகிறேன்' என்று வந்து நின்றாய். என்னமாகத் தவித்துப் போனேன் தெரியுமா?

''உன் மனதிலிருப்பதை மறைக்காமல் நீ வெளியிட வேண்டுமென்பதும், நாடகத்தின் நோக்கம் தான்'' என்றான்.

இந்த அன்பிற்குத் தான் தகுதியானவள்தானா?!

ஏனோ கேட்டேயாக வேண்டும் போல் ஒரு வேகம்.

''உங்களின் ஸ்டேட்டஸ், திறமை, கம்பீரத்திற்கு சுமனாவை விடுங்கள். அவளை விடவே அழகான நிறையப் பெண்கள், திருமணம் செய்ய முன் வருவார்களே. பிறகு எப்படி என்னை...'' என்று உதடு கடித்து நிறுத்தினாள் துளசி.

அவளின் கைகளைப் பற்றி நெஞ்சோடு அழுத்திக் கொண்டு, ''நான் பழகிய கூழாங்கற்களுக்கு மத்தியில் நீ எனக்குக் கிடைத்த நல்வைரம் ராணிம்மா. அதை என் உயிர் போனாலும் விட்டுவிட மாட்டே...'' என்று முடிக்கும் முன்பாக, 'அய்யோ என்ன பேசுகிறீர்கள்?' என்று அவன் வாய் மீது கை வைத்துத் தடுத்தாள் அந்த அன்பு மனைவி!

''இதுதான் கண்ணம்மா. இந்த அன்புதான் உன்னிடம் என்னை விழத் தட்டியது. உன் உழைப்பையும், அன்



பையும் எனக்காகவே சொல்லிவிட்டு, பலன்களையெல்லாம் மற்றவர் அனுபவிக்க விட்டுக் கொடுத்து விட்டு, நீ ஒதுங்கிச் செல்ல முடிவெடுத்தால், நான் எப்படி அனுமதிப்பதாம்?

''தகுதியுடையவர்கள் தான் பலனை அனுபவிக்க வேண்டும். அதற்கு வேண்டியதைச் செய்யாமல், வெறுமனே கையைக் கட்டிக் கொண்டிருக்க என்னாலாகாதும்மா'' என்றான்.

கிடைத்த வாய்ப்பை வைத்து எவ்...வளவு துரிதமாகச் செயல்பட்டிருக்கிறான். விபத்து நடந்த சமயத்திலும் கூட!

''ஒரு காலத்தில் ஆசைப்பட்ட பெண்ணை மணந்து கொண்டு வாழ்வதற்காக, நான் இவ்வளவு முயற்சிகள் செய்வேன் என்று யாராவது சொல்லியிருந்தால், துணிந்து எவ்வளவு வேண்டுமானாலும் 'பெட்' கட்டியிருப்பேன் தெரியுமா, ராணி?'' என்றவன், ''நீ இங்கே வந்த முதல் நாள் ஞாபகமிருக்கிறா?'' என்று கேட்டுச் சிரித்தான்.

''மறக்கக் கூடிய நாளா அது?'' என்றாள் முறுவலுடன்.

''அன்றைக்கு உன்னோடு பேசியதை நினைத்து, நான் அன்று ரொம்ப நேரம் தூங்கவேயில்லை தெரியுமா?'' என்று கூறி ரசித்துச் சிரித்தான்.

அன்...றைக்கேவா?! என்றவளின் மலர் முகம் விரிந்தது.

''அடித்துத் துவைத்து விடுவாயோ என்ற பயத்தில், அன்று நல்லபிள்ளை மாதிரி ஒதுங்கிப் போனேன்.

''இன்றைக்குக் கையெட்டும் தூரத்திலிருக்கும், என் நல் வைரத்தின் ஜொலி ஜொலிப்பு கண்களைப் பறிப்பதோடு,

என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும் துணிந்து கை நீட்டு பவன் என்கிறதே. இப்போது என்ன செய்யப் போகிறாய் ராணிம்மா?'' என்று கேட்டு, கண் சிமிட்டிச் சிரித்தான் பவனேந்திரன்.

பார்ப்பவர்களையும் புன்னகைக்கச் செய்கிற பழைய வசீகரமான சிரிப்பு!

''என்...ன செய்வதாம்? போனால் போகிறது கணவன் தானே பா...வம் என்று அடித்துத் துவைக்காமல், நீட்டிய கைக்குள் இப்படிச் சரணடைந்து விடுவேனாக்கும்'' என்று கூறி, கணவனின் வலிய தோளில் முகம் பதித்து, கலகலவென்று சிரித்தாள் அவன் மனைவி.

''பா...வமென்றா?!'' என்றவனுக்கும் அடக்க மாட்டாத புன்னகை தோன்ற, தன் அன்பு மனைவியை ஆசையோடு அணைத்துக் கொண்டான் பவனேந்திரன்.